T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLVI NO: 5

March 25th 1983

C

D

V211,31 N83

N83·46·5;1
136016

வெளியீடு 8–11–1983]

[Issued 8-11-1983

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
10 சன 1984
2668
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 25, 1983— தொகுதி XLVI எண் 5

Friday 25th March 1983—Volume XLVI No. 5

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 Paise

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136016
சென்னை 600 008.

V2lL31 'N83
N83.46.53)

உள்ளடக்கம்.

25—3—1983

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் | 965–999 |
| 2. | தகவல் கோரல்— | |
| | (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 999–1000 1002–1004 |
| | (ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணி குழுக்கள் கூட்டத்தைக் கூட்டுவது | 1016–1018 1000–1001 |
| | (இ) பேரவையில் வைக்கப் பெறும் ஏடுகள் | 1001–1002 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம்— எண்ணூர் அனல் மின் நிலைய கடல் நீர் கால்வாய் மண் மேடிட்டிருப்பதால் மின் உற்பத்தி பாதிப்பு | 1004–1014 |
| 4. | கவன ஈர்ப்பு— குறிஞ்சிப்பாடி தொகுதி, பெருமாள் ஏரி பாசனப் பகுதியில் விவசாயம் பாதிக்கப் பெற்றுள்ளது | 1014–1016 |
| 5. | வரவு—செலவுத் திட்டம், 1983—84 வாக்கெடுப்பு:— (தொடர்ச்சி) | |
| | (அ) கோரிக்கை எண்–1–நிலவரித் துறை | 1018–1019 |
| | (ஆ) கோரிக்கை எண்–41–இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1020– |
| | (இ) கோரிக்கை எண்–46–இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1021–1108 |
| | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 1021 1097–1106 |
| | திரு. செ. இராமலிங்கம் | 1022–1026 |
| | திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் | 1026–1035 |
| | திரு. உ. சுப்பிரமணியன் | 1035–1040 |
| | திரு. மே. அ. இராசகுமார் | 1040–1042 |
| | திரு. எம். செல்லமுத்து | 1042–1047 |

5. வரவு—செலவுத் திட்டம், 1983—84வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

திரு. ம. கண்ணன் 1047–1049

திரு. சீ. சிவப்பிரகாசம் 1050–1053

திரு. இரா. கருப்பையா 1053–1065

திரு. எஸ். டி. உகம்சந்த் 1065–1070

திரு. பு. கொ. ஆனூர் ஜகதீசன் 1070–1077

திரு. நா. சுந்தரராஜ் 1077–1084

திரு. த. இராமசாமி 1084–1088

திரு. பெ. சு. திருவேங்கடம் 1088–1096

0. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— 1108–1109


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 மார்ச் 25

பங்குனி 11, துந்துபி—திருவள்ளுவர் 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்''

தெளிந்த நீர்போல் சமைத்த கூழே ஆயினும், முயற்சியால் கிடைத்ததை உண்பதைவிட இனிமையானது வேறொன்றும் இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**தறிபோட்டு நெசவுந்தொழில் செய்யும் இடங்களில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்.**

*வினா எண் 538—திரு. இரா. கருப்பையா: திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தறிபோட்டு நெசவுத்தொழில் செய்யும் இடங்களில் மின்சாரத்துக்கு யூனிட்டுக்கு 35 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) இதற்கு மின் கட்டணம் 20 பைசா விதிக்கவேண்டும் என்ற கோரிக்கை வந்துள்ளதா?

(இ) அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை, வீடுகளுக்கு விதிக்கப்படும் மின் கட்டணமாகிய யூனிட் ஒன்றுக்கு 45 பைசா வசூலிக்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்த படியாக இந்த கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஆறு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அந்த தொழில் நசித்து வருகிற ஒரு தொழிலாக இருக்கிறது. அதன் காரணமாக தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது. கைத்தறித் தொழிலாளர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களிலேயே தறிகளைப் போட்டு வேலை செய்கிறார்கள். ஆகவே இவைகளை அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு விதிக்கிற கட்டணத்தையே இந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கும் விதிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளுக்கு விதிக்கப்படுகிற அளவிற்கு கட்டணத்தை கைத்தறி தொழிலுக்கும் விதிக்கப்படுவதே மிகப் பெரிய சலுகையாகும். விவசாயம் அளவிற்கு கொண்டு செல்வது என்பது இயலாத காரியம்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்சமயம் பெரிய தொழில்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படக்கூடிய மின்சாரக் கட்டணம் வீடுகளுக்கு விதிக்கப்படுகிற கட்டணத்தை விட குறைந்த கட்டணமாக இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் வழங்கப்படுகிற நேரத்தில் இந்த கைத்தறித் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசிற்கு இருக்கிறது என்பதாலே இவர்களுக்குத் தனியாகசலுகை அளிக்க முன்வருவதில் என்ன தயக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழில் என்று சொல்கிறபோது மின்சாரத்தை மூலப்பொருளாகப் பயன்படுத்துகிற பெரிய தொழில்களை நினைவில் வைத்துக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். மொத்த பொருளாதார அமைப்பில் அத்தகைய தொழிற்சாலைகள் தேவையென்பதாலும், அத்தகைய தொழிற்சாலைகளுக்கு சில சலுகைகள் அளிக்காவிட்டால் அந்த தொழில் இயங்காது என்பதாலும் அவைகள் அளிக்கப்படுகின்றன. கைத்தறித் தொழிலுக்கு பல்வேறு வகையான சலுகைகள் இருக்கின்றன. அப்படி மின்சாரக் கட்டணத்தைகுறைத்துத்தான் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நிலையில் அவர்கள் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம சிறுதொழில்களுக்கு இப்போது வழங்கப்படுகிற மின்சாரக் கட்டணம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். இந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கூடங்களில்





இரண்டு, மூன்று தறிகளைப்போட்டு அந்தக் குடும்பத்தில் இருக்கின்றவர்கள் இரவும், பகலும் தொழிலைச் செய்கின்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு எத்தனையோ சலுகைகள் அளித்திருந்தாலும், இந்தச் சலுகையையும் சேர்த்துஅளிப்பதற்கு அரசு ஏன் தயக்கம் காட்ட வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே கேள்வியைத் தான் மாண்புமிகு திரு கருப்பையா அவர்களும் கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே தயக்கமும் கிடையாது; மயக்கமும் கிடையாது. 1964 ஆம் ஆண்டிற்கு முன்பு மிக அதிக அளவிற்கு கட்டணத்தைச் செலுத்திக்கொண்டு வந்தார்கள். 1964-க்கு பிறகு வீடுகளுக்கு என்ன கட்டணம் விதிக்கப்படுகிறதோ அதுவே கைத்தறித் துறைக்கு விதிக்கப்படுகிறது. சான்றாக காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ். கிராம கைத்தொழிலுக்கு, விவசாயத்திற்கு என்ன கட்டணமோ அந்தக் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதை விட இது ஒருபடி மேல் என்பதால் இந்தக் கட்டண விகிதம் இருக்கிறது. மேலும் கைத்தறித் தொழிலிலே ஈடுபடுகிறவர்கள் அதை செய்து மற்றவர்களுக்குத் தன் கொடுக்கிறார்கள். தாங்களே பயன்படுத்திக் கொள்வதில்லை. அதுமட்டுமல்லாமல், மற்றவர்களிடமிருந்து கூலி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கூலியை உயர்த்திக் கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதன்மூலமாகத் தான், தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டுமே தவிர, மின் கட்டணச் சலுகை மூலம் கிடைக்கும் ஏதோ சில பைசாக்களின் மூலம் தான் அவர்கள் நிலையை உயர்த்தமுடியும் என்று கருதுவோமானால் அது புண்ணுக்கு புனுகு தடவுவதைப் போலவே தவிர அது நிரந்தரத் தீர்வு ஆகாது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சிறு தொழில் என்று சொல்லும்போது, இதுவும் கிராமத்திலே நடக்கிற சிறுதொழில் தான். இந்தச் சிறு தொழிலிலே வரக்கூடிய வருமானம் மற்ற தொழிலில் வரக்கூடிய வருமானத்தைவிட மிகமிகக் குறைவு. சில இடங்களிலே ரூ. 2, ரூ. 3 கூட தினக்கூலி பெறமுடியாத நிலையில், காலையிலிருந்து மாலை வரை, 8 மணி நேரம் நெசவு செய்கிறார்கள். ஆகவே, கிராமச் சிறு தொழிலுக்கும் கொடுக்கக்கூடிய அந்தச் சலுகையை இந்தச் சிறுதொழிலுக்கும் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் என்கிற வார்த்தை மிகவும் குழப்பமானது. சிறு தொழிலுக்கு இப்பொழுது 50 பைசா விதிக்கின்றோம் அதாவது சிறு தொழிலிலே 3 வகை இருக்கின்றது. கிராமத்தில், 'காட்டேஜ்

இண்டஸ்ட்ரீஸ்'. 'காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்' என்பது வேறு வகையிலே வரும். 'காதி அன்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ்' என்கிற வகையிலே அது வரும். இது கைத்தறி துறை—தனியாக வரும். ஆகவே, இதற்கும் அதற்கும் முடிச்சுப்போடுவது சரியல்ல.

### மின்வாரியத்திற்குத் தேவையான சாதனங்களை தமிழ்நாடு நிறுவனங்களிடமே வாங்கும் திட்டம்.

*வினா எண் 539—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிறுவனங்களிடம் மட்டும் தான் தேவையான மின் சாதனங்களை வாங்க வேண்டுமென மின் வாரியத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள மாநில சிறு தொழிலகங்களில் உற்பத்தியாகும் பொருள்களில் மின் வாரியத்திற்குத் தேவையானவற்றை ஒப்பந்தப் புள்ளிவாயிலாக அந்நிறுவனங்களில் மட்டும் தான் வாங்கவேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போன்று, அரசு நிறுவனங்களிடத்திலே, நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியம், என்ன, என்ன வகையான பொருள்கள் வாங்குகின்றன? அது ஓராண்டுக்கு எவ்வளவு ரூபாய் அளவுக்கு ஆகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மொத்தம் 241 பொருள்களை அரசுப் பட்டியலிட்டு, அவற்றை அரசினுடைய பல்வேறு பொது நிறுவனங்கள், தமிழகத்திலிருந்து கொள்முதல் செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் எந்த, எந்தப் பொருள்கள் மின் வாரியத்தினால் வாங்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்படுகிறதோ, அந்தப் பொருள்கள் வாங்கப்படுகின்றன. உதாரணமாக, கன்டக்டர்ஸ், இவைகள் எல்லாம் வாங்கப்படுகின்றன. எந்த, எந்தப்பொருள்கள் எவ்வெப்போது, எந்த அளவுக்கு வாங்கப்படுகின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.



திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வாங்கும்போது மற்றைய தனியாரோடு, இந்த அரசு நிறுவனங்கள் டெண்டர் போடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றதா? அல்லது, அரசு நிறுவனங்கள் என்ன விலையை நிர்ணயிக்கின்றனவோ, அந்த விலையில் மின்சார வாரியம் வாங்குகின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள சிறுதொழில்களிடத்திலிருந்து டெண்டர் பெறப்பட்டு, அதற்குப் பிறகு பரிசீலிக்கப்பட்டு, அதற்குப் பிறகு ஆர்டர்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மீட்டர்ஸ் உற்பத்தி சம்பந்தமாக. எலெக்டிரிசிட்டி போர்ட், தனக்குத் தேவையான மீட்டர்ஸுக்கு இந்தியா மீட்டர்ஸ், சிம்கோ மீட்டர்ஸ் ஆகியவற்றின் மீட்டர்ஸ் உற்பத்தியையே மெயினாக நம்பிக்கொண்டிருக்கக் கூடிய நிலையில், எலெக்டிரிசிட்டி போர்ட் மீட்டர்ஸ் தேவை பூராவும், இந்த இரண்டு நிறுவனங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறதா? அந்த மீட்டர்ஸ் தேவை குறைந்திருக்கிறதா, அல்லது பழைய பொசிஷனா? இன்னும் அதிகமாகியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவைகள் சிறுதொழில்கள் என்கிற அந்தப் பட்டியலிலே வராது. இந்தியா மீட்டர்ஸ் அன்ட் சிம்கோ மீட்டர்ஸ் பெரிய தொழில்கள் என்ற நிலைமையிலே வருகின்றன. நமக்கு இப்பொழுது இருக்கிற பிரச்சினை, சிறுதொழில்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, தமிழகத்திலே உள்ள சிறுதொழில்களிடம் மட்டும் டெண்டர் வாங்கி, அந்தப் பொருள்களை வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், அதையும் எதிர்த்து ஒரு நிறுவனம் தமிழகத்தினுடைய உயர் நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரு விளக்குகளுக்காக உபயோகப்படுத்தப்படும் பல்புகள் மிக விரைவாகவும் அடிக்கடியும் பழுதாகின்றன. அதற்குக் காரணம், ரேட் காண்ட்ராக்ட்டிலே வாங்குவதனால் தரக் குறைவான பல்புகள் சப்ளை செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது, அது உண்மையா? அப்படியிருந்தால், அதை மாற்றித் தரமான பல்புகளை வாங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தரமான பொருள்களை வாங்க வேண்டுமென்றுதான் மின் வாரியத்திற்கு அரசு அவ்வப்போது தெரிவித்து வருகின்றது. ஆகவே, தரம் இல்லாத பொருள்களை அவர்கள் வாங்கினார்கள் என்ற விவரம் அங்கத்தினரிடம் ஏதேனும் இருக்குமேயானால், நிச்சயமாக மின் வாரியம் அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மின் வாரியத்திற்குத் தேவையான எல்லா மின் சாதனங்களையும் இல்லை என்றாலுங்கூட, அதிகயாகத் தேவைப்படுகின்ற பொருள்களையாவது மின்சார வாரியத்தின் மூலமாக உற்பத்தி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வாரியமே அந்தப் பொருள்களை எல்லாம் உற்பத்தி செய்வது என்பது சரியாக இருக்காது. ஏனென்றால், பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழிலை தொழில் துறை ஏற்கனவே மேற்கொண்டு வருகின்றது. எந்த, எந்தத் தொழிலை பொதுத் துறை மேற்கொள்ள முடியுமோ அதை மேற்கொள்கிறார்கள். மற்றத் தொழில்களைத் தனியார் துறையை ஊக்குவித்து, அந்த உற்பத்தியைச் செய்யச் சொல்லுகின்றார்கள். மின் வாரியம் தன்னுடைய வேலையை விட்டுவிட்டு தொழில் துறை வேலையில் ஈடுபடுவது சரியாகாது.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் உபயோகப்படுத்துகின்ற பல்பு, ஸ்விட்ச்போன்ற பொருள்களை எல்லாம்—அலுமினியத்திலே செய்கின்ற பொருள்களை—வாங்குவதனால், அவை அடிக்கடி பழுதடைகின்றன. காப்பரினால் செய்யப்படுகின்ற பொருள்களை வாங்கினால், அவை பழுதாகாது என்று அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற வல்லுநர்கள் சொல்கிறார்களே, அப்படி வாங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முல்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அலுமினியத்தில் செய்யப்படுவதை வாங்கினால் பழுதுதான் வருகிறது. ஆனால் காப்பரில் செய்யப்படுவதை வாங்கினால் திருடே போய்விடுகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, டிரான்ஸ்பார்மரிலே உள்ள டிரான்ஸ்பார்மர் ஆயில் எங்கே வாங்கப்படுகிறது. ஒரு கம்பெனியிலிருந்து வாங்கப்படுகிறதா அல்லது பல கம்பெனிகளிலிருந்து வாங்கப்படுகிறதா? ஆண்டுக்கு எவ்வளவு வாங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக்கேள்வி போடவும்.



கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கான வாடகை.

*வினா எண். 540—திரு. செ. செம்மலை. திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு கொடுக்கப்படும் வாடகை மிகவும் குறைவானது என்பதை அரசு அறியுமா?

(ஆ) வாடகை வீதத்தை மாற்றி வாடகையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, இந்து-சமய அறநிலையத்துறை ஆணையாளரின் அறிவுரைப்படி, 1385 ஆம் பசலி முதல் வாடகையைவிட ½ பங்கு, ¼ பங்கு சேர்த்து வாடகையை நிர்ணயிக்கலாம் என்றிருக்கிறது. கோயில் கட்டிடங்களை அதே இடங்களில் உள்ள மற்ற பசலிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்த வாடகை மிகவும் குறைவாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. பொது ஏலத்தின் மூலமாக இந்தக் கடைகள், கட்டிடங்களின் வருவாயை அதிகரிக்கத்தக்க வகையில், பொது ஏலமுறை யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அறநிலையம் அல்லது ஆலயங்களுக்குச் சொந்தமான கடைகளில் இருப்பவர்கள், அல்லது அந்த மனைகளில் உள்ள வீடுகளில் இருப்பவர்கள் குறைந்த வாடகை தந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அவைகளைப் பரிசீலித்து, இன்றைய காலத்திற்கு, அந்த வாடகை நிர்ணயம் செய்யப்படும் என்று மீண்டும் அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அப்படி வீடுகளையும், கடைகளையும் ஏலங்களில் விடுவது என்று ஆரம்பித்தால், அதில் சிக்கல்கள் ஏற்படும். தொடர்ந்து அதில் குடியிருப்பவர்கள், ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாது அஞ்சக்கூடும். ஏலம் எடுப்பவர்கள், இருக்கிறவர்களை காலி செய்ய, வேண்டுமென்றே அதிகமாக வாடகையை உயர்த்தக்கூடும். இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு குடியிருப்பவர்களே ஆலயங்களுக்கு மனமுவந்து வாடகையைத் தரவேண்டுமென்று அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கின்றது. ஆக இந்த வாடகை குடியிருப்புகளை ஏலத்தில் விடுவது நடைமுறைக்கு ஒவ்வாது.

---

**145ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1983 மார்ச் 25

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை சிலபேர் பத்திரப்படியே தனக்குச் சொந்தமாகக் கொண்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அப்படிப்பட்ட சொத்துக்களை மீண்டும் கோயில்களுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழகம் முழுவதும் இப்படி ஆலயத்திற்குச் சொந்தமான சொத்துக்களை சட்டப்பூர்வமாக என்று சொல்லிக் கொண்டு அனுபவிப்பவர்கள் பலரை அறநிலையத்துறை உணர்ந்திருக்கிறது. அவைகளைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை மேற்கொள்வதற்கும், தேவையானால் ஒரு சட்டமே கொண்டுவந்து அதைக் கைப்பற்றவும் அரசு பரிசிலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களைக் குறைந்த வாடகைக்கு விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட வாடகைக்கு விடும்போது நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள பொறியாளர்கள் மதிப்பீடுகளைப் பெற்று, அரசாங்க மதிப்பீட்டில் வாடகைக்கு விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக அந்த முறை பழக்கத்திலே இல்லாத காரணத்தினால் இப்போது அந்த முறை அறநிலையத் துறையிலே நடமுறைப்படுத்தப்பட்டு வருகிறது இந்த வாடகையை நிர்ணயிப்பதற்கு ஏற்கெனவே ஒரு குழுவை அமைத்து அந்த குழுவிலே துணை ஆணையர் தலைவராகவும், செயற் பொறியாளர் அதிலே ஒரு உறுப்பினராகவும், செயல் அலுவலர், செயலாளராகவும், இருந்துதான் இப்போது நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆகவே நியாயமான வாடகை எது என்பதற்கு மிகப் பெரிய ஆராய்ச்சி ஒன்றுமே தேவையில்லை. பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம்.

திரு. சேலம் மு ஆறுமுகம் : பேரவைத்தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மட்டும் அல்லாமல் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில்கூட தமிழ்நாட்டில் பல இடங்களில் பல நூறு ஏக்கர் நிலங்களை ஒரு சில குடும்பங்கள் மிகக் குறந்த வடகைக்கு அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.



1983 மார்ச் 25]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற கோவில்களுடைய நிலங்களில் குடியிருக்கின்றவர்களுக்கு வாடகை ஏற்றும்போது கோர்ட்டுக்குச் சென்று பல ஆண்டுகள் வசூல் செய்யமுடியாத நிலை இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு மாற்று வழி ஏதேனும் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாடகை நிர்ணய சட்டத்திலே இருந்த இந்த ஆலய வீடுகளுக்கு அல்லது கட்டிடங்களுக்கு அரசு விதிவிலக்கு அளித்திருக்கிறது. அப்படி அளித்திருந்தாலும், அதையும் மீறி வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறார்கள் வாடகையை கட்டவேண்டாம் என்று விரும்புகிறவர்கள். ஆனால் இந்தச் சட்டம் இருப்பதை எல்லாம் தெரிந்துகொண்டே வழக்கு மன்றங்களிலே இதற்கு தடை ஆணையையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியைச் சந்தித்துத்தான் நாம் நிர்வாகத்தை நடத்த வேண்டியிருக்கிறது. தடை ஆணை தருகிற நீதிமன்றத்தைப்பற்றிதான் நாம் எதுவும் பேசக்கூடாதே!

பாரதியார் கவிதைகளை வேறு மொழிகளில் வெளியிடும் திட்டம்.

*வினா எண். 541—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரதியார் கவிதைகளை வேறு மொழிகளில் வெளியிடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியாரின் கவிதைகள் மிகவும் எழுச்சியும் உணர்ச்சியும் உள்ளதாக இருக்கின்றன. உதாரணமாக "அச்சம் இல்லை, அச்சம் இல்லை, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சம் இல்லை, அச்சம் இல்லை" என்று கவல் கக்கும் வரிகள் எல்லாம் வருகின்றன. எனவே இத்தகைய உயிர் துடிப்புள்ள வரிகளைக் கொண்ட பாரதியாரின் கவிதைகளை வேறு மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி மொழிபெயர்க்கும்போது, மூலச்சுவை குன்றிடாமல் மொழி பெயர்க்கும் வகையில், பெரும் தமிழ்ப்பத்தர்களை தமிழ்ப் புலவர்களைக் கொண்டு அவர்கள் மூலமாக மொழிபெயர்க்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 25

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் பாரதியார் அவர்களுடைய கவிதைகளை இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்த்து நூல்களாக வெளியிட வேண்டும் என்பது ஒரு திட்டம். அதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டு பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதிலே இப்படி இந்திய மொழிகளிலேயும் அயல்நாட்டு மொழிகளிலேயும் மொழிபெயர்க்கின்ற பணி மதுரைப் பல்கலைக்கழகத்திலே ஒப்படைக்கப்பட்டது. இப்போது மதுரைப் பல்கலைக்கழகம் 8 இந்திய மொழிகளிலும் 2 அந்நிய மொழிகளிலும் மகாகவி பாரதியாருடைய சிறந்த பாடல்களைத் தொகுத்து மொழிபெயர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலே ஆங்கிலத்திலும், இந்தியிலும் வெளியிடுவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டிருக்கிற காரணத்தால், மற்ற மொழிகளிலே வெளியிடுகின்ற பணியை மதுரை பல்கலைக்கழகம் மேற்கொண்டிருக்கிறது அப்படி ஒவ்வொரு மொழியிலும் வெளியிடுவதற்கும் 25 ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று அரசினிடத்திலே வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோள்அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே. இப்படி வேறு மொழிகளில் பாரதியாரின் கவிதைகளை மொழி பெயர்த்து வெளியிடுகிறபோது மலிவான விலையில், உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கிற வகையில் அரசு ஏற்பாடு செய்யும ? இப்போது அது பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். கூடிய விரைவிலே வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவிலே வெளியிடுவதற்காகத்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[முற்பகல் 9.20]

திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே பாரதியாரின் எழுத்தோவியங்கள் சில இதுவரை வெளியிடப் படாதது்ம், அவர்கள் அந்தக் காலத்தில் அச்சடிக்கப்பட்ட நூல்களும், பாரீசில் உள்ள நூல் நிலையத்திலேயும், லண்டனில் உள்ள இந்திய அலுவலக நூல் நிலையத்திலும், பிரிட்டிஷ் மியூசியம் லைப்ரரியிலும் இருக்கின்றன. அவற்றை அவர்களிடம் இருந்து பெற்று, அரசாங்க சார்பிலே அவற்றை வெளியிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்தகைய பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்று மூன்று பல்கலைக் கழகங்களிடத்திலே பணிகள் பிரித்துத் தரப் பட்டுள்ளன. அயல் மொழிகளில் மொழி பெயர்த்து வெளி யிடுகின்ற பணியை மதுரைப் பல்கலைக் கழகமும், அவருடைய கட்டுரைகளை, எழுத்துக்களை எல்லாம் தொகுத்து, 3 தொகுதி களாக வெளியிடும் பணியை தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகமும், அவருடைய வரலாற்றை வெளியிடுகின்ற பணியை சென்னைப் பல்கலைக் கழகமும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று கருதுகிறேன். அப்படியில்லையென்றால், உறுப்பினருடைய கருத்தையும் பரிசீலித்து, அப்படிப்பட்ட ஆவணங்களை எல்லாம் சேகரித்து வெளியிடுகின்ற முயற்சியில் அரசு ஈடுபடும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மகாகவி பாரதியாரின் 100-வது ஆண்டு விழா உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. காரணம், சோவியத் யூனியனில் லெனின் நடத்திய புரட்சியை உலகத்திலேயே முதன் முதலாக வரவேற்றுப் பாடி 'ஆஹா, எழுந்தது பார் யுகப்புரட்சி' என்று கூறியது அந்த மகாகவி பாரதியார்தான். அதனால் தான் அவர்கள் உலகம் முழுவதும் மதிக்கத்தக்க மகாகவியாக விளங்கு கிறார்கள். அப்படிப்பட்ட கவிஞரின் கவிதைகளை ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்த்துக் கொடுக்க தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ரஷ்ய மொழியிலே மொழிபெயர்க்கிற வேலையை ரஷ்ய அரசாங்கம் நமக்கு விட்டு வைக்கவில்லை. நம்மைவிட தீவிரமாக—பாரதியார் பிறந்த இந்திய நாட்டை விடத் தீவிரமாக—ரஷ்ய நாட்டிலே ஒரு ஆண்டு முழுவதும் பாரதியாருக்கு விழா கொண்டாடி அவர்களுடைய நூல்களையெல்லாம் அங்கே மொழி பெயர்த்து இருக்கிறார்கள்- அவர்கள் மொழிபெயர்த்து இருக்கும் அந்த நூல்களின் பிரதிகளை—அவர்கள் என்ன காரியங்களைச் செய்து இருக்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக—நமக்குப் பரிசாக வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு.அம்பிகாபதி அவர்கள் அதற்காகக் கவலைப்படத் தேவையில்லை. ரஷ்ய அரசாங்கமே அந்தப் பணியைச் செய்து முடித்து இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பாடல்களை, கவிதைகளை மொழி பெயர்ப்பதிலே வேறு மொழியினர் தமிழ்மொழி கற்று மொழி பெயர்ப்பது சிறப்பாக இருக்கிறதா அல்லது வேற்று மொழியைத் தமிழ் மொழியினர் கற்று அதனை மொழிபெயர்ப்பது சிறப்பாக இருக்கிறதா? பாரதியாருடைய கவிதைகளில் உள்ள கவித்

துவத்தையும், உணர்வையும் குன்றாமல் குறையாமல் யார் மூலம் மொழிபெயர்ப்பது சரியாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மொழிபெயர்ப்பு என்பதே ஒரு அற்புதமான கலை. மொழியைத் தெரிந்து கொண்ட காரணத்தால் மட்டும் மொழி பெயர்ப்பு செய்துவிட முடியாது. மொழி பெயர்க்க முன்வருபவர்கள் தொடர்புள்ள அந்த இரண்டு மொழிகளிலும் நுட்பமான அறிவைப் பெற்று இருக்கவேண்டும். நுட்பமான அறிவைப் பெற்று இருந்தால் மட்டும் போதாது, அவர்கள் உரைநடையை மொழி பெயர்த்தால் அந்த உரைநடையின் அடிப்படையைத் தெரிந்து இருக்கவேண்டும். கவிதையை மொழி பெயர்த்தால் அந்தக் கவிதையின் நுட்பமான உணர்வைப் பெற்ற கவிஞர்களாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையைப் பார்க்கிறபோது, அந்த மொழி தெரிந்தவர்கள், அந்த மொழியைத் தெரிந்து கொண்டதைவிட, அந்த உணர்வைப் பெற்று இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே அப்படிப்பட்ட திறமையாளர்களிடத்திலேதான் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதியாரின் பெருமையை உலகத்தில் உள்ள, வெளிநாடுகளில் உள்ள புலவர் உணர்ந்து, வெளிநாடுகளில்கூட அவருக்கு விழா எடுத்து வருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விழா எடுத்தும் வருகிறார்கள். இன்றைக்கு இந்திய நாட்டிற்குத் தேவையான ஒருமைபாட்டு உணர்வு—ஜாதி, மத, இன பேதமற்ற உணர்வு, அனைவரும் ஒன்று என்ற உணர்வு—பாரதியார் கதைகளில், கட்டுரைகளில், கவிதைகளில் வலுவாக இருப்பதால், மிக அழுத்தமாக அது சொல்லப் பட்டு இருப்பதால், அந்த மகாகவி பாரதியாரின் கதை, கவிதை, கட்டுரைகளை அதில் உள்ள கருத்துக்களை இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும் வகையில், இந்தியாவில் உள்ள அத்தனை மொழிகளிலும் அந்தக் கதை, கட்டுரை, கவிதைகளை மொழிபெயர்க்கும் முயற்சி இந்த நூற்றாண்டு விழா நடை பெறுகின்ற நேரத்தில் செய்வதாகச் சொன்னார்கள், அதை உடனடியாகச் செய்து, மலிவான விலையில் அதை விற்க ஏற்பாடு செய்து, அனைவரும் வாங்கி, அதைப் பயன்படுத்தி, அத்தகைய உணர்வுகளைப் பெறுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மகாகவி பாரதி இந்த நாட்டினுடைய ஒற்றுமையை ஒருமைப் பாட்டை நீண்ட காலத்திற்கு முன்பாகவே மிகச் சிறந்த முறையில் வலியுறுத்தியவர் எனகிற அடிப்படையில்தான் பாரதியினுடைய நூற்றாண்டு விழாவாக ஒரு ஆண்டு முழுவதையும் அதை தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அரசு அறிவித்தது. அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் நாம் மத்திய அரசை கேட்டுக் கொண்டோம். ஆனால் அவர்கள் கடைசியாக ஒரு வாரத்தை



ஏற்றுக்கொண்டு அறிவித்தார்கள். இப்போதும் தமிழக அரசு அவருடைய பிறந்த நாளை ஆண்டு தோறும் இனிமேல தேசிய ஒருமைப்பாட்டுத் தினமாக கொண்டாட வேண்டுமென்று முடிவெடுத்து அறிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட கருத்துக்களை யெல்லாம் அடிப்படையாக வைத்துதான் அவருடைய பாடல்களை, கட்டுரைகளை. மற்ற பேச்சுக்கள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி பல்வேறு மொழி லில் வெளிநாடுகளுக்குத் தெரிகிறதோ இல்லையோ முதலில் இந்த நாட்டிலுள்ள, இந்த நாட்டில் பிறந்த மற்ற மொழிக்காரர்களாவது தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கிறது.

## 1981ல் சுசீந்திரம் கோயிலிலிருந்து விற்கப்பட்ட தங்கம்.

*வினா எண். 542— திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுசீந்திரம் கோயிலிலிருந்து 1981-ல் எத்தனை கிலோ தங்கம் விற்கப்பட்டது?

(ஆ) எந்த தேவைக்காக விற்கப்பட்டது?

(இ) தங்கத்தை விற்க என்ன நடைமுறை கையாளப் பட்டது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் கோயிலிலிருந்து பத்து கிலோ தங்கம் விற்கப்பட்டது.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தேவஸ்தானத்திலிருந்து தேசியப் பாதுகாப்பு தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்து திரும்பப்பெறப்பட்ட தங்கத்தை, தங்கக்கட்டுப்பாடு அலுவலக சட்ட விதிமுறைப்படி, திரும்பப்பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நகையாகவோ அல்லது விற்பனையோ செய்து விட வேண்டுமென்ற காரணத்தால் தங்கம் விற்கப்பட்டது.

(இ) விற்பனை செய்யும் தங்கம், அன்றைய தேதிய மார்க்கெட் ரேட்டுக்கு குறையாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, சுசீந்திரம் கோவிலில் இருந்து சுமார் பத்து கிலோ தங்கம் விற்பனை செய்யப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலிருந்து கிடைத்த வருமானம் எவ்வளவு? எவ்வளவு இலட்சம் ரூபாய்? அந்த ரூபாயை எதற்குப் பயன்படுத்தினார்கள்? அந்தத தங்கத்தை எங்கே விற்பனை செய்தார்கள்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஏழு கிலோ தங்கம் அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்திற்கு விற்கப்பட்டது. இரண்டு கிலோ தங்கம் தூத்துக்குடி வி.எஸ். அழகர்சாமி செட்டியார் அன்ட் பிரதர்ஸ்-க்கு விற்கப்பட்டது. ஒரு கிலோ தங்கம் ஏ.வி.எம். மாரிமுத்து நாடார் அன்ட் ஸன்ஸ்-க்கு விற்கப்பட்டது. மொத்தம் பத்து கிலோ தங்கம் விற்பனை செய்ததில் வந்த வரவு ரூ. 17,23,600. இத்தொகை தனியாக நிரந்தரமான முதலீட்டில் போடப்பட்டுள்ளது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இந்தத் தங்கத்தை கன்னியாகுமரியிலிருந்து எடுத்து வருகிறபோது அதற்கு—அறநிலையத் துறை அல்லது அந்த தேவஸ்தானத்தின் விதிமுறை என்று சொல்லப்படுகிறது—பெரிய போலீஸ் அதிகாரிகள் அதற்கு எஸ்கார்ட் செய்யவேண்டும் என்றும் அந்த எஸ்கார்ட்ஸ் தரப்படவில்லை என்றும்—இங்கே விற்பனை செய்கிற காலத்தில் பத்திரிகைகளில் முறையாக விளம்பரம் செய்யப்பட்டுத்தான் விற்பனை செய்யப்பட்டதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பத்து கிலோ தங்கம், விற்கப்பட்டது. ஆகவே அதற்கு மேல் பிரச்சனை எழவில்லை. முறையாக பாதுகாப்பெல்லாம் போடப்பட்டுத்தான் போய் இருக்கிறது. எல்லோருக்கும் தெரிவித்துத்தான் விற்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலயத்திலிருந்து இன்னொரு ஆலயத்திற்கு விற்றிருக்கிறார்கள். ஆகவே இவைகள் எல்லாம் முறையாக, மார்க்கெட்டில் என்ன விலை இருக்கிறதோ அவைகளை யெல்லாம் அனுமதி பெற்றுத்தான் விற்றிருக்கிறார்கள். இதில் ஒன்றும் இரகசியமும் இல்லை, வேறு தவறுகளும் இல்லை.

திரு. கோவைத்தம்பி : இந்தக் கேள்வியையொட்டி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கவிரும்புவது இதுமாதிரி தமிழகத்தில் தாங்கள் பொறுப்பேற்ற பிறகு இப்போதாவது) தங்கம் விற்பது வெளியே தெரிகிறது, அந்தளவிற்கு.... (மணியடிக்கப்பெற்றது.)

நீலகிரி மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன்களில் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை.

*வினா எண். 543—திரு. கே. உச்சி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் மண்வளப்பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட கூட்டுறவு கடன்களில் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏதுமில்லை.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஏற்கனவே கூட்டுறவுக் கடன்கள் மண்வளப் பாதுகாப்பிற்காகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நீலகிரிப் பகுதி மக்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்களா? அப்படியானால் அதன்மீது மீண்டும் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்துவிடவில்லை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் அரசாங்கம் மானியமாகவும் கடனாகவும் தந்த தொகை கிட்டத்தட்ட ரூ. 24,41,590. அதில் ரூ, 20,39,704 தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9—30)

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மண்வளப் பாதுகாப்பு என்ற பெயரால் குன்னூரிலும், கோத்தகிரியிலும் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகவும், உதகையிலும், கடலூரிலும் தள்ளுபடி என்று வரும்போது, மறுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலே தள்ளுபடி செய்யப்படவில்லைதான். ஆனால் கோத்தகிரியைப் பொறுத்தவரையிலும் ரூ. 11,74,790—ம், கடலூரில் ரூ. 3,12,290—ம், தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. குன்னூரில் ரூ. 5,44,610 தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதில், 5 ஏக்கர்களுக்கும் குறைவாக உள்ள சிறு விவசாயிகளில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, உதகையில் சிறு விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு. அவர்கள் கடனை தள்ளுபடி செய்ய அரசு ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

30-6—1979-வரை விவசாயக் கடன்களுக்கு வட்டிச் சலுகைக்காக அரசு அளித்த தொகை.

*வினா எண்.544—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30–6–1979 வரையிலான விவசாயக் கடன்களுக்கு வட்டிச் சலுகைக்காக அரசு அளித்த மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) அதில் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்திய தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) 16 கோடி ரூபாய்.

(ஆ) 4.85 போடி ரூபாய்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வறட்சி நிவாரணம், மற்றும் விவசாயிகளின் நிலைமையைக் கருதி, இந்தக் கடனை ஒத்திவைக்கின்ற போது, அந்தக் கடனைக் கட்டுவதில் கிராமக் கூட்டுறவு சங்கங்களில் கடனைப் பெற்றவர்களில் 80 சதவீதம் விவசாயிகள் உண்மையிலேயே கட்டமுடியவில்லை என்ற நிலையில் பெரிய விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கடனைக் கட்டாத சூழ்நிலை இருக்கிறது, அரசு சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, கூட்டுறவு சங்கங்களில் கட்டாத காரணத்தினால், ஆங்காங்கே உள்ள கிராமக் கூட்டுறவு சங்கங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசு ஏழை எளியவர் களுக்கு கடனைக் கொடுக்க விரும்பினாலும்கூட, வசதிபடைத் தவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்காத காரணத்தினால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் திருப்பிக் கடன் கொடுக்க முடிய வில்லை. ஆகவே, மாநிலம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, அதாவது 2 அல்லது 3 மாதங்களில் முழுக் கடனை திருப்பிக் கொடுக்கின்றவர்களுக்கு, வட்டிச் சலுகை அளிக்கப்படும் திட்டத்தை அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடனை வாங்கி, திருப்பிக் கொடுக்கின்றவர்களுக்கு வட்டிச் சலுகை அளிக்கப்படுமா என்று சுருக்கமாகக் கேட்டிருக்கலாம். அதை விடுத்து, இப்படி ஒரு நீண்ட கேள்வியைக் கேட்பதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு முறை இப்படிப்பட்ட ஒரு வட்டி சலுகை அளிக்கப்பட்டது. இது குறித்து அரசு பரி சீலிக்கும்.

**திரு. இரா. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வழங்கிய விவசாயக் கடனுக்கான வட்டிச் சலுகையை சில விவ சாயிகள் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டு விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள், அதனால் ஏற்பட்ட நிலுவைகள் எவ்வளவு? விவசாயிகள் எத்தனை பேர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 13கோடி அளவுக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு வழங்கிய பணத்தை விவசாயிகள் பயன் படுத்திக் கொள்ளவில்லை. எத்தனை விவசாயிகள் என்ற எண்ணிக்கை குறித்த தகவல் என்னிடம் இல்லை.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு கூட்டுறவுக் கடனுக்காக அரசு 11 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை அளித்ததாக அமைச் சரவர்கள் சொன்னார்கள், எந்த ஆண்டும் ஏற்படாத கடுமை யான வறட்சி இந்த ஆண்டு ஏற்பட்டதினால், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்யக் கூடிய திட்டம் ஏதேனும் அரசிடம் இப்போது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஜப்தி நடவடிக்கை மூலம் எந்தக் கடனையும் வசூலிக்கக் கூடாது என்று முடிவுசெய்து மாநிலம்முழுவதும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் டிரவுட் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று கேட்டிருக் கிறார்கள். டிரவுட்டினுடைய நிலைமையைப் பற்றி முழுமையாக ஆராய்ந்த பிறகு, அந்த அடிப்படையில் பிறகு நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும்.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அந்த வட்டியை ரத்து செய்யும்போது, இதற்காக அரசு எடுத்த நடவடிக்கையை ரிசர்வ் வங்கி ஆதரிக்கிறதா இல்லையா? அப்படி அது ஆதரிக்கவில்லை என்றால், இந்த நஷ்ட ஈட்டை எப்படி அரசு சரி செய்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயிகள் தார்மீக மான பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டபோது, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டபோது, மத்திய அரசு மறுத்துவிட்டது. அந்த வட்டிச் சலுகையைக் கொடுக்க 16 கோடி ரூபாய் மாநில அரசின் பொறுப்பிலே இருந்து தரப்பட்டிருக் கிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, 30–6–1979 வரையிலான விவசாய கடன்களுக்கு வட்டிச் சலுகைக்காக அரசு அளித்த மொத்த தொகை 16 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் அதில் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்திய தொகை 4 கோடியே 85 இலட்சம் ரூபாய்தான், பாக்கித் தொகையை விவசாய சங்கங்கள் பயன்படுத்திக் கொள்ளாததற்கான காரணம் என்ன? அப்படி பயன்படுத்திக் கொள்ளாத கூட்டுறவுச் சங்கங்களின் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாய சங்கங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் இல்லை. ஆனால் விவசாய சங்கங்களின் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் அவர்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதால், நாங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த மாட்டோம்; ஆனால் வட்டிச் சலுகை மட்டும் வேண்டுமென்ற நிலையை எடுத்த காரணத்தினால்தான் இந்த நிலை ஏற்பட்டது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால்தான் அரசு விவசாயிகளுக்கு இந்த வட்டிச் சலுகையை அளித்துள்ளது. அதற்காக உச்ச மட்டக்குழுவையும் அரசு நியமித்துள்ளது. அந்த உச்ச மட்டக்குழு விவசாயிகளினுடைய கடன்களுக்கான முழு வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே பரிந்துரை வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையிலே பழைய கடன் பாக்கிகளுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்துவிட்டு, கடன் தொகையைத் தவணை முறையில் வசூலிக்கின்ற நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச மட்டக் குழுவினுடைய பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது, அது ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கடன்களுக்கு 1979 ஆம் ஆண்டு வரையில் வட்டிச் சலுகைக்காக அரசு அளித்த மொத்த தொகை 16 கோடி ரூபாய் என்றும், அதில் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்திய தொகை 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அப்பொழுது கலைக்கப்படுகின்ற நிலையில் இருந்ததால்தான், அவர்கள் அரசுக்கு அனுப்ப வேண்டிய ரிப்போர்ட்டை அனுப்பாததன் காரணமாக, அரசு அதிகாரிகளாக இருந்தவர்கள் அதை அனுப்பாததன் காரணமாக பல்வேறு விவசாயிகள் தாங்களாகவே அதைப் பெற முடியாத நிலையில், பல கோடி ரூபாய்க்கான வட்டியை விவசாயிகள் திருப்பிக் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, அவர்கள் மறுபடியும் மனுச் செய்தால் 1979-ஆம் ஆண்டு வரையில் வட்டியை அவர்களுக்குத் தள்ளுபடி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு மைய வங்கியினிடத்தில் கடன் பெறத்தக்க தகுதியை இழந்துள்ள நேரத்தில் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்தச் சலுகை இல்லை



என்றாலுங்கூட, தனிப்பட்ட விவசாயிகள் தாமாக முன்வந்து கடனைத் திருப்பிச் செலுத்தும்பொழுது அவர்களுக்கு ஒரு உற்சாகத்தைத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனிப்பட்ட விவசாயிகளுக்கு இந்தச் சலுகையைத் தர வேண்டுமென்று ரிசர்வ் வங்கியிடம் கேட்டு, விதிகளைத் தளர்த்தச் செய்து இந்த சலுகையை வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் 15–1–80க்குள் தங்கள் கடன் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு இதைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## போளூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 358—திரு. இல. பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு போளூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்டம் போளூர் அரசு மருத்துவமனையில் 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு ஏற்படுத்தி அது அந்நகரத்தினுடைய மையப்பகுதியில் உள்ள பழைய மருத்துவமனைக்கு, அந்தக் கட்டிடத்தில் செயல்பட ஏதுவாக கூடுதல் பணியாளர் தொகுதிகளுக்கும், செலவினங்களுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கட்டிடம் பழுது பார்க்கப்பட்டு செப்பனிடப்பட்டுப் பணிகள் முடிவடைந்ததும் இப்பிரிவு செயற்படத் தொடங்கும்.

## நிதிநிலை சரியில்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களிலுள்ள மருத்துவமனைகள்.

*வினா எண். 359—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிதிநிலைமை சரியில்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள மருத்துவமனைகள் அரசு மருத்துவமனைகளாக மாற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை, ஆனால் கிராமப் பகுதிகளில் இனி அரசு மருந்தகங்கள் துவக்கப்படாமல் அதற்கு மாறாக, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அரசு மானியத்துடன் மருந்தகங்களைத் திறப்பதற்கு வழி செய்யலாமா என்பது பற்றிய கருத்துரு தற்போது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. எனவே இக்கேள்விக்கு தற்போது இடமில்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் அப்படி மருந்தகங்கள் திறக்கப்படும்பொழுது அரசு ஏதாவது தொகை வழங்குவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, Government dispensaries will not be opened in rural areas in future என்ற முறையில் இனிமேல் அரசின் சார்பாக தொடங்கப்படுவதில்லை. ஆனால் பஞ்சாயத்து ஒன்றியங்கள் டிஸ்பென்சரீஸ் தொடங்க வேண்டுமென்றால் அதற்கு 100 சதவீதம் கூட அரசாங்கம் மானியம் கொடுக்கலாம் என்ற கருத்து அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. அந்தவகையில் கிராமங்களில் பஞ்சாயத்து ஒன்றியங்கள் மருந்தகங்கள் தொடங்க 100 சதவீதம் மானியமாக பணம் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது; அது பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து அனுதாபத்துடன் கவனிக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, நிதிநிலை சரியாக இல்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களிலாவது இந்த அரசு மானியம் மூலமாக அரசு மருத்துவமனைகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா? மதுராந்தகத்தில் லத்தூர் ஒன்றியத்தில் நிதிநிலை சரியில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி தனிப்பட்ட இடத்தைப் பற்றிக் கேட்கக்கூடாது; கேள்வி பொதுவானது; பொதுவாக இருந்தால் கேட்கலாம்.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, நிதி சரியில்லாத கிராமப் பஞ்சாயத்து ஒன்றியங்களில் மருத்துவமனைகள் திறக்கும் வாய்ப்பு இல்லை. ஜோலார்பேட்டையில் உள்ள....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, நிதிநிலை சரியில்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களில் 100 சதவீதம் மானியம் கொடுப்பதாகச் சொன்னார்கள். பல இடங்களில் நிதிநிலை சரியில்லை என்பது அமைச்சருக்குத் தெரியும். 1983-84 ஆம் ஆண்டில் நிதிவசதியில்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களில் குறைந்த பட்சம் 50 ஒன்றியங்களிலாவது இந்தத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இளையபெருமாள், உகம்சந்த், சுந்தரம் ஆகிய மூவரும் ஒரேமாதிரியான கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன் சார்பாக நடத்தப்பட்ட மருந்தகங்கள் தொடர்ந்து நடத்தப்பட நிதிநிலை சரியில்லை என்றால் அதற்கு அரசாங்கம் என்ன செய்யும் என்று கேட்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மருந்தகம் ஒன்றுக்கு 5,400 ரூபாய் ஒரு வருஷத்திற்கு மானியம் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு 100 சதவீதம் மானியம் அளிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே மருத்துவமனைகள் அமைக்க வேண்டுமென்பதற்காக நிலமும் அதற்குத் தேவையான பணமும் அந்த ஊர் பொதுமக்கள் கொடுப்பதற்கு முன்வந்தால்,அதைப்போன்று வாடகை இல்லாமல் கட்டிடம் அளிப்பதற்கும் முன்வந்தால் அரசாங்கம் உடனடியாக அந்த ஊரில் மருத்துவமனை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவரவர்களே, இதில் பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தின் சார்பாக நடக்கக்கூடிய மருந்தகமோ அல்லது மருத்துவமனையோ இருக்கக்கூடிய இடத்திற்கும் உறுப்பினர்கள் சொல்லக்கூடிய இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். 8 கிலோமீட்டர் தூரத்திற்குள் இருந்தால் தொடங்க முடியாது. இந்தத் தூரத்தைப் பார்த்து பரிசீலித்து, தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். அது மட்டுமல்ல. இந்த ஆண்டு, அதாவது 1983-84 ஆம் ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கேட்டதற்கும் கூடுதல் தகவலாகச் சொல்கிறேன். பார்ட் II ஸ்கீமில் 8 இடங்களில்—அவர்கள் 50 இடங்களில் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள்—பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி உதவி கொடுத்து, அவர்கள் மருந்தகங்களை நல்ல முறையில் நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுச் சுகாதார நிலையங்களில் சித்தமருத்துவப் பிரிவுகளைத் தொடங்கும் திட்டம்.

*வினா எண்.545—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுச் சுகாதார நிலையங்களில் (PHC) சித்த மருத்துவப் பிரிவுகளை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் எங்செங்கு நிறுவப்படும்?

(ஈ) எப்பொழுது முதல் செயல்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி, ஹண்டே; இவ்வினாவிற்கான விடை ஒரு விவர அறிக்கையாக * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலே முதலிலே 200 இடங்களுக்கும் பிறகு 10 இடங்களுக்காக மொத்தம் 210 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவ பிரிவு இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலே எங்கெங்கு நிறுவப்பட்டிருக்கிறது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு 17 இடங்களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 17 இடங்களில் அம்பாசமுத்திரம் தொகுதியிலே 50 யூனியன்கள் இருக்கின்றன. அங்கே வைராகுளம் என்ற இடத்தில் ஹெல்த்சென்டர் இருக்கிறது அந்த இடம் சேர்க்கப்படவில்லை. அங்கேயெல்லாம் ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே இன்னும் சித்த வைத்திய பிரிவு வரவில்லை. அதேபோல சங்கரன் கோவில் ஒன்றியத்திலே கரிவலநல்லூரிலேயும் வாசவநல்லூரிலேயும் இந்த பிரிவுகள் விஸ்தரிக்கப்படவில்லையே, அதற்கான காரணங்கள் என்ன என்பதை தெரிந்துக்சொள்ள விரும்புவதோடு அங்கேயெல்லாம் சீக்கிரமாக இந்தப் பிரிவுகளை அமுல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தா பிரிவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும் இந்தப் பிரிவை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய குறிக்கோளாகும். ஆனால் இருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால், அந்த பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கும் கட்டிடத்திலேயே தனியாக இதற்கென்று ஒரு அறை தேவைப்படுகிறது. அங்கே ஒரு டாக்டர், ஒரு பார்மஸிஸ்ட், ஒரு அட்டெண்டர் என்று மூன்று பேர்களை நியமிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு இருக்கைகள் மற்றும் மருந்துகளை வைக்க இடம் தேவைப்படுவதால், தனியாக ஒரு அறை தேவை

*1111-1118ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



படுகிறது. எங்கெல்லாம் தனியாக அறை இருக்கிறதோ, அங்கே இது வைக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தக் கருத்தின் அடிப்படையில், நிச்சயமாக அரசு செய்யும். அரசாங்கத்தினுடைய ஆர்வமும் அவைகளை இன்னும் அதிகமாக ஆக்க வேண்டும் என்பதில் தான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடங்களிலும் அந்தப் பிரிவுகளை அமைக்க அரசு கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இப்படிப்பட்ட சித்தா வைத்தியப் பிரிவினை ஏற்படுத்த, அரசுக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்கிற அந்த விவரத்தையும் சித்தா வைத்தியப் பிரிவுகளில் பரம்பரை வைத்தியர்களை பயன்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? என்கிற அந்த விவரத்தையும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலேயும் இட்படிப்பட்ட ஒரு சித்தா பிரிவினை ஏற்படுத்த வேண்டுமானால், அந்த மருந்துகளுக்கு மட்டும் 10,000/- ரூபாய் தேவைப்படுகிறது. அது மட்டும் அல்லாமல் டாக்டர்கள் மற்ற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். மருந்துகளுக்காக ஒதுக்கப்படுகிற ஒரு ஆண்டுக்கு 10,000 என்பது கூட அவ்வப்போது தேவைகளுக்கேற்ப அதிகரிக்கப்படும் நிலை இருக்கிறது.

பரம்பரைவைத்தியர்களை இதில் நியமிப்பதைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் பதிலளிக்கும் போது சொல்லியமாதிரி எல்லா இடங்களிலும் பி.ஐ.எம். படித்த டாக்டர்களையே நியமித்துக் கொண்டு வருகிறோம். எந்த எந்த இடங்களில் அவர்கள்நமக்கு கிடைக்கவில்லையோ அந்த அந்த இடங்களில் பரம்பரை வைத்தியர்களை நியமிக்க ஏற்பாடு செய்கிறோம்.

திரு. திருச்சி ஆர்.சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருப்பவர்கள் குழந்தைகள் பிறந்தவுடன் அவைகளுக்கு கோரோஜனை, கஸ்தூரி போன்ற மருந்து பொருள்களை புகட்டுவார்கள். அத்தகைய மருந்துகள் தந்தால் அது அவர்களுக்கு உரமாக அமைகிறது என்று சொல்லுவார்கள். அந்த மருந்துகள் சித்தவைத்தியத்திலேதான் கிடைக்கும். ஆகவே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் திறக்கப்படும் சித்தா மருத்துவப் பிரிவுகளில் இத்தகைய மருந்துகளை கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும் அது மட்டும் அல்லாமல், முன்னாள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பல்வேறு கருத்துக்களையும் நடைமுறை படுத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தபொது ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே சித்தா மருத்துவப் பிரிவுகளை அமைக்க அரசு காட்டி வரும் ஆர்வத்தை நான் வரவேற்கிறேன் என்றாலும் இந்த சித்தா மருத்துவப் பிரிவு எந்தெந்த மருத்துவ மனைகளில் செயல்படுகிறது என்றே தெரியாத நிலையில் மக்கள் இருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள் அலோபதி முறையிலே மருந்தை உட்கொள்ளுகிறவர்கள். அல்லது ஊசிகளை போட்டுக் கொள்ள கூடியவர்கள் அல்லது மாத்திரைகளைச் சாப்பிடக் கூடியவர்கள். கிராமப்புறங்களில் இருப்பவர்கள், சித்தா மருத்துவப் பிரிவு என்ற ஒன்று இருக்கிறதா என்பதே தெரியாமல் அவதிப்படுகிறார்கள். அதைப் போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதைச் சொன்னாலும் இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. எனவே சொல்ல வேண்டாம் என்று நீங்கள் அடிக்கடி சொல்லி விடுகிறீர்கள். இது மூலக் கேள்விக்கு தொடர்பு உண்டு ஏதோ ஒரு வகையில், ஆகவே, தொடர்ந்து சொல்ல அனுமதிக்க வேண்டும்.

(முற்பகல் 9–50)

மயிலாடுதுறை வட்ட அரசினர் மருத்துவமனையில் பல் வைத்தியத்திற்காக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நான் வெற்றிலைச் சீவல் அதிகமாக போடுகின்றவன் என்பதை அதிகமாக சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது இல்லை. நான் அங்கு சென்றேன். அப்படிச் சென்றபோது பல்லை எல்லாம் பிடுங்கி விடுவார்கள் என்று பயந்து திரும்பி வந்துவிட்டேன். அங்கே இருக்கின்ற டாக்டர் வாரத்திற்கு ஒரு நாள் இரண்டு நாள் கூட வர இயலாது என்ற நிலைமையில் அப்படி ஒருபிரிவு அந்த வட்ட மருத்துவமனைக்குத் தேவைதானா என்று கூட அவரே கேள்வியைக் கேட்டு, இது கீழத் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாகையிலும் அமையலாம் மேலத் தஞ்சையைப் பொறுத்த வரையில் தஞ்சையிலும் அமையலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது சித்த வைத்தியத்தை பற்றிய கேள்வி; ஆகவே அதுபற்றி கேளுங்கள்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்திலே பல் வைத்தியம் வருகின்றது. எனவே அங்கே வரக்கூடிய நோயாளிகளை அந்தந்த மருத்துவ



மனைகளுக்கு அரசாங்கமே அனுப்பி வைக்குமேயானால் அதற்கு அதிகமாக செலவினங்கள் ஏற்படாது. எனவே அரசாங்கமே அந்தச் செலவினங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதை எல்லாம் அரசு ஆராயுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் வட்ட மருத்துவ மனைகளிலே சித்த வைத்தியத்தை தருகின்ற நேரத்தில் தாலுக்கா மருத்துவ மனையாக இருந்தாலும் மாவட்ட தலைமை மருத்துவ மனையாக இருந்தாலும் நல்ல வகையில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். அங்கே போகக்கூடிய நோயாளிகளுக்கு அது தெரிய வேண்டும் என்று சொன்னார்கள். அந்த கருத்து ஏற்கப்படும், அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சித்த வைத்தியத்திலேயே பல்பொடி இருப்பதால் அந்த சூரணத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்தினால் நிச்சயமாக நன்றாக அமையும் என்பதையும் ஒரு யோசனையாக இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பொதுப் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவச் பிரிவுகள் இருப்பது போல் ஹோமியோபதி பிரிவுகளைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி சித்த வைத்தியத்தைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே நடந்த மானியக் கோரிக்கையில் கொஞ்சம் கவனம் செலுத்தவில்லை என்று நினைக்கிறேன். ஹோமியோபதியைப் பொறுத்தவரையில் நன்றாகத்தான் நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறேன். திரு என். எஸ் வி. சித்தன் அவர்களின் தொகுதியிலேயே ஒரு ஹோமியோபதி கல்லூரி வைக்கப்பட்டு நன்றாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அவருக்கு இருக்கக்கூடிய கவலை எல்லாம் அது அந்த இடத்தை விட்டு வேறு எங்கும் போகக்கூடாது என்பதுதான். அதற்கும் ஆவன செய்யப்படும்.

சேலம் அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 546. செல்வி பி. விஜயலட்சுமி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சேலம் அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

செல்வி. ப. விஜயலட்சுமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம்இல்லை என்று கூறினார்கள். இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிரிவிலும் இடம் போதாமல் இருக்கின்ற காரணத்தால் ஒரு சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்தச் சிக்கலைப் போக்குவதற்கு அரசு இனிமேலாவது அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டத்தைப் பரிசீலனை செய்ய முன்வருமா?

மேலும் அந்த சேலம் மருத்துவமனையில் ஹவுஸ் சர்ஜயன்ஸ் நியமிக்கலாமே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய எண்ணம் எல்லாம் மாவ்ட்டத் தலைமை மருத்துவ மனைகளை எல்லாம் கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவமனையின் தரத் திற்கு எப்படியாவது கொண்டு வர வேண்டும் என்றுதான் படிப்படியாக முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். இப்போது அந்த மருத்துவமனையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி இடம் போதாமல் அளவுக்கு அதிகமாக நோயாளிகள் அனுமதிக்க பட்டிருக்கிறார்கள் அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹவுஸ் சர்ஜியனை நியமிக்கலாமா என்று கேட்டார்கள். தற்போது ஒரு முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த சேலம் மாவட்டத் தலைமை மருத்துவ மனையைப் பொறுத்த வரையில் எம்.பி.பி.எஸ். பட்டம் முடிந்ததற்குப் பிறகு ஹவுஸ் சர்ஜீயனாக இந்த மாவட்ட மருத்துவமனையில் ட்ரெயினிங் பெற்று வந்தால் கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனைகளில் பயிற்சி பெற்று வந்தால் என்ன அந்தஸ்து தரப் படுமோ அதே அந்தஸ்து கொடுக்கப்படும்.

This is a hospital recognised for the House Surgeons for the their House Surgeoncy Training.

அந்த வகையில் உத்தரவு போட்டிருக்கிறோம். ஹவுஸ் சர்ஜியன்ஸ் போய் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என் பதையும் ஒரு தகவலாக இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் பு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையை விட 200 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டு நோயாளிகள் அனு மதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பெரும்பாலும் வராண்டாவிலும் மழையிலும், வெயிலிலும் பாதிக்கப்பட்டு இன்னும் அதிகமான நோயால் பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். 3 ஆயிரம். 4 ஆயிரம் நோயாளிகள் மழையிலும், வெயிலிலும் நீண்ட க்யூவில் நின்று மருந்து வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் சித்த வைத்திய பிரிவு மெடிக்கல் வார்டில் ஒரு பகுதியில் நடத்தப்படுகிறது. சித்த வைத்தியத் திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு இதற்கு தனியாக பிரிவை ஏற்படுத்தவில்லை. சேலம் மருத்துவ மனை சுதந்திர காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாக பழைய கட்டி டமாக இருக்கிறது. அதைப் படிப்படியாக இடித்து பல மாடி கட்டிடம் கட்டி பல பிரிவுகளை புதிதாக ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் இந்த மருத்துவ மனை மக்கள் மத்தியில் எவ்வளவு ஒரு நல்ல திருப்தி அடையக்கூடிய அளவுக்கு செயலாற்றி வருகிற ஒரு மருத்துவ மனையாக இருக் கிறது. அங்கு வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை பற்றி எல்லாம் சொன்னார்கள். அதற்கு நன்றி. அதே நேரத்தில் அவர் கேட்கின்ற கேள்விக்கு நான் மாண்புமிகு உறுப்பினர் விஜய் லட்சுமி அம்மையார் அவர்கள் கேள்விக்கு என்ன பதில் கொடுத்தேனோ அதே பதில்தான் கொடுக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனையை மருத்துவ கல்லூரி மருத்துவ மனையின் அந்தஸ்துக்கு உயர்த்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது பற்றி மருத்துவ மானியக் கோரிக்கையில் வெளியிடவில்லை. ஆகவே துணை மானியக் கோரிக்கையில் இதற்கு நிதி ஒதுக்கப்படுமா? அப்படி நிதி ஒதுக்கப்படும் நேரத்தில் குறைந்த பட்சம் இதய நோய் பிரிவுகள் சேலத்திற்கு வருமா? சேலம் மாவட்ட மருத் துவ மனையை மருத்துவக் கல்லூரி அந்தஸ்த்துக்கு உயர்த்துவ தோடு மருத்துவக் கல்லூரியை சேலத்திற்கு கொண்டுவர அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட தலைமை மருத்துவ மனையை பொறுத்த வரையில் தற்போது ஒரு Intensive Care Centre (I. C. C.) ஆக செயல்பட்டு கொண்டு வருகிறது. அண்மையில் அதற்காக எம். டி. பட்டம் பெற்ற ஒரு சிவில் சர்ஜன் அந்தஸ்துள்ள ஒரு டாக்டரை நியமித்து இருக்கிறோம். மிக சீரான வகையில் 4 படுக்கைகள் கொண்டு நல்ல ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட அருமையான ஒரு (I.C.C.) Unit

நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாதம் 13-ம் தேதி நான் நேரில் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே அது நன்றாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களிலே பல்வேறு கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனையை விட இது மிக செம்மையாக நடந்து கொண்டிருக்கிறது என்று Indian Medical Council சார்பாக வந்த டாக்டர்கள் எல்லாம் கூட பாராட்டியிருக்கிறார்கள். அதற்குத் தான் அவுஸ் சர்ஜன் அங்கே படிக்கலாம் என்ற திட்டத்தை நாம் கொண்டுவந்து இருக்கிறோம்.

செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவ மனையில் ஸ்பெசலிஸ்டுகள் பணியாற்றும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஸ்பெசலிஸ்டுகளை அங்கே நியமித்து இருக்கிறோம், Surgeryக்கு ஒன்றும் Medicine-க்கு தனிஸ்பெசலிஸ்டும் Obstetrics & Gynaecology-க்கு தனி ஸ்பெசலிஸ்டும் ஆக 3 ஸ்பெசலிஸ்டுகளை நாம் நியமித்து இருக்கிறோம்.

திரு. ஜி. கிருஷ்ணராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு தலைமை மருத்துவ மனையில் Epo Cordio Graphy என்ற ஒரு கருவியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அது சரிவர பயன்படுத்தப்படவில்லை என்று பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. மேலும் அரசு தலைமை மருத்துவ மனையில் டாய்லெட் சரிவர பராமரிக்கப்படுவது இல்லை. இதை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Epo Cordio Graphy என்பது கிடையாது. அங்கே Electro Cordio Graphy தான் இருக்கிறது. அது நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

### தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்

*வினா எண் 547—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் இலாபகரமாக இயங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம் மேம்பாடு அடையக்கூடிய வழிவகைகளையும் அதன் நடவடிக்கை விவரங்களையும் ஆராய்ந்து தேவையான அறிவுரை வழங்க அரசினரால் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அப்பரிந்துரைகள் தனியே அரசின் ஆய்வில் உள்ளன. அப்பரித்துரைகள் மீது உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, அதனால் ஷ நிறுவனத்தினுடைய வளர்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு ஷ நிறுவனம் இலாபகரமாக இயங்க வழிவகை செய்யப்படும். இதற்கிடையே சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் இந்நிறுவனத்திற்கு ரூ.1.80 இலட்சத்தை அரசு கடனாக அளித்துள்ளது.

மேற் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம் வருங்காலத்தில் அதிகமான இலாபத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 10-00]

### கீழ்க்குடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கலப்பட சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலை

*வினா எண் 548—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தாலூகா ஒரு மணியேந்தல் குரூப் கீழ்க்குடி கிராமத்தில் கலப்பட சிமெண்ட் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அரசு அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) திருவாடானை வட்டம் கீழக்குடி கிராமத்தில் இளையான்குடி வட்டம் வலசைக்குண்டு. தேரிக்கொம்பன் ஆகிய கிராமங்களில் சிமெண்ட் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சம்பந்தப்பட்ட நபர்கள் மீது இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்குடி கிராமத்தில் கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு முன்பே இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு மிகப் பெரிய அளவிலே கலப்படம் செய்யப்பட்டு நாள் ஒன்றுக்கு 10,12 லாரிகளில் சரக்குகள் வெளிமார்க்கட்டிற்கு அனுப்பப்பட்டு வந்தது. பரமக்குடியிலே காட்வுன், இளையான்குடியிலே கேட்வுன், தாளக்கிராமத்

திலே கோடவுன், பாம்பூரிலே கோடவுன் என்று இப்படி பல இடங்களிலே கோடவுன்களை வைத்து வரவு-செலவு செய்யப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு கலெக்டருடைய பார்வைக்கு கொண்டு போயும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நபர்கள் இன்னும் கூட கலப்படம் செய்து கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே மேலும் துரித நடவடிக்கை எடுத்து அது நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, உளவு மற்றும் குற்றப் புலனாய்வுக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரால் 127 மூடைகள் ஜிப்சமும் 13 மூடைகள் சிமிண்டும் கண்டுபிடிக்கப்பட்டு அந்த கிராமத்தைச் சேர்ந்த ஆறு நபர்கள் காளிமுத்து, சின்னத் தம்பி, கந்தசாமி பெருமாள் இப்படிப் பல பேர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற நான்கு கிராமங்களிலே ஏறக் குறைய 20, 25 பேர்கள் கைது செய்யப்பட்டு ஏற்கெனவே நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது. எனவே நடவடிக்கை எடுக்க பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் மீண்டும் ஜாமீனில் வெளியே வந்த பின்னாலேயும் ஏற்கெனவே செய்த தவறுகளை செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுரை வழங்கி அப்படி ஏதாவது தவறு நடக்குமானால் அவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கீழ்க்குடித் தொழிற் சாலைக்கு சேலத்திலிருந்து மூலப்பொருட்கள் வந்து கொண்டிருக் டிருக்கின்றன. எங்கேயிருந்து மூலப் பொருட்கள் வந்தாலும் அந்த இடத்தையும் கண்டுபிடிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இது அனுமதி பெற்ற ஒரு தொழிற்சாலையல்ல, அல்லது அரசாங்கத்தினுடைய தனி சிமெண்ட் தொழிற் சாலைகளிலே அங்கீகாரம் பெற்ற சிமிண்ட் விநியோகஸ்தர்கள் அல்ல, தவறான முறையில் செய்து இருக்கிறார்கள். சேலத்தைச் சேர்ந்த இருவர் உள்பட பலபேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி கைது செய்யப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சிமிண்ட் பற்றாக்குறை இருக்கிற காலத்திலே சிமிண்டில் கலப்படம் செய்யக் கூடிய அந்தத் தவறுகள் கூடுதலாக நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி கலப்படம் செய்கிறவர்கள் பகிரங்கமாக 10,100 ஆட்களை வைத்துக் கொண்டு மணலைச் சலித்து கலப்படத்தைப் பகிரங்கமாகச் செய்து கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு கறாரான தண்டனையும் கடுமையான கண்காணிப்பும் இருக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் தவறு செய்கிறவர்கள் குற்றப்புலனாய்வுத் துறையாலே கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மேலே வழக்கு போடப்படுகிறது. நீதிமன்றத்திலே அவர்கள் செய்கிற குற்றங்களுக்கு ஏற்ப தண்டனை ஜெயில் தண்டனையோ அல்லது அபராதமோ வழங்கப்படுகிறது.

டிட்கோ மூலம் வழங்கப்படும் கடன் தொகைகளுக்கான வட்டி.

* வினா எண் 549—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) TIDCO மூலம் வாங்கும் கடன் தொகைகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வட்டித் தொகையை வசூல் செய்யப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

(இ) எவ்வளவு தொகை வசூல் செய்யாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) (ஆ) மற்றும் (இ)

விவர அறிக்கை ** ஒன்று அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த டிட்கோவை பொறுத்தவரையில் இந்த நிறுவனம் தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டு இயங்கி வருகிற நிறுவனம். லாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கிற நிறுவனங்களிடமிருந்து வட்டி வசூலிப்பதிலே யாருக்கும் இருவேறு கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் தொடர்ந்து நஷ்டமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற நிறுவனங்கள், அவர்களுடைய கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டு—சிக் யூனிட் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நோயாளியாக இருக்கிற நிறுவனங்களில் இருக்கிற வட்டித் தொகையை தள்ளுபடி செய்வதற்கு அல்லது சலுகை காட்டுவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி வராமல் இருக்கிற வட்டியை கடுமையாக வசூலிப்பதைப்பற்றி; மாண்புமிகு உறுப்பினர் கேட்பது சலுகை காட்டுவது பற்றி; அவர்களே சொன்னதைப் போல அந்த நிறுவனங்களுக்கு சலுகை காட்டப்பட்டதாலேதான் 2.74 கோடி பாக்கி இருக்கிறது.

---

*..1113ம் பக்கங்களில் இணைப்பு III ஆகஅச்சிடப்பெற்றுள்ளது.

(1983 மார்ச் 25

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வராமல் இருக்கிற வட்டி மொத்தம் எவ்வளவு? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற ஸ்டேட் மெண்டிலே, நட்டத்தில் இயங்கும் தொழிற் பிரிவுகளை அவற்றின் நலனைக் கருதி வட்டியை செலுத்தும்படி டிட்கோ கட்டாயப்படுத்துவதில்லையென்றும், இந்நிறுவனங்கள் இலாபம் ஈட்ட முற்படும்போது வட்டியையும் கடனையும் வசூலிக்க தக்க நடவடிக்கைகளை டிட்கோ மேற்கொள்ளும் என்றும் கூறப் பட்டிருக்கிறது. இந்த பொசிஷன் சில கம்பெனிகள் தொடர்ந்து நஷ்டம் காண்பித்துக்கொண்டே இருப்பதற்கு வாய்ப்பு அளிக்கக் கூடிய இடம் இதிலே இருக்கிறது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால், கடன் கொடுப்பதற்கு முன்னதாகவே அந்த கம்பெனி இலாப தில் போகுமா என்று பீசிபிலிட்டி பார்த்து தான் கொடுக்கவேண்டும். பீசிபிலிட்டியை பொறுத்தவரையில் டிட்கோ பார்த்து தானே கொடுத்திருக்க வேண்டும். அப்படி யென்றால் தொடர்ந்து எப்படி நஷ்டம் வருகிறது? இல்லை டிட்கோ பீசிபிலிட்டியை பார்ப்பதிலே தவறு எற்பட்டிருக் கிறதா? இதுபோன்ற கம்பெனிகள் அல்லது கடனை வாங்கி யவர்கள் டிட்கோவை ஏமாற்றுகிறார்களா என்பது சம்பந்த மாக ஒரு 'தரோ என்க்வையரி', ஒரு இன்டிபெண்டன்ட் என்க்வையரி', கம்பெனிகள் நஷ்டம் என்ற பிரச்னையில், நடத்த ஆர்டர் பண்ணுவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-12-82 நிலவரப்படி நிலுவையிலுள்ள வட்டி பாக்கி சுமார் ரூ. 2.74 கோடி. டிட்கோ நிறுவனம் சுமார் 11 தொழிற்சாலைகளை, தொழில் நிறுவனங்களை பொதுத் துறையிலேயும்; சுமார் 40 தொழிற்சாலைகளை கூட்டு துறையிலும்—ஜாயின்ட் செக்டாரிலும், நிறுவ முயற்சி களை மேற்கொண்டு பொதுத்துறை உற்பத்தியில் 4 தொழிற் சாலைகள் இருக்கின்றன; கூட்டுத் துறையில், ஜாயின்ட் செக்டாரில் சுமார் 20 தொழிற்சாலைகள் உற்பத்தியில் இருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல தொழிற்சாலைகள் துவங்கப்படுகிற போதே பீசிபிலிட்டி எல்லாம் பார்த்து தான் ஆரம்பிக்கப்படுகின்றன. அது டிட்கோவால் ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் மட்டுமல்லாமல், தனியார் ஆரம்பிக்கின்ற தொழிற்சாலை களிலும் தமிழ்நாடு அரசு பொதுத்துறையில் ஆரம்பிப்பது, கூட்டுத் துறையில் ஆரம்பிப்பது மட்டுமல்லாமல், மத்திய அரசு ஆரம்பிக்கின்ற பொதுத் துறை கூட்டுத் துறை இப்படி அனைத்திலுமே, நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகள் இவை களை எல்லாம் கடன் கொடுக்கிறபோது ஆராய்ந்து, பீசிபிலிட்டியை பார்த்து தான் கடன் கொடுக்கிறார்கள். அதில் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் சில தொழிற்சாலைகளில், அது தனியார் துறையில் இருந்தாலும், சில நேரங்களில் மின் வெட்டு, மார்க்கெட்டில் இருக்கிற டிமான்ட், அதிலே இருக்கிற



1983 மார்ச் 25)

பிரச்னைகள், மார்க்கெட்டில் இருக்கிற ஃப்ளக்சுவேஷன் இப்படி பல்வேறு வகையான கஷ்டங்கள் இருக்கின்றன. நிர்வாகத்தில் திறமை குறைவு என்ற காரணம் ஒரு பக்கம் இருக்க இதைத் தவிர பல்வேறு நிலைகளில் அன்றாட சூழ்நிலையில் தொழிற் சாலைகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே டிட்கோ நிறுவனத்தைப் பொறுத்த வரையில் அது பொதுத் துறையிலே இருக்கிற தொழிற் சாலையாக இருந்தாலும், அல்லது ஜாயின்ட் செக்டாரில் இருக்கிற தொழிற்சாலையாக இருந்தாலும் அதிலே இருக்கிற லாபத்தை சம்பாதித்துக்கொண்டு, நஷ்டத்தை கணக்கு காட்டி, அதோடு அரசிற்கு வரவேண்டிய வட்டியும், வருமானமும் வராமல் இருப்பதற்கு அரசு உதவியாக இருக்காது. ஜாயின்ட் செக்டாரில் அரசுத் துறை அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் டைரக்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கம்பெனிகளை ஆடிட் செய்கிறபோது, அவற்றை கணக்கு பார்க்கிறபோது அனைத்தும் ஒழுங்காக கணக்கு பார்க்கப்பட்டு. உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலை களிடமிருந்து வட்டியை வசூலிப்பதில் கொஞ்சம் சுணக்கம் காட்டப்படுகிறது. கால அவகாசம் கொடுக்கப்படுகிறது. அல்லது ரீ-பேமென்ட்ஸ்ஸில் சில சலுகைகள் காட்டப்படுகின்றன. ஆகவே தான் இந்த வட்டி பாக்கி இருக்கிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எந்தெந்த துறை களில் அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் இந்த வகையில் அறிவுறுத்தப்பட்டு, இயங்கி வருகிற தொழிற்சாலை அது பொதுத்துறையாக இருந்தாலும், ஜாயின்ட் செகடாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஆதிவாசிகள் நலத்திற்கென்று புதிய துறை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 550—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட நலத்துறையிலிருந்து ஆதிவாசிகள் இனத்தை தனியாகப் பிரித்து புதியதுறை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) பழங் குடியினர் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்த தனிதுறை நிறுவ சாத்தியக் கூறுகள் இல்லை.

(1983 மார்ச் 25

(முற்பகல் 10-10)

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 5 இலட்சம் பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த மற்ற மாநிலங்களிலுள்ளது போல தனி ரீப்பேட்ரியேட்ஸ் இன்ஸ்டிட்யூட் ஒன்று ஏற்படுத்த இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை பொறுத்த வரையில். இங்கே ஏற்கெனவே டிரைபல் ரெசர்ச் செல் ஒன்று இயங்கி வருகிறது. அதிலே, 'ஆபீசர் ஆன் ஸ்பெஷல் டியூட்டி' என்கிற வகையில், தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இந்தப் பழங்குடியினர் நலனுக்காக தீட்டுகின்ற பிராஜக்ட் ரிப்போர்ட்களைத் தயாரிப்பதற்கும் ஸ்பெஷல் பிளான்களைத் தயாரிக்கவும் உதவியாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடு அரசு அத்தகைய பதவிகளை அமைக்க நடவடிக் கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்; பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினருக்கான துணை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் இன்று பலகோடி செலவிடப்பட்டு, பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளிலே பல பணிகள் நடந்து வருகின்றன. அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க, மாவட்ட அளவில் சிறப்பு அதிகாரி ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் துணை மேம்பாடு திட்டம் தமிழகத்திலே 5 மாவட்டங்களில், 9 பகுதிகளில் தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் அதற்கென பல இலட்சம் ரூபாய் களை ஒதுக்கீடு செய்து, அதை நிறைவேற்றி வருகின்றோம். இதிலே மேலும் பணிகளைக் கவனிப்பதற்காக, இந்தப் பழங் குடியினர் நலத்துணைத் திட்டங்களை நிறைவேற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளருக்கு உதவியாக கோட்ட வளர்ச்சி அலுவலரை நியமிக்கவும் தற்போது இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்திருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிவாசிகள் சம்பந்தமான ஆலோசனை நலக் குழு எத்தனை முறை கூட்டப்பட்டது? அவர்களால் எடுக்கப் பட்ட முடிவுகள் என்ன? அந்த முடிவுகள் இன்னும் அமுல் படுத்தப்படாமல் இருப்பது உண்மைதானா? அப்படி இருந் தால், உடனடியாக அதை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 25)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் நலத்திற்கென மாநில அளவிலே இருக்கக்கூடிய குழு எத்தனை முறை கூடியிருக்கிறது? அதிலே எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன? என்பதை எல்லாம் தற்போது தெரிவிக்க இயலாது. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், விவரங்கள் தெரிவிக்கப்படும்.

திரு. ஜி. மூர்த்தி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஆதிவாசிகளுடைய பட்டியலில், எந்த, எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆதிவாசிகளாகக் கருதப்படுகின்றார்கள் என்கிற உண்மையினை அரசாங்கம்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள்— வெளியிடுவார்களா? மலைவாழ் மக்களாகக் கருதப்படுகின்ற, மலையிலே வாழ்கின்ற மலையாளிகள் என்று சொல்லப் படுபவர்களும், மலைவாழ் மக்களாக இன்று சான்று பெற்று, சலுகைகளைப் பெறுகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 36 பிரிவினர்கள் தற்போது பழங்குடியினர் பிரிவிலே வந்திருக் கிறார்கள். மூலக்கேள்வி இந்தத் துறைக்குத் தனியாக இயக்குந ரகம் அமைக்கக்கூடிய உத்தேசம் இருக்கிறதா என்பது. ஆனால் தவறான சான்றிதழ்கள் வழங்கப்படுகிறதா என்ற கேள்வியினை உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இது குறித்து, தனியாகக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் பட்டினிச் சாவு அதிகமாக இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இது சம்பந்தமாக ராஜ்ய சபாவில் விவாதித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜ்ய சபாவுக்குப் போகிறேன் என்று சொல்கிறீர்களா? நீங்கள் கொடுத்திருந் தால், அதை எடுத்துக்கொள்வதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: 12 ஆம் தேதியே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுடையதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் மற்ற உறுப்பினர்களிடம் பேசுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை. ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு ஒன்று எடுத்துக் கொள்கிறேன். இன்று வேறு ஒன்று எடுத்துக்கொள்கிறேன். அதை எடுத்துக் கொள்ளலாம் என்கிறீர்களா? வேண்டாம் என்று சொல்கிறீர்களா (குறுக்கீடு) உங்களுடையது மட்டும் தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் எப்படி முடியும்? கொடுத்திருப்பதை வரிசையாக, ஒரு நாளைக்கு ஒன்று என்று எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்; தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் எடுக்கிற முறையில் எந்த வேறுபாடும் இல்லை. அது தங்களுடைய உரிமை. அவையினருடைய வேண்டுகோளை தாங்கள் அந்தப் பிரச்சினையை ஒட்டித்தான் மதிப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சொல்லப்பட்ட பிரச்னை, பட்டினிச் சாவு இருப்பதாகப் பேசப்படும் ஒரு நிலைமை. எனவே, அதன் முக்கியத்துவத்தைக் கருதி, தாங்கள் விரைவாக அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கு ஒரு உண்மையான நிலவரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணி குழுக்கள் கூட்டத்தைக் கூட்டுவது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்ற வறட்சி நிவாரணப் பணிக் குழு சில மாவட்டங்களில் சில மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கூட்டப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்திற்கு விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமையில் அந்தக் கூட்டத்தை வைத்துக் கொண்டால் மாமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டு அவர்களது அபிப்பிராயங்களைத் தெரிவித்து, அவர்கள் தொகுதியில் நடக்கின்ற பணிகளைப் பற்றிச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, உடனடியாக மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள், மன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் அளவிற்கு டெலக்ஸ் மெசேஜ் மூலமாகவாவது மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் வலியுறுத்தி இது விடுமுறை நாட்களில் கூட்டப்பட வேண்டுமென்று வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



136016

...புமிகு பேரவைத் ...லைவர்: மா... ...ங்களிலே வறட்சி நி... ...ம போன்றவைகள் என்று நிறைய இருக்கின்றன. சட்ட ப... உறுப்பினர்கள் கலந்து கொள்ள இயலாத நிலையில் டி... ...யைக் கூட்டுவது நல்லதா என்ற கேள்வியைக் கே... ...ார்கள்.

...புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பே... ...த் தலைவரவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளெல்லாம் மு... ...றகு அப்படிப்பட்ட பணிகளை ஆற்ற வேண்டுமென்ற முறையும் சரியாக வராது. உடனடியாக என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்ற நிலையில் சிலபல கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய அவசியத்தின் காரணமாகச் சிலபல கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. மாண்புமிகு டாக்டர் இராமலிங்கம் போன்ற 234 உறுப்பினர்களும் இந்த அவையிலேயே இருந்து பணியாற்ற வேண்டுமென்று கொண்டிருக்கின்ற பேரார்வத்தை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். வேறு எந்தப் பணிக்கும் செல்லாமல், இங்கேயே இருந்து பணியாற்ற வேண்டுமென்று முழு ஆர்வத்தையும் காட்டுவது வரவேற்கத் தக்கது என்றாலும், கூடுமானவரையில் அவசரமாக முடிவெடுப்பதற்காக சில பல குழுக்கள் உடனடியாகக் கூட்டப்பட வேண்டிய அப்படிப்பட்ட நிலைமைகளில் கூட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும் கூடுமானவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பையும் அளிக்கின்ற வகையில் விடுமுறை நாட்களில் கூட்டுவதற்கான ஒரு தெரிவிப்பை ஆங்காங்கு செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். கூடுமான வரையில் அதைச் செய்யலாம். ஆனால், ரொம்பவும் அவசரமான நேரங்களில் சில பல கூட்டங்களை உடனடியாகக் கூட்ட வேண்டி வரும். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை ஏற்று ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்களில் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏப்ரல் 1, 2 மற்றும் 3 ஆகிய நாட்கள் விடுமுறை நாட்கள். அந்த சனிக்கிழமையிலே கூட்டலாம். சட்டமன்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்குக் குந்தகம் இல்லாத வகையில் கூட்டுவது நல்லது.

(இ) பேரவையில் வைக்கப்பெறும் ஏடுகள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே. இந்த அவையில் வைக்கப்படும் டாகுமென்ட்ஸ் பற்றி ரொட்டீன் டாகுமென்ட்ஸ் ஆனாலும், டிஸ்கஷன் தேவை என்றாலும் முன்னதாகவே கொடுக்கவேண்டுமென்று டைரக்டிவ் கொடுத்

திருக்கிறீர்கள். ஜனங்கள் மிகவும் கவலைப்படுகின்ற விஷயமாகவும், நமக்கும் தேவையானதாகவும் இருக்கின்ற எலட்ரிசிட்டி ரேட் சம்பந்தமான பணிக்கர் ரிப்போர்ட் கவர்மெண்டுக்கு வந்துவிட்டது. ஆனால் அது இன்னும் அவையில் வைக்கப்படவில்லை. இப்படியிருந்து அது உங்களுடைய டைரக்டிவிற்கு மாறான நிலை வரக்கூடாது. தயவுசெய்து சீக்கிரமாக இந்த ரிப்போர்ட்டை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பணிக்கர் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. பொதுவாக அரசு, எந்தக் குழுவின் அறிக்கை வந்தாலும், அந்த அறிக்கையின் மீது முடிவெடுக்காத பொழுது இதை அவைக்குக் கொண்டு வருவது சரியாக இராது.

**(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி**

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நான் இரண்டு விவகாரங்களைப்பற்றிக் கேட்கிறேன். அந்த இரண்டையும் கேட்ட பிறகு தாங்கள் அளிக்கின்ற தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒன்று, அரசாங்கம் சம்பந்தப்பட்டது. மதுரை மாவட்டத்தில். கண்ணகி கோவிலில் உள்ள சிலையைக் கேரள அரசாங்கம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடையில் குறுக்கிடுவதற்காக உறுப்பினரவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. உறுப்பினர்களெல்லாம் ஏற்கனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வரிசைப்படி எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் சொல்வதை மட்டும் எடுத்துக்கொண்டால் உங்களுக்கு ஏதோ முன்னுரிமை கொடுப்பதாக மற்றவர்கள் நினைப்பார்கள்.

**திரு. துரைமுருகன் :** சரி, அதை விட்டு விடுகிறேன். அவை நிகழ்ச்சிகள் நடப்பதைப்பற்றிய அஜண்டா நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டது. அதில் உமாநாத், ஆண்டித்தேவர் ஆகியவர்கள் கொடுத்த தீர்மானங்களின்மீது விவாதம் உண்டு என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிகவும் முக்கியமான மண்டல கமிஷன் அறிக்கை பற்றி நான் தனி நபர் தீர்மானம் கொடுத்திருந்தேன், அதைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதாகவும் ஒத்துக்கொண்டு கடிதமும் அனுப்பியிருக்கிறீர்கள். அது எந்த நாளில் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனி நபர் தீர்மானம் வரும் பொழுது அதை எடுத்துக் கொள்ளலாம். ஏற்கனவே உள்ள மாநில சுயாட்சி பற்றிய தனி நபர் தீர்மானமே இன்னும் முடியவில்லை. அது முடிந்த பிறகு அடுத்தடுத்து எடுத்துக் கொள்ளும் வகையில் அது எடுத்துக் கொள்ளப்பெறும். உறுப்பினரவர்கள் தனி நபர் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அது தனி நபர் நாளில் வரும். அதில் மாறுதல் இல்லை.

(முற்பகல் 10–20)

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, இந்தத் தொடர் கூட்டம் அடுத்த மாதம் 18 ஆம் தேதி வரையில்தான் போகும் என்று இருக்கிறது. இந்த அஜெண்டாவிலே அது வரவில்லை என்றால், அப்புறம் அடுத்த வருஷம் தான் சபை கூடும். அதற்குள்ளே வராமல் போய்விடும். அது மிகவும் முக்கியமான பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது என்ற வகையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மண்டல் கமிஷனுக்கு நீங்கள் கொடுக்கிற முக்கியத்துவத்தைப் பாராட்டுகிறேன். அது வேறு விவகாரம். இன்னும் மாநில சுயாட்சி பற்றிய விவாதமே முடியவில்லை. அது முடிந்த பிறகு தான் மற்றவை வரும். இது தான் சட்டமன்ற மரபு. பாராளுமன்ற மரபு.

***திரு. சோ. அழகர்சாமி:** இன்றைக்குப் பத்திரிகையில் ஒரு விஷயம் வந்திருக்கிறது. மத்திய–மாநில உறவு சம்பந்தமாக மத்திய அரசு ஒரு நபர் கமிஷனை நியமித்திருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லும் போது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, என்னென்ன மாறுதல்கள் செய்யலாம் என்ற சொல்லுக்கு மாறாக, அரசியல் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் வேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அதுபோல நம்முடைய மாநிலத்தினுடைய எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் எடுத்துசசொல்ல, அவர்களுக்கு பரிந்துரை செய்ய, இந்த மன்ற அளவிலே ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவாகளது தீர்மானம் வரும்போது இதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புகு பேரவைத் தலைவரவர்களே, உம்மிடியார் பேங்கிலே பணத்தைப் பறிகொடுத்தவர்கள் இன்று ஊர்வலமாக கோட்டையை நோக்கி வந்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தம்பி ஊர்வலம் வந்ததற்கு அண்ணன் மகிழ்ச்சி சொல்லியிருக்கிறார்கள். நன்றி.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை விதி 246–247-ன் கீழ் மேலவை உறுப்பினர் ** அவர்கள் மீதான உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் பேசியதைப் பற்ற . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் பற்றி அவையில் எழுப்பக்கூடாது: அறையில் வந்து கேட்கவேண்டும்.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலவையிலுள்ளவர்களைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலோ அல்லது இந்தச் சட்டமன்றத்திலே உள்ளவர்களைப் பற்றி மேலவையிலோ பேசுவது, எழுப்புவது முறையாகாது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நான் சபாநாயகருடைய பெருமையைக் காப்பாற்றுவதற்காகச் சொல்கிறேன். அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீக்கப்படுகிறது. அதோடு, பிரச்னை முடிகிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 35 ஆண்டு கால சுதந்திர இந்திய வரலாற்றில், தமிழ் நாட்டில், இன்று பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மூலமாக, தென் மாநில முதல்வர்கள் கௌன்சில் மூலமாக, இந்தியப் பேரரசின் மூலமாக, வெற்றி கிட்டியிருக்கிறது. அந்த வெற்றியின் மூலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை மறுநாள் வருகிறது. அப்போது எடுத்துக்கொள்ளலாம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### எண்ணூர் அனல் மின்நிலைய கடல்நீர் கால்வாய் மண் மேடிட்டிருப்பதால் மின் உற்பத்தி பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள், கே. எம். தங்கமணி' பி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. அப்பாதுரை, மு. அம்பிகாபதி ஆகியோர் சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்தில் நீராவியைக் குளிர வைக்கும் கடல் நீர் கால்வாயில் மண் மேவி தண்ணீர் குறைந்துள்ளதால் 5 ஜெனரேட்டரில் 4 மூடப்பட்டுள்ளதால், பெருமளவு மின்சாரம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. 450 மெகோவாட் மின்சாரம் உற்பத்தியாகும் எண்ணூர் மின்சார நிலையத்தில் கொதிகலனுக்கு குளிர்ந்த நீர் இல்லாமையால் தடை உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக மக்களுக்குத் தான் தாகம் ஏற்படும். அதைத் தீர்ப்பதற்கு நம்மால் முடியவில்லை. ஆனால் இப்போது அனல் மின்சாரத்திற்குத் தாகம் ஏற்பட்டுவிட்டது. கடலில் தண்ணீர் வற்றவில்லை. ஆனால் கொடுப்பதற்கு வழியில்லை. வாய்க்கால்களில் மணல் மேடிட்டு அந்தத் தண்ணீர் வரத்து நின்றுவிட்டதால், 450 மெகோவாட் உற்பத்தி செய்யும் அனல் மின்சார நிலையத்தில், இப்போது 42 மெகோவாட் உற்பத்தி ஆனதாகச் சொல்கிறார்கள். பொதுவாக இப்போது சமீபகாலமாக பல காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நிலக்கரி இல்லை, நிலக்கரித் தட்டுப்பாடு இருக்கிறது. நிலக்கரியில் தூசியிருக்கிறது. ஆகவே இயந்திரம் பழுதடைந்து விட்டது என்று சொல்லக்கூடிய நிலைமையிருக்கிறது. அதோடு கடலிலே தண்ணீர் இருந்தாலும் தண்ணீர் சப்ளை நின்று விட்டது என்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நாட்டிலே ஒரு பழமொழி சொல்வார்கள். கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக்கண்டால் கல்லைக் காணோம் என்று சொல்வார்கள். அதைப்போல இன்றைக்கு மின்சாரத்திற்கு, நிலக்கரி இருந்தால் இயந்திரம் பழுதடைந்து விட்டது என்றும், இயந்திரம் சரியாக இருந்தால், தண்ணீர் இல்லை என்றும் இப்படிச் சொல்லக்கூடிய நிலைமையை நாம் மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அடிக்கடி இயந்திரம் பழுதடைகிறது என்றும் வெளிநாடுகளிலே உள்ள ஜெனரேட்டர்கள் வாங்கினால்தான் அது மிகவும் சரியாக இயங்கும் என்ற முறையிலே இந்த அரசு சில நேரங்களிலே அறிக்கை விடுவதை நான் பார்த்திருக்கிறேன். நேற்றைக்குகூட பெல்லினுடைய சேர்மன் இங்கே குறிப்பிடுகின்றபோது, வெளிநாட்டில் இருந்து வாங்குகின்ற ஜெனரேட்டர்களைவிட நமது நாட்டிலே உள்ள. பெல் நிறுவனம் தயாரிக்கும் ஜெனரேட்டர்கள் மிகவும் திறமை

வாய்ந்தது என்று சொன்னார்கள். இது உண்மை. குறிப்பாக
ஏதாவது பழுது ஏற்படுகிறபோது. உடனடியாக அதை நிவர்த்தி
செய்து அந்தப் பழுதடைந்ததை சரி செய்யமுடிகிறது.
உதாரணத்திற்கு தூத்துக்குடியில் பழுதடைந்தபோது உடனே,
2 நாட்களிலே அதை ரிப்பேர் செய்ய முடிந்தது என்பதை
நாம் மனதில் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் புனல் நிலையம்
பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உற்பத்தி இல்லை. ஏற்கனவே
530 மெகாவாட் தூத்துக்குடியிலே உள்ள அனல் மின் நிலையத்
திலே என்று உற்பத்தி இருந்தபோது, அங்கே பழுதடைந்து
விட்ட காரணத்தால் இன்றைக்கு 400 மெகாவாட்தான் உற்பத்தி
யாகிறது என்கிறார்கள்.

அதேபோல் கல்பாக்கம் அனல் மின்சாரத்தைப் பொறுத்த
வரைக்கும் அது ஒரு புதிராகவே இருக்கிறது. அது என்ன ஆனது
என்றே தெரியவில்லை. நேற்றைக்குக் கூடிய இந்தச் சட்ட
மன்றத்திலே 2 தடவை டிரிப் ஆகிவிட்டது. இன்றைக்கு சிறு
தொழிலாக இருந்தாலும் சரி, பெரிய தொழிலாக இருந்தாலும்
சரி, கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால்
இன்றைக்கு தமிழகத்தினுடைய பொருளாதார நிலைமை
சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதுதான் உண்மை. ஆக
விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 6 மணி நேரம்
தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படும் என்று அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை
என்றால், ½ மணி நேரம், அல்லது 1 மணி நேரம் தான்
மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுவும் அப்போதைக்கப்போது
நிறுத்தப்படுகிறது. கொஞ்சம் வரும், பிறகு மின்சாரம் தடைப்
படும். பிறகு மீண்டும் வரும், அப்புறம் தடை. இப்படி
நிலைமையிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எண்ணூர் அனல் மின் நிலை
யத்தைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம். அதைப்பற்றி
பேசவேண்டும். அதை விட்டுவிட்டு, மின்சார விநியோகம் பற்றி
பேசவேண்டாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: இன்றைக்கு விவசாயிகள் இரவு நேரங்
களில் எப்போது மின்சாரம் வரும் என்று அங்கேயே படுத்துக்
கொண்டிருக்கும் நிலைமைகள் எல்லாம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே உள்ள
உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்களின் இருக்கைக்குச் செல்ல
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களிடம் பேசு
வதாக இருந்தால், அவர்களுடைய அறைக்குச் சென்று பேச
வேண்டும். அவையில் இருக்கும் போது ஒருவரோடு ஒருவர் பேசிக்
கொண்டிருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ரா. கிருஷ்ணன்: இப்போது கிராமத்திலே உள்ள
விவசாயிகள் எல்லாம் மின்சாரம் வந்ததைத் தெரிந்துகொள்ளும்
வகையிலே ஒரு மணியை பொருத்தியிருக்கிறார்கள். மின்சாரம்
வந்தவுடனே அந்த பெல் அடிக்கும். அதற்குப் பிறகு அவர்கள்
எழுந்துவந்து அந்த ஸ்விட்சைப் போடவேண்டிய நிலைமையிருக்
கிறது. இப்படி ஒரு பரிதாபகரமான ஒரு நிலைமையில்
விவசாயிகள் மிகவும் பாதிக்கக்கூடிய நிலைமையில் இருக்
கிறார்கள். அதோடு மின்சார சப்ளை ஒழுங்காக இல்லாத
காரணத்தால் அடிக்கடி காயில் எரிந்துபோகின்ற நிலைமை
இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் அவர்கள் இதற்காக
500 ரூபாய் 600 ரூபாய் என்று செலவழிக்கவேண்டிய நிலை
மையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை
மாற்றுவதற்கு ஒரு ஆக்கபூர்வமான ஒரு ஏற்பாட்டை நாம்
செய்யவேண்டும். குறிப்பாக இந்தப் பொருளாதார நிலைமை
சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் இந்த நிலைமையை மாற்று
வதற்கு இந்த மின்சாரம் மிக மிக முக்கியமான காரணமாக
இருப்பதால் இதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டிய அவசியம்
இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி பேசுவதற்கு இந்த அவையின்
இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகுப் பேரவைத்
தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் சொன்னது போல தமிழகத்திலே இன்றைக்கு மிகக்
கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அதிலும்
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் 2, 3 நாட்
களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலே சொன்னதுபோல் கடுமை
என்ற நிலைக்கு அடுத்தபடியாக இன்றைக்கு மிகக் கவலைக்
கிடமான நிலைமையிலே மின்சாரத்தினுடைய வினியோகம்
தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பருவ மழை
பொய்த்ததன் காரணமாக புனல் மின் நிலையங்களை நம்புவதை
விட்டு இன்றைக்கு அனல் மின் நிலையங்களை முழுமையாக
நம்பவேண்டிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே இன்னும் ஒரு
4, 5 மாதங்களுக்கு இந்த அனல் மின் நிலையங்கள் சரியாக
செயல்பட்டால்தான் தமிழக மக்களுக்கு மின்சாரத்தை முறை
யாக, சீராக கிடைக்கச் செய்யமுடியும் என்பதை நாம் அறிவோம்.
எண்ணூரிலே இருக்கின்ற அனல் மின் நிலையம் 450 மெகாவாட்
உற்பத்தித் திறன் கொண்டது. ஆனால் தற்போது கடலிலே
யிருந்து வருகின்ற தண்ணீர் முறையாக கிடைக்காத காரணத்தால
தண்ணீர் வருகின்ற வழியில் மண் மூடிய காரணத்தால் திங்கட்
கிழமையிலேயிருந்து மொத்தம் இருக்கின்ற ஐந்து யூனிட்டுகளில்,
நான்கு யூனிட்டுகள் செயல்படவில்லை.

இரண்டாவது யூனிட் 500 மெகாவாட் திறன் கொண்டதாக இருந்தாலும் 42 மெகாவாட் தான் உற்பத்தி செய்கிறது. மேலும் நம்முடைய கவலையை அதிகரிக்கும் வகையில் நமக்கு வரப்பிரசாதமாக இருக்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உள்ள 3 யூனிட்டுகளில் 1 யூனிட் சரியாக செயல்படவில்லை என்ற செய்தி நமக்கு வந்து கொண்டு இருக்கிறது. நெய்வேலியில் இருந்து ஓரளவிற்கு நமக்கு மின்சாரம் 350 மெகாவாட் என்ற முறையில் வந்து கொண்டு இருந்தாலும், திடீர் திடீரென்று மின்சாரம் தடைபடுவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எனக்குக் கிடைத்த தகவல்படி தமிழகத்திற்கு இருக்கும் மின்சாரத் தட்டுப்பாட்டிலே கூட 1,200 மெகாவாட் நிச்சயம் தேவைப்படுகிறது. ஆனால் உற்பத்தியாகும் மின்சாரம் 800 மெகாவாட் என்றுதான் இருக்கிறது.

(முற்பகல் 10-30)

மின்சாரப் பற்றாக்குறை வருகின்ற நேரத்தில் எல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். குறிப்பாக, நிலக்கரி வரவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படும். எனக்குக் கிடைத்த தகவல்படி இந்த ஆண்டு நிலக்கரி கணிசமான அளவிற்குக் கிடைத்து இருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்ததை விட இந்த ஆண்டு மைய அரசு ஏஜென்சிகள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் காரணமாக ஏறத்தாழ 2 லட்சத்திற்கும் மேற்பட்ட நிலக்கரி தூத்துக்குடிக்கு வந்து இருக்கிறது. வருகின்ற காலங்களில் மின்சார உற்பத்திக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அதிகமான நிலக்கரி வரும் என்ற செய்தியும் நமக்கு வந்து கொண்டு இருக்கிறது.

ஆகவே, இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, நம்முடைய பராமரிப்புத் துறை சரியாக இயங்கவில்லையோ என்ற ஐயம் மக்களுக்கு ஏற்படுகிறது. சரியாக மெயின்டென்ஸ் செய்தால் இந்த மின்சாரம் பற்றாக்குறை இன்றி மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு கிடைக்கும். இந்த மின்சார இயந்திரங்கள் சரியாகப் பராமரிக்கப்படுவதைப் பற்றி நான் கூட யோசித்துப் பார்த்தேன். இதற்கு முன்னாலே திரு. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் இதற்காக ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழு எந்த வகையில் பரிந்துரை அளித்தது. அதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை யாது என்பதை அறியவிரும்புகிறேன். அது முறைப்படி செயல் படுத்தப்பட்டதா என்பதை அறியவிரும்புகிறேன்.

அரசாங்கம் தொலை நோக்கோடு இந்த மின்சாரப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதை அறிய வேண்டிய நிலை வந்து இருக்கிறது. இன்றைக்கு சிறு தொழிலுக்கு மின்சாரம் கிடைக்காததால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் நிலையேற்பட்டு இருக்கிறது. அதோடு, தொடர்ந்து மின்சாரம் கிடைக்காமல் இருக்கும் நிலை இருப்பதால் அவர்களுக்கு நஷ்டம் வருகிறது. இப்படி பல முறை



களிலே அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை இருக்கிறது. கிராமப் புறங்களில் விவசாயத்திற்கு சரியான முறையில் மின்சாரம் கிடைக்கவிலலை. குடிநீர் சப்ளை செய்ய மின்சாரம் கிடைக்க வில்லை. இந்த மாதிரியான அவல நிலை தமிழ் நாடு முழுவதும் இருப்பதால், எதிர்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கின்ற காரணத்தால், இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் மின் நிலையத்தில் உள்ள குளிர் சாதனங்களுக்கு கடல் நீர் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக அங்கே மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த அவையின் மூலமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிலக்கரி கிடைக்கவில்லை, இயந்திரக் கோளாறு, வானம் பொய்த்து விட்டது என்ற காரணங்களைச் சொல்லி மின்சார உற்பத்தி செய்ய முடியவில்லை என்று சொல்லி, மின்வெட்டு அறிவித்தீர்கள். ஆனால் இன்றைக்கு நாம் கேள்விப்படுவது எல்லாம், மின்சார உற்பத்தி சாதனங்களை குளிரூட்டுவதற்கான கடல் நீர் கிடைக்கவில்லை, அந்தக் கடல் நீர் வரும் வாய்க்கால் மண் மேடிட்டு விட்டது என்று சொல்லி, அதன் காரணமாக அங்கே மின் உற்பத்தி குறைக்கப்பட்டு இருக்கிறது. நான் இந்த அவையில் சொல்லிக்கொள்வேன்—தமிழ்நாடு பொதுப் பணித் துறை மூலமும், மற்றும் பல்வேறு அரசுத் துறைகள் மூலமும் பல லட்சக்கணக்கான ரூபாய் போட்டு வாங்கி வைக்கப்பட்டுள்ள புல்டோசர்கள் இன்றைக்கு துருபிடித்த நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்தி, அந்த வாய்க்காலில் இருந்து தூர் எடுத்து, அந்தக் கடல் நீரைக் கொண்டு வந்து, அந்த குளிர் சாதனங்களை இயங்கச் செய்து இருக்க முடியும். அந்த முறையில் அந்த மின் துறை சரியாக இயங்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வருமுன் காப்போம் என்ற முறையில் செயல்படக்கூடிய நிலையில் இல்லை என்பதை இந்த மன்றத்தில் நாம் பல முறை சுட்டிக்காட்டி யிருக்கிறோம். அது தூத்துக்குடி அனல் மின் நிலையமாக இருந்தாலும்சரி, மற்றும் இருக்கிற புனல் மின் நிலையங்களாக இருந்தாலும் சரி, அங்கேயெல்லாம் பல்வேறு இயந்திரக் கோளாறுகள், நிர்வாகத்தில் சீர்கேடுகள் எல்லாம் ஏற்பட்டு, தமிழகத்தில் இன்றைக்கு மின் தட்டுப்பாடு, மின் உற்பத்தி பாதிக்கும் சூழ்நிலை ஏறபட்டு இருக்கிறது என்ற சூழ்நிலைகளை இந்த மாமன்றத்திலே பல்வேறு முறைகளில் நாம் சுட்டிக்காட்டி யிருக்கிறோம்.

அந்த அடிப்படையில, இன்று கடலில் இருந்து வரும் நீரை எடுத்துக்கொடுத்து, அந்தச் சாதனங்களைக் குளிரச் செய்வதற்கு நம்முடைய அரசு மின் துறை நிர்வாகம் தவறி இருப்பதற்குக் காரணம் கவனக் குறைவு தான் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் மின் வெட்டு என்று சொல்லப்படுகிற காரணத்தால், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழ்கின்ற மக்கள் மிகவும் இருளில் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் இங்கே பல்வேறு துறைகள் குறித்து நம் சட்டமன்றத்தில் உணர்ப்பாக விவாதங்களை நடத்திக்கொண்டு இருக்கின்ற நேரத்தில், இதே மன்றத்தில் இரண்டு மூன்று முறை திடீர் திடீரென்று மின் வெட்டு ஏற்பட்டது. இப்படிப்பட்ட கவனக் குறைவான நிலையில் இன்றைக்கு அந்த மின்நிர்வாகம் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில் மின் துறை அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, இதிலே உள்ள இடர்பாடுகளைக் களைந்து, தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கும் வறட்சி நிலையில் விவசாயிகளையும், தொழிலாளிகளையும் காப்பாற்றக்கூடிய வகையில் கவனிக்க வேணடிய மிக முக்கியமான பிரச்னையாக இந்த மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால், இதை எப்படிப்போக்குவது என்பது குறித்து விவாதித்து, முடிவு எடுக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எண்ணூர் அனல் மின்சார நிலையத்தைப் பொறுத்தவரையில் 5 பிரிவுகளைக் கொண்டு 450 மெகாவாட் உற்பத்தித் திறனைக் கொண்டு அது இயங்குகிறது. நீராவியைக் குளிர வைப்பதற்கு அங்கே எண்ணூர் உப்பங்கழி மூலம் வினாடிக்கு 800 கன அடி கடல்நீர் தேவைப்படுகிறது- குடத்தலையாறு முகத்துவாரத்திலிருந்தும் பழவேற்காடு ஏரியில் இருந்தும் கடல்நீர் அந்த எண்ணூர் உப்பங்கழிக்கு கிடைக்கிறது.

இவ்வாண்டு என்ன நிலைமை ஏற்பட்டது என்றால் மழை இல்லாத காரணத்தால், அந்த குடத்தலையாறு வழியாக மழைக் காலத்தில் வெள்ளம் வந்து அந்த கடற்கரை மேட்டை உடைத்து முகத்துவாரத்தில் 20 அடி ஆழத்தை ஏற்படுத்தும்; அது இவ்வாண்டு இல்லை.

அதைப்போன்று, போதுமான அளவு தண்ணீர் இல்லாத காரணத்தால் பழவேற்காடு ஏரியிலிருந்து கூடுதலாக வரவேண்டிய நீரும் அந்த எண்ணூர் உப்பங்கழிக்கு வரவில்லை. இதற்கிடையில் கடல்நீரோடு மண்ணும் சேர்ந்து மிக அதிக அளவிலே பெருக்கெடுத்து வந்து முகத்துவாரம் எதிர்பாராத வகையில்



திடீரென்று அடைக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் கடல் அலை உயரத்தைப் பொறுத்து, கடல்நீர் அந்த உப்பங்கழிக்கு வரும். கடல் அலை உயரம் வளர்பிறை, தேய்பிறையைப் பொறுத்திருக்கிறது. கடந்த சில நாட்களாக அலை உயரமும் குறைந்துவிட்டது. இப்போது உயரம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஏனென்றால் பௌர்ணமி வரவிருக்கிறது. ஆகையல் வர வேண்டிய தண்ணீரும் வராமல் வாய்க்கால் அடைக்கப்பட்டுவிட்டது; அந்த ஏரியிலிருந்து வரவேண்டிய தண்ணீரும் நின்றுவிட்டது. அந்த கரையில் வெள்ளம் உடைக்கவேண்டிய உடைப்பும் இவ்வாண்டில் இல்லை. 20 அடி ஆழத்தை ஏற்படுத்தினால் மார்ச் மாதத்திலிருந்து மறுபடியும் வடகிழக்கு பருவ மழை வந்து, 6 மாதத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக மணல் வந்து சேரும். 6 மாதத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக மணல் சேர்ந்து, மறுபடியும் அடைக்கும்; மறுபடியும் வெள்ளம் வந்து அதை உடைக்கும். இதுதான் அந்த எண்ணூர் நிலை.

இந்த கரை அடைபடக்கூடிய நிலைமையில் ஓரளவுக்கு மணலை வாரி ஆழப்படுத்த 1974-லிலே ஒரு 'ட்ரஜர்'—மணல் வாரி இயந்திரம் — வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இந்த மணல்வாரி இயந்திரத்தைப் பொறுத்தவரை, அது டிசம்பர் மாதம் ஓவர் ஆயிலிங் செய்யப்பட்டு மார்ச்சில் அந்த வேலையை முடிப்பார்கள். ஏனென்றால் மார்ச்சிலிருந்து தான் இந்தப் பிரச்சனை வரும். ஆக இந்தத் தடவை மார்ச் மாதத்தின் முன்னாலே மேடு வந்துவிட்டது. ஆனால் அவர்கள் நல்ல வேலையாக இந்த இயந்திரத்தை டிசம்பரில் பழுதுபார்க்கத் தொடங்கி 8-3-83-ல் பழுதுபார்த்து முடித்து, இப்போது அந்த இயந்திரம் அதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த மணலை வாரிக் கொண்டு செல்லும் இடத்திற்குப் போக 4, 5 வாரங்கள் ஆகும். இருப்பினும் அந்தக் கரையை உடைக்க, மின்சார வாரியத்தில் இருக்கிற புல்டோசர்களை பயன்படுத்துகிறோம். மற்ற அரசுத் துறைகளிலே இருக்கும் புல்டோசர்களையும் கேட்டுள்ளோம். அதன் விளைவாக 20–3–1983–ல் 5 பிரிவுகள் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய எண்ணூரில் ஒரு பிரிவு வேலை செய்தது. 21–ந்தேதி முதல் இரண்டு பிரிவுகள் வேலை செய்கின்றன, இப்போது மூன்றாவது பிரிவும் வேலை செய்கிறது. ஆக, 5 பிரிவுகளில் மூன்று பிரிவுகள் இப்போது வேலை செய்கின்றன. இந்த மணல்வாரி பற்றாக்குறையை போக்க வேண்டுமென்ற வகையில் மேலும் ஒரு மணல்வாரி வாங்கவேண்டுமென்று மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து, 1983 செப்டம்பரில் இத்தாலி நாட்டிலிருந்து சுமார் 1.5 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, நமக்கு கிடைக்க இருக்கிறது. அதுவும் கிடைக்கப்பெறின் இந்த மின்சாரப் பிரச்சனையை எளிதில் சமாளிக்க ஏதுவாக இருக்கும் ஆகவே, ஆண்டுதோறும் இப்படி சில நாட்களுக்கு வருவது இயல்பு. ஆனால் இந்தத் தடவை சற்றும் எதிர்பாராத வகையில் கொஞ்சம் முன்னாலேயே இந்தப் பிரச்னை வந்துவிட்டது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1983 மார்ச் 25

(முற்பகல் 10.40.)

இப்போது அவைகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. எண்ணூரில் உள்ள அனல் நிலையத்தைப் பொறுத்தவரையில், மின் உற்பத்தி முன்னேற்றமாகத்தான் இருந்து வருகிறது, என்றாலும் கிட்டத் தட்ட 18 ஆம் தேதியிலிருந்து, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் இத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணத்தால் தான் பிரச்னைகள் ஏற்பட்டன, அதனால் போதுமான அளவுக்கு மின் சக்தி வழங்க முடியாத கஷ்டம் ஏற்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனால் மின் வாரியத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக தொழில் நிறுவனங்களையும், மின்சாரத்தை பயன்படுத்துகிறவர்களையும் இந்நிலைமை சரியாகும் வரையில், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நானும் இந்த நேரத்திலே அதையே வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். ஏனென்றொல் எதிர்பாராமல் ஏற்பட்டு விட்ட இந்த சங்கடங்கள் தீரும் வரையில், ஓரளவு சிக்கனத்தை மேற்கொள்வார்களேயானால், கிராமப்புறங்களில் விவசாயம் பாதிக்கப்படாமலும், குடிதண்ணீர் கொடுப்பதிலே தட்டுப்பாடு ஏற்படாமலும் பார்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கும்.

அடுத்து, இங்கே வெளிநாட்டிலேயிருந்து இயந்திரங்கள் வாங்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள், அவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் நிறுவனத்ினுடைய தலைவர் சொன்னது, உள் நாட்டில் தயாரிக்கப்படுகிற கிரட்ஜ் இயந்திரங்கள், அனல் மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் இருக்கும்போது, அவைகளை வெளிநாட்டிலே வாங்கவேண்டாம் என்று தான் கருத்தைச் சொன்னார்கள். யார் வாங்குகிறார்கள் என்றால், பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், உள்நாட்டிலே உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் இருந்தும்கூட, வெளிநாட்டிலேயிருந்து வாங்க வேண்டும் என்று கேட்டார்கள். அதை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டு விட்டது. அதைத்தான் அவர்களே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஆனால் நாம் வாங்க வேண்டும் என்று அனுமதி கேட்கிற இயந்திரம் உள்நாட்டிலே தயாரிக்கப்படுவது இல்லை. ஆகவே அதை வெளிநாட்டிலேயிருந்துதான் வாங்கியாக வேண்டும். இப்படிப்பட்ட எதிர்பாராத வகையில் ஏதேனும் இயந்திரங்கள் பழுது பார்க்கப்படுகிறபோது, அந்த எரிவாயு இயந்திரம்இருந்தால்



1983 மார்ச் 25] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஒரு சில நிமிடங்களில் 200 மெகாவாட், 300 மெகாவாட் உற்பத்தி செய்யும் இயந்திரம் திடீர் என்று பழுதடையும் போது, இந்த இயந்திரத்தை வைத்துக் கொண்டு மீதிநேரத்தில் ஆப் (off) பண்ணிவிடலாம். சில நொடிகளில் மின்சாரம் மீண்டும் வந்துவிடும். மின்சார சப்ளையை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அதைத்தான் நாம் வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காஸ் டர்பைன்ஸ் என்று சொல்லக் கூடிய அந்த மெஷின் வந்தால், என்டையர் லோட் 300 மெகோ வாட்டையும் எடுக்கலாம். இதனால் திடீர் என்று மின்சாரம் நின்றுவிடும் நிலை ஏற்படாது. நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அதற்காகத்தான் கேட்கிறோம்.

அந்நியச் செலாவணி என்று சொன்னார்கள். அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரையில், அதுவும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 85, 90 கோடி அளவில் வருடம்தோறும் நாம் சம்பாதித்துக் கொடுக்கலாம். எப்படி என்றால், இங்கே இருக்கிற சிமெண்ட்டை வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்கிறார்கள். இங்கே நாம் உற்பத்தி செய்யக்கூடிய காஸ்டிக் சோடாவை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்கிறார்கள். இங்கே நாம் உற்பத்தி செய்கிற சோடா ஆஷ் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்கிறார்கள். நாம் இதுபோன்ற பொருள்களை தயார் செய்யும் தொழிற் சாலைகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரத்தைக் கொடுப் போமேயானால், ஆண்டுதோறும் குறைந்த பட்சம் 85, 90கோடி ரூபாய் அளவில் அன்னியச் செலாவணியை நாம் சம்பாதிக்க முடியும். அடிக்கடி மின் தடை ஏற்படுவதும் தவிர்க்கப்படும். ஆகவே, தான் அதற்கு அனுமதி தாருங்கள் தாருங்கள் என்று இந்திய அரசிடத்திலே திரும்ப திரும்ப கேட்டு வற்புறுத்தி வருகிறோம். இவைகளையெல்லாம் உணர்ந்து அவர்கள் விரைவிலே அதற்கு அனுமதிப்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்த ஆண்டு அதை ஏற்றுக்கொண்டாலும்கூட வருகிற ஆண்டிலேயாவது கோடை காலத்தில், இத்தகைய பிரச்னை நமக்கு இல்லாமல் போகும். இரண்டாவது இது திடீர் என்று ஏற்பட்ட நிலைமையே தவிர வேறு அல்ல. இது இன்னும் சில நாட்களில் சரியாகிவிடும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் கூட மூன்றாவது யூனிட்டில் நேற்றிலிருந்து மின்சாரம் வர ஆரம்பித்து விட்டது. நெய்வேலியிலே சில தினங்களுக்கு முன்பு எர்த் வொயர்களிலே பழுது ஏற்பட்டு, மின்சார உற்பத்தி தடைபட்டது. அவைகளும் பழுது பார்க்கப்பட்டு, நேற்றிலிருந்து, அதாவது 24 ஆம் தேதியிலிருக்து மின்சாரம் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

கடந்த ஒரு வார காலமாகத்தான் திடீர் என்று இந்தப் பிரச்னை எழுந்தது. இருந்தாலும் மின்சார வாரியம் இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்து, இயந்திரத்தைப் பழுது பார்க்கச் செய்வது போன்ற வேலைகளில் சற்று முன்னதாகவே கவனம்

செலுத்தி, மின்சாரம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று அரசு சார்பிலே மின் வாரியத்திற்கும் உத்தரவு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து, அவையினுடைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்துத்தான் விவாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### குறிஞ்சிப்பாடி தொகுதி பெருமாள் ஏரிப்பாசனப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடி தொகுதி பெருமாள் ஏரியின் பாசனப் பகுதியிலுள்ள நெற்பயிர்களுக்குத் தண்ணீர் விடாததால், விவசாயிகள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

பெருமாள் ஏரி, வெள்ளாறு ஆற்றின் குறுக்கே கட்டப் பட்டுள்ள சேத்தியாத்தோப்பு அணைக்கட்டிலிருந்து வெள்ளாறு ராஜன் வாய்க்கால் மூலம் வாலாஜா ஏரி வழியாக பாசன வசதி பெறுகிறது. மேலும், அதன் நீர் பிடிப்புப் பகுதியிலிருந்தும் நீர் வரத்து உண்டு. இந்த ஏரியின் ஆயக்கட்டு சுமார் ஆறாயிரம் (6,000) ஏக்கர் ஆகும், இரண்டாவது போக பாசன காலம் சனவரி முதல் மே வரை ஆகும். இந்த இரண்டாம் போக காலத்தில் வெள்ளாற்றிலிருந்து பெருமாள் ஏரிக்கு நீர் அனுப்ப விதி முறைகளில் வகை செய்யப்படவில்லை. பெருமாள் ஏரியில் தற்போது நீர் இல்லை. இந்த ஏரிக்கு நீர் அனுப்ப வேண்டுமென்றால் காவிரி ஆற்றிலிருந்து வீராணம் ஏரி, வெள்ளாறு ராஜன் வாய்க்கால், வாலாஜா ஏரி வழியாக தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். வெள்ளாற்றில் நீர் வரத்து இல்லை. மேட்டூர் அணையிலும் போதுமான நீர் இல்லை. மேட்டூர் அணையில் வரும் நீர் வரத்து, அதன் கீழ் உள்ள பாசனத்திற்கு போதுமானதாக இல்லை. இவ்வருடம் எல்லா இடங்களிலும் வறட்சி நிலவுகிறது. இந்நிலையில் பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் வழங்க எவ்வழியிலும் சாத்தியக்கூறு இல்லை.



திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் விடுவதற்கு எவ்வகையிலும் சாத்தியம் இல்லை என்று தெரிவித்தார்கள். இருந்தாலும் பெருமாள் ஏரியின் கீழ்ப் பகுதியில் சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயிர் செய்திருக்கிறார்கள். இப்போது பூ வருகின்ற நிலைமையில் தண்ணீர் விடாமல் ருப்பதன் காரணத்தால் அங்கே இருக்கின்ற விவசாயிகள் கவலையோடு இருக்கிறார்கள், எனவே இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும். இப்போது லோயர் அணைக் கட்டிலிருந்து தெற்கு ராஜன் வாய்க்கால் வழியாக தொடர்ந்து தண்ணீர் விடப்படுகின்றது. அதை மாற்றி படிப்படியாக ஒரு இடைக்காலத்தில் தண்ணீர் விடுவது என்ற அளவில் ஏற்பாடு செய்து அந்த நெற்பயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஆவன செய்யப்படுமா? அந்த வகையில் அரசு மறுபரிசீலனை செய்து ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது போக காலத்தில் பாசனத்திற்கு நீர்விடுகின்ற வகையில் விதிமுறைகளில் ஏதாவது வகை செய்யப்பட்டிருந்தால்தான் அதுகுறித்து இப்போது நாம்மிக அக்கறையோடு கவனம் செலுத்திவருகிறோம். விதிமுறைகளில் வகை செய்யப்பட்ட இடங்களில்கூட எந்தப் பகுதிக்கு இருக்கின்ற நீரைப் பகிர்ந்து கொடுத்தால் அங்கே உள்ள பயிர்களைக் காப்பாற்ற முடியுமோ அதற்குத்தான் கொடுக்கக் கூடிய ஒரு நிர்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கின்றது. எனவே எந்த விதிமுறைகளிலும் இரண்டாவது போகத்திற்கு வகை செய்ய முடியாத சூழ்நிலையில் ஏற்கெனவே வேறு ஒரு பகுதிக்குச் சென்று கொண்டிருக்கின்ற நீரை அடைத்து திருப்பி விடுவது சாத்தியமற்றது என்றுதான் துறை கருதுகின்றது. எனவேதான் இந்தப் பதிலை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, லோயர் அணைக்கட்டின் கீழ் பகுதியில் நவரைப் பயிர்களுக்குத்தான் இப்போது பாசனம் ஏற்படுகின்றது. ஆகவே அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குக் காட்டுகின்ற சலுகைகளை இங்கே இருக்கின்ற தென்னாற்காடு பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் காட்ட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தெற்கு ராஜன் வாய்க்காலை அடைத்து, வடக்கு ராஜன் வாய்க்கால் வழியாக வீராணம் ஏரி வழியாக பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் வர வாய்ப்பு ஏற்படுகின்றது. அது மட்டுமல்ல. இப்போது வறட்சியான காலம். ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் கிடைப்பதிலும், குடிநீர் கிடைப்பதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு உதவுகின்ற வகையிலாவது அந்த காட்டுமன்னார்கோயில், புவனகிரி, சிதம்பரம், குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளுக்கு தண்ணீர்

கிடைக்கின்ற வகையில் இதனை மாற்றி அமைப்பதற்கு அல்லது மாற்று வழியிலேயாவது ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையில் பாசனத்திற்கு நீர் விட்டாலும் பயன் தராது என்ற நிலைமை ஏற்படுமேயானால் கூடுமான வரையில் கால்நடைச் செல்வங்களுக்கும், குடிநீருக்கும் அந்த நீரைப் பயன்படுத்துவது குறித்து அரசு ஆங்காங்கே சில உத்தரவுகளைக் கொடுத்து இருக்கின்றது. ஆனால் இங்கே உள்ள நிலைமை பிரத்தியேகமாக இருக்கின்றது. இது தெற்கு ராஜன் வாய்க்காலை அடைத்து ஏற்கனவே அந்தப் பகுதியிலே பயன் பெற்று வருகின்றவர்களின் பயனைக் குறைத்து விடுவது இந்தச் சூழ்நிலையில் முடியாத காரியம் என்றுதான் கருதப்படுகின்றது. மேலும் இந்தத் தண்ணீர் பெருமாள் ஏரிக்கு வந்து சேருவதற்குள்ளாக அது குறைந்த நீராக இருப்பதால் வாய்க்கால் வழியாக ஓடி ஆவியாவதற்குத்தான் சரியாக இருக்கும். வாடுகின்ற பயிரைக் காப்பாற்றுவதற்கோ அல்லது கால்நடைச் செல்வங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ அல்லது குடிநீர் பிரச்சினையைப் போக்குவதற்கோ அது பயன் படாது. காரணம் வறண்ட பகுதியிலே இந்த குறைந்த நீர் திருப்பி விடப்படுவதன் மூலமாக அது யாருக்கும் பயனற்ற முறையில் போகக்கூடும் என்ற காரணத்தால்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். ஆனால் பொதுவாக தமிழகத்தில் குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கும் கால்நடை செல்வங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் கூடுமானவரையில் ஆங்காங்கே கொஞ்சம் தண்ணீரை திருப்பி விடுவதற்கு நாம் முயற்சி செய்து வருகிறோம். அது ஏற்கனவே விதிமுறைகளின் மூலமாக காப்பாற்றப் படவேண்டிய பகுதிகளுக்கு கொடுக்கின்ற நீர் போக எஞ்சி இருக்கும். ஆனால் அதை செய்வற்கு இந்தத்துறை நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (தொடர்ச்சி).

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ ஆம் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை நேற்றைய தினம் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தேன். அவர்களும் அங்கே இருந்துகொண்டு எடுத்துக்கொள்கிறேன் என்று அறிவித்தார்கள். மயிலாடுதுறையில் ஒரு பெரிய காரியம் கூட இல்லை. ஆனால்



அங்கே எங்கள் பகுதியில் அது ஒரு பெரிய காரியமாக உருவெடுத்து இருக்கிறது. ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள், டாக்சிக்காரர்கள், சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் எல்லோரும் ஸ்டிரைக் செய்கிறார்கள். இங்கே நீங்கள் சிரிக்கிறீர்கள். நாவலர் அவர்களும்கூட சிரிக்கிறார்கள். அதைப்பார்த்தால் எனக்கு வயிறு எரிகிறது. நேரில் சென்று பார்த்தால்தான் தெரியும் அதனுடைய கஷ்டம். அங்கே இருப்பவர்கள் துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதை முறையாக கவனிக்கிறேன் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய பதிலும் வரும். பிறகு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவரும் தெரிந்து இருக்கிறார்கள், நானும் தெரிவித்து இருக்கிறேன். ஆக அதற்கு இடையில் இப்போது கிளப்புவது அவர்கள் இந்த நேரத்தில் கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலும் பெற முடியாது அவருடைய உடல் நலம் கருதியும், அவருடைய தன்மையை கருதியும் பேரவைத் தலைவர் கூறியிருக்கிற உறுதிப்பாட்டின் பேரில் தக்க பதில்கள் வந்த பிறகு தான் பேரவையில் எடுத்து சொல்ல முடியும் ஆக அதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் பொறுமையோடு இருப்பது நல்லது. அவர் பொறுமையோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: **

திரு. சு. பாலன்: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நீக்கி விடலாம். இத்துடன் இதை முடித்து விடலாம்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசியது அப்படியே இருக்கிறது நீக்கவில்லை. நாவலர் அவர்கள் பேசியதும் அப்படியே இருக்கிறது. பரிசீலனைச் செய்யச் சொல்லியிருக்கிறோம். அனுமதித்த பிறகு நீங்கள் நன்றாகப் பேசலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், ஆனால் ஒன்றை அவர்கள் குறிப்பிட்டார்கள், பேரவைத் தலைவர் அவர்களே, அறிவித்து இருக்கும்போது இதை இப்போது இங்கே எழுப்ப தேவை இல்லை என்று சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்களே அறிவித்தார்கள் நேற்றையதினம், அதை இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக. இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மயிலாடுதுறையில் முகாம் இட்டு இருக்கிறார்கள். அங்கே வாடகை கார்களும் ஓடவில்லை, சொந்த கார்களும் .. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் பேசுவதற்கு ஏதாவது ஒரு வரைமுறை விதிகள் வேண்டும். இப்படி மிரட்டுபவர்களுக்கு எல்லாம் நீங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டால் பின்னர் சபையை நடத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவருக்கு சுகமில்லாத காரணத்தினால்தான் நான் இப்படி இருக்கிறேன். சரியாக இருக்கிறவர்களிடம் நான் சரியாக இருப்பேன்.

திரு என். கிட்டப்பா: நான் கேள்வி கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி மிரட்டுவதற்கெல்லாம் என்று சொன்னார்கள். நான் வருத்தப்படுகிறேன். நான் மிரட்டிப் பழக்கப்பட்டவன் அல்ல, அவர்களுக்கு ஒருவேளை தெரியாமல் இருந்திருக்கலாம், நான் பாராட்டியே பழக்கப்பட்டவன், அப்படிப் பாராட்டுகிற காரணத்தினாலே பல இன்னல்களுக்கு ஆளாகக் கூடியவன். இன்றையதினம் எடுத்துக்கொள்வதாக சொல்லியும் எடுத்துக்கொள்ளவில்லை. நான் அதைச் சுட்டிக்காட்டுகிறேன். நாளைய தினமாவது அங்கே எந்த வண்டியும் ஓடவில்லை அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

5. வரவு-செலவுத் திட்டம் 1983-84
வாக்கெடுப்பு — தொடர்ச்சி.

(அ.) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்,: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண், 1— நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,89,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''





திரு சு. பாலன்: தலைவர் அவர்களே, நிலவரித் தீர்வையை தற்போதுள்ள வரியிலிருந்து குறைக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1-நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,89,41,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. சி. பழனிமுத்து: தலைவரவர்களே, சேலம் மாவட்டம் முழுவதும் வறட்சியின் காரணத்தால் நிலவரியை முழுவதும் ரத்து செய்வதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,89,41,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு எம். செல்லமுத்து: தலைவரவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டு பயிர் செய்த பயிர்கள் முழுவதும் கருகி பெரும் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிலவரி மற்றும் அனைத்து வரிகளையும் ரத்துசெய்யாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக்கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,89,41,000 இல் ரூ 100 குறைக்க வேண்டும்.''

திரு மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, தமிழகத்திலே வறட்சி நிலைமை இருப்பதால் நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 1 நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,89,41,000 இல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். என். இராமசாமி. தலைவர் அவர்களே, பேய்குளம், பழனியப்பபுரம், கரிசவாம்பாடு பகுதிகளுக்கு மணிமுத்தாறு பாசனம் தீர்வை வரி வசூலை நிறுத்தித் தரும்படி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,89,41,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண்.41 இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,20,0.0—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

திரு. பெ. க. திருவேங்கடம்; தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போதுமான நட்ட ஈடு தர வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண்.41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இயற்கையின் சீற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டு வருவதால் இதை நீக்க நிரந்தர துயர் துடைப்பு பணிகள் மேற்கொள்வதைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் வரை ஒதுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்,

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,20,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு இ. கா. நல்லப்பன், தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக புதிதாக வேலைவாய்ப்பு ஏற்படுத்த குளம், குட்டைகள் அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,20,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."



(இ) கோரிக்கை எண். 46. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்,

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,38,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு த. வேணுகோபால்: தலைவரவர்களே, 'கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டும தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,38,03,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே கல்லன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்

மானியக் கோரிக்கை எண் 40. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

ரூ. 22,38,03,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,38,03,000 ல் ரூ 100 குறைக்க வேண்டும்."

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 22,38,03,000 இல் ரூ 100 குறைக்க வேண்டும்."

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. அவையில் வைக்கப்பட்டிருக்கிற *குறிப்புரை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அவையை நடத்த கேட்டுக் கொள்கிறேன்.

1113-1166*ம் பக்கங்களில் இணைப்பாக அச்சடிக்கப்பெற்றுள்ளது

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கைகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் வருவாய்த்துறை கிராமங்கள் 16,543 ஆகும் இதில் இன்றைய வரைக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கிராம அதிகாரிகள் 5,246 மட்டுமே. கடந்த மூன்று ஆண்டு காலமாக கிராம நிர்வாக அதிகாரிகள் இல்லாத காரணத்தால் கிராமப் புறங்களில் ஏழை, எளிய மக்கள் அனுபவித்திருக்கிற கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த கிராம அதிகாரிகளை எல்லாம் நீங்கள் நீக்குகிறபோது சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் எவ்வாறு சமஸ்தானங்களை ஒளித்தாரோ அப்படிப்பட்ட காரியத்தை நாங்கள் செய்திருக்கிறோம் என்று நீங்கள் பெருமையாக சொன்னீர்கள். ஆனால் கடந்த மூன்று ஆண்டு காலமாக ஏழை, எளிய மக்கள் தங்களுக்குத் தேவையான சான்றிதழ் பெறுவதானால் கூட எந்த அளவிற்கு இன்னல்களுக்கு ஆளானார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஒரு குட்டி சாம்ராஜ்யத்தையே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றுவரையில் 5,246 கிராம அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தாலும் கூட இன்னும் மூன்றில் இரண்டு பங்கு கிராம அதிகாரிகள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் கீழ் இருக்கிற கிராம காவலர்கள், கிராமப் பணியாளர்கள், கிராம பாசன காவலர்கள் போன்ற ஊழியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்படுவது எல்லோரும் அறிந்த ஒன்று. அவர்களுக்கு குறைந்த பட்சம் அரசு கடைநிலை ஊழியர்களைப் போன்றாவது ஊதியம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு வழங்கியிருக்கிற 10 ஆயிரம் ரூபாய் சலுகை மற்ற சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு கொடுக்கிறபோது குறைந்தபட்சம் கடைநிலை ஊழியர்களுடைய சம்பளத்தையாவது அவர்கள் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கிராம நிர்வாக அதிகாரிகள் இல்லாத காரணத்தினால உரிய நேரத்தில் மத்திய அரசிற்கு நம்மால் வறட்சி நிவாரணத்திற்குத் தேவையான தொகையை குறித்த அறிக்கை தயார் செய்து அனுப்ப முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டது எல்லோருக்கும் தெரியும். எனவே இனிமேலாவது மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்ற, பல்வேறு நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள கிராம நிர்வாக அதிகாரிகளைஉடனடியாகநியமிக்க வேண்டும். வழக்கு மன்றங்களில் வழக்குகள் இருந்தாலும் இதற்கு முன்னாலே இருந்த கிராம அதிகாரிகளை தற்காலிகமாகவாவது நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கிராம அதிகாரிகளுக்குத் தகுந்த உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நீதிமன்றங்கள் கூட தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. அந்த அடிப்படையில் பல கிராம அதிகாரிகள் முன்பு பணியாற்றியவர்களுக்கு உதவித் தொகை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் புதியதாக நியமிக்கப்படுகிற கிராம காவலர்கள், கிராம பணியாளர்கள், பாசன காவலர்கள் ஆகியவர்களின் நியமனங்களின் போது முன்பு பணியிலிருந்தவர்களுடைய வாரிசுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 200க்குள் மாத வருமானம் இருந்தால்தான் அந்த சலுகைகள் வழங்க முடியும் என்று சொல்லப்படுகிறது. குறைந்தபட்சம் அந்த தொகையை ரூ. 500 ஆக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தீ, புயல், வெள்ளம் ஆகியவற்றால் உயிர் இழப்பவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படுவதாக சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியில் நாச்சியார் கோவில் கிராமத்தில் 16–3–81 அன்று ஆகாச மாரியம்மன் கோவிலில் தீ விபத்து ஏற்பட்டு ஏறக்குறைய 26 வீடுகளும், 50க்கும் மேற்பட்ட கடைகளும் பாதிக்கப்பட்டன. அந்தத் தீ விபத்தில் இரண்டு கோவில் பூசாரிகளும், ஒரு வயோதிகத் தாயாரும் இறந்து போனார்கள். பலமுறை முதலமைச்சர் நிவாரண நிதி கேட்டு விண்ணப்பித்தும் இன்றுவரை நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படவில்லை, சுமார் 6 மாத காலத்திற்கு முன்பாக இறந்து போனவர்களுடைய வாரிசுகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டது, ஆனால், இன்றுவரை அவர்களுக்கு எந்தவித நிவாரண தொகையும் வழங்கப்படாதது உண்மையிலேயே வருந்தத்தக்கது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் ரூ. 7½ கோடி கடனாக அளித்து, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் அதற்காக சொல்லப்பட்டிருக்கிற விதி முறைகள் மிகவும் கடுமையாக இருக்கிற காரணத்தினால், இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத அளவுக்குப் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. எனவே அந்த விதமுறைகளை எல்லாம் தளர்த்தினால்தான் உள்ளபடியே அந்த வளர்ச்சி நிவாரணப் பணியை நாம் தொடர முடியும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலேகூட பல்வேறு கிராமங்களில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து போடப்பட்டுள்ள வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இன்றையதினம் இயங்காமல் இருக்கின்றன. ஏறத்தாழ 23 வடிமுனை குழாய்க் கிணறுகள் என்னுடைய தொகுதியில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து போடப்பட்டுள்ளன. அவைகளுக்கு மின்சார மோட்டார் கொடுக்கப்பட்டும், சரியான இணைப்புக் கொடுக்கப்படாத காரணத்தினால்தான் இன்று வரை அவைகள் இயங்காமல் இருக்கின்றன. எனவே, வறட்சி நிவாரணப் பணியாக, உடனடியாக, வடிமுனை குழாய்க் கிணறுகளுக்கு மின்சார மோட்டாரோ அல்லது ஆயில் இன்ஜினோ பொருத்தி, அவைகள் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

நகர்ப்புறங்களில் மட்டும் அல்லாமல், கிராமப் புறங்களிலும் இன்றைய தினம் குடிநீர்த் தட்டுப்பாடு மிகவும் பயங்கரமான ஒரு நிலைமையைத் தோற்றுவித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் கூட பல்வேறு குடிநீர்க் குழாய்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல், செப்பனிடப்படாத நிலைமையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு உடனடியாக அரசு உதவித் தொகை வழங்கி, குடிநீர்க் குழாய்களை உடனடியாகச் செப்பனிட்டுத் தருமாறு இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கிராமப் புறங்களிலே இருக்கிற புறம்போக்கு நிலங்கள் இன்றையதினம் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமா அல்லது அரசுக்கு சொந்தமா என்கிற போட்டியில், தனிப்பட்ட சிலர் அவைகளை எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்கள் ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமா அல்லது அரசுககுச் சொந்தமா என்பதை உடனடியாகக் கண்காணித்து, தனிப்பட்டவர்களது ஆக்கிரப்பில் இருந்து, அவற்றை அகற்ற வேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடை மருதூர் வட்டம் வறட்சியால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வட்டம். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூட அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவரும் நேரிடையாகவும், விண்ணப்பங்கள் மூலமாகவும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவருக்குத் தஞ்சை மாவட்டம் முழுவதையுமே வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், திருவிடை மருதூர் வட்டத்தைக் கட்டாயம் வறட்சி வட்டமாக அறிவிப்பார்கள் என்று இந்த நேரத்தில் எண்ணுகிறேன், எனவே, மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிக்கு உரிய சலுகைகள் அனைத்தையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



ஏழை விவசாய கூலிகளுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவதில் வருவாய்த்துறை அதிகாரிகள் மிகவும் காலதாமதம் செய்கிறார்கள். இனவே, திருவிடை மருதூர் வட்டம், கும்பகோணம் வட்டம், ஆகிய பகுதிகளில் எப்படி ஏராளமான மனுக்கள், குடியிருப்பு மனைப்பட்டா கேட்டு, விண்ணப்பிக்கப்பட்டு, ஓராண்டு காலத்திற்கு மேலாக, ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே, அவ்வகைளையெல்லாம் உடனடியாகப் பரிசீலித்து, அந்த மனுக்களில் கூறி உள்ளவாறு, விண்ணப்பித்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக குடியிருப்பு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எப்படி ஆதி திராவிட பழங்குடியினர், நிலமற்ற ஏழை விவசாயிகள், கிராமிய கை வினைஞர்கள் ஆகியோருக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்படுகின்றதோ, அதே போன்று ஏழ்மை நிலையில் உள்ள நலிந்த நெசவாளர்களுக்கும் குடியிருப்பு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தண்ணீர் வரி, நிலவரி, உள்ளூர் வரி, கூடுதல் வரி என்று பல்வகையாள வரி விதிப்புகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியைவிட, நஞ்சையில் புஞ்சை என்ற கிளாஸிபிகேஷனுக்கு கூடுதலாக வரி விதிக்கப்படுகிறது. குறைந்த பட்சம் அந்த வரியை நஞ்சை நிலத்துக்குரிய வரியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களை ரயத்துவாரி கிராமங்களாக மாற்றும் பாழுது உரிய விவசாயிகளுக்கு அந்த நிலங்களின் பொசிஷனை எடுத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிலவுடைமையாளர்கள் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களை குறைந்தபட்சம் வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு உச்ச வரம்பு இருக்கிறது ஆனால் உச்ச வரம்பு நிலத்தை எடுத்து சாகுபடி செய்பவர்களுக்கு விநியோகம் செய்யும்பொழுது ஒன்றரை ஏக்கர்கள் மட்டும்தான் அதிகபட்சமாகக் கொடுக்கலாம் என்ற சட்டம் இருந்தாலும்கூட தற்பொழுது நாம் கூறுகின்ற நவீன முறை சாகுபடியை ஒன்றரை ஏக்கர்களில் கையாள முடியாது. எனவே அதைக் குறைந்தபட்சம் மூன்று ஏக்கர்களாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் வட்டத்திற்கு, அது இரண்டாண்டுக் காலமாகத் தாலுக்காவாக உயர்த்தப்பட்டும் அங்கே சரியான தாலுக்கா அலுவலகம் இல்லை. தாலுக்கா அலுவலகம் கட்டுவதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும்கூட இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. உடனடியாகத் தாலுக்கா அலுவலகத்தைக் கட்டித்தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

குடவாசல் பகுதியில் உள்ள விக்கிரபாண்டியன் என்ற கிராமத்தில், வசதி உள்ள, சொந்த வீடு உள்ள வசதி படைத்தவருக்குப் பட்டா செய்துகொடுத்திருக்கிறார்கள். அதனால் அந்தக் கிராமத்திலே மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டு பொதுமக்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்திருந்தும் இன்றுவரையில் நியாயம் வழங்கப்படவில்லை. உடனடியாக அந்தப் பகுதியில் சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு அரசு விசாரித்து ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறை மானியத்தைப் பொறுத்தவரையில், இன்றையதினம் கிராமத் தலையாரிகளுக்கும், வெட்டியான்களுக்கும், கிராம நீர்க்காவலர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாகும். எனவே, இன்றைக்கிருக்கின்ற விலைவாசி உயர்வுக்கேற்ற வகையில் தக்க வகையில் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த வருவாய்த்துறையிலே பல்வேறு சாதனைகளை, ஏன், பல்வேறு புரட்சிகளைச் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஆண்ட அரசுகள் செய்யத் தயங்கியவைகளையெல்லாம், செய்யப் பயந்தவைகளையெல்லாம் இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்றதற்குப் பிறகு இந்தத் துறையிலே பல்வேறு சாதனைகளையும், புரட்சிகளையும் செய்திருக்கிறார்கள் என்ற வகையில் நான் இந்தத்துறை அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் என்னவென்றால், கடந்த காலத்திலே ஆட்சியிலே இருந்தவர்களுக்குக்கூட கிராம அதிகாரிகள் ஒழிப்பிலே முடிவெடுப்பதிலே மயக்கம் ஏற்பட்டதுண்டு. ஆனால், துணிந்து, இப்படிப்பட்ட முயற்சியில் பல்லாண்டுக்காலமாக இருந்த மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் விதத்தில், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு தி. மு. க. உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று சாம்ராஜ்யம் நடத்திக்கொண்டிருந்தவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று பல்வேறு தடவைகளில்





சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் செய்யப்படாமல் இருந்ததை இந்த அரசு செய்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கின் காரணமாக ஒரு பகுதியினர் இன்னும் பணியில் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டும் வகையில் பல்லாண்டுக் காலமாகச் சொல்லப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் பல்வேறு முதாய நலச் சட்டங்களை இந்த அரசு இயற்றினாலும் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுக்காத காரணத்தினால் அது தேங்கியிருக்கிறது என்ற உண்மையை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

உதாரணமாக, பினாமி ஒழிப்புச் சட்டத்தை எவ்வளவோ பெருமுயற்சிகளுக்குப் பிறகு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இங்கே கொண்டு வந்தார்கள். அந்த சட்டத்தை நிறைவேற்றும் நேரத்தில், இங்கே உள்ள அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதைப் பாராட்டினார்கள். அனைத்துக் கட்சியினரும் இப்படிப்பட்ட சட்டம் மாநிலத்திற்குத் தேவை என்று சொன்னார்கள். 1960 ஆம் ஆண்டிலிருந்து நிலச்சீர் திருத்த சட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய தவறுகள் களையப்படவேண்டும் என்பதை காங்கிரஸ் பேரியக்கமும் சொல்லிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் பேரியக்கம் ஆண்ட நேரத்திலேயும் கூட, இந்தியா முழுவதும் நில உச்ச வரம்பு சட்டம் சரியாக அமல் நடத்தப்படவில்லை, அவைகளை வைத்துக் கொண்டு நில பிரபுக்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று 1962ஆம் ஆண்டிலே நாகபுரி காங்கிரஸ் மாநாட்டில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கும் கூட, இருபது அம்சத் திட்டத்தில்கூட நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டுமென்று பாரதத்தின் பிரதமரே சொல்கிறார். பல்வேறு வடமாநிலங்களை எடுத்துக் கொண்டால் உதாரணத்திற்கு உத்திரப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் தியோலி என்னுமிடத்தில் ஏற்பட்ட கலவரம் நிலச் சீர்திருத்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்படாத காரணத்தால்தான் ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலே இப்படிப்பட்ட கொலைகள் எற்படுவதற்குக் காரணம் நிலச்சீர்திருத்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்படாததுதான்.

ஆனால் நாம் இயற்றிய இந்தச் சட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளிக்காததற்குக் கூறப்படுகின்ற காரணம் விசித்திரமாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வருகின்ற நிலைமையைப் பாதிக்கும், ஆகவே. இதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று காரணம் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட புனிதமான சட்டம் சமுதாயத்திற்குத் தேவை என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லிய

சட்டத்திற்கு, இந்திரா காந்தி அம்மையார் விரும்பிய சட்டத்திற்கு, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இப்படிப்பட்ட சட்டம் தேவை என்று சொல்லிய சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தை அமல்படுத்தியாக வேண்டுமென்ற சட்டத்தை–வேடிக்கையான காரணம் என்று கூட சொல்லவில்லை. முரண்பாடான காரணங்களைச் சொல்லி, இன்று மைய அரசு அனுமதியளிக்க மறுத்திருக்கிறது என்பதை இங்கே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பிரச்சினைகளை, பினாமியா, பினாமி இல்லையா என்பதை எங்கே ஆராயப் போகிறார்கள்? ஆகவே ஒப்புதல் கொடுக்க முடியாது என்று சொல்கிற மைய அரசு, 1982 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு தகவலைச் சொல்கிறது. இங்கே பினாமியை ஒழிக்கவேண்டும் 4 லட்சம் ஏக்கர் நிலம் கிடைக்கும். 5 லட்சம் ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று காமராஜ் அவர்கள் கனவு கண்டார்கள், அதற்குப் பின்னாலே வந்தவர்களும் கனவு கண்டார்கள். அதற்கு முடியாமல் போய்விட்டது. ஆகவே இந்த சட்டத்திற்கு ஒப்பதல் கொடுங்கள் என்றால், 25 ஆண்டுகளுக்கு முந்தைய சட்டம் என்று சொல்கிற மைய அரசு, பாராளுமன்றத்திலே சொல்கிறது. பெண்களுக்காக சீதனமாக கொடுக்கபட்டநில உச்சவரம்புச் சட்டத்திலே விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, 1961–ஆம் ஆண்டு காங்கிரஸ் இயற்றிய சட்டத்திலே. அதற்கு விதிவிலக்கு ரத்து செய்து இன்றைய மாநில அரசு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று பாராளுமன்றத்தில் சொல்கிறார்கள். பினாமியை ஒழிக்க வேண்டும் பல லட்சம் நிலங்களை பிடுங்கி நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே மாநில அரசு சட்டம் போடுகின்றபோது, 25 ஆண்டுகளுக்கு முன்புள்ள பிரச்சினையை எடுக்காதீர்கள். ஆகவே சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கமுடியாது என்று சொல்கிற மைய அரசு 1961–ஆம் ஆண்டு 'ஸ்ரீதனா பிராப்பர்டி'–க்கு காங்கிரஸ் அரசு கொடுத்த விதி விலக்கினை இன்று நீங்கள் ரத்து செய்துசட்டம் போட வேண்டுமென்று சொல்வது எந்த வகையில் நியாயமாக இருக்கிறது? உண்மையிலேயே நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்கிற எண்ணமும், இந்த உணர்வும் இன்று மைய ஆட்சியிலே இருப்பவர்களுக்கு இருக்குமானால், இந்தச் சட்டத்தை தாராளமாகச் செல்லுகிற சட்டமாக்க முடியும். 1961–ஆம் ஆண்டுச் சட்டத்தில் பல்வேறு விதி விலக்குகளை ரத்து செய்ய வேண்டுமென்று இன்று சொல்கிறார்கள்.—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட, என்ன காரணம் என்று தெரியவில்லை. 1970–ஆம் ஆண்டிலே ஒரு 6 மாத காலத்திற்கு பாகப் பிரிவினைகளுக்கு



விதி விலக்குக் கொடுத்தார்கள். அதையும் ரத்து செய்யவேண்டுமென்று தெரிவிக்கிறார்கள். இவைகளையெல்லாம் 10 ஆண்டு 20 ஆண்டுகளுக்குப் பிறகு ரீ-ஓப்பன் செய்யவேண்டுமென்று சொல்கிறது மைய அரசு. இந்தபினாமி ஒழிப்பைப் பற்றி நேருவே சொன்னார், சட்டம் வருவதற்கு முன், சரியான விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால், உண்மையிலேயே மாநில அரசு போட்ட நில உச்ச வரம்புச் சட்டத்தை அத்தனை மாநிலங்களிலும் ஏமாற்றிவிட்டார்கள். இது எந்த வகையிலே நியாயம் என்பதை நான் முன்பு குறிப்பிட்டதைப்போல், இங்கிருக்கிற காங்கிரஸ் மெம்பர்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும். இதை நான் சொல்வதற்குக் காரணம் 1961 ஆம் ஆண்டு போட்ட நில உச்ச வரம்புச் சட்டத்திலேயும், பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் போட்டச் சட்டத்திலேயும், அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 9–வது ஷெட்யூலிலே சேர்த்து யாரும் நீதி மன்றங்களுக்குச் செல்லமுடியாத ஒரு பாதுகாப்புக் கொடுத்தார்கள். அதன் தொடர்பாக போடுகின்ற இந்தச் சட்ட திருத்தங்களை சேர்ப்பதிலே மைய அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை மாநில அரசுகளுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் அவைகளை ஊக்குவிக்கின்ற வகையில் செய்யாமல், அவர்களுக்கு அனுமதியை மறுப்பது உண்மையிலேயே நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதை நிலச் சீர்திருத்தச் சட்டததை இந்த நாட்டிலே அமல் படுத்துவதை காங்கிரஸ் விரும்பவில்லையா என்ற கேள்விக் கணையை தொடுக்கும் சூழ்நிலை ஏற்படுகின்ற காரணம், இந்த மாநில அரசினுடைய பினாமி ஒழிப்புச் சட்டத்திற்கு அனுமதி மறுத்திருப்பது, மிகவும் அநியாயம் என்றே இந்த நேரத்தில் குறிப்பிடவிரும்புகிறேன். அது போன்று பல்வேறு வகையிலும் சமுதாய நலத்துறையிலே, இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தான்-கொண்டு வந்தது—1962 ஆம் ஆண்டு குத்தகைதாரர் பதிவு சட்டத்திலிருந்த பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கின்ற வகையில் மக்களுக்கு இயற்றப்படுகின்ற சட்டத்தை அமல்படுத்துகின்ற பொறுப்பை மக்களுக்கு வகையில் கொடுக்கவேண்டுமென்ற அடிப் படையில் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை ஏற்படுத்தி, அதிலே பல்வேறு காரணங்களால் குத்தகை பயிரிடுகின்றவர்கள் பதிய முடியாமல் போய்விடுகிற சூழ்நிலையில், அங்கே இருக்கிற அந்த அதிகாரிகளால் விரைவாக உரிய நடவடிக்கைக எடுக்க முடியாத சூழ்நிலை, இவைகளை களைவதற்கு [illegible]கள் குழு அமைப்பதற்கு சட்டத் திருத்தத்தினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலேயே இரண்டு ஆண்டுகளுக்கு முன் இயற்றினார்கள். இந்த நேரத்திலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களை, சட்டத்தை இயற்றப்போகும் வருவாய்த் துறை அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன். அந்த சட்டத்தினை ஒட்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருக்கிறோம். காலதாமதம் ஆகிவிட்டது, குத்தகைதாரர்களுடைய பதிவுகளைப் பதியும்போது அங்கேயிருக்கிற தாசில்தார் உதவ வேண்டும் என்ற வகையிலே

இந்த அவையிலே இயற்றப்பட்ட சட்டத்தின் தொடர்பாக நீங்கள் அந்த பொது மக்கள் குழுவை அமைத்து, குத்தகைதாரர்களுக்கும், அந்தப் பதிவுச் சட்டத்தின் கீழ் சேர்த்து, அதை உடனே விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டத்திலே சலுகை அளிப்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை விடுக்கிறேன்.

இன்றைய நிலையிலே குத்தகைதாரர்களை பாதிக்கின்ற அதே அடிப்படையில், சில விதி விலக்குகளை வைக்கிறேன். பல முறைகள் கூட இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். வெளியூர்களிலே, அரசுத் துறைகளிலே பணியாற்றுகிறவர்கள் அவர்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டுவிட்டு வருகிறார்கள். அவர்கள் திரும்பவும் குறைந்தது 5 ஏக்கர் நிலம் கொடு என்றால் கூட, அதை மீண்டும் விவசாயம் செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றபோது இன்றைய சட்டத்தின் அடிப்படையில் திரும்ப விவசாய நிலத்தை குத்தகைதாரர்களிடமிருந்து நில உரிமையாளர்கள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவர்களுக்குக் கொடுக்கின்ற அதே உரிமையை குறைந்த நிலங்கள் வைத்திருக்கிறவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் நியாயம். இதிலே தவறுகள் நடந்துவிடும் என்று அஞ்சத் தேவையில்லை. ஒருவேளை சொந்த சாகுபடிக்கு வேண்டுமென்று, குத்தகைதாரர்களுடைய உரிமையை பாதிக்கின்ற வகையில், நிலத்தைப் பிடுங்கிக் கொள்வதற்காக சட்டத்திலே ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நீங்கள் அஞ்சவேண்டிய தேவையில்லை. பல்வேறு சட்டங்களிலே இப்படிப்பட்ட பகுதிகள் சேர்க்கப்பட்டு, அதற்கு பாதுகாப்பாக சட்டப் பிரிவுகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

உதாரணமாக ரெண்ட் கன்ட்ரோல் ஆக்டிலே இப்படி பெர்சனல் ஆக்குபேஷனுக்கு, வாங்குவதுபோல், பெர்சனல் கல்டிவேஷனுக்கு கொடுப்பது அப்படி அவர்கள் அந்த குறைந்த பட்ச நிலம் வைத்திருக்கிறவர்களிடம் இருந்து எந்தக் காரணத்தைச் சொல்லி குத்தகைதாரர்களிடமிருந்து அந்த நிலத்தை பெறுகிறார்களோ, சொந்த விவசாயத்திற்கு என்று, அப்படி அதை அவர்கள் சொந்த விவசாயம் மேற்கொள்ளவில்லை என்று 2 ஆண்டுகளுக்குள் அல்லது 1 ஆண்டுக்குள் என்று சொன்னால், அப்படிச் சொல்லுகின்ற அந்தக் குத்தகைதாரர்களுக்கே அதை மீண்டும் ஒப்படைக்கவேண்டும் என்ற நிலை சட்டத்திலே இருக்கின்ற போது, அப்படிப்பட்ட குறைந்த அளவிலே நிலம் வைத்துள்ளவர்களுக்கு சலுகை அளிக்கின்ற வகையிலே, பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே சில விதிவிலக்குகளை அளிக்க வேண்டும் என்ற கருத்தினை நான் முன்வைக்க விரும்புகிறேன்.



அதேபோல் இப்படிப்பட்ட சமுதாய நலத் திட்டங்களைப் பற்றிய விதிகளை இந்தத் துறையிலே புகுத்தியதுபோல், பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றி இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். இன்னும், 2, 3 மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். உண்மையிலே பட்டா பாஸ் புத்தகத்தை இவ்வரசு சட்டபூர்வமாக்கியது. இது ஒரு புரட்சிகரமான திட்டம். எத்தனையோ ஆண்டுகளாக அந்த கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழைமக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதிகாரிகளைச் சந்திப்பதற்கும், அரசு அளிக்கின்ற சலுகைகளை பெறுவதற்கும் அவர்கள் சிரமப்படுகிறார்கள். இதைப்பற்றி பேசாத அரசியல் இயக்கங்களே கிடையாது. பேசாத மேடைகளே கிடையாது. ஒரு சாதாரண அரசு கடன் வாங்கவேண்டும் என்றால், அவன் அலைகின்ற அலைச்சலைப் பாருங்கள், எவ்வளவோ சிரமப்படுகிறான் என்று சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட, அப்படிப் பேசிக்கொண்டிருக்காமல் கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழை எளியவர்கள், அரசு அளிக்கின்ற சலுகைகளையும், மற்றைய சலுகைகளையும் பெறுவதற்கு வாய்ப்புத் தருகின்ற வகையிலே, அதிலே இருக்கின்ற இடர்பாடுகளை களைகின்ற வகையிலே இந்தப் பட்டா பாஸ் புத்தகம் ஒரு சட்டபூர்வமான வடிவத்தை அடைய, அதை இந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கு கொடுக்கும் முயற்சி கொஞ்சம் காலதாமதப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதை மிக விரைவுபடுத்தவேண்டும். அப்படி விரைவுபடுத்திச் செய்கின்றபோது, அதில் ஜாதிச் சான்றிதழ்கள் போன்ற மற்றைய விவரங்களும் இடம் பெறுகின்ற வகையிலே அது எந்த ஒரு காரியத்திற்கும் அரசினுடைய சலுகைகளைப் பெறுவதற்கும், அரசு அலுவலர்களைச் சந்திப்பதற்கும் போகவேண்டும் என்ற நிலையில்லாமல் அவர்களுடை சொத்தைப் பற்றி முழு விவரத்தையும் கொண்டதாக அது இருக்கவேண்டும். இந்தக் குறிப்பிலே கூட அரசுக் கடன் போன்றவைகளை எளிமைப்படுத்துகின்ற விதத்தில் இந்த பட்டா பாஸ் புத்தகம் கொண்டு வந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்ன என்றால், அப்படிப்பட்ட வசதிகள் இருகின்றபோது, சட்டத்திலே நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டா பாஸ் புத்தகம் கிடைக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை லேபரர்ஸ்கள், விவசாயத் தொழிலாளிகள் அரசு அளிக்கின்ற சில மானியங்களை பால் மாடு வாங்குகின்றவைகள் போன்ற மானியங்களைப் பெறுவதற்கு அவர்கள் வருவாய்த் துறைக்குச் செல்லுகின்ற நிலைமைகள் இருக்கிறது. எனவே அவர்களுக்கும், குறைந்த பட்சம் அவர்களுடைய வீடுகளையும், உடமைகளையும் பற்றி அந்தப் புத்தகத்தில் குறித்து அவர்களுக்கும் பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் உழைக்கின்றவர்களுக்கே நிலம் சொந்தம், குத்தகைதாரர்களே நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை வாங்குவதற்கான ஒரு சட்டத்தை 1973ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதே அவையிலே நிறைவேற்றி என்ன காரணத்தாலோ தெரியவில்லை, மீண்டும் அவர்களே, டெல்லிக்கு எழுதிய அதை வாபஸ் பெற்றுக் கொண்டு, அதை பொறுக்குக் குழுவிற்கு விடுகிறோம் என்று காலம் கடத்தி, பிறகு அந்தச் சட்டம் வராமலே போய்விட்டது. இந்த குத்தகைதாரர்கள் அந்த நிலஉடமையாளர்களிடமிருந்து விலைக்கு வாங்குவதற்கான வழிவகையைச் செய்கின்ற அந்தச் சட்டம் 1973 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டும், அது பயனற்றுப் போய்விட்டது. அந்தச் சட்டத்தை தி.மு.க.வினர் கைவிட்டு விட்டதை மீண்டும் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல் மாநிலம் முழுவதும் அரசுக்கு வருகின்ற வருவாயை தனிப்பட்டவர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் 2 சிப்டா என்ற வகையிலே இந்த மாநிலம் முழுவதும் ஏறத்தாழ 20 லட்சத்திற்கும் மேற்பட்ட புளிய மரங்களை தனிப்பட்டவர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். இது பிரிட்டிஷ் காலத்திலேயிருந்து அந்த ஊரிலே இருக்கின்ற வசதியானவர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். இது ஒரு குட்டி ராஜ மானியம் என்றுகூடச் சொல்லலாம். ஆயிரம் மரங்கள், 2 ஆயிரம் மரங்கள் என்று தனிப்பட்டவர்கள் வைத்துக்கொண்டு அரசு நிலத்திலே இருக்கின்ற மரங்களை வைத்துக்கொண்டு கூடுதலான வருவாயைப் பெற்றுக்கொண் டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் இந்த 20 லட்ச மரங்களை மாநில அரசு தன்வசப்படுத்திக்கொண்டால் ஏறக்குறைய 30-லிருந்து 40 கோடி ரூபாய் வரை மாநில அரசுக்கு வருமானம் வரும். ஒரு மரத்திலிருந்து குறைந்தபட்சம் 100 ரூபாய் வருமானம் வரும். ஒரு கிராமத்திலே இருக்கின்ற சிறிய மான்யர்கள், ஒவ்வொருவரும் 5 மரங்கள், 100 மரங்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே ஒருவர் 1,500 மரங்களை, 25 ஆண்டுக்கலமாக பட்டா போட்டு வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளை ரத்து செய்யவேண்டும். அரசினுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகையிலே குறைந்தபட்சம் ஒரு புளிய மரத்திற்கு 3 ரூபாய் என்று லீஸ்.அமவுன்ட் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த லீஸ் அமவுன்டையாவது அதிகப்படுத்த வேண்டும். இல்லை என்றால் அவைகளை எல்லாம் முழுவதும் எடுத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருவாய் கிடைக்கின்ற வகையிலே அவைகளை எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, இந்த வறட்சிப் பகுதிகளிலே அரசு மிகச் சிறப்பாக தன்னால் இயன்ற அளவிற்கு மத்திய அரசு உதவாத நிலையிலே ஆற்றியிருக்கிற பணியை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள் குறிப் பிட்டார். ஏதோ அதிகாரிகள் இல்லாத காரணத்தால் இந்த அறிக்கை அனுப்புவதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்று. உண்மையிலே உரிய நேரத்திலே இந்தத் துறை மாநில அரசினுடைய நிதி வசதிகளை வைத்து நடவடிக்கை எடுத்தது. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூட மாநில அரசு அறிக்கை அனுப்புவதிலே காலதாமதம் என்று சொல்லு கின்ற நிலைமைகூட இருந்தது. ஆனால் மத்திய அரசினுடைய குழு நமது மாநிலத்தைப் பார்வையிட்டபிறகு, ஜனவரி மாதத் தினுடைய இறுதியிலே இந்த அறிக்கையை மாநில அரசு கொடுத்தது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இதற்கு முன்பு கொடுத்திருந்தால் உரிய அளவிற்கு எவ்வளவு மகசூல் இழப்பு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லி, இந்த மாநில அரசைப் பாராட்டி யிருக்கிறது. இந்த மாநில அரசு எடுத்த நடவடிக்கை எல்லாம் சரியான நடவடிக்கை என்றும், இதற்கு முன்பு இந்தஅறிக்கையை கொடுத்திருந்தால் மாநில அரசு சரியான கணக்குகளை கொடுக்கமுடியாமல் போயிருக்கும் என்றும் இந்த மாநில அரசை அந்த மைய அரசுக் குழுவின் தலைவர்திரு. வத்சவா பாராட்டி யிருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

"About the criticism that the Tamil Nadn Gove nment had delayed thesubmission of drought relief report, Mr. Srivatsava said: We cannot say that the report is delayed. After all, the crop conditions will be known only at the end of January. If the State had sent its report earlier perhapsit might not have been full and complete."5.3.83 HINDU
ஆகவே, உரிய நேரத்திலே நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

அதைப்போலவே ஆங்காங்கு நடக்கும் வறட்சிப் பணிகள் உரியமுறையில் நடக்கவேண்டும் என்ற முறையில் மாவட்ட அளவிலே குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகள் அந்த வேலைகளைக் கண்காணிக்க வேண்டும் என்ற முறையினை ஏற்படுத்தி யிருப்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நான் சார்ந்து இருக்கும் வேடசந்தூர் மிகவும் வறட்சியான பகுதி. மற்ற எல்லாப் பகுதிகளிலும் நல்ல முறையில் வேலைகள் நடந்து வருகின்றன. ஆனால் அங்கேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கிணறு வெட்டுவதற்காக தக்காவி கடன் வழங்கப் படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த

மதுரை மாவட்டத்தின் வடகோடியில் இருக்கும் வேடசந்தூர் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு—ஒரு குறிப்பிட்டு 100—200 விவசாயிகள் என்று சொல்லாமல்—கிணறு வெட்ட விரும்பும் அனைத்து விவசாயிகளுக்கும் தக்காவி கடன் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அந்த வேடசந்தூர் தாலுக்காவை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறை கொள்கைக்குறிப்புப் புத்தகத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அனைத்து பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 110 பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு ஆணைகள் பிறப்பித்துள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த நிர்வாக சீர்திருத்தத்திற்காக அமைக்கப்பட்ட வர்கீஸ் குழுவும், அம்ரோஸ் குழுவும் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும், திண்டுக்கல் நகரத்தை ஒன்றுக்குத் தலைநகராக ஆக்கவேண்டும், அது பல்வேறு வகைகளில் வளர்ச்சி பெற்று இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். திண்டுக்கல்லை மாவட்ட தலைநகராக ஆக்குவதால் அரசாங்கத்திற்கு பொருளாதாரச் செலவு அதிகம் ஏற்படாத சூழ்நிலைஇருக்கிறது. அந்த நகரத்தில் மாவட்டத்திற்குத் தேவையான அத்தனை தலைமை அலுவலகங்களும்—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் தவிர—அங்கே நிர்மாணிக்கப்பட்டு இருப்பதால், மாவட்டங்களைப் பிரிக்கின்ற பணியை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறபோது, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்த பிரிக்கப்பட்ட மாவட்ட தலைநகரத்தை திண்டுக்கல்லில் அமைக்கவேண்டும். ஏனென்றால் இந்த மாவட்டத்தைப் பிரிக்கும் நிலைமையில் தான் அந்த மாவட்டத்திற்குப் பெயர் வைக்கும் பிரச்னையோ அல்லது தலைநகரை எங்கே வைக்கவேண்டும் என்ற பிரச்னையோ இல்லாத நிலைமை இருக்கிறது என்ற காரணத்தால் மதுரை மாவட்டத்தைப் பிரிக்க அரசு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் தாலுக்காவைச் சேர்ந்த குடிகாணி விவசாயிகளுக்கு 1948ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட சலுகைகளை அவர்கள் பெயர்கள் விடுபட்டுப் போனதால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. அதற்குக் காரணம், 1948ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில் நோட்டிபிகேஷன் வெளியிடுகிறபோது, அதிலே அவர்கள் பெயர்கள் சேர்க்கப்படவில்லை. அதனால் அவர்கள் அந்தப் பயனை அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் 1981ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில்



தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் செட்டில்மென்ட் ஆபீசர், மீண்டும் அவைகளைப் பரிசீலிக்கவேண்டும். அந்த குடிகாணி விவசாயிகளுடைய நலனையும் அந்த 1948 ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தின் பயனை அவர்கள் அடையும்விதத்தில், அந்த விவசாயிகள் அதன் மூலம் நிவாரணம் பெறுகின்ற வகையில் வழிவகைகளை, வசதிகளை இந்த அரசு செய்து தரவேண்டும் என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரித்துறை, இயற்கை சீற்றங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இயற்கையின் சீற்றத்தைத் தணிக்க இரண்டு வழிகளில் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒன்று, சேதம் ஏற்பட்டதற்குப் பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகள். மற்றொன்று, அதற்கு முன்னதாக எடுக்கும் தடுப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள். உதாரணமாக புயல் சேதத்தைத் தணிப்பதற்காக நாம் புயல் பாதுகாப்பு இல்லங்களை அமைத்து இருக்கிறோம். அதைப்போலவே, வறட்சியால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்கும் என்னென்ன செய்யவேண்டும் என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். சமீபத்தில் 17-3-83 அன்று 'இந்து' பத்திரிகையில் ஒரு செய்தி வந்து இருக்கிறது. பம்பாயைச் சேர்ந்த 'டைரக்டர் ஆப் அர்பன் என்வியரான்மெண்ட்" இன்ஸ்டியூட், டாக்டர் ராஷ்மி மயூர் என்பவர் ஒரு பயங்கரமான செய்தியைச் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக, கேரளா, தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களிலும் வறட்சி நிலைமை நீண்ட நாள் தொடரும். இப்போது இருக்கிற அளவிலே மரங்களை வெட்டுவது, காடுகளை அழிப்பது என்ற வகையில் தொடர்ந்து நடைபெறுமானால். தார் போன்ற பாலைவனம் போல் இந்த மாநிலங்கள் மாறிவிடும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றதை தடுப்பதற்கும், புதிய மரங்களை வளர்ப்பதற்கும் கட்டாயம் ஆவன செய்யவேண்டும்.

(முற்பகல் 11-30)

பரவலாக உள்ள தண்ணீர் ஆவியாகி வீணாவதைத் தடுப்பதற்கும் பல்வேறு கண்மாய்களிலுள்ள தண்ணீர் ஆவியாவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்காவிட்டால் தென்னாடு, குறிப்பாக தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்கள் வரும் ஆண்டுகளில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் மனதிலே வைத்துக்கொண்டு இப்போது தமிழ்நாட்டில் பல்வேறு காரணங்களால் வெட்டப்படும் மரங்களை வெட்டுவதையும் தடுக்க வேண்டும்.

இப்போது மரங்கள் எந்த அளவுக்கு வெட்டப்படுகின்றன என்பதுபற்றி நாம் சொல்லவேண்டியதே இல்லை. அந்த அளவுக்கு வெட்டப்படுகின்றன; அதை தடுத்து நிறுத்த வேண்டும். புதிதாக சமுதாய நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் என்று சொன்னால் மட்டும் போதாது. அதோடு காட்டு வளங்களையும் பெருக்க வேண்டும். ஜப்பான் தேசத்தில் ஒரு மரத்தை வெட்டினால் அவர் சுமார் 10 மரங்களுக்குக் குறையாமல் புதிய மரங்களை வைத்து நட்டுத்தர வேண்டுமென்ற ஒரு வழக்கத்தைக் கொண்டிருப்பதால் அங்கே எங்கு பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது. இங்கே நம்முடைய நாட்டிலும் அந்த மாதிரியான நல்ல பழக்க வழக்கங்களை அரசு மூலம் ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும். அந்த வகையில் இந்த நாட்டிலே வறட்சியைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தடுப்பு நடவடிக்கை என்று சொல்லும்போது குறிப்பாக தொடர்ந்து பல ஆண்டுகளாக வறட்சிக்கு இலக்காகியிருக்கும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் நிறைய கண்மாய்கள் இருக்கின்றன. அந்த கண்மாய்களை சரியான முறையில் பராமரித்து, ஆழப்படுத்தி, கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டும்; இப்போது கொள்ளளவு குறைந்திருப்பதனால் தண்ணீரை அதிகமாகத் தேக்கிவைக்க முடியவில்லை. வறட்சி நிவாரணப்பணி என்று சொல்லும்போது கண்மாய்களை ஆழப்படுத்துகிறோம் என்று சொல்லி, கரையைப் பலப்படுத்துகிறார்களே தவிர கண்மாய்கள் ஆழப்படுத்தப்படுவதில்லை. கண்மாய்களை வெட்டி, ஆழப்படுத்த வேண்டும்.

இப்போது கூட பல சந்தர்ப்பங்களில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் ஆங்காங்கே சில சில கண்மாய்களை எடுத்து வேலை செய்கிறார்கள். அதன் அளவுக்கு நிவாரணம் எந்த அளவுக்கு விரையமாகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வறட்சிக் காலங்களில் மட்டுமல்லாமல் சாதாரண காலங்களிலும் அங்கே போர்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பெரிய பெரிய இயந்திரங்களை 'எர்த் மூவர்' போன்ற இயந்திரங்களைக் கொண்டு கண்மாய்களை ஆழப்படுத்தி, குறைந்த அளவில் மழை பெய்தாலும் கூட கிடைக்கின்ற நீரைத் தேக்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த அளவில் வருகின்ற நீரைத் தேக்கிவைத்தால் கூட அது விவசாயத்திற்குப் பயன்படும் என்பதால் அதை அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கூட ஆரம்பக் கட்டத்தில் குடிநீருக்கும் பாசனத்திற்கும் உரிய நிவாரணப் பணிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் பக்கத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், "கொடுக்காத ஆடு வளர்ப்பவன் சினை ஆட்டைப் பிடித்துக் கட்டினான்" என்று. அப்படி சில கண்டிஷனைப் போட்டு



கண்மாய்களை மராமத்துச் செய்கிறார்கள். 50 ஏக்கருக்குக் குறையாமல் உள்ள பாசன கண்மாய்களை பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளும் போது கடந்த 5 ஆண்டுகாலமாக மராமத்து செய்யாமல் இருக்கிற கண்மாய்களைப் பார்த்துத்தான்எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப்பார்த்தால் அதிகப்படியான கண்மாய்களை வெட்டுகின்ற பணி நடைபெறாது. நாம் துயர்தணிப்புக்காக எடுக்கின்ற நிவாரண நடவடிக்கையின் மூலம் பரவலாக வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும்; அதன் மூலம் மக்களுக்கு உணவு வாங்க வசதி ஏற்பட வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ள வேலைகளை மட்டும் ஒரு குறிப்பிட்ட இடங்களில் மட்டும் எடுத்துச் செய்வதாக இருந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மட்டும் தான் நிவாரணம் கிடைக்கும், அவர்களுக்கு மட்டும்தான் பலன் கிடைக்கிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. அதை மாற்றி, இயற்கைச் சீற்றத்திற்கு உட்பட்ட பகுதி அனைத்திற்கும் நிவாரணம் கிடைக்கின்ற வகையில் வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய நினைவு சரியாக இருந்தால், சென்ற ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டில் இந்த மாதிரி இயற்கைச் சீற்றம் ஏற்பட்டால் உதவி செய்ய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் அது போதாது என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால் தொடர்ந்தாற்போல் பல ஆண்டு ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சராக வருவதால், வறட்சி தொடர்ந்து வருவதால் அதைத் தடுக்க அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்வதற்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுகூட நீங்கள் கொடுத்த குறிப்பிலே, 'When the tune exceeds 40 lakhs of rupees, the excess may be utilised to meet fth expenditure on protective irrigation work and other works for the prevention of famine.' என்று அந்தக் கொள்கையை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, பஞ்சத்தை தீர்க்கிற வகையிலும், நீர்ப்பாசனத்தை வளப்படுத்துவதற்கான முறையிலும் நீங்கள் அதிகமான தொகையை ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்லும்போது கடந்த 82 ஆம் ஆண்டிலேயிருந்து தொடர்ந்து ஏற்பட்டுவந்த இந்த வறட்சியைப் பற்றி, 18 ஆம் தேதியில் கலெக்டர்கள் மட்டத்திலும், அதிகாரிகள் அமைச்சர் மட்டத்திலேயும், 26-8-82, 11-10-82, 12-11-82 தேதிகளில் கலந்து ஆலோசிக்கப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன காரணங்களோ தெரியவில்லை, பிப்ரவரி மாதம் வரையில் நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்படாத நிலை இருந்து வந்திருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் தான் மிகவும் பாதிக்கப்

படுகிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து, இனிமேலாவது வருங்காலத்தில்—வருங்காலத்தில் இப்படிப்பட்ட வறட்சி தொடர்ந்து வரவேண்டும் என்று நாம் விரு பவில்லை என்றாலும் கூட, வந்தால்—உரிய காலத்தில் நிவராண நடவடிக்கைகளை எடுப்பதற்கான முழு முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

துயர் துணிப்புக்கு நிரந்தரமான முறையில் வேலைகள் நடைபெற நிரந்தரபான தொகை ஓதுக்கபெறவேண்டும் என்று சொல்வதோடு, மத்திய அரசிடமிருந்து கேட்கப்படும் உதவித் தொகை வரவில்லை, அவர்கள் பதில் சொல்லவில்லை என்று சொல்லி துயர் தணிப்பு நடவடிக்கைகளில் கால தாமதம் செய்வதால், அவர்கள் ஒ க்குகின்ற பணம் முழுவதையும் செலவழிக்க முடியாத ஒரு நிலையும் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மார்ச் 31 ஆம் தேதிக்குள் ஒரு பணி முடிக்கப்படவேண்டும் என்று நிர்ணயம் செய்தால், அந்த தேதிக்குள் அந் ப்பணி முடிக்கப்பட வேண்டும். ஆனால் அந்தப் பணிகளை துவக்காமலே கர்ல தாமதம் செய்து கொண்டிருந்தால், ஒதுக்கப்பட்ட தொகை வீணாகிறது. ஆகவே, இவைகளை எல்லாம் தவிர்த்து, வறட்சியினால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையிலேயே பலன் கிடைக்கும் வகையிலே காலாகாலத்தில் ந வடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கண்மாய்களை எடுத்துக் கொண்டால், அதில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சிவகங்கைப் பகுதியில் மொத்தம் 1457 கண்மாய்கள் இருக்கின்றன. அதேபோல காளையார் கோவில் பகுதியில் 1346 கண்மாய்கள் இருக்கின்றன. ஆனால் சிவகங்கை பகுதியில் 13 கண்மாய்களை மட்டும் எடுத்துக்கொண்டு மராமத்து செய்கிறார்கள். காளையார் கோவிலில் அதுவும் கிடையாது. மொத்தமாக 100 ஏக்கர் 150 ஏக்கர் நீர்ப்பாசனம் தரும் இந்தக் கண்மாய்களை நம்பியுள்ள விவசாயிகளுடைய நிலைமையை யோசித்துப் பார்த்து, அத்தனை கண்மாய்களையும், இந்தத் திட்டத்தில் சேர்த்து மராமத்து செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

அடுத்ததாக, இந்த வறட்சி நிவாரணப் பணிகளை திறமையாக செய்வதற்கு, பழக்கப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து அங்கே இருக்கவேண்டும். அப்படி அவர்களை தொடர்ந்து அந்தப் பகுதியில் இருக்க விடாததன் காரணமாக அந்தப் பணிகள் நிச்சயமாக பாதிக்கப்படும் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, என்னுடைய மாவட்டத்தில் உள்ள கலெக்டரை திடீரென்று மாற்றியிருக்கிறார்கள். அதுகூட மார்ச் 31 ஆம் தேதி வரையில் கூட காத்திருக்காமல், நேற்றே



அவர் சார்ஜ் ஒப்படைத்து விட்டார். புதியதாக வந்த கலெக்டர் அந்தப் பகுதியை அறிந்து, அந்தப்பகுதி மக்களை அறிந்து, பின்னர் தான் தேவையான பணிகளை அங்கே செய்ய முடியும். அதற்கு சில காலம் ஆகும். ஆகவே, போர்க்கால நடவடிக்கைகள் போன்று இந்தப் பணிகள் நடைபெற வேண்டும் என்றால், அந்தப் பணிகள் முடிவடையும் காலம் வரையிலாவது, அத்தகைய மேல்மட்ட, உயர் மட்ட அதிகாரிகளை மாற்றாமல் வைத்திருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஆழ் குழாய்களை அமைப்பதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அங்கே முறைப்படி ஜியாலஜிஸ்ட் வந்து பார்வையிட்டு, அவருடைய அபிப்பிராயம் பெற்று, அவரிடம் சர்டிபிகேட் வாங்கிய பிறகு, மற்ற அதிகாரிகள், பி.டி.ஓ., ஆர். டி.ஓ. போன்ற அதிகாரிகள் வந்து பார்த்த பிறகுதான், அவர்கள் வந்து சொன்ன பின்னால்தான், அவைகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலை இருக்கிறது. இதனால் அந்தப் பணிகளை தேவைப்படும் வகையில் காலாகலத்தில் செய்ய முடிவதில்லை. ஆகவே சாதாரண நடைமுறைக் காலங்களில் செய்வது போல எல்லா முறைகளையும் அனுஷ்டித்து பிறகுதான் போட வேண்டும் என்று வைத்துக் கொள்ளாமல், நிவாரணப் பணி என்பதை உணர்ந்து, அதை காலாகாலத்தில் செய்வதற்கு முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மக்களுக்கு தேவையான கை பம்புகளைப் போடுகிறீர்களே, அதில் ஒரு பிரச்னை. இந்தப் பணிகளைச் செய்கின்ற டுவாட் போர்டுக்கும், ரெவின்யூ அதிகாரிகளுக்கும் அதாவது பி.டி.ஒக்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இருப்பது இல்லை, தொடர்பும் இருப்பது இல்லை. பல இடங்களிலே கை பம்புகளைப் போடுகிறார்கள். ஆனால் இன்னின்ன இடங்களிலே போட்டிருக்கிறோம் என்று சில சமயங்களிலே சொல்கிறார்கள். சில சமயங்களிலே சொல்லவில்லை. ஆகவே, இந்த இரண்டுவித அதிகாரிகளுக்கும் இடையிலே தொடர்பு இருந்தால் இந்தப் பணிகள் சரிவர நடைபெறுவதற்கு சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே ஊருணிகள் அதிகம், அந்த ஊருணிகள் இப்போதெல்லாம் மராமத்து பணிகளில் சேர்க்கப்படுவதேயில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அவைகள் சேர்க்கப்பட்டன. ஹேண்ட் பம்புகளை பல இடங்களில் போட்டு கொடுத்திருக்கிறீர்கள். அவைகள் மக்களுக்கு பயன்பட முடியும். ஆனால் கால்நடைகள் என்ன ஆவது? நேற்றைக்கு மதுரையிலே இருந்து திருப்பத்தூருக்கு வரும் பாதையில் பார்த்தேன், இரண்டு மணியளவில ஒரு பெண்மணி தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தார் ஒரு கைப்பம்பிலே. நூற்றுக்கணக்கான எருமை மாடுகள், அங்கே சுற்றி தேங்கும் தண்ணீரை குடிக்கலாம் என்று அங்கே வந்து நின்று கொண்டிருந்தன. ஆகவே, இது போன்ற நிலைமைகளை தவிர்க்க ஆங்காங்கே

உள்ள ஊருணிகளை மராமத்து செய்யவேண்டும். என்னுடைய பகுதியில் மிகுதியாக உள்ள இந்த ஊருணிகளை நீங்கள் மராமத்து செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வரித்தள்ளுபடி சலுகை 1392 ஆம் பசலிக்கு 37 காசுக்குக் குறைவாக இருந்தால் 50 சதவீதம் என்று இருந்தால் வரி தள்ளுபடி. செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. 37 பைசா என்பது பழைய காலத்தில் 6 அணா, ஆனால் 50 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது 8 அணா. ஆகவே 37 காசு என்றால் 37 சதவீதமாக இருக்கவேண்டும். இவற்றிலே எது சரி என்பது பற்றித் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறவேண்டும்.

அடுத்து உள்ளூர் செஸ் வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டிய இனங்களில் மேல் வரி விதிக்கக்கூடாது என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு ஆலோசனை அளிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி ஆலோசனை தான் வழங்கப்படவேண்டும் என்றால் நீங்கள் வசூல் செய்ய வேண்டாம் என்று சொல்கிறீர்களா? அல்லது அவர்களுடைய டிஸ்க்ரெஷனரிபவருக்கு விடுகிறீர்களா? இதுபற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84—ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக இந்த அரசு ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு நல்ல முன்னேற்றமான திட்டங்களைத் தீட்டி பொதுமக்கள் பாராட்டுகின்ற வகையில் செயல் படுகின்றது அந்த வகையில் தான் பொதுமக்களுக்கும், அரசாங்கத்திற்கும், நேரடித் தொடர்பு ஏற்படுகின்ற வகையில் வருவாய்த் துறை ரெவின்யூ போர்டை கலைக்கின்ற நடவடிக்கையினை எடுத்தது. அடுத்து நீதிமன்றங்களில் பெருமளவுக்கு வழக்குகள் வருவதற்கு காரணமாக இருந்த கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு புதிதாக நிரந்தர கிராம அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதுபோன்ற பல்வேறு நல்ல திட்டங்களை அதாவது பொதுமக்கள் தொடர்புத் திட்டம் என்ற வகையில் ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு



குறிப்பிட்ட நாளிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று பொதுமக்களை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற்று வேண்டிய காரியங்களை நிறை வேற்றுவது போன்ற திட்டங்களை எல்லாம் பொதுமக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் முன்பு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரடியாகச் சென்று அங்கே உள்ள கிராம மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்றுக் கொண்டு அந்தந்த இடங்களிலேயே அந்தந்த மனுக்களை விசாரித்து பொதுமக்களுக்கு திருப்தி ஏற்படுகின்ற வகையில் செயலாக்கப் பட்ட திட்டம் ஒரு குறிப்பிடப்படவேண்டிய அம்சம். அதைப்போலவே, பல்வேறு நிவாரணம் என்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்கே, குடிநீர், இடவசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருப்பது குறித்து திருச்சி மாவட்ட மக்கள் பாராட்டுகிறார்கள்.

இந்த விவசாயிகள் நிரந்தரமாக தங்களுக்கு நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன. அவற்றின் சர்வே எண் என்ன என்பது தெரியாமல் இருந்த நிலைமையில் பட்டா புஸ்தகங் களை வரைபடங்களுடன் கொடுத்து இன்று அந்த மக்கள் திருப்தி படும் வகையில் செயல்படுவது குறித்து பொதுமக்கள் பாராட்டுகிறார்கள்.

அடுத்து ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை ஒதுக்குவதிலே மற்றும் நிலப்பட்டா வழங்குவதிலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணத்தால் அவற்றை எல்லாம் பொதுமக்கள் பாராட்டுகிறார்கள்.

அடுத்து நான் இந்த மன்றத்தின் மூலமாக ஒரு சில கருத்துக்களை என்னுடைய தொகுதியின்சார்பில் எடுத்து வைக்க விரும்புகிறேன். குறிப்பாக மணப்பாறை தாலுக்காவின் ஆர். டி. ஓ. அலுவலகம் கரூரிலே இருக்கின்றது. எனவே அங்குள்ள மக்கள் ஆர். டி. ஓ. அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்றால் 75 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. எனவே இந்த நிலைமையை நோக்குகின்ற வகையில் அந்த மணப்பாறை ஆர். டி. ஓ. ஜூரிஸ்டிக்ஷனை 25 மைல் தொலைவிலுள்ள திருச்சிக்கு மாற்ற வேண்டும் என்ற அந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பழைய குளித்தலை தாலுக்கா 86-ஆம் நம்பர் மேலூர் கிராமத்தை மணப்பாறை தாலூக்கா 133 செவல்பட்டி கிராமத்தோடு செட்டில்மெண்டின்போது சேர்த்து விட்டார்கள். எனவே அந்த 86 ஆம் நம்பர் மேலூர் கிராமத்தை தனி கிராமமாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மணப்பாறைக்கு தாலுக்கா அலுவலகம் மணப்பாறை நகருக்கு வெளியில் கட்ட ஒரு திட்டம் இருப்பாக கேள்விப்படுறேன். அந்த தாலுக்கா அலுவலக கட்டிடத்தை மணப்பாறையில் தற்போது இருக்கின்ற தாலுக்கா அலுவலகத்தில் அதிகமான இடம் இருக்கிற காரணத்தால் அங்கேயே கட்டித் தருமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே ஒரு சில கோரிக்கைகளை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். குறிப்பாக வறட்சிக்கு காரணம் மழை இல்லாமல் இருப்பது, மழை இல்லாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் அதிகமான மரங்கள் வெட்டப்படுகிறது. அந்த மரங்கள் வெட்டுவதை தடுப்பதற்கு தற்போது இருக்கின்ற சட்டங்கள் சரியாக செயல்படாத காரணத்தால் புதிய சட்டத்தை உருவாக்கி இந்த மரங்களை வெட்டுவதை தடுப்பதற்கு சட்டம் இயற்றவேண்டும் என்று கோரிக்கையை விடுக்கிறேன்.

அடுத்து, சமுதாய கிணறுகள். பல ஏக்கருக்கு ஒரு கிணறு வெட்டப்படும்போது அது சம்பந்தப்பட்ட குளங்களில் வெட்டி தந்தால் அது எல்லோருக்கும் பயன்படும். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது அந்த திட்டத்தை அந்த சமுதாய கிணறுகளை சம்பந்தப்பட்ட குளங்களில் வெட்டித்தருமாறு கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு மாற்றுதலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறைத் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்றையதினம் கிராமப்புறங்களில் அரசு சொல்கின்றபடி முக்கியமாக பல ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் ஏழை எளியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய முன்னேற்றத்திற்காக நில சட்டங்கள் எல்லாம் கொண்டு வந்ததாக சொல்கிறார்கள். 1960லிருந்து நில சட்டங்கள் நம்முடைய நாட்டில் கொண்டு வந்து ஏறத்தாழ இன்று வரையில் 98 ஆயிரம் ஏக்கர் நிலம் தான் கொடுத்து இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கிராமப்புறமக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்றால் குறிப்பாக மத்திய ஆட்சி கிராமப்புற மக்களை புறக்கணிக்கக்கூடிய இந்த நேரத்திலே கிராமப்புற மக்கள் வாழ்வில் ஏதாவது மாறுதல் வரவேண்டுமானால் தமிழக அரசு இருக்கக்கூடிய அதிகாரத்தை பயன்படுத்தி நில சீர்திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டும். மேலும் கிராமப்புற மக்கள் வறுமையால் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்களுக்கு நிலத்தை



கொடுத்து அவர்களுக்கு வாழ்வில் வழிவகைகளை உண்டாக்கக் கூடிய நடவடிக்கைகளை செய்வதன் மூலம் தான் அது சாத்தியம் ஆகும். அந்த வகையில் நிலச் சீர்திருத்தச் சட்டம் அன்று காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்தும் சரி பிறகு திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி கொண்டு வந்ததும் சரி அந்த சட்டங்கள் எல்லாம் உண்மையில் உழுபவனுக்கு நிலத்தை வழங்கும் அளவுக்கு கொண்டு வரப்படவில்லை. அது பல்வேறு விதிவிலக்குகளை அளித்து இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் கொடுக் க்கூடிய அளவில்அந்த சட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. இதனால் தான்20 ஆண்டுகாலமாக நிலச்சட்டங்கள் வந்தாலும் ஏறத்தாழ தமிழகத்தில் 1½ கோடி ஏக்கர் விளை நிலம் இருந்த போதிலும் இதுவரை 98 ஆயிரம் ஏக்கர் நிலம் தான் வினியோகிக்கப்பட்டிருப்பதாக சொல்லிஇருக்கிறார்கள்.

இந்த அரசு பினாமிகளை ஒழிக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தை இந்த அவையில் நிறைவேற்றி அது மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டது. மத்திய அரசு 20 அம்ச திட்டம் என்று பீற்றிக்கொண்டாலும் அந்த சட்டத்தை அங்கீகாரம் செய்யாமல் அந்த பினாமி நிலங்களை கூட எடுத்துக் கொள்வதற்கு வழிவகை செய்யாமல் காரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே மீண்டும் அந்த சட்டத்தை இந்த அவையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும், நில உச்சவரம்பு சட்டத்தில் பல்வேறு திருத்தங்களை செய்ய வேண்டும், குறிப்பாக கோவில்களுக்கும், மடங்களுக்கும், தனியார் அறக்கட்டளைகளுக்கும், அறக்கட்டளைகளுக்கும் மலைத் தோட்டங்களுக்கும் இருக்கக்கூடிய விதி விலக்குகளை ரத்து செய்து உழுபவர்களுக்கே நிலத்தை அளிக்கக் கூடியவகையில் நில சீர்திருத்த சட்டத்தை விரைவாக கொண்டுவர வேண்டும் என்று மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொண்டு வருவதன் மூலம்தான் இன்றைக்கு கிராமப்புற மக்களுச்கு ஒரளவுக்கு வாழ்வு அளிக்க முடியும் என்று நான் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

குத்தகை பதிவு பற்றி குத்தகை விவசாயிகளை 1984ம் வருடம் வரையில் வெளியேற்றக்கூடாது என்று சில சட்டங்கள் இங்கே நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கொண்டு வந்தார்கள் அப்படி கொண்டு வந்து வெளியேற்றக் கூடாது என்று சொன்னாலும் இயற்கையின் சீற்றங்களினாலும் பல்வேறு காரணங்களினாலும் குத்தகை பாக்கிகள் ஏராளமாக தேங்கி குத்தகை விவசாயிகள் இன்றைக்கு பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளனர். அவர்களுடைய குத்தகை முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். குறிப்பாக இந்த ஆண்டு

அவர்களுக்கு இருக்கக்கூடிய குத்தகையைரத்து செய்து குத்தகை விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு குத்தகை விவசாயிகளை பதிவு செய்யக்கூடிய நடவடிக்கைகள் என்பது மிகவும் மெதுவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ 7 லட்சம் குத்தகை விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும் என்று ஆட்சியாளர்கள் ஆரம்பத்தில் சொன்னாலும் இதுவரையிலும் 4 இலட்சத்து 38 ஆயிரம் பேர்கள் தான் பதிவு செய்யப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. இன்றைக்கு கிராமப்புறங்களில் குத்தகை விவசாயிகள் மனு கொடுத்தால் அந்த மனுக்களை விசாரித்து பைசல் செய்வதற்கு கூட அதிகாரிகள் இல்லை என்று தாசில்தார் அவர்கள் அதற்குரிய ஊழியர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களை உடனடியாக பதிவு செய்வதற்கும் குத்தகை விவசாயிகள் மனுக் கொடுத்தால் அவர்கள் கோர்ட்டிற்கு அலையாமல் ஸ்தலத்திலேயே போய் விசாரித்து பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

நிலவெளியேற்றம் கூடாது என்று அரசு சொன்னாலுங்கூட பல்வேறு இடங்களிலே குத்தகை விவசாயிகளை நிலங்களை விட்டு வெளியேற்றி வருகிறார்கள். வேதாரண்யத்தில் கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் குடிகாணி உரிமையாளர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள். அதற்காக கோயில் நிர்வாகம் அவர்களை வெளியேற்றுவதற்கு ஆட்சியிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். அதை உடனடியாக தடுத்து நிறுத்தி குடிகாணி உரிமையாளர்களுக்கே நிலத்தை சாகுபடி செய்பவர்களுக்கே உடமையாக்க வேண்டும், பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயிலுக்குச் சொந்தமான உப்பு நிலங்களிலே சாகுபடி செய்கிறவர்களையும் அதிகாரிகள் வெளியேற்றக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். பெரிய மனிதர்கள் வசதி படைத்தவர்கள் அதிலே தலையிட்டு ஏழை எளிய விவசாயிகள் குத்தகை செய்யக்கூடிய அந்த நிலத்தையே பறிக்கக்கூடிய வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த ஏழை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே உப்பு நிலங்களையும் சிறு விவசாயிகளுக்கு பட்டா போட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புறம்போக்கு நிலத்தை கோவிலுக்கு கொடுக்காமல் உப்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டும். குமரி மாவட்டத்திலே துவச்சன் விளையில் 100 குடும்பங்கள், கடும்புமுட்டில் காந்தி நகரில் 240 குடும்பங்கள் வலிய ஏலாவில் 2.0 குடும்பங்கள் இவர்களையெல்லாம் நிலத்திலிருந்து



வெளியேற்ற நடவடிக்கை உள்ளது. அதைத் தடுத்து நிறுத்த உடனடியாக அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் அவர்களுக்கு அந்த நிலங்களுக்கான பட்டாக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே தென் ஆற்காடு ம வட்டத்திலே மைலம் கிராமத்திலே சுமார் 400 ஏக்கர் நிலம் தனி நபருக்கு பட்டா போட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் ரத்து செய்து ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டுமனைப் பட்டாக்களுக்களுக்காக பல்வேறு விவரங்களையெல்லாம் சொல்லி மனுக்களை கொடுத்தாலும், தஞ்சை மாவட்டத்திலும் தமிழகம் முழுவதும் பல்வேறு அதிகாரிகளிடத்திலே அதற்கான மனுக்களைக் கொடுத்தாலும் அவைகளை பைசல்செய்யாமல் இருக்கிற காரணத்தினால் வீட்டு மனைப்பட்டா வழங்குவதிலே மிகப் பெரிய தேக்கம் இருக்கிறது. நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்த வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவது என்று காலக்கெடுக்களை நிர்ணயித்து வீட்டு மனைப்பட்டாக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மனுக்களை கொடுத்தால் அந்த மனுக்களை வாங்கிப் பரிசீலித்து பட்டா கொடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று தாசில்தார்கள் சொல்கிறார்கள். கோயில் நிலம் என்றால் பட்டா கிடையாது. புறம்போக்கு நிலம் என்றால் பட்டா கிடையாது. தரிசாக இருக்கிற ரெவின்யூக்கு சொந்தமான இடமாக இருந்தால் கொடுப்பேன் என்கிறார்கள். தமிழகம் முழுவதும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே கோயில் நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் ஏழை எளிய மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குகிற முறையிலே ஒரு காலக்கெடு நிர்ணயித்து வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து குடியிருக்கும் மனைகளில் இரண்டொரு தென்னை மரங்கள் இருந்தால்கூட பட்டா கிடையாது என்று சொல்கிறார்கள். நீடாமங்கலம் வட்டத்திலே கிளாவந்தசேரி மஞ்சக்கொல்லை ஆகிய கிராமங்களிலே மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே அவர்கள் நீண்டகாலமாகக் குடியிருக்கிற காரணத்தினால் அவர்களை காலி செய்வதற்காக தாசில்தார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்—அதை தடுத்து நிறுத்திஅவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இயற்கை சீற்றங்கள் என்று சொல்கிறபோது தமிழகம் வரலாறு காணாத வறட்சியை சந்தித்துக்கொண்டிருக்கிறது என்று அனைவரும் ஏற்றுக் கொள்கிற போது உரிய நிவாரணத்தை அளிக்காமல் பல்வேறு அரசியல் சித்து விளையாட்டுக்களை மத்திய அரசு செய்து கொண்டிருக்கிறது.

இருந்தாலும் தமிழக அரசு உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள், வரிகளை ரத்து செய்வோம் என்று சொல்லப்பட்டாலும் போய் விசாரித்துப் பார்த்து ரத்து செய்வார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருவருக்கு 4 ஏக்கர் இருந்தால் அதிலே 2 ஏக்கர் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு என்ன செய்வது? நாலில் இரண்டு பாதிப்பு இருந்தாலும் பாதிப்பு பாதிப்பு தான். கடுமையான வறட்சி ஏற்பட்டிருப்பதால் நிலவரிகள் மற்றும் இதர வரிகளை முழுவதும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க உடனடியாக உணவிற்கு வேலை திட்டத்தை துவங்க வேண்டும். குடி தண்ணீர் போன்ற அத்யாவசியமான பணிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். இதற்காக விசேஷமான நிதி ஒதுக்கீட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீ விபத்தில் மாண்டவர்களுக்கு உதவி என்று குறிப்பிலே சொல்லப்படுகிறது. முதல் அமைச்சர் நிவாரணத்தில் ரூ. 1,000 என்று சொல்லப்படுகிறது. அதை 10 ஆயிரம் என்ற அளவிற்கு உயர்த்தி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் 200 ரூபாய் கொடுத்து உதவுவது போதுமானதாக இல்லை. அதிலும் ஒரு வீட்டில் 4 பேர்கள் இருந்தால் அந்த 4 பேர்களையும் சேர்த்து 200 ரூபாய் என்று எழுதிவிடுகிறார்கள். அதை உயர்த்தி அதிகமாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தீ விபத்தில் கால்நடைகள் அல்லது வியாபாரக் கடைகள் பாதிக்கப்பட்டால் அதற்கு நிவாரணம் இல்லை. ஆகவே கால்நடைகளை இழந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். வியாபார ஸ்தலமாக இருந்தால் அதற்கேற்ற வகையில் நிவாரணம் அதிகமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூலிச் சட்டத்தைப் பற்றி பரிசீலிப்பதற்காக தமிழகத்தில் ஒரு குழு போட்டு விசாரணை நடத்தி இப்போது அந்த விசாரணையின் முடிவுகள் அரசாங்கத்திற்கு கிடைத்திருப்பதாக சொல்கிறார்கள். அதை உடனடியாக வெளியிட்டு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழ் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலை கூலி நிர்ணய சட்டம் கூட செய்திருப்பது கீழ்தஞ்சை போன்ற மாவட்டத்தில் குறிப்பாக வேதாரண்யத்தில் கூட அமல்நடத்த முடியாமல் இருக்கிறது. இந்தக் கூலிச் சட்டங்களை விரைவாகவும் சரியாகவும் அமல்படுத்துவதற்கு விரைவான ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நியாயக் கூலியை கொடுக்க மறுப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது பற்றி சொல்லும்போது நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல





அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். தொழிலாளர் சங்கங்களை வைத்து கூலி உயர்வை கேளுங்கள் என்று சொன்னார்கள். கூலி உயர்வைக் கேட்டால் மிராசுதாரர்களுக்கு ஆதரவாக போலீஸ் காரர்கள் வருகிறார்கள். குண்டர்கள் வருகிறார்கள் அதன்காரணமாக அடிதடி ஏற்படுகிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் விவசாயத் தொழிலாளர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நிலச்சுவான்தாரர்களால் கட்டவித்து விடப்படுகிறபோது அதிகாரிகள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். கூலி சட்டத்தை அமல் செய்வதற்கான தனியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திரு. ம. கண்ணன் : துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு அவையிலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கை மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பால் என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

நம்முடைய நாட்டின் நிர்வாகத்திற்கு கிராமமே அடிப்படை என்ற காரணத்தால் நம்முடைய அரசாங்கம் தேவையான அளவிற்கு கிராம ஊழியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தவகையில் மாவட்ட நிர்வாகத்தை சீர்படுத்துவதற்காக தனி நபர் குழுவினுடைய பரிந்துரைகளை அரசாங்கம் அமல்படுத்த இருப்பது ஒரு நல்ல போக்கு என்பதை எடுத்துக்கூறி நான் அதை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நாட்டில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சியானாலும் அதில் சம்பந்தப்பட்ட துறை வருவாய்த்துறை என்பதாலே, நல்லது நடந்தாலும் சரி அல்லாதவை நடந்தாலும் சரி அதில் முழு பங்கு வருவாய்த்துறை வகிக்கிறது. இன்றைக்கு நாட்டில் நிலவி வருகிற வறட்சி நிலையைப் போக்கி மக்களுடைய துயரை துடைப்பதற்காக ஈடுபட்டிருக்கிற வருவாய்த் துறையை நான் முதற்கண் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பருவ மழை பொய்த்ததன் காரணமாக நாட்டில் வறட்சி நிலவியிருந்தாலும்; நம்முடைய வேண்டுகோள்களுக்கு மத்திய அரசு செவி சாய்க்காமல் மந்தமாக இருந்தாலும் இருப்பதைக்கொண்டு சிறப்புடன் வாழ இலக்கணம் படைத்த நம்முடைய தலைவரின் ஆட்சியில் நிவாரணப் பணிகள் சிறப்பாக நடப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வறட்சி நிவாரனப் பணிகளில் ஏரிகளை ஆழப்படுத்துதல். சாலைகளுக்கு மண் அடித்தல் புதிய சாலைகளை போன்ற வேலைகளுக்கு முதலிடம் தராமல் குடிதண்ணீர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சுதந்திரம் அடைந்து

35 ஆண்டுகளாகியும் இன்னும் மக்களின் அடிப்படைத் தேலவயாகிய குடிதண்ணீர் பிரச்னையைக் கூட தீர்க்க முடியாமல் இதற்கு முன்னாலே இருந்தவர்கள் இருந்தார்கள். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் தலைமை பொறுப்பை ஏற்றதற்கு பின்னாலே இன்றைக்கு ஆங்காங்கு ஒவ்வொரு கிராமத்திலும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வறட்சி நிவாரணத்தில் குடிநீருக்கு முன்னுரிமை அளித்து குடிநீர்க் குழாய்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில், பயிர்களுடைய நிலைமையை கவனத்தில் கொண்டு, ஓராண்டுக்கான நிலவரி, விவசாய வருமான வரி, முதலியவற்றை தள்ளுபடி செய்தோ அல்லது பொறுத்து வசூலிக்கவோ, அரசு கவனம் செலுத்த வேண்டுமாய் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

ஒவ்வொரு மாவட்டத்திலும் வறட்சி நிவாரணப் பணிகளை கவனிக்க மாவட்ட அளவிலே வட்ட அளவிலே குழுக்கள் அமைக்க வேண்டும். அந்தக் குழுக்களில் பொது மக்களின் பிரதிநிதிகளைச் சேர்த்து, வறட்சி நிவாரண வேலைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்த வேண்டுமென்றும், அதற்காக குழுக்கள் அமைக்க வேண்டுமென்றும் நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குழு வறட்சி நிவாரண வேலைகளை பார்வையிட்டுக் கொடுக்கும் அறிக்கையின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் பொதுமக்கள் பல ஆண்டுகாலமாக வீடுகள் கட்டுக் குடியிருந்தும், அந்த இடங்களிலே அவர்கள் பட்டா பெற முடியாத நிலைமை இன்றைக்கும் நாட்டிலே இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நம்முடைய ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டு மனைகளை அவர்களுக்கே பட்டா செய்வதற்காக எந்த எந்த வகையிலே, சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு எந்த வகையிலே உதவிகள் செய்ய முடியுமோ அந்த வகையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, கிராமங்களிலே வாழ்கின்ற சிறு சிறு விவசாயிகள், அதாவது ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவிலே புறம்போக்கு நிலம் வைத்திருக்கின்றவர்கள் கூட, பல ஆண்டு காலமாக குறைந்தது 20, 30 ஆண்டுக்காலமாக, பயிர் செய்து கொண்டிருக்கிற ஏழை மக்கள் அந்தப் புறம்போக்கு நிலங்களை தங்களுக்கே பட்டா செய்து கொள்ள முடியாமல், இன்றைக்கு நாட்டிலே பல சட்ட சிக்கல்களும், நிர்வாகச் சிக்கல்களும் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். அந்த



வகையிலே, கூடுமான வரையில் ஏழை எளிய மக்களுக்கு வீடற்றவர்களுக்கு, வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்க தேவையான சட்ட திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

சில சமயங்களில், நம்முடைய கிராமப் புறங்களிலோ, நகரப் புறங்களிலோ, தீ விபத்துகளாலோ, அல்லது வெள்ளத்தினாலோ சேதம் ஏற்படக்கூடிய நேரங்களில், அந்தப் பகுதிகளில், இப்பொழுது அரசின் மூலம் வழங்கப்படும் தொகை ரூ. 200 தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த தொகை தீ விபத்தினால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்துகொள்ளத்தான் போதுமானதாக இருக்கிறதே தவிர நிரந்தரமாக தீயாலோ வெள்ளத்தாலோ அழிக்கப்பட்ட வீடுகளைப் புதுப்பிப்பதற்கான பொருளாதார வசதியில்லாத காரணத்தால், அவர்களுக்கு அரசே ஏதாவது கடன் தொகை அளிக்க முன்வரவேண்டுமென்றும், அந்த வகையிலே, தீயினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு ரூ. 2,000 அல்லது ரூ. 3,000 அளவுக்காவது நான் இங்கே கடன் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரிகள், பள்ளிகள் திறக்கும் நேரத்தில், மாணவ மாணவிகள் தங்களுக்குத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் மற்றும் சில சான்றிதழ்களைப் பெறுவதற்கும் நீண்ட நேரம் காத்திருந்து, அவர்கள் பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்வதில் காலதாமதம் ஆகின்ற காரணத்தால், அப்படிப்பட்ட நேரங்களில், அவர்களுக்குச் சான்றிதழ் கொடுக்க, தனியாக ஒரு அமைப்பு ஏற்படுத்திச் சாதிச் சான்றிதழ், போன்றவைகளை அந்த மாணவர்களுக்கு அவ்வப்போது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரிய அளவில் உள்ள மாவட்டங்களை நிர்வாகச் சீரமைப்பு காரணமாக, பிரிக்கவேண்டுமென்ற ஆய்வு அரசின் கவனத்திலே இருப்பதாக நான் அறிகிறேன். அந்த அடிப்படையில், எங்களுடைய பெரிய மாவட்டமான, தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரித்து, மாவட்ட நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசை நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க பழைய டி. எஸ். ஓக்களை நம்பிக் கொண்டிருக்கிறோம். புரட்சிகரமாக போர்ட் ஆப் ரெவினியூ கலைக்கப்பட்ட பிறகும், அடமானம் சம்பந்தமான, வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்ட டி. எஸ். ஓக்களை, உடனடியாகத்திருத்தி, அந்த ஏழை, எளிய மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள வருவாய்த் துறை மானியத்தின் கீழ் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற்கண் என்னுடைய தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கொல்லிமலையைத் தனி வட்டமாக உருவாக்கிக் கொடுத்த புரட்சித் தலைவரவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

உண்மையிலேயே ஒரு அரசு மக்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துள்ள துறை வருவாய்த் துறையாகும். அரசு செம்மையாக நடைபெற வேண்டுமானால் பல்வேறு துறைகளிலும் எவ்வளவு பேர் பணி புரிந்தாலும், வருவாய்த்துறை எவ்வளவு திறம்படி வேலை செய்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் ஒரு அரசு எப்படிச் செயல்படுகிறது என்று நிர்ணயிக்க முடியும். அதற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அண்ணாவின் கொள்கையான மக்கள் திட்டங்களில் பங்கு கொள்ள வேண்டும்; மக்களிடத்தில் எழுச்சி ஏற்பட வேண்டும்; அதிகாரிகளின் புன்னகையைவிட ஏழைகளின் கண்ணீர் கவனிக்கப்பட வேண்டும் என்ற முறையில இன்று செயல்படுத்தி வருவதைப் பாராட்டுகிறேன்.

வருவாய்த் துறையைப் பற்றிக் குறை கூறுகின்ற மாற்றுக் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஆட்சியிலே இருப்பவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ வந்த தனிப்பட்டவர்கள் அல்ல; இங்கே இருக்கின்ற இரத்தத்தின் இரத்தம்; சதையின் சதை. அவர்கள் நம்முடைய உடன் பிறப்பாளர்களாகத்தான் இருக்கின்றார்கள். இரத்தத்திலே ஒரு சில கெடுதல்கள் வருவதில்லையா? அதைப் போல்தான் இங்கும் வருகின்றது. சதையிலேயே வீக்கம் ஏற்படுவதில்லையா? அதைப் போல்தான் வருகிறது. இரத்தம் சுத்தப்படுத்தப்பட வேண்டும். அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் உடைமையாளர் பக்கத்திலே இருப்பதை மாற்றி உழைப்பாளர்கள் பக்கத்திலே கொண்டு வரப்பட வேண்டும். ஏதோ ஒரு நாடகத்தில் இராத்திரி எழுதி விடியற்காலையில் கொண்டு வரக்கூடியது அல்ல, இது மெள்ள மெள்ள, படிப்படியாகப் பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்த நிலையை நாம் கொண்டு வர எல்லோரும் சேர்ந்து முயற்சித்து வறட்சியைப் போக்க புரட்சித் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, வருவாய்த் துறை நிர்வாகத்திலே பின்கண்ட மாறுதல்களைச் செய்தால் மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செயலாக்குவதற்கு உறுதுணையாக இருக்கும்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரைக்கும் கிராம அதிகாரி நிர்வாகம் ஆகும். கிராம நிர்வாக அதிகாரிகள் பல கட்டங்களில் நிர்வாகம் செய்கிறார்கள். எனவே, அரசு உடனடியாக அவர்களையெல்லாம் நியமித்து கிராம மக்களுக்கு நன்மை செய்துதர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். கிராம நிர்வாக அதிகாரி சிறப்பாக செயல்பட அவர்களுக்கு அலுவலகக் கட்டிடம் ஏற்படுத்தித் தர வேண்டும். மக்களின் குறைகளைக் காலதாமதம் இல்லாமல் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சிட்டா, அடங்கல், நகல்கள், சாதிச் சான்றிதழ், சான்றிதழ்கள் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க, குறித்த காலத்தில் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

வட்டாட்சியர் அலுவலகத்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் வேலைப் பளு அதிகமாக இருந்தாலும் அந்தப் பணிகளையும் சேர்த்துச் செய்யக் கூடிய அவர்களுக்கு உறுதுணை புரிய அவர்கள் கேட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட்டாட்சியர் அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற குறைகளைப்பற்றி உடனடியாகத் தெரிவிப்பதற்காக அங்கே ஒரு புகார்ப் புத்தகத்தை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவ்வாறு வைத்தால் அவர்கள் தங்களது புகார்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளின் பல சிவில் தகராறுகளைத் தீர்ப்பதற்கும், நில அளவைகளைச் சரியாகக் கணக்கிடவும் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். கோரிக்கைகளை வரிசைப்படி முறைப்படி உடனடியாக நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களின் மனுக்களை வரிசைப்படி கண்டிப்பாகப் பதிவு செய்து பிறகு விசாரணை செய்ய வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் காலதாமதத்தைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை வெட்டுவதைத் தடுப்பதற்கு அரசு கண்டிப்பாக உத்தரவு போட்டு, புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை வெட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணிக்காக நில ஆர்ஜிதம் செய்யும் பணியில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து. உரிய காலத்தில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்றிதழ் பெறுவதற்கு நிரந்தர முறையில் கம்யூனிட்டி சான்றிதழ் தர ஏற்பாடு செய்ய வேண்டும். தகுந்த ஏற்பாடு செய்து நிரந்தர குடும்ப அட்டை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட குடும்ப அட்டைகளை வழங்கிவிட்டால் பல அதிகாரிகளிடம் செல்ல வேண்டிய நிலைமை இருக்காது. எனவே, அந்த வகையில் வட்டாட்சியர் சாதிச் சான்றிதழை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்தில் மனுநீதி நாள் கொண்டாடப்படுகிறது. ஆனால் அது எப்பொழுதோதான், அதிகாரிகள் நினைத்தபொழுது அந்த நாள் கொண்டாடப்படுகிறது. அந்த நிலைமையை மாற்றி, மாதத்திற்கு ஒருமுறை தாசில்தார் அளவில் ஒவ்வொரு யூனியனிலும் நடத்தப்பெற வேண்டும்; ஆர். டி. ஓ. அளவில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பெற வேண்டும்; கலெக்டர் அளவில் 5 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பெற வேண்டும் என்று கண்டிப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10)

பட்டா செய்து கொடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்தின்கீழ் பல இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்கு அரசு கடன் வழங்கவேண்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுப் பட்டா திட்டத்தின்கீழ் பல இடங்களில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தக் குழு சிறப்பாக செயல் பட்டு வருகிறது. என்னுடைய பகுதி கொல் லமலையில் இந்தப் பணி விரிவாக, வேகமாக செயலாற்றி வருகிறது. அதிலுள்ள பல முறை கேடுகளைக் கொடுத்தோம். ஆனால் அதைப்போக்க உரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் எடுக்கப்படவில்லை. விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்தின்கீழ் சிறிய ஏரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேந்தமங்கலம், புதுச்சத்திரம், நாமகிரிப் பேட்டை, கொல்லிமலை ஒன்றியங்களிலே வறட்சி நிவாரணப் பணியின் கீழ் ராட்சசக் கிணறுகளை வெட்டி, தீவிர நடவடிக்கைகளை எடுத்து, மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



துயர் துடைப்புப் பணியின்கீழ் சென்னை நகரிலே ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், குடிசை எரிந்தால், அந்தக் குடிசைக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை இழப்புத் தொகை அளிக்கப்படுகிறது. மாவட்டங்களிலுள்ள கிராமங்களிலே இந்த தீ விபத்து ஏற்படுமானால், அந்த இழப்பு ரூ. 50,000 முதல் ரூ. 1,00,000 வரை ஆகிறது. மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டால், அந்த இழப்பை ஈடுசெய்வதற்கு ஒரு தனிச் சட்டத்தை இயற்றி, சென்னை மாநகரில் கொடுப்பது போல், அதே முறையில் இந்த இழப்பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

வறட்சி நிவாரணப் பணிகளை கவனிக்க இன்று மாநில அளவிலே 4 பிரிவுகளாகப் பிரித்து 2 ஆணையாளர்கள் போட்டிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். இந்தப் பணியில் அவர்கள் கவனம் செலுத்தி, மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிற வறட்சி நிதி உதவியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் பல மாவட்டங்களில் பல ஏரிகளில் உள்ள அக்கிரமிப்பைப் போக்க, அந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தி அந்த ஏரிகளை நல்ல முறையில் பராமரிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மங்களாபுரம் பிளாக் 1 அன்ட் 2, கொல்லிமலைப் பகுதி, குண்டுநாடு போன்ற இடங்களில் பல ஆண்டுகளாக மலை வாழ் மக்கள் அந்த நிலத்தை அநுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கு பல ஆண்டுகளாய் அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவில்லை. அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பளித்த மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியம் சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, ரெவின்யூ போர்டு ஒழிக்கப்பட்டது என்றும், அது நிர்வாக சீர்திருத்தக் குழுவின் ஆணை அடிப்படையில் செய்யப்பட்டது. அந்த ரெவின்யூ போர்டு ஒழிக்கப்பட்டது என்றாலும், இன்றைய தினம் இருக்கிற உறுப்பினர்கள், ஏற்கனவே அந்த ரெவின்யூ போர்டு உறுப்பினர்களாக இருந்தவர்கள். ரெவின்யூ போர்டு என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, பழைய நிலையிலேயே செயல்பட்டு வருகிறது. அதிலே எந்தவிதமான மாற்றத்தையும் பார்க்க முடியவில்லை. அந்த அதிகாரங்கள் முழுமையாக இங்கே மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பரவலாக விநியோகிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆனால் இந்த நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழு கொடுத்திருக்கிற பரிந்துரையின்

அடிப்படையில் கிராம அதிகாரிகள், அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த பகுதி நேர அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது அவசர கோலத்திலே அள்ளித் தெளித்த மாதிரி—இன்றையதினம், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நேரத்தில், அதன் விளைவாக எல்லா நிலைமைகளையும் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்காததன் காரணமாக இன்றைக்கு 5246, பேர் ஏற்கனவே இருந்த கிராம அலுவலர்களாகப் பணி புரிந்தவர்கள் மீண்டும் இன்றையதினம் அவர்களே பணி புரியக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இன்னும் 7344 பேர் அந்த இடங்களுக்கு நிரப்பப்படவேண்டியிருக்கிறது, அடுத்து கிராம நிர்வாகத்தில் சீர்கேடுகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு அந்த நிலைமையை சீர்திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரையின் படி ஏற்கனவே மாவட்டத்தில், நிர்வாகத்தில் 5 அடுக்கு முறையாக இருந்தன. அதாவது கிராம நிர்வாகம், வருவாய்த்துறை ஆய்வாளர்கள், தாசில்தார், கோட்ட ஆட்சியாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற 5 அடுக்கு முறைகளாக இருந்தது. யாராவது ஒருவரிடம் மனு கொடுத்தால், இந்த 5 படிகளையும் தாண்டிச் செல்லவேண்டிய முறை இருக்கிறது. இந்த ஆணைக் குழு இதை மூன்று அடுக்காக மாற்றலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம் கால விரயம் இல்லை. மக்கள் இலகுவாக அவர்களுக்குத் தேவையான காரியங்களை செய்து கொள்ள முடியும். அந்த பரிந்துரையை அமல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இதிலே இருக்கின்ற மற்றொரு பரிந்துரை இருக்கின்ற பெரிய மாவட்டங்களை பிரிப்பது பற்றி. 20 மாவட்டங்களாக அதைப் பிரிக்கவேண்டுமென்று ஒரு பரிந்துரை இருக்கிறது. இதிலே ஏற்கனவே பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தஞ்சை, மதுரை, வட ஆற்காடு போன்ற மாவட்டங்கள் இன்னும் பெரிய அமைப்புக்களாக இருக்கின்றன. ஆகவே ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த பரிந்துரைகளின் அடிப்படையிலே அரசாங்கம் இந்த மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, அதேமாதிரி வட்டங்களைப் பிரிக்கக் கூடிய நேரத்திலே ஏற்கனவே இருக்கின்ற வட்டங்களுடைய அமைப்பு என்று சொல்லக்கூடிய நேரத்திலே நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கோவில்பட்டி தாலுக்கா 102 ரெவின்யூ கிராமங்கள் கொண்டதாக இருக்கிறது விளாத்திகுளம் 13ா ரெவின்யூ கிராமங்கள் கொண்டதாக இருக்கிறது. சங்கரன்கோவில் 4 99 ரெவின்யூ கிராமங்கள் கொண்டதாக இருக்கிறது. இந்த [illegible] இருப்பதை 4 வட்டங்களாக பிரித்த 1



ஓரளவிற்கு அந்த வட்டத்திலேயிருக்கின்ற, அந்த ரெவின்யூ கிராமங்களிலே வசிக்கின்ற மக்கள் இலகுவாக அந்த வட்டத் தலைநகருக்கு சென்று அதிகாரிகளைச் சந்தித்து அவர்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கு வழிவகை ஏற்படும் என்ற காரணத்தால் அதை 4 வட்டங்களாக பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாரதியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியிருக்கிறோம். பாரதியாருடைய பெயரால் எட்டையபுரத்தை ஒரு தாலுக்காவாக அமைத்து, பாரதி வட்டம் என்ற அடிப்படையிலே அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி அம்பாசமுத்திரம் பெரிய வட்டமாக இருக்கிறது. செங்கோட்டை 10 ரெவின்யூ கிராமங்களைக் கொண்ட ஒரு வட்டமாக இருக்கிறது. இது இரண்டையும் சமமாகப் பிரித்து, அருகிலே இருக்கின்ற கிராமங்களையும் பிரித்து, 2 வட்டங்களாக பிரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மணப்பாறை தாலூக்கா. இது திருச்சி ரெவின்யூ டிவிசனோடு இணைக்கப்படவேண்டிய அவசியம் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். தற்சமயம் கரூர் ரெவின்யூ டிவிசனோடு இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் ஆர்.டி.ஓ.வைச் சந்திப்பதற்கு R. D. O. அலுவலகம் செல்வதற்கு கரூருக்குச் செல்வதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே அதை திருச்சி டிவிசனோடு இணைக்க வேண்டும் என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மணப்பாறை தாலூக்காவில் வளநாடு பிர்க்காவிலே காப்பக்கூடி, துக்கக்குடி, கவிநாடிப்பட்டி என்ற 3 கிராமங்கள் இருக்கின்றன. இது புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கின்ற கிராமங்களின் மத்தியிலே இருக்கிறது. ஒரு தீவைப் போல இருக்கிறது. இந்த 3 கிராமங்களையும் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்திலே உள்ள காரையூர் பிர்க்காவிலே சேர்த்துவிட்டால், அங்கே உள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். அதிகாரிகளுக்கும் சிரமம் இல்லாமல் இருக்கும். அதிகாரிகளைச் சந்திக்க செல்லும் மக்களுக்கும் சிரமம் இருக்காது. ஆகவே அந்த அடிப்படையிலே இந்த 3 ரெவின்யூ கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டத்திலே இணைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்:

அதேமாதிரி குளித்தலை. வட்டத்தில் ஏற்கனவே நக்கமலை பிர்க்காவிலே இருந்த ஆர்.டி. மலை புழுதேரி, அலத்தூர் போன்ற கிராமங்கள் இன்றையதினம் இந்த நங்கவரம் பிர்க்காவிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. வறட்சிப் பகுதியாக இருக்கின்ற இந்த 3 கிராமங்களையும்—இன்றைய தினம் நங்கவரம் ஓரளவிற்கு நீர்ப்பாசனம் இருக்கக்கூடிய பகுதி இதிலே சேர்த்ததன் காரணமாக வறட்சிப் பகுதிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் நடவடிக்கைகள்

இந்தக் கிராமங்கள் பெறமுடியவில்லை. அதே மாதிரி பிர்க்கா தலைநகரிலே இருக்கின்ற நங்கவரத்தி இருக்கின்ற ஆய்வாளர்களைச் சந்திப்பதற்கும், அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளும் இல்லை. ஆகவே இந்த கிராமங்களை தோகமலை பிர்க்காவுக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நான் ஏற்கனவே சொன்னதைப்போல வட ஆற்க்காடு மாவட்டத்தை இரண்டாக பிரித்து, வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டும், திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டும், அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இயற்கையின் சீற்றம் காரணமாக, தீ விபத்து, வெள்ளம் இவற்றால் உயிர் இழந்தவர்கள் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற முறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது குடும்பத் தலைவர் இறந்தால் மட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு குடும்பத்திலே ஆணும் வேலை செய்கிறன். பெண்ணும் வேலை செய்கிறாள். ஆண் இறந்தால் தான் அவர்களுக்கு நஷ்டஈடு, பெண் இறந்தால் கிடையாது என்று இருப்பது சரியல்ல. ஆகவே குடும்பத்திலே யார் இறந்தாலும் ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். முதல் அமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து கொடுக்கிறோம். ஆகவே பாதிக்கப்பட்டு இருக்கும் அனைவருக்கும் கொடுக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடைமைகளை இழந்தவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கிறோம் தீ விபத்து ஏற்பட்டால், அவனுடைய ஆடு, மாடு, தீவனங்கள் எல்லாமே தான் பாதிக்கப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இந்தப் பணம் போதாது. ஆகவே அவைகளை ஈடுசெய்யக்கூடிய முறையிலே நிவாரணம் அதிகரித்து அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாம்புக் கடித்துச் செத்தால் நிவாரணம் என்றிருக்கிறது. ஆனால் இளையாங்குடி யூனியனிலே, கீழநாட்டு என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு அரிசன விவசாயி, வயலிலே உழுவதற்குச் சென்ற நேரத்திலே, 2 ஆண்டுகளுக்கு முன்பு பாம்பு கடித்து இறந்துவிட்டான். அவன் பாம்பு கடித்துத்தான் இறந்து விட்டான் என்று மருத்துவமனையிலே சர்ட்டிபிகேட் கொடுத்து விட்டார்கள். ஆனால் அவர்கள் ஒரு குறையைச் சொல்கிறார்கள். அது என்னவென்றால், இறந்தவர்களுடைய உடலை போஸ்ட் மார்டம்செய்யவில்லை, ஆகவே அவருக்கு நஷ்டஈடு கொடுக்காமல், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பேப்பரை 2 ஆண்டுக் காலமாக வைத்துக்கொண்டு நஷ்டஈடு கொடுக்காமல் இருக்கிறார்கள். எனவே பாம்பு கடித்து இறந்த அந்தக் குடும்பத்தில் உள்ள அவருடைய வீட்டிற்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கமுடை•



வறட்சி நிவாரணம் சம்பந்தமாக அறிவிப்பு தினசரிகளில் வந்து கொண்டு இருக்கிறது. நாம் சட்டமன்றங்களில் அறிவிப்புகளை அமைச்சர் மூலமாகக் கேட்கிறோம் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால் கீழே போனால் அதற்கான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை எங்களைப் போன்றவர்களால் பார்க்க முடியவில்லை. தொடர்ந்து நியாய விலைக் கடைகளில் அரிசி கிடையாது. குடிநீர் பம்புகள் சரியாக இயங்கவில்லை. குடிநீர் பஞ்சம் அதனால் ஏற்படுகிறது. மற்ற வேலைகள் எதுவும் நடைபெறுவது இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்காக 46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலே 19 கோடி ரூபாய் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. அது போக இப்போது 14 கோடி ரூபாய் குடிநீருக்காகவும், சாலை வேலைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த 14 கோடி ரூபாயைக்கொண்டு என்ன வேலைகளைச் செய்யமுடியும்? என்ற திண்டாட்டத்தில்தானோ என்னவோ அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெறவேண்டும். இன்றைக்கு அந்தப் பணிகள் செய்யப்படுகின்ற வேகம் எந்த வகையில் இருக்கிறது என்று சொன்னால் ஆமை வேகம் என்று சொல்வார்களே அந்த முறையில் இருக்கிறது. அந்த வேலைகளை துரிதமாக நிறைவேற்ற அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுககவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணிக்காக நாம் மத்திய அரசை 217 கோடி ரூபாய் கேட்டு இருக்கிறோம். அதைத் துரிதமாகப் பெறுவதற்கு மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தொகையை திட்ட ஒதுக்கீட்டில் சேர்க்காமல், வறட்சி நிவாரணத்திற்கு என்று தனியாக வாங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, துரிதமாக அந்த வேலைகளைச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்தி மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

37 பைசாவுக்கு கீழ் விளைச்சல் இருந்தால் நிலவரி தள்ளுபடி செய்து ஒவ்வொரு வயலைப் பார்த்துத் தான் செய்வார்கள் என்று சொல்லப்படுகிறது. இது எந்தக் காலத்தில் நடக்கிற காரியம் என்று எனக்குத் தெரியவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்பட்டு இருக்கும் ரெவின்யூ அமைப்பு மாறவில்லை. இந்த வருவாய்த் துறை சம்பந்தமாக அந்த ஆணையர்—குழு-கொடுத்து இருக்கும் அறிக்கையைப் பார்த்தால், கணக்கப்பிள்ளைகள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, கணக்கை எழுதி விடுகிறார்கள், அந்த நிலைமையைப் போக்கத்தான் இந்த அமைப்பை மாற்றியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி மாறிவிடும் என்று சொல்லப்பட்டு

இருந்தாலும் தொடர்ந்து அவர்கள் வீட்டிலே உட்கார்ந்துகொண்டு எழுதும் சூழ்நிலைதான் வரும். அதுதான் பழக்கம். யார் வந்தாலும் கிராமத்தில் இந்தப் பழக்கம் மாறாது. ஆகவே, ஒரு கிராமத்திற்கு ஒரு சில வசதிகளை அறிவிக்கின்றபோது, அந்த கிராமத்தில் உள்ள அத்தனை விவசாயிகளுக்கும் அது பொருந்துகிறமாதிரி தான் செய்யவேண்டும். ஒவ்வொருவரின் வயலைப் பார்த்தும் தள்ளுபடி செய்யும் முறை மூலம் யாருக்கும் எந்தவிதமான பயனும் கிடைக்காது என்பதை நான் தெரிவித்து, அதை மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன் ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறோம். கடன்களை மட்டும் ஒத்தி வைத்தால் போதாது, வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும். ஏனென்றால், வட்டிக்கு அபராத வட்டி என்று சேர்த்து, அது அசலுக்கு மேல் போய்விடுகிறது. ஆகவே, இந்தக் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டும். அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரியாக அமைச்சர் அவர்கள் குத்தகையைச் செலுத்தமுடியவில்லை என்ற காரணத்திற்காக விவசாயிகளை நிலத்தினின்றும் வெளியேற்றுவதைத் தடைசெய்து ஒரு சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். உடனடியாக அப்படிப்பட்ட ஒரு சட்டத்தையும் கொண்டு வந்தார்கள். அதற்காக நான் இந்த அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த சட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள்.

அதை நான் இப்போது வலியுறுத்த விரும்புகிறேன். 1980-லே இருந்து வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகளால் தொடர்ந்து குத்தகையை செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கும் சலுகை அளிக்கின்ற வகையில் சட்டத்தைக்கொண்டு வரவேண்டும், அந்த குத்தகை பாக்கிகளையும் தள்ளுபடி செய்யவேண்டும். அந்த வகையில் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு வாக்குறுதி அளித்தார்கள். ஆகவே, அந்த சட்டத்தை இந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே கொண்டு வருவதற்கு அமைச்சர் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளை பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்ட குழு வெறும் ஆலோசனைக் குழுவாக மட்டும் இருக்கிறது. நான் அதைக் குறித்து தெளிவாக விளக்க விரும்புகிறேன். அந்தக் கூட்டம் மாதாமாதம் கூடும். அதிகாரிகளும் அந்தக் கூட்டத்திற்கு வருவார்கள். உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள் என்று சொல்கிறார்கள். அங்கே கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் அதிகாரிகள் எதைச் செய்யவேண்டும் என்று நினைக்கிறார்களோ அது தான் அங்கே செய்யப்படுகிறது. இந்த நிலைமை எந்த உயர் மட்டத்தில் குழு அமைக்கப்பட்டாலும் இருக்கிறது. ஆகவே, அந்தக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை, அதிகாரிகள் ஏற்று, அதை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால், அந்தக் குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை உருவாக்கப்பட்டால் தான் வறட்சி நிவாரணப் பணிகள் நிச்சயமாக நல்லமுறையில் நிறைவேற்றப்பட முடியும். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லையென்று சொன்னால் நாம் அந்தக் குழுவிலே பேசிக்கொண்டு போகலாம், எழுதிக்கொடுக்கலாம், ஆனால் நடைமுறையில் நிறைவேற்றப்படாது. ஆகவே அதிகாரமற்ற குழுவாக அதை நியமித்து, அதிலே உள்ளவர்களின் காலத்தையும், நேரத்தையும் வீணடிக்க வேண்டாம், அதனால் எந்தவிதமான பலனும் இல்லை, ஆகவே அப்படி ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக கிணறுகளை ஆழப்படுத்துவது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள்போட 7·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு கிணறுகளை ஆழப்படுத்த தேவையான கடன்கள் கொடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல; பாறைகளை வெட்டி எடுக்க 'ரிக்ஸ்' கொடுக்க வேண்டும். எலக்ட்ரிக் தோட்டாக்களை கூட அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து கொடுத்து, பணத்தை வசூல் செய்து கொள்ளலாம், அப்படிச் செய்தால் சிறப்பாக, இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் சம்பந்தமாக இருக்கிற பிரச்சனை என்னவென்றால் இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு கிட்டத்தட்ட 150 குழாய்கள் இருக்கின்றன. ஒரு ஆள் அந்த 150 குழாய்களையும் பார்த்து வரவேண்டுமென்றால் ஒரு ரவுண்ட் வர 6 மாதம் ஆகும். எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் 6 மாதம் ஆகிவிடும். ஆகவே, இந்த நிலையில் நாம் நம்முடைய எண்ணத்தை, நம்முடைய விருப்பத்தை நிறைவேற்ற முடியாது.

ஒரு ரெவின்யூடிவிஷனுக்கு ஒரு மொபைல் யூனிட் அதாவது 6 பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு மொபைல் யூனிட் குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிறது. அது ஒரு யூனியனில் ஒரு ரவுண்ட் சென்றுவர 15 அல்லது 20 நாட்கள் ஆகிவிடுகின்றன. 6 பஞ்சாயத்து யூனியன்களையும் கவர் செய்ய அவ்வளவு தினங்கள் ஆகும். இப்போதிருக்கிற சூழ்நிலையில் அது பிரச்சனையைத்

தீர்க்க முடியாது. ஆகவே, போர்கால நடவடிக்கையாக குடிநீர் வடிகால் வாரியம் பணிகளைச் செய்ய மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது மிக மிக அவசியம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம் தாலுகாவில்2.5 கோடி ரூபாயில் சித்தமல்லி நீர்த்தேக்க திட்டம் உருவாக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டன. கடந்த 2 மாதங்களாக வேலைகள் நடக்கவில்லை. நின்றுள்ளது. நிலம் இழந்த விவசாயிகளுக்கு நஷ்டஈட்ப்பு பணம் கி டக்கவில்லை. ஆகவே வேலை தடைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த உடையார்பாளையம் தாலுகாவில் வறட்சி கடு மயாக இருக்கிறது. உடன் இந்த நீர்த்தேக்க திட்ட வேலைகளைத் துவக்க அளிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சி சம்பந்தமாக திருச்சி மாவட்டத்தில் பார்த்தால் மணப்பாறை தாலுகாவில் 52 கிராமங்களை மட்டுமே வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த தாலுகா பூராவும் வறட்சியாக இருக்கிறது. அதைப் போன்று குளித்தலை தாலுகா, முசிறி தாலுகா, பெரம்பலூர் தாலுகா போன்ற தாலுகாக்களும் வறட்சியால் கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கின்றன. எல்லா தாலுகாக்களையும் வறட்சிக்கு உட்பட்டவை என்று அறிவிப்பதில் ஏன் தயக்கம் காட்ட வேண்டும், இருக்கிற நிலைமைகளை யதார்த்தமாக பார்த்து, வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவிப்பு கொடுத்து, காலதாமதம் செய்யாமல் தகுந்த நிவாரண நடவடிக் ககளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு பயிர் செய்ய நிலம் கொடுக்கிறோம். அது சம்பந்தமாக சில விஷயங்களை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்ய வேண்டும்; 10 ஆண்டுக்குள் அந்த நிலத்தை விற்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இது நல்ல திட்டம், வரவேற்கிறோம், எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். அதிலே இருக்கிற இன்னொரு பிரச்சனையையும் பார்க்க வேண்டும். கையில் காசு இல்லாதவர்களுக்குத்தான் நாம் தரிசு நிலத்தைக் கொடுக்கிறோம். அவர்கள் மேட்டைத் திருத்தி, காட்டை கழனியாக்க வேண்டும். அதற்கு அவர்கள் கையில் காசு இல்லை. அவர்கள் எல்லாம் விவசாயத் தொழிலாளர்கள். தரிசு நிலத்தை கழனியாக்கும் செலவுக்கு அவர்கள் எங்கே போவார்கள், அதற்காக கடன் அல்லது மாற்று ஏற்பாடு ஏதாவது செய்ய வேண்டும். வங்கிகள் மூலமாக கூட கடன் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இந்த வசதி செய்து கொடுக்காவிட்டால், அந்த தரிசு நிலம் அப்படியே கிடக்கும். யாராவது வசதி உள்ளவர்கள் கேட்கும்போது அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கிற யதார்த்த நிலை. இதை உணர்ந்து உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கூட்ட[illegible]



ஹில் ஏரியாக்களில் ஆதிவாசிகள், மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களை வேறு யாரும் விலைக்கு வாங்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது, ஆனால் அங்கே யார், யார் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். வசதி படைத்தவர்கள் அந்த ஆதிவாசிகள், மலைவாழ் மக்களிடமிருந்த நிலங்களை எடுத்துக் கொண்டு, பயிர்செய்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து அந்த நிலங்களைப் பெற்று, மீண்டும் அந்த ஆதிவாசிகள், மலைவாழ் மக்களிடமே ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனை ஒதுக்குவது பற்றி ஒரு விஷயத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே இருக்கிற பிரச்சனை என்னவென்றால் வீட்டுமனைக்கு நன்செய் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யக்கூடாது, தென்னந்தோப்புகளை ஒரு அடிகூட எடுக்கக்கூடாது என்று இருக்கிறது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் நன்செயும் தோப்பும் இல்லாமல் வேறு என்ன நிலம் இருக்கிறது, அதைப்போன்று திருச்சி மாவட்டத்தில் காவேரிப் பாசனப் பகுதிகளில் நன்செய், தோப்பு தவிர வேறு எங்கும் கால் வைக்க முடியாது. அங்கே வீட்டுமனை எடுத்து கொடுப்பதற்கு இது தடையாக இருக்கிறது. ஆகவே, அந்தப்பகுதி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க முடியாத நிலை உள்ளது. அதனால் அந்தத் தடையை நீக்கி உத்தரவை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளை வெளியேற்றக் கூடாது என்று நாம் சட்டம் போட்டிருந்தாலும், இவர்கள்தான் சாகுபடி செய்கிறார்கள் என்று பதிவு செய்யாமல், இனாம் நிலங்களில் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றும் நிலைமை இருக்கிறது. ஒன்றும் தெரியாத அந்த விவசாயிகளிடமிருந்து நிலத்தை வாங்கிவிட்டார்கள், அவர்களை வெளியேற்றுகிறார்கள். குறிப்பாக இது வேதாரணியம் தாலுகாவில் இருக்கிற விவசாயிகளுக்கு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அந்த விவசாயிகளுடைய நிலைமையை பரிசீலித்து, அவர்களுக்கு மீண்டும் அந்த நிலத்தின் உரிமையை கொடுக்க வேண்டும். சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய திருத்தத்தைக் கொண்டுவாருங்கள்.

அதைப்போல திருச்சி தாலுகாவில் தொரைக்குடி கிராமம் இருக்கிறது. அங்கே இருக்கிற ஒரு கிருஸ்துவ சாமியார் ஏழை ஆதிதிராவிட விவசாயிகள் சாகுபடி செய்த அந்த நிலங்களை எல்லாம் அபகரித்து வைத்துக்கொண்டு, அந்த விவசாயிகள் பூராவையும் தெருவில் நிறுத்திவிட்டார்கள்.

(பிற்பகல் 12-30)

பத்து வருஷமாக அவர்கள் அலையோ அலை என்று அலைந்தும் அவர்கள் நிராதரவாய் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நடுத்தெருவிலே நின்றுக் கொண்டிருக்கும் நிலைமையிலே தற்கொலை செய்துக் கொள்வதைத் தவிர அந்த விவசாயிகளுக்கு வேறு வழி இல்லை என்ற நிலைமையிருக்கிறது என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல திருச்சி தாலுக்காவிலே தொரக்காடு என்ற இடத்தில் இருக்கும் புறம்போக்கு நிலத்தில், பல ஆண்டுக் காலமாக அவர்கள் பயிர் செய்து வந்தார்கள். அந்த இடத்தை ஒரு கிறித்துவ மெஷனைச் சேர்ந்த பாதிரிமார் அவர் பெயரில் பட்டா போட்டு வாங்கிவிட்டார். அதனால் இவர்களை அந்த இடத்திலிருந்து உடனடியாக காலி பண்ண வேண்டும் என்கிறார்கள். அவர்கள் நிலையை அறிந்த திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் புறம்போக்கு நிலங்களை இந்த ஆதிதிராவிட மக்களுக்கு அடமானம் செய்து பட்டா வழங்குகிறார். ரெவின்யூ போர்டு மெம்பரிடத்திலே வந்து நிலத்தை அபகரித்த சாமியார் ஸ்டேகேட்டு ஸ்டே ஆர்டர் வழங்கப்படுகிறது. அந்த கிராமத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு கால் வைக்கக்கூட உரிமை. இல்லை என்று சொல்கிறார்கள். பல ஆண்டுக்காலமாக விவசாயம் செய்து வந்த நிலத்தில், அவர்கள் வாழ்ந்து வந்த பூமியில் அவர்களுக்கு கால் வைக்கக்கூட முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த கொடுமையினின்றும் அவர்களை மீட்டுப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). மதுரை மாவட்டம் வருஷ நாடு என்னுமிடத்தில் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டு சாகுபடி செய்து வரும் விவசாயிகள் அவற்றை விட்டு வெளியேறி காட்டு இலாக்காவிடம் அந்த நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்த விவசாயிகளுக்கு இந்த நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : நீங்கள் இப்போது 18 நிமிஷங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் இரண்டே நிமிஷங்கள் தான் இருக்கிறது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. இரா. கருப்பையா : ஆகவே, இன்னொன்று. நீங்கள் உச்ச வரம்பு சட்டத்தின்கீழ் நிலத்தை கையகப்படுத்தி எடுக்கிறீர்கள். ஆனால் அந்த நிலங்கள் எங்கே போகின்றன, திருச்சி தாலுக்கா முடிகண்டம் என்னும் இடத்திலே பரம்பரையாக சாகுபடி செய்த விவசாயிகளுக்கு கொடுக்காமல் ஒகாசா என்று சொல்லப்படக்கூடிய ஒரு நிறுவனத்திடத்திலே கொடுத்திருக்கிறார்கள், அந்த விவசாயிகள் இங்கே ரெவின்யூ மெம்பரிடத்திலே வந்து ஸ்டே வாங்குகிறார்கள். அந்த ஸ்டேயைக் கொண்டு போய் கலெக்டரிடத்திலே காட்டினாலும், டி.ஆர்.ஓ.விடம் காட்டினாலும், போலீஸ் அதிகாரிகளிடம் காட்டினாலும் ஒன்றும் நடப்பது இல்லை. ஆகவே, வசதி

அநத்



உள்ளவர்கள் ஸ்டே வாங்கினால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் எல்லா உதவிகளும் கிடைக்கிறது. வசதி இல்லாத விவசாயிகள் வாங்கினால், அது எங்கேயும் பலிப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வாழவந்தான் கோட்டையிலே ஒரு பெரிய தகராறு. ஏற்கெனவே அடமானம் செய்த நிலத்தை அரிசனங்கள் விற்று விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அந்த நிலத்தை வாங்கியவனுக்கும் அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை, விற்றவர்களுக்கும் அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் அந்தக் கிராமத்திலே நிலவி வந்த அமைதி முழுவதுமாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது ஆகவே, அதை தீர்ப்பதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருச்சி தாலுக்காவிலே செம்பட்டு என்னும் இடத்தில் இதைப்போலவே ஒரு பிரச்னை. ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு பகுதியிலே வீடு கட்டிக் கொண்டு அந்த வீட்டிலே பரம்பரையாக கிட்டத்தட்ட 90 வருஷ காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அந்த வீடு இருக்கும் புறம்போக்கு நிலத்தை தனக்கு பட்டா செய்து கொடுத்துவிட்டார்கள் என்று ஒரு பெரிய முதலாளி — தோல் ஷாப் டானரி தொழிலில் ஈடுபட்டிருப்பவர் சொல்கிறார்கள். அவ்வளவு பெரிய முதலாளி, அவர்களை அந்த இடத்திலிருந்து காலி பண்ணச் சொல்லி நெருக்குகிறார். அவர்கள் அந்த இடத்திலே பரம்பரையாக வீடுகள் கட்டி வாழ்ந்து வருபவர்கள். ஆகவே, அவர்களுடைய அவல நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்கள் அரிசன ஆதிதிராவிட மக்கள். ஒரு பெரும் முதலாளியினால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

குத்தகை சாகுபடி பதிவு சம்பந்தமாக ரெவின்யூ போர்டு மெம்பர் பத்திரிநாத் விசாரணைநடத்தி சிபாரிசுகள் செய்துள்ளார். ஆனால் அது என்னவாயிற்று என்றே தெரியவில்லை. கிட்டத்தட்ட 20, 25 லட்சம் ஏக்கர் நிலம் குத்தகை சாகுபடி ஆகிறது. குத்தகை பதிவிற்கு, விசாரணைக்கு தனி தாசில்தார்கள் கிடையாது. அதிகாரிகள் கிடையாது. ஆகவே தான் இது போன்ற பணிகள் நடைபெற முடியவில்லை. நிலச்சீர்திருத்தம் ஆமை வேகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது போல மதுரை ஜில்லாவிலே பழத்தோட்டம் ஒன்று இருந்தது. இதற்கு முன்பாக முதலமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலேயே இந்த பழத்தோட்ட நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஏக்கர் நிலங்கள். நெல், பருத்தி, வாழை போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகிறது. இதற்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது

உச்சவரம்பு சட்டம் அமுலில் இருக்கிறது. இந்த தோட்டம், கோவையைச் சார்ந்த பெரும் தனவந்தரான பெரிய மில் முதலாளியான கங்காநாயுடு என்பவருக்கு சொந்தமாக இருக்கிறது. ஆகவே, நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் இவைகளை எடுத்து அந்தப் பகுதி ஏழை விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

ஆகவே, அந்த அடிப்படையிலே குத்தகை விவசாயிகளுடைய உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி — இவர்களுக்கு கூலி நிர்ணயம் 1979-லே செய்யப்பட்டது. இது சமந்தமாக அரசு குழு ஒன்றை போட்டு, அந்தக் குழுவின் அறிக்கையும் அரசுக்கு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் அது பற்றிய அறிவிப்பு இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவினர் அறிக்கை கொடுத்துவிட்டார்கள். அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. விரைவிலே அது அமலுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, விரைவாக அந்த அறிவிப்பு வந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த வகையில் மகிழ்ச்சியான அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து இந்தக் கூலியினை அமல் செய்வதற்குரிய பொறுப்பினை ரெவின்யூ தாசில்தார் மற்றும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களிடத்திலே கொடுத்திருப்பதன் காரணத்தால் ஒரு வேலையும் நடக்கவில்லை. மற்ற வேலைகளே அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றது. எனவே அதற்கென்று தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து அவர்களிடத்தில் இந்த குறைந்தபட்சக் கூலியினை அமல் செய்வதற்கான வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். கடன் நிவாரண சட்டம் அமல் சம்பந்தமாக இப்போதுள்ள நிலைமையில் தாசில்தாரே சொத்துக்கு சர்டிஃபிகேட் கொடுப்பார், வழக்கை அவரே விசாரணை நடத்துவார். பிறகு தாசில்தாரே அது செல்லாது என்று நீதி கொடுப்பார். எனவே இப்படிப்பட்ட நிலைமை வேண்டாம், அதை மாற்றி அமையுங்கள். வேறு ஒருவரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுங்கள்.

அடுத்து என்.ஜி.ஓ. பிரச்சினை. அரசாங்க ஊழியர்களுக்கு அகவிலைப்படி, ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய், இரட்டை பயணப்படி சலுகை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசித் தீர்க்கவேண்டுமே தவிர அவர்களை எதிரிகளாக நினைத்து நடவடிக்கை எடுப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து சர்வே டிப்பார்ட்மென்டைத் தனியாகப் பிரியுங்கள். இன்றைக்கு ரெவின்யூ டிப்பார்ட்மென்ட் மற்றும் சர்வே டிப்பார்ட்மென்ட் ஆகிய இரண்டுக்கும் ஒரே அதிகாரியாக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். எனவே ரெவின்யூ டிப்பார்ட்மென்டின் கீழே சர்வே டிப்பார்ட்மென்டை வைத்திருப்பதற்குப் பதிலாக அதனைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட, தாலுக்காக்கள் சம்பந்தப்பட்ட மேப்-கள் சர்வே டிபார்ட்மெண்டில், மாநில தலைநகரில் சென்னையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோன்று கிராமங்கள் சம்பந்தப்பட்ட மேப்-களும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்ய வேண்டும். அந்தந்த மாவட்டத் தலைநகர்களிலே அனைத்து மேப்களையும் விற்பனை செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வருவாய்த்துறையிலே பல்வேறு அடிப்படையாக இருக்கக் கூடிய பிரச்சினைகள், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை, பல்வேறு துயர் துடைப்புப் பணிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வகையில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழக மக்களை, விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் முன் மொழியப்பட்ட நிலவரித்துறை, இயற்கையின் சீற்றம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டுகளில் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டபொழுது துரித நடவடிக்கையின்மூலம் வறட்சியின் துயர் மக்களுக்கு ஏற்படா வண்ணம் செய்த தமிழக அரசுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வறட்சி நிவாரணப் பணியில் தவறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும், சட்டமன்ற, பாராளுமன்ற, எல்லா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களையும் பிரதிநிதியாகக் கொண்ட குழுக்களை அமைத்து அதன் மூலம் நல்லமுறையில் பணிகளைக் கண்காணித்து செம்மையாக செயல்படுத்த உதவிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். வறட்சிப் பணிகளை மேற்பார்வையிடுவோம் என்று சொன்னதாலேயே வறட்சி நிவாரண நிதி வாங்க மாட்டேன் என்று சொன்ன அரசுகளை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவர் ஆட்சியிலே சர்வகட்சி குழுக்களை ஆங்காங்கே அமைத்து வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட அனுமதித்துள்ளது அவருடைய நேர்மையை, அவருடைய மாசற்ற உள்ளத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியைப் போக்க அரசு பல்வேறு திட்டங்களை சுமார் 210 கோடி ரூபாயில் அமைத்துள்ளதற்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மதுராந்தகம் தொகுதி வானம் பார்த்த பூமியாகும். அது மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்தப் பகுதியை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கவேண்டும். செங்கற்பட்டு மாவட்டத்தையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்க வேண்டும். மதுராந்தகம் தொகுதி வானம் பார்த்த பூமி. அங்கு எந்த ஆற்றுப் பாசனமும் இல்லை. இந்த ஆண்டு மழை குறைவாகப் பெய்துள்ளதால் எல்லா ஏரிகளும், குளங்களும், கிணறுகளும் வறண்டு விட்டன. குடிநீர் பிரச்சினை அதிகமாக உள்ளது. கால்நடைகள் குடிப்பதற்கு நீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றன. வேலைவாய்ப்பு இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே வேலைவாய்ப்புகள் கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து மதுராந்தகம் ஏரி மிகவும் பெரிய பழைய ஏரியாகும். பல நூற்றாண்டுகளாக இதில் வண்டல்கள் படிந்து அதன் கொள்ளளவு மிகவும் குறைந்துள்ளது. இதனால் முதல் போகத்திற்கு சுமார் 600 ஏக்கருக்கும், இரண்டாம் போகத்திற்கு சுமார் 1,500 ஏக்கருக்கும் மூன்றாம் போகத்திற்கு சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பிற்கு தண்ணீர் பாய்வதில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் நீர் வரத்து மிகவும் குறைந்து இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்காக பல்வேறு தூர் வாரும் வேலைகளைச் செய்ய உத்தரவிடவேண்டும். இதனால் ஏற்கெனவே உள்ள பாசனத்திற்கு உத்தரவாதம் அளிப்பதுடன் மேலும் புதிதாக 3,000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதியைக் கொண்டுவரலாம்.

(பிற்பகல் 12-40)

அடுத்து மேலும் பல புதிய ஏரிகளை கண்டுபிடித்து அதன் மூலம் பாசனவசதியை ஏற்படுத்தவேண்டும். இன்றைய தினம் எங்கள் தாலுகாவில் பல ஏரிகள் தூர்வாராமல் இருக்கிறது. தூர் வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு பல இடங்களில் வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கெல்லாம் குடிநீர் தேவை என்னும் விவரத்தை ஏற்கனவே நான் அரசுக்கு கொடுத்திருக்கிறேன். அங்கு எல்லாம் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குளம், குட்டைகள், வாருசிகள் இவைகளில் தூர் வார செப்பனிட தக்க உத்தரவுகளை போட வேண்டும்



என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன் கால்நடைகளுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்கும். கடந்த 5 ஆண்டுகளில் ஏதாவது திட்டத்தின் கீழ் பணி செய்யப்பட்டுள்ள ஏரிகளை செப்பனிடும் வேலைகளை இந்த ஆண்டு வறட்சி நிதாரணத்தின் கீழ் செப்பனிட எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று அறிகின்றேன். இதனால் விவசாய தொழிலை நம்பி உள்ள பல கிராமத்தை சேர்ந்த தொழிலாளிகள் வறட்சியின் காரணமாக வேலை வாய்ப்புகள் இல்லாமல் கஷ்டப்படும் சூழ்நிலை உள்ளது. ஆதலால் இந்த உத்தரவினை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்வாய்களை தூர் வார உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் விவசாய கிணறுகளை ஆழப்படுத்த தக்க கடன் வசதிகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்கள் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தக்க நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காளைமாடுகளுக்கு தீனிகளும் வைக்கோலும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் ரேஷனில் அரிசி மாதத்திற்கு 3 முதல் 4 கிலோ வரைத்தான் கொடுக்கிறார்கள். இதை அதிகப்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1958 ம் ஆண்டும் 1970 ம் ஆண்டும் நில உச்சவரம்பு சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும் அவைகள் எல்லாம் மிச்சவரம்பு சட்டங்களாகவே இருந்து வருகின்றன. 1980-ம் ஆண்டு இந்த மாமன்றத்தில் புதிய நில உச்சவரம்பு சட்டம் அனைத்து கட்சியினரும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பக்கத்தில் மத்திய அரசு 20 அம்ச திட்டத்தில் நில உச்ச வரம்பு நல்ல முறையில் அமுல்படுத்த வேண்டும் என்று கட்டளையிடுகின்றது. மறுபக்கத்திலே இந்த மாமன்றம் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அனுமதி அளிக்காமல் உள்ளது. ஏன் இந்த இரட்டை வேடம் என்று புரியவில்லை. நான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்வது இந்த நில உச்சவரம்பு சட்டத்தை மீண்டும் இந்த அவையிலே கொண்டு வந்து அதை சட்டமாக மாற்றத்தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தில் இயங்கி வந்துள்ள நில உச்சவரம்பு அதிகாரம் பெற்ற அதிகாரி அலுவலகம் தற்பொழுது விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது நில உச்சவரம்பு சட்டம் சீரான முறையில் செயல்படவேண்டுமானால் அந்த அலுவலகம் எங்களுடைய மதுராந்தகத்தில் தான் இருக்க வேண்டும். எங்களுடைய மதுராந்தகம் தாலுக்கா ஜமீன்கள் நிறைந்த தாலுக்காவாக இருந்தது. நில உச்சவரம்பு சட்டங்கள் பல வகையில் பல பினாமி நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதை

கண்டுபிடிப்பதற்கு அரசுக்கு மிக குறைந்த செலவில் செய்ய வேண்டும் என்றால் அந்த அலுவலகத்தை உடனடியாக மதுராந்தகத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகம் வட்டம் சாத்தமை கிராமத்தில் நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நிலங்கள் ஏனோ மாற்றி வேறு கிராமத்தில் நிலங்கள் கைப்பற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிகிறேன். இதனால் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய நிலங்கள் இல்லாமல் போகின்றன. ஆதலால் ஏற்கனவே அறிவித்துள்ள நிலத்தை கைப்பற்றத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விழுதமங்கலம் என்னும் கிராமத்தில் இந்த அரசு ஏற்பட்ட பின் 75 ஏக்கர் நிலம் பினாமியாக உள்ளது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை கைப்பற்றுவதில் கால தாமதத்தால் அந்த நிலங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. காமதாமத்திற்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த நிலங்களை கைப்பற்றி நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்களுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நான் வருவாய்த்துறை மானியத்தின் மீது பேசுகின்றபோது எப்படி எல்லாம் சிறுநல்லூர், முதுகரை, பொலம்பாக்கம், ஓரத்தி, குரும்புரை போன்ற கிராமங்களில் நில உச்சவரம்பு சட்டத்தை ஏமாற்ற பினாமியாக தத்துவமேதை மகாதேவன், தனலட்சுமி அம்மாள் போன்றவர்கள் பேரில் சுமார் 500க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் மாற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளேன். அதன்மீது நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் குத்தகை வார சட்டத்தில் பதிவு செய்வதில் காலதாமதம் அதிகமாகிறது. இதனால் இந்த சட்டம் பயன் இல்லாமல் போய்விடுகின்றது. மதுராந்தகம் தாலுக்கா அணை கட்டு என்னும் கிராமத்தில் 1-9-77 அன்று குத்தகை வார சட்டத்தின் கீழ் பதிவுகள் செய்யப்பட்டிருந்தாலும் இதுவரை அவர்கள் மனு கொடுத்த நாள் முதல் விவசாயம் செய்ய முடியவில்லை. அதேபோன்று சிறுநல்லூர் கிராமத்தில் கடந்த 1½ ஆண்டுகளாக குத்தகை வார சட்டத்தின் கீழ் பதிவு செய்ய மனு செய்திருந்தும் இதுவரை 30,35 தடவை விசாரணை என்று மனு செய்த ஏழை விவசாயிகள் அழைக்கப்பட்டிருந்தும், நில உடமையாளர்களுக்கு சம்மன் அனுப்பி இருந்தும் இதுவரை நிலச் சொந்தக்காரர்கள் வரவில்லை. அவர்களில் பலர் பினாமியாக உள்ளனர். இதனால் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஒரு பக்கத்தில் தாங்கள் இதுவரை குத்தகையில் பயிர் செய்து வரும் நிலங்களில் பயிர் செய்ய முடியாமலும், மறு பக்கத்திலே அவ்வப்பொழுது விசாரணை என்னும் பெயரில் அடிக்கடி மதுராந்தகம்



வரவேண்டிய நிலமை உள்ளது. இப்படி விசாரணை நீடித்துக் கொண்டுசென்றால் இன்னும் சிறிது காலத்திற்குப் பின் அவர்கள் தங்களுக்கு குத்தகை வாரச் சட்டத்தின் கீழ் பதிவு தேவையில்லை என்று சொல்லும் நிலைமை ஏற்படும் ஆதலால் குத்தகை வாரச் சட்டத்தின் கீழ் பதிவு கோரிய மனுக்களை உடனடியாக முடிக்கத்தக்க உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக குத்தகை கொடுக்க முடியாமல் சிரமப்படுகிறவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ரெவின்யூ போர்டையும், குட்டி ஜமீன்தார்களாக செயல்பட்ட கிராம முன்சீப், கர்ணம் ஆகிய பதவிகளை ஒழித்தமைக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே சமயம் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பல தடைகள் இருப்பதால் கிராமத்தில் ஏழைகள் பட்டா வாங்குவதில் சிரமம் உள்ளது. மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் என்று பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்திலே ஒதுக்கப்பட்டன. ஆனால் அவைகளில் பல காலப்போக்கில் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. வசதிபடைத்தவர்கள் அவைகளில் பட்டா பெற்றுள்ளனர். ஆனால் ஏழைகள் அந்த நிலங்களில் பட்டா பெற முடியாமல் சிரமப்படுகிறார்கள். அதனால் அவர்கள் வசதி படைத்தவர்களுக்கு அடிமைகளாக வாழ வேண்டிய நிலைமை உள்ளது. இதைப் போக்க உடனடியாக பல்லாண்டுகளாக விவசாய நிலங்களாக உள்ளவைகளை ஆராய்ந்து அவைகள் மேய்க்கால், ஏரி, குட்டை கால்வாய் மற்ற மற்ற புறம்போக்கு நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் உண்மையில் அதற்குத் தேவைதானா என்று ஆராய்ந்து பட்டா வழங்க வேண்டுகிறேன்.

கிராம மக்கள் படுகின்ற துன்பத்தை நான் நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக நான் ஜமாபந்தியைப் பார்வையிட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் ஜமாபந்தியின்போது பல ஆயிரம் மனுக்கள் பட்டா வழங்கக் கோரி வருகின்றன. ஜமாபந்தி அதிகாரி பரிசீலித்து தக்க உத்தரவிடக் கோரினாலும் தாலுக்கா மட்டத்தில் உள்ள அதிகாரிகள் அவைகளை தள்ளுபடி செய்து வருகின்றனர். ஆனால் வசதி படைத்தவர்கள் மனு மட்டும் பரிசீலனை செய்து முடிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் நிலப் பட்டாக்கள் வீட்டு மனைப் பட்டாக்கள் சென்ற சில ஆண்டுகளில் வழங்கியது மிகவும் குறைவு. பல ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டிருந்தாலும் ஒரு சிலருக்குத்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பது வேதனைக்குரியது ஆகும். ஆதலால் தேங்கியுள்ள மனுக்களை பரிசீலிக்க தீவிர திட்டம் தன்னிறைவுத் திட்டம் போன்று ஒன்று நிறைவேற்ற வேண்டுகிறேன். அதற்காக அலுவலர்கள், ஊழியர்கள் சர்வேயர்களை அதிகம் நியமித்து உடனடியாக பைசல் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இனாம் நிலங்கள் ஒழிக்கப்பட்ட சமயம் வெட்டி மான்யம், தலையாரி மானியம், நாவிதன் மானியம் போன்ற மானியங்கள் எல்லாம் அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி அந்த நிலங்கள், மிராசுதார்கள், வசதிபடைத்தவர்கள் பெயர்களில் மாற்றப்பட்டுள்ளது. அந்தப் பட்டாக்களை ரத்து செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கே வழங்க வேண்டுகிறேன்.

பெரிய மாவட்டங்களையெல்லாம் பிரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு அறிவித்து இருக்கிறது. எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அண்ணா அவர்கள் பெயரால் ஒரு மாவட்டத்தையும் மறைமலையடிகளார் பெயரால் ஒரு மாவட்டத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே தமிழகத்திலே உள்ள பெரிய தாலுக்காக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற நடவடிக்கையிலே மதுராந்தகம் தாலுகாவை இரண்டாகப் பிரிப்பதாக ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள், அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே உதகை தாலுகாவை உதகை, குந்தா என்று இரண்டு தாலுக்காக்களாக பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர், பந்தலூர் என்று இரண்டு தாலுக்காக்களாக பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் நிர்வாகம் சீராக நடைபெறுவதற்காக பெரிய மாவட்டங்களையும் பெரிய பிர்க்காக்களையும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல அலுவலகங்களுக்கு கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. அவைகளைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிதம்பரம் ரெவின்யூ டிவிஷன் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று பல தடவைகள் அமைச்சர் அவர்கள் அறிவித்தும் சிதம்பரம் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து 2 வருடங்களுக்கு மேல் ஆகியும் சிதம்பரம் ரெவின்யூ டிவிஷனை பிரிப்பது அல்லது கடலூர் புதிய ரெவின்யூ டிவிஷனை புது தமிழ் வருடப் பிறப்பன்று செய்யப்படுமா. (மணியடிக்கப் பெற்றது.

*திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணல் காந்தியடிகள் ராமராஜ்யம் வேண்டுமென்று கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கிராம ராஜ்யம வேண்டுமென்று கேட்டார்கள். அப்படிக் கேட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க புரட்சித் தலைவர் அவர்கள் கிராம ராஜ்யத்தை நம் கண் முன்னாலே நிறுத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள், என்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மாவட்ட நிர்வாகத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கிராம மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை ஏற்றுக் கொள்கிற முறையிலே எஸ், பி. ஆம்புரோஸ் அவர்கள் தலைமையில் தனி நபர்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு 184 பரிந்



துரைகளைக் கொடுத்து அதன் அடிப்படையில் 117 பரிந்துரைகளின் மேல் அரசு ஆணை பிறப்பித்து இன்றைக்கு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அதனுடைய அடிப்படையில் தான் முன்னாலே இருந்த கிராம நிர்வாகிகளான கிராம கர்ணம், முன்சீப் போன்றவர்களுடைய பதவிகளை நீக்கிவிட்டு புதிய முறையில் கிராம நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்கு நல்ல முடிவுகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு ஏறத்தாழ 5 ஆயிரம் பேர்களை, முன்னால் வேலை செய்து கொண்டிருந்த கிராம அதிகாரிகளில் தகுதியுள்ளவர்களையும் சேர்த்து பணியிலமர்த்தி இருப்பது மிகவும் பாராட்டிற்குரியதாகும். மீதம் இருக்கிற 7 ஆயிரம் கிராம அதிகாரிகளை கோர்ட்டினுடைய தீர்ப்பு கிடைத்த பிறகு அவர்களை நியமித்து சிறப்பான கிராம நிர்வாகத்தை நடத்த உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் கடந்த பல ஆண்டுகாலமாக நிலவரி வசூலாகாமல் ஒவ்வொரு ஊரிலும் லட்சக்கணக்கான ரூபாய் தேங்கியிருப்பதை அரசு உணர்ந்திருக்கும் என்று கருதுகிறேன். அதிலும் குறிப்பாக சிலபேர்கள் ஒழுங்காக கட்டுகிறார்கள். பலபேர்கள் இன்னும் வரியை கட்டாமல் இருக்கிறார்கள். நிலவரி பாக்கி மொத்தமும் வசூல் ஆகாமல் இருந்தால் அது வேறு; ஆனால் சில பேர்கள் கட்டுவது, பல பேர்கள் கட்டாமல் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. ஊராட்சிகள் இயங்குவதற்கு தேவையான வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகள் வசூலாகாமல் இன்றைக்கு தொடர்ந்து நிலுவையில் இருக்கின்றன. இதனால் அந்த கிராம பஞ்சாயத்துக்கள் சரிவர நடக்க முடியாமல் இருக்கிறது. தெரு விளக்குகளுக்காக மாதந்தோறும் மின் கட்டணம் கூட கட்ட முடியாமல் அந்த பஞ்சாயத்துகள் வறுமையில் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இந்த நிலையை உன்னிப்பாக கவனித்து வசூலாகாமல் இருக்கிற வரிகளை வசூலிப்பதற்கு உத்தரவுகளை இடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு முன்னால் இருந்த முறைப்படி பார்க்கிறபோது ஒரு 100 ஏக்கர் இருக்கிற சின்னஞ்சிறு கிராமங்கள், ஜமீன் கிராமங்களில் கூட ஹெட்மென்களைப் போட்டு வரி வசூல் வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட நிலைமை மீண்டும் ஏற்படக் கூடாது. ஒரு ஊரில் நிலவரி வசூல் 2000 ரூபாய்தான். ஆனால் இன்னொரு ஊரில் பார்க்கிறபோது ஏறக்குறைய 60 ஆயிரம், 70 ஆயிரம் என்று இருக்கிற வேறுபட்ட, மாறுபட்ட நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்றியமைக்கிற வகையில் சின்னஞ்சிறு கிராமங்களை எல்லாம், ஜமீன் கிராமங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஐந்தாறு ஊர்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு புதிய நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்றேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் தான் சீரான

நிர்வாகம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாலே இருந்த கிராம அதிகாரிகள் மாதம்தோறும் சாகுபடி கணக்கைப் பார்ப்பதில்லை. வீட்டிலே இருந்தபடியே சாகுபடிக் கணக்கைப் பார்ப்பார்கள். நிலத்தின் மீது சுற்றுவதில்லை. அதற்கு பதிலாக ஆண்டு கடைசியிலே ஜமாபந்தியின்போது ஒரு வாரத்திற்குள் அத்தனை கணக்கையும் எழுதி முடித்து அதிகாரிகளுக்கு காட்டிவிட்டு மற்ற நேரங்களில் மகசூல் பார்க்காமல் இருந்து வந்தார்கள் என்ற நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் இருக்கக் கூடாது என்று புதியதாக வந்திருக்கிற வில்லேஜ் ஆபீசர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

முன்னாலிருந்த கிராம அதிகாரிகள் நிலங்களில் வரப்பிலிருந்த எல்லைக் கற்களைக் கண்காணிப்பதில்லை. அதனால் புறம்போக்கிலிருந்த கற்களை அகற்றிவிட்டு தங்கள் நிலங்களோடு சில பெரிய மனிதர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்று அரசாங்கம் புதிய உத்தரவை போட்டு அந்த கற்களை எல்லாம் ஒழுங்காக கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஏழை, எளிய மக்கள் தங்களுடைய கற்களை பிடுங்கி விட்டார்கள் என்று போலீசில் சொல்கிறபோது, இது சிவில் கேஸ், நாங்கள் பார்க்க முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. சண்டைப் போட்டுக் கொண்டு வந்தால் தான் எடுத்துக் கொள்வோம், இது சிவில் நேச்சராக இருக்கிறது அதனால் எடுத்துக்கொள்ள முடியாது என்று போலீசார் சொல்கிறார்கள். இதனால் ஏழை, எளிய மக்கள், சிறிய விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய விவசாயிகள் அவர்களை விழுங்கி விடுகிறார்கள் என்பதை அரசு உணர வேண்டும். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் பணியில் இருந்தவர்கள் பரம்பரை, பரம்பரையாக வேலை பார்த்து வந்தார்கள். அந்தந்த இடங்களிலேயே தங்கள் சொந்த ஊரில் அவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் வேலை பார்த்து வந்த காரணத்தால் அவர்களுக்கு சாவடி என்று தனியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. இப்போது அதிகாரிகள் பல ஊர்களுக்கும் மாற்றம் செய்யப்படுகிற நிலைமை ஏற்பட்டிருப்பதால், வெளி ஊர்களுக்குச் சென்று அவர்கள் வரி வசூல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், ஒவ்வொரு ஊரிலும் சாவடி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். அதைப்போல முன்னாலிருந்த சாவடிகள் இப்போது இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. அவைகளை பழுது பார்ப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதைப்போல ஒவ்வொரு ஊரிலும் சாவடிக்கு பக்கத்தில் ஆடு, மாடுகளை அடைப்பதற்காக பவுண்டுகள் இருந்தன. ஒரு பவுண்டு கூட இப்போது கிராமப் புறத்தில் சரியான நிலைமையில் இல்லை. அவைகள் எல்லாம் இடிந்து தரை மட்டமாக இருக்கின்றன. ஆகவே அத்து மீறி அலைகின்ற பயிர்களை மேய்கின்ற அழிக்கின்ற கால்நடைகளை அடைக்க வசதியாக ஒவ்வொரு ஊருக்கும் பவுண்டுகளை ஏற்படுத்த இந்த அரசாங்கம் தனியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலவரி வராமல் தொடர்ந்து மொத்தமாக நிலுவையில் இருப்பதற்குக் காரணமே, ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற ஜாயின்ட் பட்டாக்கள் தான். ஒருவனுக்கு 2 சென்ட், 4 சென்ட், 8 சென்ட், 10 சென்ட் இருந்தால் கூட, ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ள நிலங்களுக்கு, தனித்தனிப் பட்டா இருந்தால் வசூல் சுலபமாக இருக்கும், பல விவசாயிகளை பட்டாவில் ஒன்றாகச் சேர்ப்பதால், ஏழை, எளிய விவசாயிகள், படிக்கத் தெரியாதவர்களிடம் வாய்தா வசூலித்து விடுகிறார்கள். கிராமக் கர்ணமோ கிராம முன்சீப்போ, முன்னாலே இருந்தவர்கள் எல்லாம், எப்படியாவது அந்த ஊர் வசூலைப் பூர்த்தி செய்ய வேண்டும், நிலவரி பூராவையும் நாம் வசூல் செய்துவிட வேண்டும் பெயர் எடுக்க வேண்டும், சிவப்பு மார்க் வாங்க வேண்டுமென்பதற்காக, யாரிடத்திலாவது வசூல் செய்து, பட்டாவிலே இருக்கிற முக்கியமானவர்களிடம், வசூலிக்காமல், ஏழை, எளியவர்களிடம் ஒன்றிரண்டாக வாங்கி, கடைசியிலே பட்டா பூராவும் பூஜ்யம் ஆகிவிட்டது என்ற கணக்கைக் கொடுப்பதற்கு இந்த ஜாயின்ட் பட்டா உதவியாக இருந்தது. அந்த நிலைமையை மாற்றியமைத்து ஒவ்வொரு நபருக்கும் தனிப் பட்டாவைப் பிரித்துக் கொடுப்பதற்கு உரிய உடனடி ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று மிகப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாசன ஏரிகள் அத்தனையிலும், நீர்ப்பிடிப்புப் பகுதியிலே கூட, ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பல ஏரிகளில் நீர் தேங்கவே முடியாத நிலைமையிலே ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன. ஏரிக் கரையிலே இருக்கிற மதகு வரையிலே, அத்தனை பேரும் உழுது பயிரிட்டு, சுகபோகமாக இருக்கிறார்கள் இந்த அரசாங்கத்தின் விதிகள் மீறப்படுகின்றன. அரசாங்கம் எந்த எந்த நிலத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டுமென்று உறுதி அளித்ததோ, அந்த காலத்திலே உத்தரவிட்டதோ, அந்த உத்தரவிற்கு நேர் மாறாக, எங்கு நீர் பாய்ச்ச வேண்டுமோ, அந்த இடத்திலே பாய்ச்சலை செய்ய முடியாமல், யாருக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பவர்கள் ஏரியிலே உள்ள வாயில் நீர்ப்பிடிப்பு பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பாசன உரிமையே பாதிக்கிறது. அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

அது மட்டுமல்ல வாய்க்கால்களிலே கூட, வரவுகாலிலே கூட ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இன்றைக்கு அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏரியில் ஆக்கிரமிப்பை நீக்குவதற்கு இப்பொழுது காட்டு இலாகா ஒவ்வொரு ஏரியிலும் கருவேல மரங்களைப் பயிரிடுகிறார்கள். அப்படிப்பட்ட கருவேல மரங்களை, எல்லா ஏரிகளிலும் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது மட்டுமல்லாமல், கிராமத்திலே மிக முக்கியமாக இருக்கக் கூடிய விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய குளம் புறம்போக்கு, மந்தைவெளி புறம்போக்கு, சுடுகாடு, இடுகாடு புறம்போக்கு இடங்களிலே கூட இன்றைக்கு ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. உடனடியாக இந்த ஆக்கிரமிப்பை நீக்க வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர வேண்டும். தகுந்த நிர்வாகிகளைப் போட்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, உடனடியாக ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றினால், அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு, அங்கே பயிரிடுகின்ற குத்தகைதாரர்களுக்கு மிக வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகச் சீரமைப்புக்காக வசதிக்காக, பல மாவட்டங்கள் இன்றைக்குப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பல தாலுக்காக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே செங்கற்பட்டு தாலுகாவை, செங்கற்பட்டு என்றும் மற்றும் திருப்போரூர் பகுதிகளையெல்லாம் சேர்த்து திருக்கழுக்குன்றம் தாலுகா என்றும் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக மக்கள் கேட்டு வருகிறார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னது, இது வரையிலும் ஏற்றுக் கொள்ளப் படவில்லையென்று தெரிகிறது. அதை உடனடியாக செங்கற்பட்டு தாலுகா என்றும், திருக்கழுக்குன்றம் தாலுகா என்றும் பிரித்து அமைக்க வேண்டும்.

அதேபோல, மதுராந்தகம், எங்களுடைய மாவட்டத்திலையே பெரிய தாலுகா. அந்தத் தாலுகாவை இரண்டாகப் பிரித்து, முன்னால் செய்த முடிவுப்படி அதை செய்யூர் தாலுகா என்றும் மதுராந்தகம் தாலுகா என்றும் பிரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கும்மிடிப்பூண்டி, மாதாவரம், சிட்லப் பாக்கம், காட்டாங்குளத்தூர் போன்ற பகுதிகள் சென்னை நகரை ஒட்டியிருக்கிற பகுதிகள், முன்னுக்கு வந்து கொண்டிருக்கிற பகுதிகள். அந்தப் பகுதிகளில் எல்லாம் நிரம்ப பாக்டரிகளும், தொழிற்சாலைகளும் வருமான வரிகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளை நில அளவைகள் செய்து, அதைக் கண்காணிக்க, தனி ரெக்கார்டுகளை ஏற்படுத்த,



ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரெவினியூ ரெக்கார்டுகளைச் சேகரிப்பதற்காக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு சர்வேயரை அவசியம் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, வறட்சி நிவாரணப் பணிகள், உரிய நேரத்திலே, சிறப்பாக இந்த அரசால் செய்யப்பட்டு வருகிறது. வறட்சிப் பணிகளை மேற்பார்வை செய்து, கண்காணிக்க, முறையோடு செயல்படுத்த, கூடுதல் அதிகாரிகள் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதை அடுத்து, பல இடங்களிலே, விதவைகளுக்கு, ஏழை எளிய அரிசன மக்களுக்கு, இராணுவத்தில் உயிர் நீத்தவர்கள் குடும்பத்திற்கெல்லாம் நல்ல முறையிலே நிலப் பட்டாக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற வேண்டும். அப்படிப்பட்ட விவகாரம் நடைபெறும்போது, இனமாற்றம் அதாவது மேய்க்கால் புறம்போக்கை தரிசாக மாற்றவோ, அல்லது மேய்க்காலை கிராம நத்தமாக மாற்றவோ மிகுந்த காலதாமதமாகிறது. அப்படிப்பட்ட காலதாமதத்தை நிவர்த்தி செய்து, உடனடியாக அந்த இனமாற்றம் செய்து, உடனடியாக பட்டா கொடுக்க அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலாற்றில் தண்ணீர் இல்லையென்று சொன்னாலுங்கூட அந்த ஊற்று நீரைப் பயன்படுத்தி, ஆற்றுக்கால் மூலமாகப் பல கிராமங்களுக்குப் பாய்ச்சல் தந்து வந்தார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே அதற்குத் தனியாகத் தீர்வை போட்டார்கள். ஏ கிளாஸ் வரி என்றும் நீர்ப்பாசன வரி என்றும் அக்கிராமங்களுக்குத் தனி வரி விதிக்கப்பட்டது.

[பிற்பகல் 1-00]

ஆனால் இன்றைக்குப் பல பாலாற்றுக் கால்வாய்கள் தூர்ந்து போய் தண்ணீர் பாய்ச்சலுக்கு பயன்படுவதாக இல்லை. அதில் வருகின்ற ஊற்று நீரைப் பெரிய நகரங்களுக்கு குடிநீருக்காக எடுத்துச் செல்கிறார்கள் அல்லது இறைப்பு பம்புசெட்டு போட்டு விடுகிறார்கள். ஆகவே, ஊற்றுக் கால்வாய்களில் நீர் அற்றுப் போய், கால்வாய்கள் தூர்ந்து கிடக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்கள் ஏராளமாக என்னுடைய பகுதியிலே இருக்கின்றன.

ஆத்தூர், பாலூர், வில்லியம்பாக்கம், ஆனூர், நெரும்பூர், நல்லாத்தூர், வாயலூர்' பூதூர், பட்டாளம், பழம்பத்தூர், காஞ்சீபுரம் தாலுக்காவைச் சேர்ந்த அவலூர், அங்கம்பாக்கம், வில்லிவலம், ஆசூர் போன்ற பல கிராமங்களில், வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஆற்றோரங்களில் உள்ள ஆற்றுக் கால்கள் தூர்ந்து விட்டன. எனவே, இதனை திரும்பவும் மறு பரிசீலனை செய்து தண்ணீர் வரி நீக்கியும் முதல் தர வரியையும் மாற்றி அமைக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்தொகுதியில் பாண்டூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அது பற்றி அமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்திருக்கிறோம். சதாசிவமேத்தா என்பவர், பழைய ஜமீன்தார், அவர் 27 எக்கராக்களைப் பட்டா செய்து கொண்டிருக்கிறார். மீண்டும் 19 ஏக்கராக்களைப் பட்டா செய்து கொண்டார். திரும்பவும் அதைக் கையகப்படுத்தித் தீர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களின் தனிக் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இப்பொழுதும்கூட புறம்போக்கு நில 17 ஏக்கராக்கள் இருக்கின்றன. அது கிராமத்தாருக்கு பயன்படாத வகையில் தானே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். பட்டாபெற்ற நிலங்களை அவ்வூர் ஏழை எளிய ஜனங்களிடமே, அந்த ஊர்க்காரர்களிடமே விற்றுக் கொண்டிருக்கிறார். அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வூர்க்காரர்கள் சகைக்கு வத்துள்ள 17 ஏக்கரை அவர் பட்டா பெறாமல் செய்திட வேண்டும்.

மாமல்லபுரத்தில் கடற்கரை கோவில் கடல் அலையால் அரிக்காமல் தடுக்க தடுப்புச் சுவர் வைக்கப்பட்டது. அப்படி வைக்கப்பட்ட பிறகு பக்கத்தில் ஆற்றோரம் உள்ள பகுதியான ஒய்யாலிகுப்பம் என்ற இடத்தில் 80 வீடுகள் கடலரிப்பின் காரணமாக இடிந்து கடலோடு கலந்து விட்டது, எனவே, அந்த இடத்தில் தடுப்புச் சுவர் எழுப்புவதோடு, 80 வீட்டுக்காரர்களுக்கும் தனியிடதில் பட்டா செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் பாதுகாப்பு இல்லங்களைக் கடற்கரை பூராவும் செம்மையான முறையில் நிலையான அளவிற்குச் செய்திருக்கிறார்கள்.

என் தொகுதியில் கடலோரம் மகாபலிபுரம் குப்பம், கொக்கிலமேடுகுப்பம், வெண்புருஷன்குப்பம், சதுரங்கப்பட்டணம் குப்பம், மிஞ்சியூர் குப்பம், புதுப்பட்டணம் குபபம், ஒய்யாலிக் குப்பம் போன்ற பல குப்பங்கள் இருக்கின்றன. அந்த ஊர்களுக்கு எந்தவிதமான சௌகர்யங்களும் செய்யப்படவில்லை. மேற்கண்ட குப்பங்களுக்குப் பொதுவாக கல்பாக்கத்திற்குப் பக்கத்தில் புயல் பாதுகாப்பு இல்லத்தை இந்த அரசு கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் குடி மராமத்து முறை இருந்தது; ஆனால் இப்பொழுது அது அற்றுப் போய் விட்டது யாரும செய்யவில்லை. அப்படிப்பட்ட குடிமராமத்தில் இந்த அரசாங்கம் என்ன முறைகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை மேற்கொண்டு கிராம மக்களை குடிமராமத்து செய்ய வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வறட்சி நிவாரணப் பணி என்ற முறையில் பல ஏரிகள் வெட்டப்படுகின்றன. பல சாலைகள் போடப்படுகின்றன. இருந்தாலும்கூட நமக்குத் தேவையான அளவிற்கு ஆடு மாடுகள் குடிக்கின்ற அளவிற்குக் குளங்குட்டைகளை தூர் எடுக்கவில்லை. குளங்குட்டைகளைத் தூர் வாரி ஏரிகளுக்கு வருகின்ற வரவுக் கால்வாய்களைத் தூர் எடுத்தால் ஏரிக்கு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் வரும். அடுத்த ஆண்டிலேயாவது செழிப்பான நிலைமை ஏற்பட்டு, பசுமையான பயிர்கள் கிடைக்கும். இந்த அளவிற்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தற்காலிகத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற வருவாய்த்துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளைக் குறித்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறிப்பாக ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய நில உச்ச வரம்புச் சட்டத்தை, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் பல்வேறு காரணங்களைச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, அதைத் தொடர்ந்து, பாரதத்தின் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இருபது அம்சத் திட்டத்தின் பெயரால் நிலங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டும்; நிலச் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள் ஒருபுறத்தில்; மற்றொரு புறத்தில் இப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில் அதைத் திருப்பி அனுப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.

நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், அன்றைக்குக் கொண்டு வந்த நேரத்தில் தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ கட்சி அதை ஆதரித்தது. கொள்கை ரீதியாக ஆதரித்த அந்த நேரத்திலேயே, சட்ட நுணுக்கங்கள் எவ்வளவு சிக்கலாக இருக்கும், நீதிமன்றத்தால் எந்த அளவிற்குப் பாதிப்பு ஏற்படும் என்று கேட்ட நேரத்தில் எந்த பாதிப்பும் இராது என்று நம்முடைய அரசாங்கம் சொல்லியது.

ஆனால் நாங்கள் அன்றைக்கும் சுட்டிக்காட்டினோம். இன்றைக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஒரே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு, கிட்டத்தட்ட 15,000 கிராம அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அது உச்ச நீதிமன்றம் சென்று அதற்குப் பின்னால் பல்வேறு வகையான நிலைமையிலே சில 5,000 பேர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திவிட்டு இன்னும் அந்தச் சட்டம் அல்ல அந்தத் தீர்ப்புகள் வராத நிலையில் அரசாங்கம் அவர்களுக்கு சம்பளமாக கோடிக்கணக்கான ரூபாயை கொடுக்கவேண்டிய ஒரு நிலையிலே, மக்களுடைய வரிப் பணத்தைப் பாழாக்கவேண்டிய நிலைமையிலே ஒரு சட்டத்தை அவசரப் பட்டுக் கொண்டுவந்தார்களே, அதுபோல் மத்திய அரசாங்கம்

செயல்பட வேண்டாம் என்ற நல்ல நோக்கத்தோடு தான் முழுமையாக ஆராய்ந்து, இது எப்படி சாத்தியமாக செயல்படுத்தமுடியும் என்பதை விளக்கம் கேட்டுத்தான் மாநில அரசுக்கு அனுப்பி இருப்பதாக நான் அறிகிறேன். (குறுக்கீடு)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கிராம அதிகாரிகள் ஒழிப்புச் சட்டத்திற்கும் நிலச் சீர்திருத்த சட்டத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தினுடைய மூலச் சட்டத்தைதே அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய 9-வது ஷெட்யூலிலே சேர்த்துவிட்டால், எந்த நீதிமன்றத்திற்கும் போக முடியாது. ஆனால் மூலச் சட்டத்தையே 9-வது ஷெட்யூலில் சேர்த்த மைய அரசுக்கு இந்த திருத்தத்தைச் சேர்ப்பதிலே என்ன தடையிருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதமே.

திரு. நா. சுந்தரராஜ் : இது சட்டப் பிரச்சினை சம்பந்தமாக, மாநில அரசாங்கம் மைய அரசாங்க அமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தினார்களா அல்லது இரண்டு அரசாங்கமும் ஏற்படுத்திய கடிதப் போக்குவரத்தையாவது இந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய நம்பிக்கையைப் பெற, அவைகளை இந்த அவையிலே வைப்பதற்கு இந்த அரசாங்கம் தயாரா என்று நான் கேட்க விரும்புகிறேன். வெறும் குற்றச்சாட்டைச் சொல்வதன் மூலமாக ஏதோ சாதனை புரிந்துவிட்டதாக அல்லது சாதித்துவிட்டதாக கருதுவீர்களானால். நீங்களே ஏமாறுகிறீர்கள், தமிழக மக்களையும் ஏமாற்றுகிறீர்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து இதைவிட தீவிரமாக, உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தை கொண்டுவாருங்கள். அதை முழுமையாக ஆதரிப்பதற்கு காங்கிரஸ் கட்சி தயாராக இருக்கிறது என்பதை திட்டவட்டமாகச் சொல்லிக் சொள்ள விரும்புகிறேன். அதை விடுத்து, வெறும் குற்றச்சாட்டின் மூலமாக உங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் அல்லது மக்களை திசை திருப்பலாம் என்று எண்ணாதீர்கள் என்று நான் செல்க்சொள்ள விரும்புகிறேன். அதைப் போல ன் றக்கு கிராம அதிகாரிகள் 5246 பேர்களை நீங்கள் நியமனம் செய்ததாக சொல்லியிருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் 79 பேர். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் 3,278 பேர். பெண்கள் 69 பேர். நான் கேட்க விரும்புவதெல்லாம்—உங்களுடைய அறிக்கை உண்மையானதுதானா? காரணம்—தமிழ்நாட்டிலே பல இடங்களில் பல கிராமங்களில் முற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கிராம அதிகாரிகளாக வேலை பார்த்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்குக் கூட வேலை கொடுக்கப்படவில்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படிக் கொடுத்திருந்தால், இந்த அறிக்கையிலே ஏன் குறிப்பிடவில்லை? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த அறிக்கையில் உள்ள புள்ளிவிவரங்கள் தவறானது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



அதுபோல் இன்றைக்குப் பல கிராமங்களிலே அதிகாரிகள் இல்லாத காரணத்தால், கிராமத்திலே இருக்கக்கூடிய வளர்ச்சித் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல. இருக்கின்ற சொத்தும் அழிந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் தென்கனிக்கோட்டை என்ற வட்டாரத்தில் சுமார் 1 கோடி ரூபாய்க்குள்ள புதிய மரங்களை வெட்டிச் சென்றதாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், 10 அதிகாரிகள், தாசில்தார் உட்பட, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, சஸ்பெண்ட் செய்திருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆக ஒரே ஒரு தாலுக்காவில் மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குள்ள மரங்கள் வெட்டப்பட்டிருக்குமேயானால், கிட்டத்தட்ட 3 ஆண்டு அல்லது 4 ஆண்டு காலத்திலே தமிழ்நாட்டிலே உள்ள கிராமங்களில், அதிகாரிகள் இல்லாத கிராமங்களிலே யாருமே கவனிப்பாரற்ற நிலைமையில் இருந்த நேரத்தில், எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வெட்டப்பட்டிருக்கும் என்பதை நீங்கள் சற்று யூகித்துப் பாருங்கள். உங்களால் சொத்துக்களைப் புதிதாக உருவாக்கமுடியாது. ஆனால் சொத்துக்களையாவது பாதுகாக்க வேண்டாமா? முன்னோர்கள் வைத்த சொத்து. அதையாவது நீங்கள் பாதுகாக்கக் கூடாதா என்பது தான் என்னுடைய கேள்வி.

அதேபோன்று இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் ஒரு கொள்கை ரீதியாக வறட்சியின் காரணமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். 1382 ஆம் பசலியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வயல் வயலாகப் போய் அங்கே விளைகிறதா, விளையவில்லையா என்று பார்த்து வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எப்படி சாத்தியமாக இருக்கும்? உங்களிடம் கிராம அதிகாரி இல்லை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆக இருப்பவர் வேறு வேலை தான் பார்க்கமுடியும். அந்த வேலை பாரக்கமுடியாது. ரெமிஷன் அல்லது ஒத்திவைப்பு என்று சொல்கிற நேரத்தில், இதைப் போன்ற காரியங்கள் தமிழ்நாட்டில் பூராவும் வறட்சி—நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். நில வரியை ரத்து செய்கிறோம். உள்ளூர் செஸ் வரியை ரத்து செய்கிறோம் என்று ஒட்டு மொத்தமாக நீங்கள் ஆணை பிறப்பிக்கவேண்டுமே தவிர, ஒவ்வொரு வயலாக ஒவ்வொரு கிராமத்தில் எந்தக் கிராம அதிகாரி அந்தக் காலததில் கூட, கிராம கர்ணம், மணியக்காரர் இருந்த காலத்திலும் யாரும் வயலைப்போய் பார்த்து அங்கு மிதித்தது கூட இல்லை. வீட்டிலே உட்கார்ந்து கொண்டு இருப்பார்கள். 5 மைலுக்கு அப்பால் உட்கார்ந்து கொண்டு இருப்பார்கள். வயலில் இன்னதுதான் விளைகின்றது என்று அவர்கள் எழுதிக் கொடுக்கின்ற அந்த ரிப்போர்ட் தான் ரெவின்யூ போர்டு வரையிலும் வரும். அதை மாற்றுவதற்கு ஈசன் வந்தாலும் முடியாது என்று சொல்வார்கள். இன்றைக்கு அந்த அதிகாரிகள் இல்லாத நிலையிலே இதை யார் போய் பார்ப்பது என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 1-10)

நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணியிலே நம்முடைய அரசாங்கம் எவ்வளவு வேகமாக போர்க்கால நடவடிக்கை என்று சொல்லுகின்ற வகையிலே ஆமை வேகத்திலே போகிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், 1980-81 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திலே வறட்சி ஏற்பட்டது. தமிழ்நாடு பூராவும் ஏற்பட்டது. அப்போது டிரவுட் டிவிசன் ஏற்படுத்தி வேலை கொடுத்தார்கள். திடீரென்று செப்டம்பர், அக்டோபர் மாதத்திலே அந்த டிவிசனை அப்ரட்டாக மூடிவிட்டார்கள். ஆனால் வேலை பார்த்தவர்களுக்குப் பணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. கிட்டத்தட்ட ஒரு 5 லட்சம் ரூபாய்க்கு இன்னும் நிலுவை இருக்கிறது. நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன். பழைய பாக்கியை தயவுசெய்து கொடுத்துவிடுங்கள். பழைய பாக்கியையாவது நீங்கள் செட்டில் பண்ணக்கூடாதா? கடன்காரன் மாதிரி இந்த அரசாங்கம் இருக்கிறது. நீங்கள் போட்டிருக்கின்ற அக்ரிமென்ட்டில் இருக்கிறது. ஓர்க் ஆர்டரில் இருக்கிறது, எல்லாம் இருககிறது. அவர்கள் கோர்ட்டுக்கு போனால் வெற்றி பெறுவார்கள. ஆனால் கோர்ட்டுக்குப் போக விரும்பவில்லை, அவர்கள் நயந்துதான் காரியத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். நான் அமைச்சரிடம் கூட மனுவைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். டிவிசனல் இன்ஜினியரைக் கேட்டால் அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தைக் கேட்டால் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லாத குறையாக இருக்கிறது. ஆகவே அவர்களுடைய பணத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று, வறட்சி நிவாரணக் குழுக்கள் அமைக்கப்படப் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. இதற்கு முன்னால் ஏராளமான குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. என்ன பிரயோஜனம்? என்னென்ன வேலைகளை எடுக்கப்போகிறோம் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கின்றார்களா, இல்லை. என்னென்ன வேலைகளை எடுத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கின்றார்களா, இல்லை. எந்தெந்த வேலைகளை யார் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்களா, அதுவும் இல்லை. ஆனால் குழுவிலே ஒருநாள் போவோம், உட்காருவோம், பேசுவோம், அதற்கு பிறகு முடிந்துவிடும். அவ்வளவுதான். அதற்கென என்ன ஸ்டேச்சுட்டரி அதிகாரங்கள் இருக்கின்றன? சட்டமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் சாதாரணக்கமள் அல்ல. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கபபட்ட பிரதிநிதிகள். அவர்கள் காரியங்களை ஆற்றவேண்டும் என்று விரும்



கிறார்கள். எனக்குத் தெரியாது என்று சொல்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தேவையில்லை. ஆகவே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே 16 மாவட்டங்கள் இருக்கின்றன. நீங்கள் 18 அமைச்சர்கள் இருக்கிறீர்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் என்று வறட்சி பணிகளை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பு ஏற்கவேண்டும். நீங்கள் எப்படி சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை போட்டிருக்கிறீர்களோ, அதைப்போல ஒரு அமைச்சர் ஒரு மாவட்டத்திற்கு பொறுப்பு ஏற்கவேண்டும். அந்த ஜில்லாவிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்கவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து அமைத்துக்கொண்டாலும் சரி. நாடாளுமன்றம் இன்னும் முடியவில்லை—உடனடியாக காரியங்களை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால் உடனடியாக அமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒவ் வாரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சர் என்று பொறுப்பேற்கச் செய்து, அவர்கள் கீழே சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்து அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று பார்வையிடுவதற்கான வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், அந்தக் குழு செம்மையாக நடத்துவதற்கான வழிகளைச் செய்ய இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு டெண்டர் மூலமாக வேலை விடப்படுகிறது. புதுக்கோட்டையிலே, மற்ற இடங்களைப் பற்றித் தெரியாது. ஆனால் டெண்டர் மூலமாக வேலையைக் கொடுத்தால் யார் எடுப்பார்கள். சாதாரண பாமர மக்கள் போக முடியுமா? ஆயக்கட்டுக்காரர்கள்தான் போய் எடுக்கமுடியுமா? இல்லை ஒழுங்காக அந்த வேலைகள் நடக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள்தான் போய் எடுக்கமுடியுமா? கான்ட்ராக்டர்கள் தான் எடுக்கிறார்கள். கான்ட்ராக்டர்கள் உடனடியாக அந்த வேலைகளைப் பார்க்கமுடியுமா? மண்ணை வெட்டுவார்கள், மண்ணை வெட்டமுடியாது. ஆகவே அவன் என்ன செய்வான், மழை பெய்யட்டும், பிறகு வெட்டுவோம் என்று இருப்பான் மழை பெய்ததற்குப் பின்னாலே மண்ணை வெட்டுவான் அப்போதுதான் நமக்கு லாபம் வரும் என்று அவன் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பார்களே தவிர, நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவிலே பெரிய நடவடிக்கையாக, உடனடியாக வேலையைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வராது. காரணம் அவர்கள் ஒன்றும் தியாகி அல்ல. அவர்கள் ஒன்றும் அரசாங்கத்திற்காக பாடுபடுபவர்கள் அல்ல. லாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவர்கள் வருகிறார்ள். ஆகவேதான் சொல்கிறேன். கான்ட்ராக்ட் முறையை ஒழித்துவிடுங்கள். அதற்கு பதிலாக ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜ் வைத்திருக்கிறீர்கள், அந்த வில்லேஜிலே உழைக்கின்ற மக்களை வைத்து ஒரு குழுவாகப் போடுங்கள். அதன் மூலமாக அவர்கள் தங்களுக்கு வேலை கிடைத்தது என்று சந்தோசப்படுவார்கள். அவர்களும் தங்களுக்கு வருமானம் கிடைக்கிறது என்று உற்சாக

மாக வேலை செய்வார்கள். எனவே இந்த தனிப்பட்ட இடைத் தரகர்களை அவர்கள் லாபம் சம்பாதிக்கின்ற முறையிலே அதற்கு யாரும் உறுதுணையாக இருக்கவேண்டாம் என்று நான் என்னுடைய கோரிக்கையாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இன்றைக்கு கிராமங்களிலே வெறும் மண் வேலையைத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட சுதந்திரம் பெற்ற காலத்திலேயிருந்து பல்வேறு வறட்சிகளை நாம் பார்த்திருக்கிறோம்.

இன்றைக்கு மெஷர்மென்ட் புக்கை எடுத்துப் பார்த்தால், (எம்-புக்கை)எடுத்துப்பார்த்தால்,எந்தஅளவிற்குமண்ணை வெட்டி போட்டிருக்கிறார்கள் என்றுபார்த்தால்இன்றைக்கு இருக்கும் கண்மாய்களை விட, கண்மாய்க்கரைகளை விட பலமடங்கு அதிகமாக இருக்கும். ஆனால் மண் எல்லாம் எங்கே போனது? மண்ணை வெட்டி இருந்தால் தானே, தெரியும். மண்ணை வெட்டுவதே இல்லை. துடைப்பதோடு சரி. இந்தக் காட்சியைத்தான் நாம் கண்டுகொண்டு இருக்கிறோம். சில நேரங்களிலே வறட்சி நிவாரணப் பணி என்று செய்யப்படுகின்ற நேரத்தில், மழை பெய்த காலத்தில் கண்மாய்கரைகளை, அல்லது ஏரிக்கரைகளை மாடுகளை வைத்து உழுது, அதை செக்ஷன் செய்து, அதற்குப் பின்னாலே அதைக் காட்டி, பில்லை வாங்கி இருக்கிறார்கள். இது எல்லாம் நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே தான் நான் சொல்கிறேன், அந்த கிராமத்திலே உள்ள சொசைடியிடம் அந்த வேலையை ஒப்படையுங்கள், ஒரு குழுவிடத்திலே அந்த வேலையை ஒப்படையுங்கள் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சகோதரர் சட்டமன்ற உறுப்பினர் தறட்சி நிவாரணம் பற்றிப் பேசினார்கள். அதிலே என்னென்ன தவறு நடந்தது என்று பொதுவாகச் சொன்னார்கள். அவர்களுடைய நல் லெண்ணத்தை நான் பாராட்டுகிறேன். வறட்சி நிவாரணத்திற்காகப் பணம் கொடுக்கிற போது, அது தவறாமல நேர்மையாக நடக்க வேண்டும் என்று தான் அரசும் கருதுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களும் கருதுகிறார்கள். இப்படி பொதுவாக குற்றச்சாட்டு சொன்னால், எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. பேசியது இருக்கட்டும். அதை மறுக்கவில்லை. இப்படி பொதுவாகச் சொல்லிவிட்டுப்போவதை விட, யார் யார் எந்த ஊரில், எப்போது, இப்படிச் செய்தார்கள், யார் அந்த நேரத்தில் அங்கே இருந்தார்கள் என்று சொன்னால் அதைக் கண்டுபிடித்து தண்டிக்க வசதியாக இருக்கும். உங்களுக்கும் இடம் இருக்கிறது. அந்த சமயத்தில் எந்த என்ஜினீர் இருந்தார், எந்த ஒர்க் இப்படி செய்யப்பட்டது, எங்கே மாடு உழுது பணம் வாங்கப்பட்டது என்று சொன்னால், நல்லது. ஒரு இடத்தில் தவறு நடந்து விட்டால், அந்தத் தவறை நாம் ஏற்றுக்கொள்வதற்குக் காரணம் அப்படிப்பட்ட தவறுகள் வேறு எங்கும் நடந்து விடாமல் பாதுகாத்துக்கொள்வதற்குத்தான், ஆகவே, நீங்கள் மொத்தமாக, பொதுப்படையாக அதைச் சொல்வதால் யாருக்கும் பிரயோசனம் இல்லை.



திரு. நா. சுந்தரராஜ் : இதற்கு முன்னால் நடந்த வறட்சி நிவாரணப் பணி காலத்தில் இப்படி நடந்தது. இப்போதுதான் வேலையே நடக்கவில்லையே. (குறுக்கீடு) நான் சொல்கிறேன, வேலை நடக்கவில்லை என்று. நீங்கள் சொல்லுங்கள், நடந்தது என்று, நான் அதற்குக் குறுக்கே வரவில்லை. இனிமேல் அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்வதற்குத்தான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

இன்றைக்கு மாடுகளுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அது ஒரு மிகப்பெரிய குறையாக இருக்கிறது. அதற்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன், கை பம்புகள் போடுகிற இடத்திலேயே ஒரு சிறிய தொட்டியை அரசு செலவிலேயோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் செலவிலேயோ வைத்தால், அந்தத் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி வைத்து, அதன் மூலம் மாடுகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கும் பொறியாளர்கள்—குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள்—ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் தங்கி, அந்த மாவட்ட தலைநகரில் இருந்து ஜீப்புகளில் கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டுவிட்டு, கலெக்டர் போல், உடனே திரும்பிவிடுகிற நிலமை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஜூனியர் இன்ஜீனியர் போட்டு, அவரை ஊராட்சி ஒன்றிய கமிஷனர் பொறுப்பில் 4 மாதங்கள் இருக்க வேண்டும் என்று வைத்து, அந்த குடிநீர் வடிகால் வாரியம் செய்கிற திட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று பார்வையிடச் செய்வதன் மூலம் அந்த வேலைகளைச் சரியாகச் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியது நிறைவேறிக்கொண்டு இருக்கிறது. சென்னை தலைநகரத்தை திருச்சிக்குக் கொண்டு போகவேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ அந்தக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அவர்கள் இடத்தைத் மாற்றிக்கொண்டு எங்கேயும் போகவில்லை. அந்த மக்கள் எல்லாம் அவரவர் கிராமங்களுக்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். இங்கே சென்னையில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை, சுகாதாரம் இல்லை, இவைகள் எல்லாம் இல்லாத காரணத்தால், சென்னையில் வாழ லாயக்கு இல்லை என்று அவரவர்கள் ஊருக்குச் செல்லும் காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் விரும்புகிற காரியம்—சென்னையைக் காலி செய்து, மக்களை வெளியே அனுப்பும் காரியம்—இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கிறது என்பதைத தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

அதைப்போன்று இன்றைக்கு தமிழ்நாட்டிலே பல மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுக்கு மேலாகியது. இன்னும் ஒரே ஒரு பட்ஜெட்தான் நீங்கள் தாக்கல் செய்யமுடியும். அதாவது 1984-85 ஆம் ஆண்டு பட்ஜெட்டைத்தான் நீங்கள் சமர்பிக்க முடியும். 1985-ல் தேர்தல் நடத்த வேண்டும். அந்த ஆண்டுக்கு நீங்கள் பட்ஜெட் சமர்ப்பிக்க முடியாது. ஆகவே இன்னும் ஒரே ஒரு பட்ஜெட்டைத்தான் நீங்கள் சமர்ப்பிக்கின்ற நிலையில் இருக்கிறீர்கள். அதற்குள் இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்..(குறுக்கீடு).

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அப்போது யாரும் கைதட்டவில்லை, அவரை ஊக்கப்படுத்தவில்லை. ஆனால் இப்போது இன்னும் பேசட்டும் என்கிறீர்கள். நல்லது சொல்லும்போது வரவேற்க வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். திருமயம் தாலுகா பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். அதை இரண்டாகப் பிரித்து மக்களுக்கு வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, இந்த வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கு டெல்லியிலே நல்ல செல்வாக்கு உண்டு. அவர்கள் மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் டெல்லிக்குச் சென்று இன்னும் அதிகமாக கேளுங்கள். 120 கோடி, 139 கோடி என்று கேட்க வேண்டாம். இன்னும் அதிகமாக, 200 கோடி ரூபாய் அல்லது 300 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டு, வாங்கிவந்து தமிழக மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யுங்கள் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். ஜெய்ஹிந்த்.

திரு. த. இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக முதற்கண் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் புரட்சிகரமான மாறுதலை இந்த வருவாய்த்துறை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காலம் காலமாக கிராமத்து மக்களை



அடிமைகளாக, அச்ச உணர்வு உள்ளவர்களாக பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாக்கி வந்த பகுதிநேர கிராம அதிகாரிகளின் கொடுமையான செயல்களை அப்புறப்படுத்த, அந்த பகுதிநேர கிராம அதிகாரிகள் பதவிகளை ஒழித்ததை இந்த சந்தர்ப்பத்திலே நான் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த நாட்டு மக்களுடைய நலன் கருதி பிர்க்காக்களை அதிகப்படுத்துதல், பெரிய வட்டங்களாக இருப்பதை எல்லாம் பிரித்து வட்டங்களை அதிகப்படுத்துதல், பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரித்து மாவட்டங்களை அதிகப்படுத்துதல், வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற உழவர் பெருமக்களுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படக்கூடிய அளவுக்கு நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தைக் கொண்டுவந்து செயலாற்றுதல் போன்றவற்றை எல்லாம் இந்த அரசு செயலாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

பகுதிநேர கிராம அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டபின்னால் இன்றைக்கு கிராம அதிகாரிகள் நியமனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 5,000 கிராம அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தாலும் வருவாய் ஆய்வாளர்கள் பல்வேறு இடங்களில் அந்தப் பொறுப்புகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மீதி இருக்கக்கூடிய 70,000 கிராம அதிகாரிகள் பதவி இடங்களிலும் கூடிய விரைவில் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

துணைவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது பல்வேறு பகுதிகள் சிறந்த பலன் அடைந்திருக்கின்றன. குறிப்பாக எனது தொகுதியாகிய இராமநாதபுரம் தொகுதியில் இராமேஸ்வரம் பகுதி இருக்கிறது. அந்த இராமேஸ்வரம் பகுதி இராமநாதபுரம் தாசில்தாருக்கு உட்பட்டிருந்தது. அந்தப் பகுதிமக்கள் தாசில்தாரைப் பார்க்க வேண்டுமென்றால் 35 மைல்கடந்து வந்து, இராமநாதபுரத்தில்தான் பார்க்கவேண்டும். இன்றையதினம் அந்தப் பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதால், அந்த தீவு இராமேஸ்வரம் தாலுகா என்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களே தொடங்கிவைத்தார்கள். அதனால் இப்போது அந்த மக்கள் தாசில்தாரைப்பார்க்க இராமநாதபுரத்திற்கு வர வேண்டியதில்லை; அங்கேயே பார்த்துக் கொள்ளலாம். அந்த வகையில் அந்த மக்கள் நல்லபலன் கண்டிருக்கிறார்கள். அதைப்போன்று பல்வேறு பகுதிகள் பலன் அடைந்திருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தீவிபத்திற்கு நிவாரணம் கொடுப்பது பற்றி இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தீ விபத்தினால் குடிசையில் இருப்பவர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு திரும்பவும் குடிசைகள் கட்டிக்கொள்ள ரூ. 200 அளிப்பதாக

அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் கொடுத்ததைவிட இப்போது இது அதிகமாக இருந்தாலும் கூட, தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தின் காரணமாக 200 ரூபாய் கொடுத்தால், அதில் குடிசை கட்டிக்கொள்ள அவர்களால் இயலாமல் போய் விடுகிறது. ஆகவே, அந்தத் தொகையை இன்னும் சற்று அதிகமாக்கி 500 ரூபாய் அளவிற்கு கொடுப்பதற்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, புயல் பாதுகாப்பு கட்டிடங்கள் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே கட்டப்படுகின்றன. இராமநாதபுரத்திலே 7 புயல் பாதுகாப்பு கட்டிடங்களை நமது அரசாங்கம் கட்டியிருக்கிறது. அதற்காக இந்த நேரத்திலே நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். போன ஆண்டு இராமேஸ்வரத்திலும், தங்கச்சி மடத்திலும், பாம்பன் போன்ற 3 இடங்களிலும் புயல் பாதுகாப்பு கட்டிடங்கள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான வேலைகள் இன்னும் துவங்கப்படவில்லை. அந்த 3 இடங்களிலும் அந்தக் கட்டிடங்களை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கெல்லாம் அலுவலக குடியிருப்புகளை கட்டிக் காடுக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றி வருவது குறித்து இந்தக் குறிப்பிலே போடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அப்படி கட்டிக் கொடுப்பதன் காரணமே, அந்தப்பகுதி மக்கள் எந்த நேரத்திலும் அவர்களை அணுகி, தங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொண்டு போவதற்காகத்தான். அதனால்தான் அவர்கள் அங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம். ஆனால் அவர்கள் அங்கே தங்குவதே இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட குறைகள் எங்காவது இருக்குமேயானால் அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வறட்சி நிலைமையைப்பற்றி அருமை சகோதரர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். வறட்சி நிலைமை கடந்த காலத்திலே ஏற்பட்டபோது, நமது அரசாங்கம் அதை சவாலாக எடுத்துக் கொண்டு, என்னுடைய மாவட்டத்திலே சிறப்பாக செயலாற்றி அந்த துயர் துடைப்பு பணிகளைச் செய்தது என்பதை என்னுடைய நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே விரைவாக பணிகள் நடைபெறுவது போல எந்தக் காலத்திலும் நடைபெறுவது இல்லை. நடக்கவில்லை நடக்கவில்லை என்றே திரும்ப திரும்ப சொல்லுவதை எதிர்க்கட்சிகள் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து மாவட்டங்களை பிரிப்பது குறித்து எடுத்துக் கொண்டால், இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாக பிரிக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் என்றும், மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி பிரிக்கிறபோது, இராமநாதபுரத்தையே தலைமை இடமாகக் கொண்டு, கிழக்கு இராமநாதபுர மாவட்டத்தை பிரிகக வேண்டும், அவ்வாறே அறிவிப்பும் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைப்பட்டா செய்து பொதுமக்களுக்கு—அரிசனங்களுக்கு கொடுப்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் நிதிநிலை அறிக்கையிலே பேசும் போது கூட குறிப்பிட்டுச் சொன்னேன். என்னுடைய மாவட்டத்திலே அப்படி கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஒரு தடை இருக்கிறது என்று. சேது சமுத்திரத் திட்டம் வருகிறது என்கிற நிலையில், அதற்கு எந்த நிலங்கள் தேவைப்படும் என்று வரையறுக்காத நிலை இருந்த காரணத்தால் நிலத்தை கையகப் படுத்த முடியவில்லை; தடை இருந்தது. ஆனால் சமீபத்திலே நிபுணர்கள் குழு வந்து, சேது சமுத்திர திட்டத்திற்கான இடத்தை தேர்வு செய்து விட்ட காரணத்தாலே, அந்தத் தடையை தயவு செய்து நீக்கி, வறியவர்களுக்கு நிலம் இல்லாத ஏழை அரிசன மக்களுக்கு, அதை ஒப்படைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கிராமங்களிலே இருக்கக்கூடிய பெரிய தனக்காரர்கள் எல்லாம், அங்கேயிருக்கக்கூடிய கண்மாய்களில் ஆக்கிரமிப்பு செய்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதன் காரணமாக கண்மாய்களில் தண்ணீர் இருப்பு குறைகிறது. அதிகமாக தட்டுப்பாடாக இருக்கும் தண்ணீரை, இவ்வாறு ஆக்கிரமிப்பின் காரணமாக வீணாக்குவது சரியல்ல. ஆகவே அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் தாலுக்காவாக ஆகிவிட்டாலும் கூட அங்கேயுள்ள கருங்குளம் டிரஷரி மண்டபம் கேம்பிலே இருக்கிறது. இராமநாதபுரம் தாலுக்காவாக ஆக்கப்பட்டதற்கு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்து அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பாக தலைமை தாங்கி நடத்தினார்கள். அப்போது அவரிடம் கூட அது எடுத்துச் சொல்லப்பட்டது. இராமநாதபுரம் தாலுக்காவுக்கு உட்பட்ட பகுதிதான் அது. இராமநாதபுரம் தொகுதியாக இருந்தாலும் கூட, தாலுக்கா வேறுபடுகிற காரணத்தால், மண்டபம் காம்பிலே உள்ள டிரஷரியை இராமநாதபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய

ஆட்சியில் சிறப்பாக திட்டங்களைப் போட்டு, பல்வேறு துறைகளிலும் அந்த திட்டங்களை புரட்சிகரமான முறையில் இந்த அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது. அதை நாட்டு மக்களும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரத்தைத் தனித் தாலுக்காவாக ஆக்கிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து, புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தை சீக்கிரமாகப் பிரித்து கிழக்கு இராமநாதபுரத்திற்கு இராமநாதபுரம்தான் தலைநகரம் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. சி. கோபால்) அவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த வருவாய்த்துறை மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப் பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வருவாய்த்துறை நிர்வாகத்திற்கு கிராமங்களே அடிப்படையாக விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை. எனவே அவற்றை எல்லாம் சீர்படுத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக பழைய கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் அவர்கள் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் சென்று நீதியைப் பெற்ற காரணத்தால் ஏறக்குறைய 5 ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலைக்குத் திரும்பி இருக்கிறார்கள். இன்னும் பலபேர் எஸ்.எஸ்.எல்.சி. பைலாகி இருந்தாலும் வேலை கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக உயர்நீதிமன்றம் சென்று இருக்கிறார்கள். ஆனால் இந்தக் காரியத்திலே அவசரப்பட்டுத் தான் நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நான் சொல்வது என்னுடைய கடமை. இன்றைய தினம் அவர்களையும் நீங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நேற்றையதினம் கூட ஒரு துணைக் கேள்வியிலே கேட்கப்பட்டது போல் வேலையிழந்து நிற்கின்ற வருவாய்த்துறை கிராம அதிகாரிகள் பசியாலும், பட்டினியாலும் வாடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்



கிறேன். வேலை கிடைத்தவர்கள் போக மீதி இருப்பவர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. ஆகவே அந்த மீதி இருப்பவர்களின் குடும்பங்களில் யாரேனும் தேர்விலே தேறி இருப்பார்களேயானால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அப்படியும் வேலையே கிடைக்காமலே போகும் அந்த கிராம அதிகாரிகளுக்கு நீங்கள் மாதம் இவ்வளவு என்று பென்ஷன் அல்லது ஏதாவது ஓய்வூதியம் என்ற வகையிலே மொத்தமாகவாவது ஒரு தொகையை கட்டாயம் வழங்கவேண்டும். அப்படி வழங்கத் தவறினால் பசியால் வாடுகின்ற அந்தக் குடும்பங்களினுடைய பாவம் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை வந்து சேரும். அப்படி அந்தப் பாவம் வந்து சேரக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேதான் நிச்சயமாக அந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே இருக்கின்ற மரங்களை வெட்டினால் கேட்க ஆள் இல்லை. அதுமட்டுமல்ல, கிராமங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் ஏதாவது ஒரு வருவாய்த் துறையின் சான்றிதழ் வேண்டும் என்றால் குறைந்தது 50 ரூபாயாவது செலவழிக்க வேண்டி இருக்கிறது. அதுமட்டுமல்ல, சுலபமாகக் கிடைப்பதில்லை. இன்றைக்கு அதுதான் உண்மை. எனவே இவற்றை எல்லாம் பார்க்கின்றபோதுதான் எங்களைப் போன்றவர்கள் மட்டுமல்ல, நாட்டிலே இருக்கின்ற அனைத்து மக்களும் "ஓல்ட் இஸ் கோல்ட்" என்று நினைக்கிறார்கள். இது தான் உண்மை என்பதை நாட்டுமக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள், உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றையதினம் ரெவின்யூ கிராமங்களைப் பொறுத்த வரையிலே ஆங்கிலேயர்களுடைய காலத்திலே அவற்றுக்கு எல்லாம் நம்பர் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் இன்றைய தினம் பல ரெவின்யூ கிராமங்கள் சிறிதாக ஆகிவிட்டன. பல மதுரா கிராமங்கள் மிகப்பெரிதாக ஆகிவிட்டன. அப்படிப்பட்ட கிராமங்களுக்கு எல்லாம் ரெவின்யூ நம்பர் கொடுத்து அவற்றை எல்லாம் ரெவின்யூ கிராமங்களாக ஆக்குவதற்கான நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும்.

தீ விபத்து ஏற்படுவதைப் பொறுத்தவரையில் அதிலே சம்பந்தப்பட்ட சட்டங்களை எல்லாம் மாற்றவேண்டும். அதிலே வருவாய்த்துறை அதிகாரிகள் அது சம்பந்தப்பட்ட வகையிலே தொகையினை நிர்ணயித்து இருக்கிறார்கள். அவை எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்ட தொகை. அவற்றை எல்லாம் மாற்றி குறைந்தபட்சம் தீ விபத்தினால் பாதிக்கப் படுகின்றவர்களுக்கு 500 ரூபாய் மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாயத்தில் சாதாரணமாக புயல், வெள்ளம் அல்லது வறட்சி ஏற்படுகின்ற காலங்களில் தான் விவசாயிகளுக்கு வரி சலுகை அல்லது கடன் தள்ளுபடி போன்ற சலுகைகளை அளிக்கின்ற ஒரு சட்டம் நம்முடைய வருவாய்த்துறை விதிகளில் இல்லாமல் இருப்பதாக நான் அறிகிறேன். பல நேரங்களில் விவசாயிகள் பயிரிட்டு அறுவடை ஆகும் காலக்கட்டத்தில் கோடை காலங்களில் கல் மழை பொழிந்து அந்த நெல் மணி எல்லாம் உதிர்ந்து விடுகிறது. அதனால் விவசாயிகளுக்கு அறுவடையின் போது கிடைப்பது வெறும் வைக்கோல்தான். நான் அதை ஏற்கனவே ஒரு முறை இந்த பேரவையில் சொல்கிற போது அதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது அப்படி போகின்ற காலகட்டங்களில் கூட விவசாயிகளுக்கு இந்த இயற்கை சீற்றத்தினுடைய காரணத்தைக் காட்டி அவர்களுக்கு சலுகை அளிக்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மழை காலங்களிலும் வரிச் சலுகைகளை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக ஒரு கிராமத்தில் ஒரு ஏரி இருப்பதாக வைத்துக்கொண்டால் அந்த ஏரி நிரம்பினால் 4 மாதம் அல்லது 6 மாதம் பாயும் என்று பல ஆண்டுகளுக்கு முன்னதாக அந்த கணக்குகளை வருவாய்த்துறை அதிகாரிகள் எழுதினார்கள். ஆனால் இன்றைய தினம் காலத்தினுடைய மாறுதலால் அந்த ஏரிகள் மண் மேடுகளாக போய்விடுகிற காரணத்தால் 4 மாதம் பாயும் என்று சொன்னால் இன்றையதினம் அந்த ஏரிகள் 30 நாட்களுக்குதான் பாய்கிறது. இரண்டு போகம் என்று சொன்னால் இன்றையதினம் ஒருபோகம் தான் விளைகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலமை வந்துவிட்டது. இன்றைக்கு அந்த விவசாயிகள் மின்சாரத்தை பயன்படுத்தியோ அல்லது ஆயில் இன்ஜினை பயன்படுத்தியோ அந்த பயிரை அறுவடை செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வரி சலுகை உண்டா என்றால் இல்லை. அப்போது வருவாய் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் சாவி ஆகவில்லையே எப்படி நாங்கள் வரி சலுகை தர முடியும் என்று கேட்கிறார்கள். உங்களுடைய ஏரி பாசனத்தில் இருந்து அந்த நெல் விளைந்து வந்ததா என்றால் இல்லை. அவருடைய முயற்சியால் அது விளைந்து வந்து இருக்கிறது. ஆகவே அதை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் வருகின்ற சாலைகளுக்கும், நெடுஞ்சாலைத் துறையில் உள்ள சாலைகளுக்கும் சாலை போடுவதற்கு பல விவசாயிகள் இனாமாக நிலம் கொடுத்துவிட்டார்கள். இனாமாக நிலம் கொடுக்கப்பட்டு சாலை போடப்பட்டுவிட்டது. அதற்கான தீர்வையை எடுத்து விட்டார்களா என்றால் இல்லை. நிலத்தை அந்த விவசாயி பாதைக்கு விட்டுவிட்டு பல ஆண்டு காலமாக





அரசாங்கத்திற்கு தீர்வை செலுத்தி வருகின்ற ஒருநிலைமை இருந்து வருகின்றன. அதையும் நம்முடைய அரசாங்கம் ஆராய்ந்து தீர்வையில் சலுகை அளிக்கவேண்டும், அறவே நீக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்

இன்றையதினம் தமிழ்நாட்டில் வறட்சியால் எல்லா மாவட்டங்களும பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று நம்முடைய அரசாங்க தரப்பிலே எல்லா மானியக் கோரிக்கையிலும் தரப்படுகின்ற கொள்கை குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் வறட்சி மாநிலம் அல்லது வறட்சி மாவட்டம் என்று இது வரையில் நீங்கள் அறிவித்தீர்களா என்றால் இல்லை. இது தான் எங்களுக்கு புரியவில்லை எங்களைப் போன்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களில் சமயம் கிடைக்கும்போது எல்லாம் சொன்னாலும் கூட இந்த அரசாங்கம் என்ன காரணத்தாலோ அதை செய்யவில்லை. வரலாறு காணாத வறட்சி என்று நீங்களே சொல்கிறீர்கள். வரலாற்றில் இதுவரை இந்த மாதிரி வறட்சியை தமிழகம் சந்திக்கவில்லை. நம்முடைய நண்பர்கள் காலையில் கூட இங்கே சொன்னார்கள் 19, 20 பேர் இந்த வறட்சியினால் தமிழகத்தில் உயிர் இறந்து இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்ற இந்த கால கட்டத்தில் கூட இந்த அரசாங்கம் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்படாமல் இருக்கிறார்கள். நாங்கள் என்ன சொன்னாலும் இது உங்கள் காதில் விழவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்குபோல்தான் அந்த பிரச்சனை இருந்து வருகின்றது. உடனடியாக இந்த மாநிலத்தை வறட்சி மாநிலம் என்று அறிவித்து ஆகவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு மாவட்டங்களில் குடிநீர் பிரச்சனை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவருடைய திறமையை எல்லாம் உபயோகப் படுத்தினார்கள். ஆனால் நாங்கள் கேட்டுக்கொள்ளலாம். நாட்டில் உள்ள மக்கள் எங்களை கேட்கிறார்கள். ஆளும் கட்சியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்பார்கள்.

இன்றையதினம் கைப்பம்புகளை அமைக்கிறார்கள். பல்வேறு கைப்பம்புகளை சென்னையானாலும் சரி, கிராமங்கள் ஆனாலும் சரி கைப்பம்புகளில் தண்ணீர் வருகிறதா என்றால் வரவில்லை. அமைத்து என்ன பிரயோசனம். எத்தனை அடி ஆழம் போட வேண்டும் என்று முதலில் நீங்கள் தீர்மானித்தீர்களா? இல்லை. அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கிறீர்கள். அதனுடைய பலன் கைப்பம்புகள் போடப்பட்டாலும் கூட தண்ணீர் இல்லை. இதுதான் இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரியத்துறை கிராமங்களில் செயல்படுகின்ற முறை.

அதேபோல் பழுதடைந்த கைப்பம்புகளை பழுதுபார்க்கிறார்களா என்றால் இல்லை. மாதக்கணக்கில் பழுதுபார்ப்பதற்கு ஆள் இல்லாமல் அப்படியே இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றையதினம் தமிழகம் இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கிராமத்தில்

கைப்பம்புகளை போடுகிறோம் தண்ணீர் வரவில்லை. கிராமத்தை விட்டு வெகு தூரத்தில் போடுகிறார்கள். அப்படி போடுகிறபோது அந்த பம்பில் தண்ணீர் வருகிறது. பிறகு என்ன செய்கிறார்கள் வாரியத்திலே அடுத்து இன்னொரு கைப்பம்பை கிராமத்தின் அருகாமையில் போடுகிறார்கள். என்ன ஆகிறது தண்ணீர் வரவில்லை. ஒரு கைப்பம்பு அமைத்தால்எனக்கு தகவல், கிடைத்த நமுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான புள்ளி விவரங்கள் தரலாம்—15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது என்று சொல்கிறார்கள். அந்த 20 ஆயிரம் ரூபாயை நீங்கள் ஏற்கனவே தண்ணீர் வருகின்ற கைப் பம்பிலிருந்து அங்கேயே ஒரு மோட்டார் வைத்தால் அந்த கிராமத்திற்கு நல்ல தண்ணீர் தரமுடியும்.

(முற்பகல் 1.40)

ஆனால் என்ன செய்கிறது அந்த வாரியம் என்றால் நாங்கள் கைப்பம்பு போடுகிறோம். ஆனால் தண்ணீர் வரவில்லை என்று சொல்கிறார்கள். இன்னொரு கொடுமை. கிராமங் களிலே இருக்கிற யாரையும் அவர்கள் சந்திக்கமாட்டார்கள் அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற அதிகாரிகளை யாவது எங்கே போட வேண்டுமென்று கேட்பார்களா என்றால் கேட்கமாட்டார்கள். அவர்கள் வருவார்கள். அவர் களுக்கு எங்கே விருப்பமோ அங்கே போடுவார்கள். அதிலே குறிப்பிட்ட அடி அளவுக்குக்கூட போடமாட்டார்கள். நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. மிகக் கவனமாக இந்தத் துறை இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். பூமிக்கு மேலே நடைபெறுகிற வேலைகளிலே ஏராளமான தவறுகள் நடைபெறுகின்றன என்று பல்வேறு சட்டமன்ற உறுப் பினர்கள் இங்கே சுட்டிக்காட்டுகிறோம். குடிநீர் வாரியம் போடுகிற கைப்பம்புகளிலே எத்தனை அடி ஆழம் என்பதிலே பல இடங்களிலே தவறுகள் நடக்கின்றன. அதைச் சரியான முறையிலே கண்காணி பதற்கு பொறியாளர்கள் இல்லை. அப்படி நீங்கள் கண்காணிக்கவில்லையென்றால் பணம் தான் பாழாகுமே தவிர மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படாது, அதை நீங்கள் சரியான முறையிலே கண்காணிக்க வேண்டும்.

வேலைகளைப்பற்றியெல்லாம் நண்பர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் நிலைமை என்ன? பொதுப்பணித்துறையிலே ஒரளவிற்கு வேலை எடுக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறை யிலே டெண்டர்கள் விட்டார்கள். பல பேர்கள் எங்கள் பகுதி யிலே திருவண்ணாமலை போன்ற பகுதியிலே 40 சதவீதம் தள்ளிபோட்டார்கள், போட்டியிலே 40 சதவீதம் என்று தள்ளிப்போட்டவர்கள் வேலையை ஆரம்பித்தார்களா என்றால் இல்லை. ஏன் ஆரம்பிக்கவில்லை? 40 சதவீதம் தள்ளிய வுடனே பார்க்கலாம் என்று அவர்களே இருக்கிறார்கள். ஆனால் வேலையில்லாத சிறிய விவசாயிகள் அல்லது விவசாய கூலியாக இருக்கின்றவர்கள் ஆதிதிராவிட மக்கள், பின்தங்கிய மக்களுக்கு சரியான வேலைவாய்ப்பு வறட்சி காலத்திலே



கொடுக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் அவர்கள் மீது சரியான கவனம் செலுத்தவில்லை என்பதை குற்றச்சாட்டாகவே நான் சொல்ல விரும்புகிறேன். ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்லியாகவேண்டும். என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியிலே மங்கலம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. நானே கூட அந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தேன். அந்த ஒரு பஞ்சாயத்திலே எத்தனை பேர்கள் அந்தக் கிராமத்திலிருந்து எத்தனை குடும்பங்களிலிருந்து வெளிமாநிலத்திற்கு பிழைப்பைத் தேடி சென்றிருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது நானே அந்தப் புள்ளிவிவரத்தை எடுத்தேன். 250 குடும்பங்களிலிருந்து ஏறக்குறைய 1000 பேர்களுக்கு மேல் அந்தப் பஞ்சாயத் திலிருந்து வெளிமாநிலத்திற்கு பிழைப்பைத் தேடிச் சென்று இருக்கிறார்கள் என்றால் ஒரு தொகுதியிலே எவ்வளவு பேர் திருவண்ணாமலையில் எவ்வளவு பேர், செங்கத்திலே எத்தனை பேர், போளூரிலே எவ்வளவு பேர் என்று தினமணியிலே எழுதினார்கள்) தினமலரிலே எழுதினார்கள், பத்திரிகைகளிலே எழுதினார்கள் ஆனால் நடவடிக்கை உண்டா என்றால் அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பல ஆண்டு காலமாக மாடு, ஆடுகளை அடைக்கிற பட்டி என்று எங்கள் கிராமங்களிலே சொல்வார்கள். அவைகள் எல்லாம் கிராமங்களிலே இருக்கின்றன, ஆனால் உடைந்துபோய் பழுதாகி இருக்கின்றன. அவைகளைப் பழுதுபார்த்தால் கிராமங்களிலே பல பிரச்சினை களைத் தீர்ப்பதற்குவழி ஏற்படும். எனக்குமுன்னாலே பேசிய உறுப்பினர்கள் கூட சாவடிகளைப் பழுதுபார்க்கவேண்டுமென்று கேட்டார்கள். அவைகளையெல்லாம் பழுதுபார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மனு நீதித் திட்டம். எங்களுடையதலைவர் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இந்த அரசாங்கம் அதை இன்றைய தினம் நிறைவேற்றுவதாக கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக் கிறார்கள். நான் தங்கள் மூலமாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் வருவாய்த்துறை அதிகாரிகள் இந்த திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துவது இல்லை. பல கிராமங்களிலிருந்து எனக்குப் புள்ளிவிவரங்கள் வருகின்றன. நானே கூட ஒரு கிராமத்திற்கு சென்றிருந்தேன். சாதாரண ஒரு ஆய்வாளர்கூட வரவில்லை. துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலே உள்ள ஒரு கிராமத்திலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை. அதிகாரிகளிலே வருவதில்லை, இதிலே கவனம் செலுத்தினால் அங்கேயே அதிகாரிகளைக் சந்தித்து நியாயம் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து மத்திய நிபுணர் குழுநம்முடைய மாநிலத்திற்கு வந்தது. எங்களுடைய திருவண்ணாமலைப் பகுதிக்கு வந்தார்கள். அதிலும் என்னுடைய தொகுதியிலே—செங்கற்பட்டை பார்த்து விட்டு தென் ஆற்காடு வழியாக வருகிறபோது கலசப்பாக்கம் தொகுதியிலே—எறும்பூண்டி என்ற கிராமத்திற்கு வந்தார்கள். அந்தக் கிராமத்திலே 1981—ஆம் ஆண்டு வறட்சித் திட்டத்தின் கீழ் போடப்பட்ட கிணறு இருக்கிறது, இன்றைய தினம் அந்தக் கிராமத்திற்கு சென்று பார்த்தபோது அங்கே ஆயில் எஞ்சின் வைத்திருக்கிறார்கள், பைப்புகள் போடப்பட்டிருக்கின்றன. கொப்பறைகள் வைத்திருக்கிறார்கள், நிபுணர் குழுவிடம் நம்முடைய வருவாய்த்துறை கமிஷனர் சொன்னார்கள். இதைப் பாருங்கள், இதைத்தான் தமிழ்நாடு பூராவும் அமைக்கப் போகிறோம். தண்ணீரை ஆயில் எஞ்சின் மூலமாக இறைத்து அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எடுப்பதற்கும் கால்நடைச் செல்வங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கும் இந்தத் திட்டத்தைச் செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால் மறுநாள் ஆயில் என்ஜினும் காணோம்; பைப்பையும் காணோம். நியுணர் குழு வருகின்றபோது அவர்களுக்கு காண்பிப்பதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்தார்களே தவிர மறுநாளே பைப்பையும் என்ஜினையும் அந்த இடத்தில் காணவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிபுணர் குழு வந்திருந்தபோது வடஆற்காடு மாவட்டத்தில் அரசாங்க ஜீப்புகளும், அரசாங்க கார்களும், வேன்களும் எண்ணற்ற அளவில் குவிக்கப்பட்டிருந்தன. இன்னும் சொல்லப்போனால் முதல் வண்டி திருவண்ணாமலையில் சென்றது என்றால் கடைசி வண்டி 10 மைல் தூரத்தில் இருக்கிற எறும்பூண்டியில் இருந்தது. இந்த நேரத்தில் உங்களுக்கு நான் சொல்லிக் கொள்வது வறட்சி நிலையை பார்ப்பதற்கு கவர்னர் சென்றாலும், முதலமைச்சர் சென்றாலு', அல்லது நம்முடைய அமைச்சர்கள் போனாலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; இப்படிப் பட்ட பவனி இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தவிர மற்றவர்கள் வருவதை தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதிபைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய வடஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தில் ஆரம்பித்து ஏறக்குறைய தண்ட ராம்பட்டு வரையில் ஏறத்தாழ சுமார் 120 மைல் தூரம் இருக்கிறது. இதனால் அதிகாரிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவ்வளவு பெரிய மாவட்டம், அந்த மாவட்டத்தை இரண்டாக பிரிக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாக இந்த அவையிலே கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரித்து திருவண்ணா மலையை தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல் இப்போதிருக்கிற வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்





அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு பணம் எல்லாம் ஒதுக்கப் பட்டதாக இங்கே அறிவித்தார்கள். எல்லா சட்டமன்ற உறுப் பினர்களும் வேலூர் நகரத்தில் ஒரு மையமான இடத்தில் அந்த கட்டடத்தை கட்ட வேண்டுமென்று சொன்னோம், ஆனால் அதற்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வேலூரின் மையப்பகுதியில் அதை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகள் இருக்கின்றன. பல்வேறு வட்டாரங்களில், தாலுக் காக்களில் அந்த கிராமங்கள் இணைக்கப்பட்டு அந்த மலைப் பகுதி மக்களுக்கு நியாயமான கோரிக்கைகள் செய்து கொடுக்க முடியவில்லை. ஆகவே இதற்காக எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆகவே ஜவ்வாது, ஏலகிரி பகுதிகளை தனித்தாலுக்காவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை இந்தத் துறை எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டுமென்பதற்கு சொல்லியிருக்கிறார்கள். வெட்டு பிரரேபணைகள் மூலம் பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு எப்படியெல்லாம் காரியங் களை ஆற்றுகிறது என்பதைச் சொல்கிறபோது அதை மனதார பாராட்ட விரும்பாதவர்கள் கூட பாராட்டியிருக்கிறார்கள், பாராட்ட விரும்பாவிட்டாலும் அவர்கள் சொல்கிறபோது அவர்களால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொன்றாக உங்கள் எல்லோருக்குப் பதில் சொல்வதென்றால் நீண்ட நேரம் ஆகும் என்பதால் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று சொல்வதாலே நானும் சுருக்கமாகச் சொல்கிறேன். சுருக்கமாகச சொல்கிறபோது, நீண்ட நேரம் பதில் சொல்லாவிட்டாலும் நீங்கல் சொன்ன கருத்துக் களையெல்லாம் இந்த அரசு ஏற்று, அவற்றை நல்லமுறையில் பரிசீலித்து, எதையெதையெல்லாம் செய்யமுடியுமோ அவற்றை செய்யும் என்பதை பொதுவாக உங்களுக்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே வறட்சிப் பணிகள் பற்றி பேசுகின்றபோது வறட்சிப் பணிகள் எப்படி நடக்கவேண்டுமென்பதை பல்வேறு உறுப் பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு இடங்களில் வறட்சிப்பணி தீவிரமாக நடைபெறவில்லை என்று சொன்னார்கள் பலர் வறட்சி பணியைப் பற்றி சொல்கிற போது நீங்கள் அந்த பணிகளை தாமதப்படுத்தி செய்தீர்கள் என்று சொன்னார்கள். சிலர் சொல்கிறபோது சென்னையில் தண்ணீர் இல்லையென்று

சொன்னார்கள். ஆனால் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன் வறட்சிப்பணிக்கு மத்திய அரசிலேயிருந்து பணம் வருவதற்கு முன்னாலே கூட இங்கே இருக்கிற நிலைமைகளை எண்ணிப் பார்த்து, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு எவ்வளவு நிதி பற்றாக்குறை இருந்தாலும், எவ்வளவு சங்கடங்கள் இருந்தாலும் ரூ. 51 கோடிக்கு மேலாக இந்த பணிகளுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு சங்கடங்கள் இருந்தாலும் நாட்டு மக்களுக்காக அந்தப் பணிகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இங்கே ஒன்றைச் சொல்கிறபோது, பட்டினியால் மக்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அப்படிப் பட்ட நிலை இன்றுவரையில் இல்லை என்பதைத் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50)

தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திற்கு அருகில் பட்டப்பாக்கம் கிராமத்தில் குறைந்தபட்சம் 10பேர் பட்டினியால் இறந்தார்கள் என்று பேப்பரிலே செய்தி வந்ததாக, அதைப்பற்றி சில பேர் சொன்னார்கள். அதைப்பற்றி கேட்கிற பொழுது, அப்படிப்பட்ட நிகழ்ச்சியே நடைபெற வில்லையென்று அங்கே தெரிவிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட கிராமமும் இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பாக்கம் என்ற பெயருள்ள கிராமம் இருக்கிறது. ஆனால், அந்தக் கிராமத்தில் சில தினங்களுக்கு முன்னால், காலரா நோய் கண்டு இறந்திருக்கிறார்கள் என்றும்,உடனடியாக அரசு அதிகாரிகள் மற்றுமுள்ள நிர்வாகத் துறை அதிகாரிகள் எல்லாம் அங்கு சென்று ஆவன செய்து, அந்த நோயைத் தடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் உங்களுக்குத் தெளிவாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், தற்கு முன்பே இங்கே நான் தெரிவித்தபடி, இன்றைக்கிருக்கிற புரட்சித்தலைவர் அரசு, நிச்சயமாக பட்டினியால் யாரையும் சாகவிடாது. எப்பாடு பட்டாவது எல்லோருக்கும் உணவு அளிக்கும் என்பதை உறுதியாக உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு, சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலே, அதாவது பாக்கம் என்ற ஊர், பட்டப்பாக்கம் என்று சொல்வார்கள். அதை, அந்தக் கிராமத்திலே இறந்திருக்கிறார்கள் பத்திரிகையிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது, காலராவினாலே இறந்தார்களா பட்டினி யால் இறந்தார்களா என்றால், அவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காததன் காரணமாக, வேலை கிடைக்காததன் காரணமாக, அந்த வறட்சி நிலைமையை ஒட்டித்தான் அங்கே இறப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை காலராவால் என்று சொல் வார்கள். போதுமான உணவு கிடைக்காமல், எதை, எதையோ





சாப்பிட்டதால், வயிற்றுப் போக்காலே அவர்கள் இறந்திருக் கிறார்கள். ஆகவே, எப்படியோ, பட்டினிச் சாவோ, காலராவோ, இறந்திருப்பது உண்மை என்றுதான் இன்றைக்குக் கூடப் பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி சாவுகள் ஏற்படாமல் தடுக்க, நிவாரண நடவடிக் கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. இப்படியெல்லாம் செய்தித் தாள்களிலே வந்தால் அதை இந்த அரசு அலட்சியப்படுத்துவதும் இல்லை; செய்தித்தாள்களிலே இருப்பதை அப்படியே எடுத்துக்கொண்டு, ஐயோ, இப்படி ஆகிவிட்டதே என்று ஆயாசப்படுவதும் இல்லை. அது உண்டா, இல்லையா என்று தெரிந்து நடவடிக்கை எடுக்கிற அரசு இது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னதற்கு நான் முன்பே குறிப்பிட்ட மாதிரி, பட்டப் பாக்கம் என்ற கிராமமே இல்லை. ஆனால் அதற்கு பிறகு அது உண்மையா,இல்லையா என்பதை அங்கே இருக்கிற அதிகாரிகளை நான் விசாரித்து தெரிந்து கொண்ட செய்தியைச் சொன்னேன். இன்றைய பேப்பரில், தினமணி பிரிண்ட் செய்கிற அதே இடத்தில் பிரிண்ட் ஆகிற எக்ஸ்பிரசில் இந்தச் செய்தி வந்திருக்கிறது.அதை தாசில்தார் விசாரித்து,மறுத்திருக்கிற செய்தியும் வந்திருக்கிறது. அதையும் படித்துப் பார்த்து விட்டு, கடைசியிலே சொல்லுங்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நம்முடைய அருமைச் சகோதரர் சுந்தரராஜன் அவர்கள் பேசும் பொழுது, சென்னையிலே உள்ளவர்கள் எல்லாம் தண்ணீர் பஞ்சத்தினாலே வெளியே போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மத்திய அரசிலே இருந்து வந்த குழு எல்லா மாவட்டங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, சென்னைக்கு வந்து சென்னையையும் சுற்றிப் பார்த்துவிட்டு, அந்தக் குழுவினுடைய தலைவர், விவசாயத் துறையினுடைய இணைச் செயலாளராக இருக்கிற திரு. ஆ.கே. ஸ்ரீவத்சவா அவர்கள் பேசுகிறபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

''சென்னை நகருக்குக் குடிநீர் சப்ளை செய்யும் பூண்டி, ரெட் ஹில்ஸ், மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகள் எல்லாம் தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கின்றன. அப்படியிருந்தும் அரசு சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் மூலமாகக் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கை களைச் சிறப்பாகச் செய்திருக்கிறது என்று அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. சுந்தரராஜன் அவர்களுக்கு நான் ஒருவிதத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ளக்கூடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு நகரங்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கின்ற அரசு என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்; அதைவிடக் கிராமங்களை நன்கு முன்னேற்ற வேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்கின்ற அரசு என்பதும் உங்களுக்கெல்லாம் தெரியும் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒன்றை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நகரங்களிலேயிருந்து கிராமங்களை நோக்கி இன்றைக்கு மக்கள் செல்கிறார்கள் என்றால் அந்த அளவிற்குக் கிராமங்கள் நல்லமுறையில் இருக்கின்றன என்பதை அவர்கள் மறைமுகமாகவோ அல்லதுநேர்முகமாகவோ தெரிந்தோ தெரியாமலோ ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் ஏனென்றால் அவர்கள் கிராமத்திலே இருப்பவர்கள், எனவே கிராமங்கள் மிக்க நல்ல முறையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே உள்ள பெரும்பாலான மக்கள் கிராமங்களிலே தான் வாழ்கிறார்கள். ஆகவே, பெரும்பாலான மக்கள் நல்ல சுபிட்சத்துடன் இருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் சொன்னது நல்லதொரு எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இம்மாதிரி இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது செல்லாது என்றெல்லாம் சொன்னார்கள். சட்டத்தைக் கொண்டு வந்த பொழுதே இந்த அவையிலேயே மிகத் தெளிவாகச் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஓயாமல் அண்ணாவின் வழியில் நடக்கின்ற இந்த அரசையும்,புரட்சித் தலைவரவர்களையும் உள்ளேபாராட்டியது போதாது என்று நான் எங்கெங்கே சென்றாலும் பாராட்டினார்கள். அப்படிப் பாராட்டிய ஒரு சட்டத்தை, இந்த நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு இருக்கின்ற 21 பெரிய மாநிலங்களில் நிலச் சீர்த்திருத்தச் சட்டம் கொண்டு வரும் பொழுது எல்லாக் கட்சிகளும் ஒருமுகமாக ஆதரித்த சட்டம் இந்த முன்வடிவுதான். ஆனால் 1960 மூலச் சட்டம் என்று கொண்டு வந்து 1961—ஆம் ஆண்டில் நிறைவேற்றிய பொழுது இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபொழுது பலமுறை வெளியேறியிருக்கிறார்கள், ஆனால் இப்பொழுது வந்த இந்தச் சட்டத்தை எல்லோரும் ஆதரித்தார்கள். காங்ரஸ்காரர்கள் ஆதரித்தார்கள்: திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆதரித்தார்கள். அதற்குப் பிறகு இன்றைக்குத் திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறது.

அதற்கு அவர்கள் இரண்டு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இது பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது எனவே, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது ஒன்று, அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததுதான். இன்னொன்றும், நீதி மன்றத்திற்குச் சென்றால் இது செல்லாது என்று.





இதன் மூலச் சட்டத்தையே 9—வது ஷெட்யூலில்தான் சேர்த்திருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், 9-வது ஷெட்யூலில் சேர்த்து, எல்லாவற்றிற்குமே சட்டப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதற்கும் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு மனம் இல்லை. எனவே, வழியில்லை. மனம் இருந்தால் நிச்சயமாக வழி இருக்கும். ஆனால் மனம் இல்லை என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றி அனுப்பும்பொழுது அதிக சில தவறுகள் இருந்தால் இங்கே உள்ள சட்டத்துறையைச் சேர்ந்த செயலாளரை அழைத்து நன்றாகச் செய்யும்படி ஆலோசனை சொல்லியிருக்கலாம். ஆனால் மனம் இல்லை, வழிஇல்லை. நாம் என்ன செய்ய வேண்டும்?

உழுபவர்களுக்கு நிலத்தை இந்த அரசு சொந்தமாக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவரவர்கள் பலதடவைகள் சொல்லியிருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன், நிலத்தை உழுபவர்களுக்கு அந்த நிலத்தை அவர்களுக்கே, நிச்சயமாக உழுபவனுக்கே சொந்தம் என்ற சட்டத்தை கொண்டு வந்து இங்கேயே அரசு நிறைவேற்றும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கிருக்கின்ற மகிழ்ச்சி என்பது ஒருபுறத்தில் இருக்க, அதேநேரத்தில் எனக்கிருக்கின்ற சங்கடம் என்னவென்றால், அதைக் கொண்டுவந்து நிறைவேற்றுகின்றபொழுது உங்களிலேயே பலர் அதை ஆதரித்தும் ஆதரிக்காமலும் இருந்து விடுவீர்களோ என்பதுதான். (குறுக்கீடு) எல்லோரும் ஆதரித்தால் மகிழ்ச்சித்தான். ஆனால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும்பொழுது அங்கேயும் விரைவில் நிறைவேற எங்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அதுமட்டுமல்ல இங்கே சொல்கிறபோது இது காலங்கடந்து கொண்டுவந்தோம் என்று சொன்னார்கள். எல்லா மாவட்டங்களையும் சென்று பார்த்துவிட்டு, கூடுதல் செயலாளர், வேளாண்மைத் துறை அதிகாரி சொல்கிறபோது

About the criticim that the Tamil Nadu Government had delayed the submission of the drought relief report we cannot say that the report is delayed. After all the crop conditions will be known only at the end of January. If the Government had sent the report earlier, perhaps it mightnot hava been full and complete.

என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் அதுமட்டுமல்ல. நான் இங்கேயே தெரிவித்தேன்; எதையுமே அரசியல் ஆக்கக்கூடாது. ஏன் அரசியல் ஆக்கவேண்டும்? நான் இங்கே சொல்கிறபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். நான் சொல்வதையும் மற்றவர்கள் சொல்வதையும் அவைக் குறிப்பிலே போட வேண்டாம் என்று. அதற்குக் காரணம் அதைப் போட்டு விட்டால் அது நமக்கு பாதகமாக வந்துவிடும் என்று.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இரண்டு பருவக்காற்றைப் பின்பற்றி இருக்கிறது. இரண்டு பருவக் காற்றும் வந்த பிறகு தான் நாம் முடிவு எடுக்கவேண்டுமென்று நான் இங்கே தெரிவித்தேன். ஆனால் உங்களுக்கு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்குப் பிறகு என்ன நிலைமையோ அதையெல்லாம் பார்த்துவிட்டுமுன் கூட்டியே தெரிவிக்கிறேன். என்று நான் தெரிவித்திருக்கிறேன். ஆகையால் இதில் காலதாமதம் இல்லை என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள், பிற மாநிலங் களுடைய பருவக் காற்று நிலைமைகள் வேறு என்று நமக்குத் தெரியும்.

இதிலிருந்து என்ன மகிழ்ச்சி என்றால்—இப்போது அரசைப் பற்றி நல்ல உருப்படியான, நியாயமான குற்றச்சாட்டைச் சொல்லமுடியாத காரணத்தால், ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கை எடுத்துச் சொல்லவேண்டுமென்று நீங்கள் காலதாமதம் செய்துவிட்டீர்கள் என்று சொல்வது—வாச்சாங்குளி என்று சொல்வார்கள். (சிரிப்பு) விளையாட்டிலே தோற்றுவிட்டால். உடனே ஜெயித்தவர்களிடம் ஆட்டம் சரியில்லை என்று ஓடி விடுவார்கள். அதற்கு வாச்சாங்குளி என்று சொல்வார்கள். அதைப் போல் நாம் எல்லாம் கிராமத்தில் இருக்கிற விளையாட்டுப் பிள்ளைகள் இல்லை என்றும், உரிய காலத்தில் நாம் அதை அனுப்பியிருக்கிறோம். அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். மனசாட்சி ஏற்றுக்கொள்ளும் ஆனால் பணம் வருமோ, இல்லையோ, இன்றைக்கு இருக்கின்ற சங்கடங்களிலே 51 கோடி ரூபாய் அனுப்பியிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் மட்டுமல்ல, அங்கே வந்தவர்கள்—நாங்கள் நியமிக்கப் பட்டவர்கள் அல்ல. என்னுடைய சொந்தக்காரர் அல்ல, என்னுடைய அண்ணன், தம்பி இல்லை. அது மத்திய பேரரசிலிருந்து வந்திருக்கிறார்கள், அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நீங்கள் செய்தித் தாள்களிலே படித்துவிட்டு, திரும்பச் சொல்லியிருக்காவிட்டால். இங்கே கால நேரம் வீணாயிருக்க வேண்டியதில்லை—எனக்கு.

மற்றொன்றை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணி சரியாக இங்கே அதிகாரிகளால் செய்யப்படவில்லை என்று. அதற்கு இடர்ப்பாடு இப்போது வந்ததா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகா? புரட்சித் தலைவர் முதலமைச்சராக



வந்தபிறகா? எத்தனையோ தரம் 51, 52, 58, 61, 71 ஆகிய ஆண்டுகளில் வந்திருக்கிறது. இம்மாதிரியாக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே, நாடாளு மன்ற உறுப்பினர்கள் எல்லோருமே கட்சி பாகுபாடு இல்லாமல் போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. எந்தெந்த ஊரிலே ஒரு எம்.எல்.ஏ. இல்லையோ, அங்கே மாற்றுக் கட்சிக்காரர்களைப் போட்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும், அதற்குப் பிறகு யாருமே செய்யாது. நாங்கள் செய்வதை நீங்கள் சொல்வது எதை நீங்கள் சொன்னால் நாங்கள் செய்வோம் என்று, எங்கள் மீதுள்ள நம்பிக்கையில் சொல்கிறீர்கள். எங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை நான் பாராட்டுகிறேன். ஆகையால் எங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நாங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லாமா வட்டங்களிலும் வறட்சிக் குழுக்கள் போட்டாகிவிட்டது. அவைகளில் எலலாம் நீங்கள் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய சௌகரியத்தைக் குறித்து இப்போது 3 நாள் லீவு வருகிறது. இந்த 3 நாளில் நீங்கள் 1-ந்தேதி உங்களுடைய தொகுதியைச் சுற்றிப் பாருங்கள். அந்தத் தொகுதியிலே என்ன குறையிருக்கிறது என்று பாருங்கள். பார்த்துவிட்டு 2 ஆம் தேதி 10 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே வறட்சி நிவாரணக் குழுக் கூட்டம் போடப்பட்டாக வேண்டும் என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசின் சார்பிலே தெரிவித்து இருக்கிறேன். நீங்கள் எல்லோரும் 2 ஆம் தேதி போய் அவர்களிடம் குறையைச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு மறுக்கூட்டம் போடுகிறபோது நீங்கள் சொல்லிய குறைகள் நீக்கப்பட்டு இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள். அதை நான் சொல்வதற்கு காரணம் சென்ற ஆண்டு இப்படி வருகிறபோது, இந்த வறட்சிக் குழு போடுகிறபோது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே முதல் குழுவிலே பேசியதை எல்லாம் நான் படித்திருக்கிறேன். 11 மாவட்டங்களைப் பற்றியும் படித்திருக்கிறேன். 2, 3 தடவைகள் குழுவின் கூட்டத்திற்குப் போகிறபோது, முதல் தடவை பேசுகிறபோது கடுமையாக பேசியிருக்கிறார்கள். இரண்டாம் தடவை கடுமை குறைந்திருக்கிறது. மூன்றாவது கூட்டத்திலே பேசும்போது பாராட்டியிருக்கிறார்கள். 4 வது தடவை போகாமலேயிருந்து இருக்கிறார்கள். ஏன் என்றால் காரியம் நன்றாக நடக்கிறது என்றும், அதனால்தான் நாங்கள் போகவில்லை என்றும் சொல்கிறார்கள். அதிலும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள், ஆமாம். நான் பாராட்டுகிறேன் என்று சென்ற தடவை சொல்லியிருக்கிறார்கள். இப்படித்தான் காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வேலைகள் எங்கே நடக்கிறது. எந்த இலாக்காவிலே நடக்கிறது. எத்தனை ரூபாய்க்கு நடக்கிறது, யார் செய்கிறார்கள் என்ற பட்டியலை எல்லாம் அந்தக் குழுவிலே உங்களுக்கு எல்லாம் கொடுக்கச் சொல்கிறேன். இதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும். இவ்வளவும் செய்திருக்கிறோம். இதற்குப்பிறகு தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களிடத்திலே; நம்மிடத்திலேயிருக்கிறது. யாருக்காவது கெடுதல் செய்ய வேண்டும் என்றால், அவனைக் கெடுதல் செய்யச் சொல்லிவிட்டு கடைசியாக கெடுதல் செய்து முடித்த பிறகு நீங்கள் கெடுதல் செய்கிறீர்களே என்று சொல்வது, அது நல்ல எண்ணத்திலே செய்வதல்ல, நல்ல எண்ணத்திலே செய்வதாக இருந்தால், தவறு செய்யும்போது அதைச் சொல்லிவிடுவதுதான். ஆகையினால் நாங்கள் தவறு செய்யக்கூடாது என்று நல்ல எண்ணத்திலே நீங்கள் அதற்கு முன்னாலேயே சொல்கிறீர்கள். இதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள் எங்களைச் செய்ய விட்டுவிட்டால் எங்கள் மீது உங்களுக்கு நல்ல நம்பிக்கை இல்லை என்றும், கெடுதல் செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். ஆகையினாலே நீங்கள் எல்லாம் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறுபட்ட விஷயங்களைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள் அவ்வளவுக்கும் நான் எப்படி பதில் சொல்வது என்பது இப்போது முடியாது. நம்முடைய சுந்தரராஜ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கிராம அதிகாரிகளை ஒரே சமயத்திலே வெளியே அனுப்பிவிட்டீர்களே என்று, அவர்களை வெளியே அனுப்பியதை இவர்கள் மனதார பாராட்டுகிறார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஏன் என்றால், அவர்கள் பேச்சிலே வந்தது. இந்த கிராம அதிகாரிகள் எங்கே நிலத்தைப் போய்ப் பார்த்தார்கள்? திண்ணையிலே உட்கார்ந்து கொள்கிறார்கள். வருடம் பூராவும் வேலை செய்வதில்லை. அங்கே உட்கார்ந்து கொண்டே கணக்கு எழுதுகிறார்கள். அப்படிப் பட்டவர்களை எல்லாம் ஒரே சட்டத்தின் மூலமாக நீங்கள் அனுப்பியதை நான் பாராட்டுகிறேன் என்று சொல்லாமல் இப்படிப்பட்டவர்களை எல்லாம் நீங்கள் வெளியே அனுப்பி விட்டீர்கள் என்று சொல்கிறார்கள் என்றால், அவர்களை அனுப்பியதை பாராட்டுகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன், இந்த பாராட்டிவிட்டால் அங்கே ஊருக்குப் போனவுடனே கிராம அதிகாரிகள் நீங்கள் ஏன் அப்படிப் பேசிவிட்டீர்கள் என்று அவரைத் தொந்திரவு செய்வார்கள். அவர்களுடைய நண்பர்கள் சொந்தக்காரர்கள்கூட அதிலே இருப்பார்கள். ஆகவே இதை நீங்கள் மனதாரப் பாராட்டுகிறீர்கள் என்று நினைக்கிறேன். இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறீர்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கிராம அதிகாரிகள்





எவ்வளவு அக்கிரமங்களைச் செய்தார்கள் என்பதை நீங்களே தெரிவித்து இருக்கிறீர்கள். எனவே இந்த அரசு செய்த நல்ல காரியத்தை நீங்கள் பாராட்டியதற்கு உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 2.10.)

நிலஉடமை மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில். ஏறத்தாழ 30 ஆண்டு காலமாக அந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இன்றைக்கு அது 28 சிறப்புப் பணியாளர் களின் உதவியால் 30 வட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது. அது போதாது, மேலும் கூடுதலாக அதை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவருகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அந்த நடவடிக்கைக்காக, அதைப் பற்றி ஸ்டான்டிங் பைனான்ஸ் கமிட்டியில் பேசுகிறபோது, இது நல்ல காரியம் என்றெல்லாம் எடுத்துச்சொல்லி, இன்னும் 10 வட்டத்திற்கு கூடுதலாகச் செய்வதற்கு நிதி வேண்டும் என்று கேட்ட நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு ஏன் 10 வட்டங் கள் என்று மட்டும் கேட்கிறீர்கள், 80 வட்டங்களில் செய்யுங்கள் என்று அனுமதி கொடுத்தார்கள். நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள் பணமே இல்லை என்று சொல்கிறபோது எப்படி இதைச் செய்வீர்கள் என்று கேட்கலாம். இது ஒரு நல்ல காரியம் என்பதால், 5 ஆண்டுகளில் செய்து முடிக்கலாம் என்று எண்ணியிருந்ததை இரண்டாண்டு காலம் அல்லது ஏறக்குறைய 2½ ஆண்டுக் காலத்தில் அதைச் செய்து முடிப்பதற்கு இந்த அரசு முயற்சித்துக்கொண்டு இருக்கிறது. இதன் மூலம் 7000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி இந்த அரசு பலவிதமான விஷயங்களைச் செய்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பற்றிச் சொல்கிறபோது, இன்றைக்கு இருக்கிற முறை பற்றிச் சொல்கிறபோது, இன்றைக்கு எல்லோருமே சொன்னார்கள். எங்கள் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள்; இந்த அரசு வந்த பிறகு இந்த வகையில் என்னென்ன காரியங்களைச் செய்து இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வருவாய் ஆய்வாளர்கள் அவர்களுக்கு மாதத்தில் 30 நாட்களும் வேலை. அவர்கள் எங்கே நிற்பார்கள், அவர்களுக்கு அலுவலகம் இல்லை. இந்த நிலையை மாற்றி, இன்றைக்கு அவர்களுக்கு அலுவலகம் உருவாக்கித் தந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) (1983 மார்ச் 25

அவர்களே எல்லா வேலைகளையும் பார்க்கவேண்டியிருப்பதால் அவர்களுக்கு அலுவலகம் அமைத்துக் கொடுத்தது மட்டுமல்ல, இன்றைக்கு 770 புதிய பிர்க்காக்களை நாம் உருவாக்கி, அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைத்து, அதன் மூலம் மக்களுக்குப் பயன் கிட்டும்படி செய்து இருக்கிறோம்.

துணை வட்டங்களைப் பொறுத்தவரையில். இந்த அரசு துணை வட்டங்கள் வைத்துக்கொள்வது தேவையில்லை என்று கருதுகிற காரணத்தால், இருக்கின்ற 32 துணை வட்டங்களையும் வட்டமாக மாற்றியிருக்கிறோம். ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டுமானால், சாதாரணமாக நடைமுறை செலவு ரூ. 35 லட்சமாகிறது. நடைமுறை செலவு இல்லாமல், ஆரம்ப செலவு 3 கோடி ரூபாய். இதையெல்லாம் அரசு எண்ணிப் பார்த்து, தேவையேற்படுகிறபோது, அதையெல்லாம் செய்யும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

குடியிருப்புச் சட்டத்தைப் பற்றி சொன்னார்கள். குடியிருப்புச் சட்டத்தின் மூலம் இன்றைக்கு எவ்வளவு பேருக்கு பட்டா கொடுக்க முடியுமோ அவ்வளவு பேருக்கு நாம் கொடுத்து இருக்கிறோம். குடியிருப்புச் சட்டத்திலே அவர்கள் யார் நிலத்தை வைத்து இருக்கிறார்கள் என்பது பிரச்னை இல்லை. அரசு நிலமாக இருந்தாலும் சரி, தனியார் நிலமாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் அதை ஆர்ஜிதம் செய்து, அரசின் செலவிலேயே அதைப் பட்டா செய்து கொடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கேட்டார்கள். கிராம நிர்வாக அதிகாரிகளைப் போடுகிறபோது யார் யாருக்குக் கொடுத்தீர்கள் எவ்வளவு பேருக்குக் கொடுத்தீர்கள், பேக்வேர்ட் எவ்வளவு, பார்வார்ட் எவ்வளவு என்று கேட்டார்கள். இங்கே நாங்கள் அந்த எண்ணிக்கையை யெல்லாம் கொடுத்து இருக்கிறோம, ஆதித்திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் பெண்கள் எவ்வளவு பேர்கள் என்று கொடுத்து இருக்கிறோம், மற்றவர்கள் பார்வேர்ட் என்று எடுந்துக்கொள்ள வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிலே இரண்டாம் பக்கத்திலே சொல்லப்பட்டு இருப்பதை நான் படிக்கிறேன். 'தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 79 பேரும், பிற்பட்ட வகுப்டைச் சேர்ந்தவர்கள் 3278 பேர்களும், பெண்கள் 69 பேரும்' என்றுதான் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்களிலே பார்வேர்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு என்று கொடுக்கப்படவில்லை. அவர்கள் யாரும் இதிலே சேர்க்கப்படவில்லையா? ஒட்டு மொத்தமாக எல்லோருமே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தானா? மற்றவர்கள் அதிலே இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 25]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போதுதான் எஸ்.சி. போட முயற்சி செய்கிறோம். கிராமங்களில் இந்தப் பதவிக்கு தேவையான ஆதிதிராவிட மக்கள் இருக்கமாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே ஆதிதிராவிட மக்களிலிருந்து 79 பேர்களை நியமித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 1889 பேர்கள், பாக்வெர்டு கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் 3278 பேர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், அந்த பகுதிநேர கிராம அதிகாரிகள் பல அக்கிரமங்கள் செய்தார்கள் என்று. அவர்கள் எல்லாம் இன்றைக்கு நீக்கப்பட்டுவிட்டார்கள். அந்த இடத்தில் ஆதிதிராவிட மக்கள் 18 சதவீதம் பேர் கண்டிப்பாக நியமிக்கப்படுவார்கள், ஆகையால்தான் இந்தச் சட்டம் கொண்டுவந்தது எவ்வளவு நன்மை என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆதிதிராவிட மக்கள் இதில் 18 சதவீதம் நிச்சயமாக வருவார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவரவர்களே. நான் மாண்புமிகு அமைச்சரிடம் கேட்க விரும்புவது, இந்த தோட்டி தலையாரி போன்றவர்கள் 60 வயதானவுடன் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கைக்கு என்ன பாதுகாப்பு? ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இங்கே பேசும்போது சொன்னார்கள். அவர்கள் எல்லாம் வெள்ளைக்காரன் காலத்திலே 3 ரூபாய் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டவர்கள். கிட்டத்தட்ட அவர்கள் 20,000 பேர்கள் வேலையை விட்டுப் போகப் போகிறார்கள். அவர்களை வேலையிலிருந்து நீக்க திட்டமிட்டு விட்டீர்கள் காரணம் எஸ்.எஸ்.எல்.சி படித்திருக்க வேண்டும், சர்டிபிகேட் வேண்டும் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு நீங்கள் சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்பதினால் 40, 45 வயதானவர்கள் எல்லாம் கூட வேலையை விட்டு போகவேண்டியிருக்கிறது. அவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள், படிக்க வசதியற்றவர்கள். முன்னால் வேலையில் அமர்த்தும்போது எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்று சொன்னார்கள். அவர்கள் வேலை முக்கியமாக கஜானாவுக்குப் போய்வர வேண்டும் வேறு எழுதுகிற வேலை ஒன்றும் அவர்களுக்கு இல்லை. இப்போது அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்து, சர்டிபிகேட் வேண்டும் என்று சொல்வதால் வரும் ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து கிட்டத்தட்ட 20,000 பேர்கள் வீட்டுக்குப் போகப்போகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். அந்தக் கஷ்டத்தைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது அவர்களுக்கு ஏதாவது உதவி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், 60 வயதுக்கு

மேற்பட்டவர்கள் எல்லாம் வீட்டுக்குப்போனால் அவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டார்கள். அரசு அதுபற்றி ஆராயும்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சிப் பொதுச் செயலாளர் திரு. மாணிக்கம் எம்.எல்.சி அவர்கள் ஒரு அறிக்கை பட்டினிச் சாவு பற்றி வெளியிட்டிருந்தார்கள். அதுபற்றி இன்றைக்கு பத்திரிகையில் வந்திருக்கிற ஒரு செய்தியை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ''உண்மை நிலையைக் கண்டறிய நமது விழுப்புரம் நிருபர் எம். ஜெயதேவன் பல்வேறு இடங்களுக்கு சென்று திரட்டிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விழுப்புரம் தாலுகாவில் உள்ள பாக்கம் கிராமத்தில் 1982 டிசம்பர் கடைசியிலும் 1983 ஜனவரி முதலிலும் கடைசியாக 45 நாட்களுக்கு முன்பும் 11 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அவர்களில் 10 பேர்கள் காலராவாலும், ஒருவர் அதிகம் குடித்ததாலும் மாண்டு போனார்கள் என தெரியவந்துள்ளது,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது கிளாரிஃபிகேஷனில் வருமா? அமைச்சரவர்களிடம் அதற்கெல்லாம் பதில் இருக்காது.

திரு. சோ. அழகர்சாமி: நான் முடித்துவிடுகிறேன். பத்திரிகையில் அவர்களுடைய நிருபரே போய் சேகரித்த தகவலில் காலராவால் இறந்திருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னால் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் திரு. சிவசாமி அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதில் சொல்லும்போது தமிழ்நாட்டில் காலராவே இல்லை; எதை எதையோ சாப்பிட்டு இறந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியல்ல. பட்டினி வந்தால், எதையாவது சாப்பிட்டு, காலரா வருகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, நான் முதலிலே இங்கே குறிப்பிட்டதைதான் அவர்கள் திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். பட்டினிச் சாவு என்பதற்கும் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. உங்கள் அறிக்கையிலும் அப்படி வந்திருக்கிறது. காலரா இல்லை என்றும் வந்த நோய்க்கு உரிய நடவடிக்கை மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் எடுத்து, நோயைப் போக்கியிருக்கிறார்கள் என்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் பட்டினிச் சாவுக்கும் நோய்வாய்ப்பட்டு இறப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இன்றைக்கு பட்டினிச்சாவால் தமிழ்நாட்டில் யாரும் இறக்கவில்லை. இனிமேலும் இறக்க இந்த அரசு விடாது என்று இந்த அவையிலே உறுதிகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.



(பிற்பகல் 2,20)

கோரிக்கை எண் 1—நிலவரித்துறை.

திருவாளர்கள் சு. பாலன், மு. அப்பாதுரை ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன,

திருவாளர்கள் சி. பழனிமுத்து, எம். செல்லமுத்து: எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.—

''மானியக் கோரிக்கை எண்–நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,89,41,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 41—இயற்கையின், சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

திருவாளர்கள் கே. கல்லன், என். வரதராஜன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திரு. தி. க. நல்லப்பன்: அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.—

''மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 17,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

211. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 1978—79 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

212. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் 1981 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

213. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1977-78-ஆம் ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண். 1-நிலவருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

116. வருவாய்த் துறையின் 1983-84-ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ் ஆங்கிலம்).

117. தமிழ்நாட்டின் சிறுதொழில் வளர்ச்சியில், சிட்கோவின் பங்கு என்ற புத்தகம் (தமிழ்).

118. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்; 1983 என்ற புத்தகம் (தமிழ்).

## இணைப்பு—I

(..97..ம் பக்கத்திலுள்ள உடுகுறியிட்ட வினா எண் 540-க்கான விடையைக் காண்க.)

(அ) மற்றும் (ஆ): கோவில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் வாடகை 1974-க்கு முன் குறைவாக இருந்தது. இதற்குக் காரணம் 1960-ஆம் ஆண்டு சென்னை (கட்டிடங்கள் மற்றும் வாடகை நிர்ணயம் சட்டத்தின் விதிகளின்படி கோவில்களின் கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயிக்கப்பட்டு வந்ததேயாகும். அரசு தனது ஆணை எண். 1938-உள்துறை, நாள் 12-8-74-ல் அறநிலையங்களுக்குச்

சொந்தமான கட்டிடங்கள் மற்றும் மனைகள் ஆகியவைகளுக்கு மேற்கூறிய சட்டத்தில் இருந்து வாடகை நிர்ணயம் செய்வதற்கு விலக்களித்தது. அதன் பிறகு அறநிலையங்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1976 நவம்பரில் நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப் பெற்றன. சம்பந்தப்பட்ட துணை ஆணையரைத் தலைவராகவும், அறநிலையத் துறையின் செயல் பொறியாளரை தொழில் நுட்ப உறுப்பினராகவும், ஆலயச் செயல் அலுவலரை செயலாளராகவும் கொண்டனவாக அவை இருந்தன. இக்குழுக்கள் பொதுப்பணித்துறை பின்பற்றும் விதிமுறைகளின் படி கட்டிடங்களுக்கு வாடகையினை நிர்ணயித்தன. 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை சட்டப்பிரிவுகளின்படியும் அச்சட்டத்தின் பாற்பட்ட விதிமுறைகளின்படியும் அறநிலையக் கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஆலயத்தின் அறங்காவலர் குழுவினை சார்ந்தது. அநேகமாக எல்லா பெரிய ஆலயங்களுக்கும் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும் அறநிலையத் துறையின் பொறியியல் பிரிவின் செயற் பொறியாளர் பதவி 1-2-1979 முதல் நீக்கப்பட்டதாலும், மேற்குறிப்பிட்ட நியாய வாடகை நிர்ணயக்குழுக்கள் தேவையில்லை என்று கருதப்பட்டு 1-2-1979 முதல் அக்குழுக்கள் நீக்கப்பட்டன. வாடகை உயர்வினை முறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்ட வழிகாட்டி முறைகள் பின்வருமாறு:—

குடியிருப்புக் கட்டிடங்கள் (Residential Buil ings) மற்றும் குடியிருப்பு ல்லாத கட்டிடங்கள் (Non-Residential Buil ings) அதாவது மருத்துவமனை, பள்ளிகள், அரசு அலுவலகங்கள் உள்ள கட்டிடங்கள்,- (1) இந்த கட்டிடங்களுக்கு 1382-ம் பசலி ஆரம்பித்தது. முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும் அல்லது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கொடுக்கப்பட்ட அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அவைகளைத் திருத்தி 1385-ஆம் பசலியில் உள்ள வாடகையை விட அரை பங்கு (50 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயிக்கலாம். (2) 1382-ம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும அல்லது நியாய வாடகை ஏற்கனவே உள்ள அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அவைகளை திருத்தி 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 3/4 பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம். (3) 1382-ம் பசலிக்கு முன்பு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு இது வரை அந்த வாடகை உயர்த்தப்படாமலோ நிர்ணயம் செய்யப் படாமலோ இருந்தாலும் அவைகளுக்கு 1382—ம் பசலியில் உள்ள வாடகையுடன் ஒரு பங்கு 100 சதவிகிதம்) சேர்த்து நியாய வாடகை நிர்ணயம் செய்யலாம்.



### கடைகள் வியாபார நோக்குள்ளவை (Commercia Buildings)

இப்பிரிவில் கடைகளுக்கும் மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகளுக்கும் விடப்பட்ட கட்டிடங்கள் அடங்கும். இம்மாதிரியான கட்டிடங்களுக்கு கீழே கொடுத்துள்ள வழிகாட்டி முறைப்படி வாடகை உயர்வு செய்து நியாய வாடகைக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து தக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

(1) ஆலயங்களின் மூலம் வசதிகள் செய்து தரப்பட்டுள்ள கட்டிடங்கள், கடைகள், மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகள் வாடகைக்கு விடப்பட்டு 1385-ம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமலோ, அல்லது திருத்தம் செய்யப் படாமலோ இருந்தால் அவைகளுக்கு 1385-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 3/4 பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(2) 1382-ம் பசலி முதல் இக்கட்டிடங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்படாமல் அல்லது திருத்தப்படாமல் இருந்தால் 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 1—1/8 பங்கு (112.50) சதவீதம் சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(3) 1382-ம் பசலிக்கு முன்பிருந்த வாடகை உயர்த்தப் படாமல் அல்லது திருத்தம் செய்யப்படாமல் இருக்கும் கட்டிடங்களுக்கு 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 1 1/2 பங்கு (150 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

### ஆலயத்தினால் எவ்வித வசதியும் செய்து தரப்படாத கடைகள் மற்றும வியாபார நோக்குள்ள கட்டிடங்கள்;

(1) ஆலயங்களின் மூலம் கடைகளுக்கும் மற்ற வியாபார நோக்குள்ளவைகளுக்கும் (தையல், அங்காடிக்கடை முதலியவை) வாடகைக்கு விடபபட்டிருக்கும் கட்டிடங்களில் எவ்வித வசதிகளும் செய்து தரப்படாமலும் இருந்தால் மேற்படி கட்டிடஙகளுக்கு குடியிருப்புக் கட்டிடங்களுக்கு முதலில் குறிக்கப்பட்டுள்ள வழிக்காட்டி முறைகளின்படி வாடகை உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செயயலாம்.

(2) குற்றாலம் போன்ற இடங்களில் பருவ காலத்தில் மட்டும் வியாபாரம் நடைபெறுவதால் பருவம் அல்லாத மற்ற காலங்களுக்கு இப்பொழுது நிர்ணயிக்கப்படும் பருவ கால வாடகையில 3/4பங்கு வசூலிக்கலாம்.

## இணைப்பு II

(986..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 545-க்கான விடையைக் காண்க).

(அ) மற்றும் (ஆ):

இம்மாநிலத்தில் படிப்படியாக எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்த கொள்கையளவில் முடிவெடுக்கப்பட்டு 1981-82–ஆம் ஆண்டில் 200 இடங்களும் 1982-83 ஆம் ஆண்டில் மேலும் 10 இடங்களிலுமாக, மொத்தம் 210 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) மற்றும் (ஈ): திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்கணும் 17 இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

(1) ஆலங்குளம்
(2) சொக்கம்பட்டி
(3) கீழ் இரால்
(4) மெஞ்ஞானபுரம்
(5) முதலூர்
(6) முக்கூடல்
(7) நாகாலாபுரம்
(8) ஒட்டநத்தம்
(9) பக்தமடை
(10) புதுக்கோட்டை
(11) சேந்த மரம்
(12) திசையன் விளை
(13) உக்கிரன்கோட்டை
(14) வடக்கன்குளம்
(15) வல்லநாடு
(16) ஏரல்
(17) முனஞ்சிபட்டி.

மேலே கண்ட அனைத்து சித்த மருத்துவப் பிரிவுகளும் செயல்படத் துவங்கியுள்ளன.



## இணைப்பு III

(..995 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண்.549க்கான விடையைக் காண்க.)

(அ) கூட்டுத்துறையில் தன்னால் ஆரம்பிக்கப்பட்டத் தொழில் பிரிவுகளை குறி பிட்ட காலத்தில் முடிப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) கடனுதவி அளிக்கிறது. டிட்கோ அளிக்கும் கடனுதவி மற்ற நிதி நிறுவனங்கள் அளிக்கும் கடனுதவியினின்றும் வேறுபட்டது. 50 விழுக்காடுகள் அல்லது 26 விழுக்காடுகள் பங்கு மூலதனமுள்ள தன்னால் மேற்கொள்ளப்படும் தொழிற் பிரிவுகளுக்குத்தான் டிட்கோ கடன் வழங்குகிறது. தொழிற் பிரிவு வேறு நிறுவனங்களிடமிருந்து கடனுதவியை பெற இயலாத போதும் ஆரம்பக் கால கட்டத்தில் தொழிற்பிரிவை விரைவாக செயற்படுத்தவும் மூடி விடும் நிலையிலுள்ள தொழிற்பிரிவை வாழ வைக்க சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்தோடும், இது போன்ற விசேஷ சூழ்நிலைகளில் தான் டிட்கோ கூட்டுத்துறை தொழிற்பிரிவுகளுக்கு கடன் வழங்குகிறது. வழங்கிய கடனுக்குரிய வட்டியை மூன்று மாதத்திற்கு ஒரு முறை இலாபத்தில் இயங்கும் தொழிற் பிரிவுகள் செலுத்துகின்றன. நட்டத்தில் இயங்கும் தொழிற் பிரிவுகளை அவற்றின் நலனைக் கருதி வட்டியை செலுத்தும் படி டிட்கோ கட்டாயப் படுத்துவதில்லை. ஏனெனில், கடன் எந்த காரியத்திற்காக கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்றதாய் இருக்காது. இந்நிறுவனங்கள் இலாபம் ஈட்ட முற்படும் போது வட்டியையும் கடனையும் வசூலிக்க தக்க நடவடிக்கைகளை டிட்கோ மேற் கொள்ளும்.

(ஆ) டிட்கோ தன்னிடம் கடன் வாங்கியுள்ள தொழிற் பிரிவுகளில் பொருளாதார நிலையை தனித்தனியே ஆய்வு செய்து வாங்கிய கடனையும் அதற்கான வட்டியையும் குறிப்பிட்ட காலங்களில் திருப்பி தருகின்றனவா என்று கண்காணித்து வருகிறது.

(இ) 31-12–82 நிலவரப்படி நிலுவையிலுள்ள வட்டி பாக்கி சுமார் ரூ. 2.74 கோடி.

## இணைப்பு IV

(1021..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### முன்னுரை.

1. மாநிலத்தின் வருவாய் நிர்வாகத்தில் நிலவரி விதிப்பு நிலவரி வசூல், வேளாண்மை வருமான வரி, நகர்ப் புறநிலவரி ஏனைய பல்வேறு வரிகள் அரசுக்கு சேர வேண்டிய கடன்கள், ஆகியவையும் அடிப்படை நிலவரிப் பதிவேடுகளை வைத்து வருவதும் அடங்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், வருவாய்க் கோட்ட அளவில் கோட்டாட்சியரும் வட்ட அளவில் தாசில்தாரும்

பிர்க்கா அளவில் வருவாய்த் துறை ஆய்வாளரும் கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலர்களும், இப்பணிக்கும் பொறுப்பேற்றனர். வருவாய் கிராமங்கள் இந்த அமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றன. பல ஆண்டுகளாக, வருவாய் நிர்வாகம் முற்றிலும் வருவாய்ப் பணிகளையே மேற்கொண்டிருந்தது. ஒழுங்கு முறைப்படுத்தும் பணிகளையும் கணிசமான அளவிற்கு கவனித்து வந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இந்த வருவாய் அமைப்பு கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. தொன்றுதொட்டு வருகின்ற இம்முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது. சாதாரண காலங்களில் மட்டுமின்றி புயல், வெள்ளம், வறட்சி, தீ விபத்துகள் முதலிய இயற்கை சீற்றங்களின் போதும் இம்முறை செவ்வனே நடைபெற்று வருகிறது. கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பயிரிடுவதற்கு நில ஒப்படை செய்தல். வீட்டு மனைகள் வழங்குதல், பட்டா மாற்றம் செய்தல், பல்வேறு காரியங்களுக்காக சான்றிதழ்கள் வழங்குதல் முதலிய முக்கிய பணிகளை வருவாய்த்துறை கவனிக்கிறது. சென்ற நிதியாண்டில் பல்வேறு துறைகளில் எய்திய சாதனைகளும், நடப்பு நிதியாண்டில் மேற் கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் குறித்த விவரமும் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2, கிராம நிர்வாகம்

2, வருவாய் நிர்வாகத்திற்கு கிராமமே அடிப்படை அமைப்பாகும். பகுதி நேர கிராம அதிகாரிகள் முறை மிகவும் பழமையானது. வளர்ச்சிப்பணிகளுக்கும் சமூக நலப்பணிகளுக்கும் கிராமங்கள் முன்னோடியாக இருப்பதால் கிராம நிர்வாக முறையை தற்காலத் தேவைகளுக்கும், நிர்வாகத் தேவைகளுக்கும் ஏற்றவாறு மாற்றியமைத்து வலுப்படுத்த அரசு கருதியது. எனவே, முழுநேர கிராம நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் படுவதற்காக 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/80) கொண்டு வரப்பட்டது. அது முறைப்படி 1981 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது.

3. அவசரச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட முன்னால் கிராம அதிகாரிகள் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். உச்ச நீதிமன்றம், தமிழ்நாடு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவிகள் நீக்கத்துக்காக தமிழ்நாடு அரசு சட்டம் செய்துள்ளது செல்லும் என்று தீர்ப்பளித்து ரிட் மனுக்களைத் தள்ளுபடி செய்தது. முன்னாள் கிராம அதிகாரிகளில் குறைந்த அளவு கல்வித்தகுதி பெற்று, ஓய்வுப் பெறும் வயது அடையாமல் இருப்பவர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் உடல்நிலைத் தகுதி மற்றும் பணிக்காலத்தில் அவர்கள் அனுபவித்த தண்டனைகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு தகுதியானவர்களைக் கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே



மாவட்ட தகுதிக்காண்குழுக்களும், மாநிலக்குழுவும் 5246 முன்னாள் கிராம அதிகாரிகளை கிராம நிர்வாக அதிகாரிகளாக தேர்ந்தெடுத்துள்ளன, அவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் 79 பேரும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் 3,278 பேரும், பெண்கள் 69 பேரும், அடங்குவர். தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் நியமனம் செய்யப்பட்டு விட்டனர், அவர்கள் தங்களது பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற நில அளவை மற்றும் கிராம நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது

4 மாநிலக்குழுவால் தேர்வு செய்யப்படாத முன்னாள் கிராம அதிகாரிகளில் சிலர் உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்குகள் பைசல் செய்யப்படாமலிருக்கின்றன, எனவே மீதமுள்ள 7,304 பதவிகள் பொறுத்தவரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தேர்ந்தெடுக்கும் நபர்களைக் கொண்டு நிரப்புவது பற்றி மேற் கூறப்பட்ட வழக்குகள் பைசலான பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5 பகுதி நேரகிராமப் பணியாளர்களான கிராம காவலர் கள், கிராமப்பணியாளர்கள், பாசனக் காவலர்கள் ஆகியோர் பணியில் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தனியாக விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கிராமப் பணியாளர்கள் பணி விதிகள் ஆகும். இவர்கள் பணியிலிருந்து ஒய்வுப் பெறுவதற்கான வயது 60 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது

## 3. தனி நபர்க் குழு.

6. மாவட்ட வருவாய் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டுமென்ற கிராம மக்களின் நெடுநாள் கனவு நனவாக, மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் திறனை உயர்த்தி நிர்வாகத்தை சீரமைக்கவும் பொது மக்களின் நலன் கருதி குறைகளை விரைவில் தீர்த்து வைக்கவும் அரசு பலவகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது

.7. திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தனி நபர் குழு 184 பரிந்துரைகளை கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்துவது, பயனற்ற பணியை நீக்கி விடுவது, கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு பணிகளை விரைந்து முடிப்பது, வருவாய் அதிகாரிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, வருவாய்த்துறை அலுவலகங்களுக்குத் திடீரனச் சென்று பதிவேடுகளைச் சோதனையிடுவது, மாவட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட வருவாய் அதிகாரிகளும், நேரடியாகச் சென்று பணிகளைப் பார்வையிடுவது, வட்ட அலுவலகங்களிலும், கோட்ட அலுவலகங்களிலும் சில பதவிகளை ஏற்படுத்துதல், வட்டாட்சியர்களுக்கு ஜீப் வழங்குதல் மாவட்ட ஆட்சியர்களும் கோட்டாட்சியர்களும் சுற்றுப்பயணத்தில்

அதிக காலத்தைக் கழிப்பதைக் குறைப்பது, நிலவரி முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, நிலத்தை கையகப்படுத்தும் முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, மாவட்ட ஆட்சியர்களுக்கும் கோட்டாட்சியர்களுக்கும் மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும் வட்டாட்சியர்களுக்கும் நிதி சம்பந்தமாகவும் நிர்வாகச் சம்பந்தமாகவும் அதிகாரங்களைப் பிரித்து கொடுப்பது ஆகியவை தொடர்பானவையாகும்.

8. அரசு இப்பரிந்துரைகளைக் கவனமாகப் பரிசீலித்து 117 பரிந்துரைகள் மீது ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந்துரைகள் அந்தந்த துறைகளுடன் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவை குறித்து விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

4. வருவாய்த்துறை ஆட்சி வரம்பு.

9. துணை வட்டங்கள் அனைத்தையும் முழு அளவிலான வட்டங்களாக நிலை உயர்த்த வேண்டுமென்ற திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் இப்போது துணை வட்டம் ஏதுமில்லை. இம்மாநிலத்தில் இப்போது 16543 வருவாய் கிராமங்கள், 1097 பிர்க்காக்கள், 166 வட்டங்கள் 52 வருவாய்த்துறை கோட்டங்கள், 16 மாவட்டங்கள் உள்ளன.

10. பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் 16–6–1982 முதல் புதிதாக வருவாய்த் துறைக் கோட்டம் அமைக்கப் பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் நாமக்கல், இராசிபுரம் வட்டங்களை மாற்றியமைக்கவும், இரண்டு புதிய வட்டங்களை அதாவது பரமத்தி வேலூர், கொல்லிமலை வட்டங்களை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

11. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவினாசி, பல்லடம் வட்டங்கள் அடங்கிய வருவாய்க் கோட்டத்தை திருப்பூரில் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5. இயற்கையின் சீற்றங்கள்.

12. தீ விபத்து: - தீ விபத்து தற்செயலாகவும் நிகழ்கிறது. மக்களின் கவனக் குறைவாலும் நிகழ்கிறது. எப்படியாயினும் இதில் குடிசை வாழ் மக்கள்தான் பெரும்பாலும் பாதிக்கப் படுகின்றனர். அவர்களது குடிசைகளும், உடைமைகளும் தீக்கிரையாகின்றன. குடிசை முழுவதுமாக எரிந்து விட்டால் அதற்கு 200 ரூபாயும் குடிசை ஓரளவு எரிந்து போயிருக்குமாயின் 50 ரூபாயும் ஆக குடிசை சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. குடிசைகளில் வாடகைக்கு இருப்பவர்களின் குடும்பத்திற்கு துணிக்காக ரூ. 25 மானியமாக வழங்கப்படுகிறது. இது கூடுமானவரை துணிகளாகவே கொடுக்கப்பட்டு வருகிறது. தீவிபத்துகளில் சாதாரணமாகப் பாதிக்கப்படுபவர்கள்



வாடகைக்குக் குடியிருப்பவர்கள்தான். ரூ. 200 மானியம் பெறும் சொந்தக்காரர்கள். வாடகைதாரர்களின் நலனுக்காக அந்தக் குடிசைகளை மீண்டும் கட்டுவதில் பொதுவாக அக்கறை காட்டுவதில்லை.

13. வாடகைக்குக் குடியிருப்பவர்களின் இடர்பாட்டைப் போக்க தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க மானியம் வழங்கப்படும் முறையை அரசு பின்வருமாறு மாற்றியது:—

(1) குடிசையில் அதன் உரிமையாளரே வசித்து வந்து அந்தக் குடிசை தீ விபத்தில் எரிந்து போய் விட்டால் அவருக்கு ரூ. 200 அல்லது ரூ. 50 ரொக்க மானியம் வழங்கப்படும்.

(2) அதே குடிசையில் அதன் உரிமையாளருங் வாடகைக்கு ஒருவரோ அல்லது பலரோ இருப்பின் அந்தக் குடிசை தீயில் எரிந்து போய் விட்டால் அதற்கு ரொக்க மானியமாக வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ. 50 அங்கு அந்த உரிமையாளருக்கும் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(3) அக்குடிசையில் ஒருவரோ அல்லது பலரோ வாடகைக்கு இருப்பார்களேயானால், அக்குடிசை தீயில் எரிந்து போய் விட்டால் அதற்கு வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ.50 அங்கு வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்குச் சமமாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) தீயிலோ வெள்ளத்திலோ, புயலிலோ ஒரு குடிசை சேதம் அடைந்து விட்டால், அதற்குக் கொடுக்கப்படுகிற நிவாரணத் தொகையான ரூ. 200 அல்லது ரூ. 50-ம் அக்குடிசையில் குடியிருந்தவர்களுக்கு மேற்சொன்னவாறு பிரித்துக் கொடுக்கப்படும்.

(5) மேற்சொன்ன சலுகைகள், வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாதம் ரூ.200 வரையில் வருமானம் உடையவர்களுக்கு இந்த மானியம் அளிக்கப் படுகிறது.

(6) மேற்குறிப்பிட்டவாறு ரொக்கமானியம் கொடுப்பதுடன் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படுபவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற நிவாரண உதவியைத் தீவிபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அரசு அளித்துள்ளது. அதன்படி, தீவிபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும் (72 மணி நேரத்திற்கும் மேலாக மின்சக்தி தடங்கல் ஏற்படக் கூடுமாயின் (ஒரு லிட்டர்) மண்ணெண்ணெயும், ஒரு வேட்டி அல்லது லுங்கியும், ஒரு புடவையும் இலவசமாக வழங்கப் படுகின்றன.

(7) தீ விபத்து, வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்கள் சேதமுற்ற குடிசைகளை அகற்றிவிட்டு புதிதாகக் குடிசை கட்டிக் கொள்ள அவர்களுக்கு நிலமேம்பாட்டுக் கடன், உழவர் கடன் விதிகளின் கீழ் ரூ. 2,000 வரை கடன் வழங்கப்படும். ஆதிதிராவிடர்களாய் இருந்தால், அவர்களுக்கு இது வட்டி யில்லாக் கடனாக வழங்கப்படும்.

(8) ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் தீ விபத்து, வெள்ளம், புயலால் இறந்துபோய் அதனால் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், இறந்துபோனவருடைய சட்டப் படிக்கான வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. உடைமைகளைப் பறிகொடுத்துவிட்டவர்களையும் உரிய முறை யில் கருதிப் பார்த்து அவர்களுக்கும் நிதியுதவி அளிக்கப் படுகிறது.

14. புயல், வெள்ளம்.—1980, 1981, 1982 ஆம் ஆண்டு களில் தமிழ்நாட்டில் பெரு மழை இல்லாததால், இது தொடர் பாக இங்கு பெருத்த சேதம் ஏதும் இல்லை.

15. மாநிலத்தில் கடற்கரை நெடுக, வெள்ளம், புயலால் பாதிக்கப்படக்கூடியவர்கள் பாதுகாப்பாக தங்கி இருக்க 110 புயல் நிவாரண புகலிடங்களைக் கட்ட அரசு அனுமதி வழங்கி யது. புயல் தாக்கக்கூடிய பகுதிகளில் வாழ்பவர்களுக்குப் பாது காப்பான புகலிடங்கள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் மேற் சொன்னவாறு அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் செஞ் சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் 25 புகலிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையும், தமிழக அரசும் இவற்றிற்கு ஆன செலவை சமமாக ஏற்றுக் கொண்டுள்ளன. தென் ஆற்காடு மாவட்டத்தில் 5 புயல் நிவாரண புகலிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இதற்கான செலவை மகாராட்டிர புயல் நிவாரண மக்கள் குழு ஏற்றுக் கொண்டது. இரண்டு புயல் நிவாரண புகலிடங்கள் கனடா அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் ''யுனிசெப்'' நிறுவனத்தின் மூலமாக வழங்கிய நிதியுதவியைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவை மேற்படி நிறுவனமும் தமிழக அரசும் சமமாக ஏற்றுக் கொண் டன. கடற்கரையோரப் பகுதிகளில் புயல் நிவாரண புகலிடங் கள் 50 கட்ட ஐரோப்பிய பொருளாதார அமைப்பு ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது. மேற்கொண்டு ஆகும் செலவை தமிழக அரசு ஏற்கிறது. இந்த புயல் நிவாரணப் புகலிடங்கள் ஐம்பதில் 40 இடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 10 இடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் புயல் நிவாரண புகலிடங்கள் 20 கட்ட ஐரோப்பிய பொருளாதார அமைப்பு, மேற்கொண்டு 60 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. ஷை 20 புயல் நிவாரண



புகலிடங்கள் கட்ட ஆணைகள் தற்போது பிறப்பிக்கப் பட்டுள்ளன. பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் உதவியுடன் 8 புயல் நிவாரண புகலிடங்கள் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

15எ. வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், புளியம்பாளையம் கிராமத்தில் விபத்து நிவாரணக் கட்டிடத் தொகுதி அமைக்க, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ் நாடு கிளைக்கு 10 ஏக்கர் நிலப்பரப்பு இலவசமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியில், பண்டகசாலை, அலுவலக் கட்டிடம், பணியாளர் குடியிருப்புகள் ஆகியவை இருக்கும். புயல்/வெள்ளம் ஏற்படும்போது, அதனால் பாதிக்கப்படுபவர் களுக்கு கொண்டு சென்று வழங்குவதற்காக கூடாரம், கருங்கித் தான், சமையல் பாத்திரங்கள், மருந்துகள், உணவுப் பொருள்கள், துணிகள், கம்பளம், முதலியவை போன்ற பொருள் கள் சேமித்து வைப்பதற்காக பண்டகசாலை பயன்படும்.

16. பேரிடர் தடுப்பு நடவடிக்கைப் பயிற்சி வகுப்பு ஒன்று 1982 அக்டோபர் 6 முதல் 8 ஆம் நாள் வரை சென்னை யிலுள்ள இந்திய தொழில் நுட்பவியல் நிலையத்தில் நடை பெற்றது. கடற்கரையோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், வானிலை ஆராய்ச்சித் துறை அதிகாரிகள் ஆகியோர் இதில் பங்கு கொண்டனர். கடந்த ஆண்டுகளில் வீசிய புயல்கள் குறித்து கிடைக்கக்கூடிய தகவல்களை இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையத்திடமுள்ள கணக்கீடு பொறியைப் பயன்படுத்தித் தொகுத்து வைக்கவும், பேரிடர் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பயிற்சியை ஒவ்வோர் ஆண்டும் நிறுவன அடிப்படையில் முறையாக நடத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்ட அறிக்கை, சென்னை நகர் நாட்டுபுற அமைப்புத் திட்டத் துறை இயக்குநர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் உலக உணவு, வேளாண்மை நிறுவனம் மத்திய அரசு நிறுவனங்கள், மற்றும் அண்டை மாநிலங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சென்னையில் பயிற்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு முன்னோடியாகும்.

6. வறட்சி நிவாரணம்.

17. 1982–83 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே தென் மேற்குப் பருவ மழை பொய்த்தது; போதுமான அளவு மழை இல்லை. வடகிழக்குப் பருவமழையால் போதுமான நீர் கிடைக்கு மென்றும், இதன் மூலம் பற்றாக்குறை ஓரளவு நிறைவு செய்யப் படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வடகிழக்குப் பருவ மழையும் நம் நம்பிக்கையை வீணாக்கியது. பெய்த மழையின் அளவும் குறைவு; அக்குறைந்த அளவு மழையும் உரிய பருவத்தில் பெய்யவில்லை. இம்மாநிலத்தில் பெய்த சிறிதளவு மழையும் உரிய காலத்திலும் ஒரே சீராகவும் பெய்யவில்லை என்பதனால் நிலைமை மேலும் சீர்கேடடைந்துள்ளது. இம்

மாநிலத்தில் இயல்பான ஆண்டு மழையளவு 942.8 மி. மீ, ஆனால் 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையளவு 670.1 மி. மீட்டர். இது இயல்பாக பெய்யக்கூடிய மழையின் அளவைவிட 29 சதவீதம் குறைவானதாகும்.

18. இம்மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலவுகிறது. வறட்சியின் கடுமை இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. நிலத்தடி நீரின் அளவு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பாசனக் கிணறுகளில் நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளது. பாசன ஏரிகள் வறண்டு விட்டன. இம்மாநிலத்திலுள்ள முக்கிய நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது. 1982 ஆம் ஆண்டில் மேட்டூர் நீர்த்தேக்கம் நிரம்பவே இல்லை. இதனால், பயிர்கள் விளைவிக்கப்படும் பகுதியின் பரப்பளவு குறைந்து, அதனால் உணவு உற்பத்தி குறைந்துள்ளது. வேளாண்மையும், அதனுடன் இணைந்த வேறு தொழில்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம் என்றழைக்கப்படும் தஞ்சாவூர் மாவட்டம் கூட பாதிக்கப்பட்டுள்ளதுதான் இந்த வறட்சியில் மிகவும் துயரமான நிகழ்ச்சியாகும். மேற்குறிப்பிட்ட நிலைமையினால், கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்பின்மை நிலவுகிறது. இதனால் உழவர்களுக்கும், வேளாண்மை தொழிலாளர்களுக்கும் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகர் உட்பட கிராமப்பகுதி—நகர்ப்பகுதிகளில் வறட்சி நிலைமையினால் குடிநீர் கிடைப்பதும் பாதிக்கப் பட்டுள்ளது.

19. வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. 18—8—1982 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில், பாதகமான பருவநிலை பற்றி விவாதிக்கப்பட்டது. இந்நிலைமை குறித்து, அமைச்சர்கள் அளவிலும், அதிகாரிகள் அளவிலும் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை ஆய்வு செய்யப்பட்டது. இது குறித்து, தலைமைச் செயலர், 26—8—1982, 11—10—1982, 12—11—1982 ஆகிய நாட்களில் விவாதித்துள்ளார்.

20. சென்னை மாநகர் உட்பட கிராமப் பகுதிகளிலும் நகர்ப்பகுதிகளிலும் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 17—3—1982 இல் 5 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. மேலும் இதே வகைக்காக 8—6—82 இல் ரூபாய் 10 லட்சமும் 30—8—82 இல் ரூபாய் 1 லட்சமும், 4—9—82 இல் ரூபாய் 100 லட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது கடற்கரைப் பகுதிகளில் உறைக்கிணறுகள் அமைக்க 4—9—82 இல் ரூபாய் 10 லட்சம் அனுமதித்ததோடு லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குவதற்காகவும் ரூபாய் 5 லட்சம் அனுமதிக்கப்பட்டது. மேலும் நகராட்சிகள், நகரப் பஞ்சாயத்துக்கள், மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களில் குடிநீரேற்று நிலையங்களுக்குத் தொடர்ந்து மின்



சக்தி கிடைக்க வகை செய்வதற்காக தனி மின் இணைப்புகள் அமைக்கும் திட்டத்திற்கு 7—9—82 இல் ரூபாய் 25 லட்சமும், 12—10—82 இல் ரூபாய் 75 லட்சமும், [illegible]—12—82 இல் மேலும் ரூபாய் 50 லட்சமும் அரசு அனுமதி அளித்துள்ளது. வடகிழக்குப் பருவமழை தவறியதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போவதைக் கருத்தில் கொண்டு கிணறுகளை ஆழப் படுத்தும் பணிக்கென கூடுதலாக ரூபாய் 200 லட்சத்தை 22—1—83 இல் அரசு அனுமதித்துள்ளது. லாரிகள், வண்டிகள் முதலியவை மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 2—3—83 இல் கூடுதலாக 25 இலட்சம் ரூபாய் செலவிட அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

21. கிராமப்புற குடிநீர்த்திட்டத்தின்கீழ் 1982–83 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் பயன்படுத்தி, குடி நீர் வடிகால் வாரியம் கீழ்க்கண்ட இனங்களுக்கு முன்னுரிமை வழங்கி, குடிநீர்ப்பணிகளை அவசரமாகச் செய்து முடிக்குமாறு, 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அவ்வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(1) மாவட்டங்களில் தண்ணீர் கடும் தட்டுப்பாடாக உள்ள எல்லா குடியிருப்புகள்;

(2) தண்ணீர்ப் பற்றாக்குறை மிகுதியாக உள்ள எல்லா நகரப் பஞ்சாயத்துக்கள்;

(3) தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள எல்லா நகராட்சிகள்.

இதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 15–2–1983-க் குள் 8,393 குழாய்க் கிணறுகளை ரூபாய் 19.84 கோடி செலவில் அமைத்துள்ளது.

22. சென்னை நகரில் சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குவது, கூடுதல் நீரேற்று சாதனங்களை அமைப்பது மற்றும் குழாய்க் கிணறுகளை அமைக்கும் பணிகளாகிய தேவையான நிவாரணப்பணிகளை ரூபாய் 2.88 கோடி அளவிற்கு மேற்கொண்டு குடிநீர்ப் பற்றாக்குறைக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

23. தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிநீர் பற்றாக்குறை ஏற்பட்டதால் விவசாயிகள் வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொள்வதற்கு உதவியாக ரூபாய் 7.5 கோடியை

கடனாக வழங்க 30-11-1982 மற்றும் 22-2-1983 ஆகிய நாட்களில் 2 தடவையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

24. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதற்காக புதிய சாலைகள் அமைத்தல், சிறிய மற்றும் பெரிய நீர்ப்பாசன நிலைகளைப் பழுதுபார்த்து மேம்பாடு செய்யும் பணிகளுக்கென 22-1-1983 இல் ரூபாய் 8 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

25. ஏரிகளில் திறந்த கிணறுகள் அமைப்பதற்கென ரூபாய் 3 கோடி அளவில் செலவிடுவதற்கான திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 25-2-1983இல் அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 525 கிணறுகள் அமைக்கப்படும். மேலும் ஏற்கெனவே ஏரிகளில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு டீசல் என்ஜின்கள் அமைக்க ரூபாய் 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 200 டீசல் என்ஜின்கள் வாங்குவதற்காக நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இத்தொகை மானியமாக வழங்கப்படும்.

26. குடிநீர்ப்பணிகளுக்கும் வேலை வாய்ப்புப் பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப்பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் செலவிடும் தொகை நீங்கலாக) மாவட்டங்களுக்குக் கீழ்க்கண்டவாறு பிரித்து வழங்கப்பட்டுள்ளது.



| மாவட்டத்தின் பெயர். | குடிநீர் வழங்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு. | வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| செங்கற்பட்டு | 48.00 | 140.00 | 188.00 |
| வட ஆற்காடு | 94.00 | 140.00 | 234.00 |
| தென் ஆற்காடு | 35.00 | 80.00 | 115.00 |
| தருமபுரி | 51.00 | 20.00 | 71.00 |
| சேலம் | 57.00 | 29.00 | 86.00 |
| பெரியார் | 33.00 | 11.00 | 44.00 |
| கோயம்புத்தூர் | 32.00 | 11.00 | 43.00 |
| நீலகிரி | 15.00 | .. | 15.00 |
| மதுரை | 40.00 | 67.00 | 107.00 |
| திருச்சிராப்பள்ளி | 44.00 | 80.00 | 124.00 |
| தஞ்சாவூர் | 14.00 | 13.00 | 27.00 |
| புதுக்கோட்டை | 43.85 | 80.00 | 123.85 |
| இராமநாதபுரம் | 67.00 | 100.00 | 167.00 |
| திருநெல்வேலி | 25.50 | 20.00 | 45.50 |
| கன்னியாகுமரி | 11.00 | 9.00 | 20.00 |
| | 610.35 | 800.00 | 1,410.35 |

27. நிவாரணப் பணிகளைப் பெருமளவில் செயல்படுத்துவதற்கு ரூபாய் 217.73 கோடி அளவில் திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் நிதி உதவி கோரி விரிவான அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து மேலே குறிப்பிட்ட விவரப்படி ரூபாய் 46.48 கோடி அளவிற்கு ஏற்கெனவே பல்வேறு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

28. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பயிர் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அரசு, அம்மாவட்டங்களில் 1392 ஆம் விளைச்சல் ஆண்டிற்கான நிலவரி, உள்ளூர் செஸ் வரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய ஆணையிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :

(i) பயிர் விளைச்சலின் மதிப்பு 37 காசுக்குக் (50 சதவீதம்) குறைவாக இருக்கும் இனங்களில் நில வரியும், உள்ளூர் செஸ் வரியும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் வயலுக்கு வயல் நேரடியாகச் சென்று பார்த்துத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(ii) ஒரு நன்செய் நிலத்தில் பயிர் விளைச்சலின் மதிப்பு 37 காசுக்குக் குறைவாக இருந்தால் கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் தீர்வை, தனி தண்ணீர் தீர்வை ஆகியவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(iii) ஒரு புன்செய் நிலத்தில் பயிர் விளைச்சலின் மதிப்பு 37 காசுக்குக் (50 சதவீதம்) குறைவாக இருந்தால், உள்ளூர் செஸ்வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

(iv) 1392 ஆம் விளைச்சல் ஆண்டுக்கு உள்ளூர் செஸ்வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டிய இனங்களில் உள்ளூர் செஸ் மேல் வரி விதிக்கப்படக் கூடாது என்று ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு ஆலோசனையளிக்கப்பட வேண்டும்.

(v) ஒரு கிராமத்தில் உழவர் ஒருவர் வைத்திருக்கும் நிலத்தில் 50 சதவீதத்திற்குக் குறையாத நிலப்பரப்பிற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் 1392 ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நிலவரி. உள்ளூர் செஸ்வரி, அரசுக் கடன் பாக்கிகள் ஆகியவற்றை வசூலிப்பது 1393 ஆம் விளைச்சல் ஆண்டுக்கு ஒத்திப் போடப்படவேண்டும்.

29. மாவட்ட ஆட்சியர்கள், தத்தம் மாவட்டங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகளுக்கு முழு பொறுப்பாவர். அவர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து இத்திட்டம் சுமுகமாகவும், விரைவாகவும் செயற்படுத்தப்பட வகைசெய்கின்றனர். இந்நோக்கத்திற்காக, நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள மாவட்ட அளவிலான அதிகாரிகள் அனைவரும் பணிகளை திட்டமிட்டவாறு உரியமுறையில் நிறைவேற்ற பொறுப்பேற்க வேண்டும்.

30. பணிகளை நுணுக்கமாக மேற்பார்வை செய்து விரைவில் செயற்படுத்துவதற்காக, வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் கோட்டாட்சியர் பதவித்தரத்திற்குக் குறையாத அதிகாரி ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. இந்த அதிகாரி, பல்வேறு துறைகளும், குடிநீர் வழங்கு வாரியம் முதலிய பல்வேறு அமைப்புகளும் நிறைவேற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிடுவார். அவர் பணியை நிறைவேற்றும் துறைகளின் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பார். இவ்வாறாக, நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் அந்தந்தப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் முன்னேற்றத்திற்குப் பொறுப்பாவார்கள். மாவட்ட ஆட்சியர்கள், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அந்தந்த பகுதிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளின் கூட்டங்கள் நடத்தி, பணிநிறைவேற்றுவதில் படிப்படியாக ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்வார்கள்.

31. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை உரியவாறு நிறைவேற்றுவதற்காக பொதுமக்களின் ஆலோசனையைப்பெற இயலும் வகையில் நிவாரணப் பணித் திட்டங்களில் பொதுமக்களின் பிரதிநிதிகளைச் சேர்ப்பது நல்லது



என்று அரசு கருதுகிறது. இதனை எய்தும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் (i) மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் உள்ளூர் குழு ஒன்றும், (ii) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழு ஒன்றும் ஏற்படுத்தப்படுகின்றன.

32. உள்ளூர் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட பகுதியின் அரசியல் கட்சிகள் உட்பட பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

33. மாவட்ட அளவிலான குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகள் செயற்படுத்தப்படுவதை ஆராயவும், பணி முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், பணியை நிறைவேற்றும் அமைப்புகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கவும், வறட்சி நிவாரணத் திட்டம் தொடர்பான கொள்கைபற்றி அரசுக்கு ஆலோசனை நல்கவும், அரசுத் தலைமைச் செயலாளரை தலைவராகவும், அரசு இரண்டாம் செயலாளர், ஏனைய செயலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. இக்குழு 15 நாட்களுக்கு ஒரு முறை கூடி நிலைமையை ஆராயும்.

35. மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளைக் கண்காணித்து ஒருங்கிணைந்து வழிகாட்டும் பொருட்டு, பின்வருமாறு ஆணையர்களுக்கு மாவட்டங்களை ஒதுக்கி அரசு ஆணையிட்டுள்ளது :—

1. தனி ஆணையர்—வருவாய் நிருவாக ஆணையர்.
    1. செங்கற்பட்டு.
    2. வட ஆற்காடு.
    3. தருமபுரி.
    4. தஞ்சாவூர்.
2. போக்குவரத்து ஆணையர்.
    1. தென் ஆற்காடு.
    2. திருச்சிராப்பள்ளி.
    3. புதுக்கோட்டை.

3. நில நிருவாக ஆணையர்.

(1) கோயம்புத்தூர்.

(2) பெரியார்.

(3) நீலகிரி.

(4) சேலம்.

4. நிலச் சீர்திருத்த ஆணையர்.

(1) இராமநாதபுரம்.

(2) மதுரை.

(3) திருநெல்வேலி.

(4) கன்னியாகுமரி.

தனி ஆணையர்—வருவாய் நிருவாக ஆணையர், மாநில அளவில் வறட்சி நிவாரணப் பணிகளை வகுத்து, செயற்படுத்தி, ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாவார். நிவாரணத் திட்டங்களுக்கு வழிகாட்டிக் குறிப்புகள் அளிப்பதற்கும், அவற்றைத் திறம்பட நிறைவேற்றுவதற்கும் அந்தந்த இடங்களில் உத்தரவுகள் பிறப்பிக்க இயலும் வகையில் அவர் எல்லா மாவட்டங்களிலும் நடைபெறும் நிவாரணப் பணிகளை அடிக்கடி சென்று பார்வையிடுவார்.

36. வறட்சி நிலை குறித்து தமிழ்நாடு சட்டப் பேரவையில் 10-2-1983 அன்றும், தமிழ்நாடு சட்ட மேலவையில் 15-2-1983 அன்றும் விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தில் பல உறுப்பினர்கள் பங்கு கொண்டு, நல்ல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவற்றை அரசு கருத்திற்கொண்டுள்ளது.

37. இம்மாநிலத்தில் வறட்சி நிலைமை குறித்து 27-9-1982, 15-10-1982, 6-12-1982 ஆகிய நாட்களில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரும் சென்ற அக்டோபர் திங்களில் இம்மாநிலத்தில் நிலவும் வறட்சி நிலை குறித்து இந்தியப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்து இந்நிலைமையைச் சமாளிக்க உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

38. மத்திய ஆய்வுக்குழு 1-3-1983 முதல் 5-3-1983 வரை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டுள்ளது. தற்போது நிலவும் சங்கடமான நிலைமையைக் கருணை நோக்குடன் அனுசரித்து, இம்மாநிலத்திற்கு தேவையான உயர்ந்தபட்ச உதவியை மத்திய அரசு வழங்குமென இம்மாநில அரசு எதிர்பார்க்கின்றது.



7. நிலமற்ற ஏழை மக்கள் பயிரிட நிலம் வழங்குதல்.

39. நேரடியாகப் பயிர்த்தொழிலில் ஈடுபடக்கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாகக் கிடந்த நிலங்கள் இக்கொள்கையின் கீழ் இலவசமாக வழங்கப்படும். 5 பேர் அல்லது அவர்களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

40. பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கு பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டுவருகின்றன.

(1) போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்கள்.

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர், பழங்குடியினர்—

(அ) பொதுக்காரியங்களுக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டதனால் பாதிக்கப்பட்டு, நிலச்சொந்தக்காரராகவோ குத்தகைதாரராகவோ தாம் நேரடியாகப் பயிரிட்டு வந்த நிலங்கள் புன்செய் நிலமாயிருந்தால் 3 ஏக்கருக்குக் குறைவாக அல்லது நன்செய் நிலமாக இருந்தால் $1\frac{1}{2}$ ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்கள். ஆனால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருப்பின் ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப் படும்.

(ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்திய சட்டம், 19/1976) கீழ் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

(3) முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்.

(4) பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(6) முன்னாள் கள் இறக்குவோர்.

(7) ஏனைய நிலமற்ற ஏழை மக்கள்.

(8) விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

41. பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை, நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினக்கு அளிக்கப்பட்டுள்ளது.

42. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் ½ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

43. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்யவேண்டும். 10 ஆண்டுக் காலத்துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி பராதீனம் செய்யவோ கூடாது. ஆனால் பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடைமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை செய்யப்பட்டவரே நிலத்தை பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோ தான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக் கூடாது

44. இப்பணியை கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் பதவித் தரத்தில் வருவாய் ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் அடங்கிய 5 பிரிவுகள் தற்போது உள்ளன. 1982 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து 1982 டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் தகுதி வாய்ந்த 8,304 பேருக்கு 10,218.54 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக நிலைமை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—



1—4—1982 முதல் 31—12—1982 வரை ஒப்படை செய்யப்பட்ட சாகுபடி நிலங்களின் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | | ஒப்படை செய்யப் பட்ட மொத்தப் பரப்பு. |
|---|---|---|---|---|
| | | ஆதி திராவிடர் பழங் குடியினர். | ஏனையோர். | ஏ.செ. |
| (1) | | (2) | (3) | (4) |
| 1. செங்கற்பட்டு | .. | 18 | 10 | 38.28 |
| 2. தஞ்சாவூர் | .. | 28 | 57 | 31.62 |
| 3. சேலம் | .. | 40 | 391 | 779.53 |
| 4. திருச்சிராப்பள்ளி | .. | 160 | 2,252 | 1340.79 |
| 5. கோயம்புத்தூர் | .. | .. | .. | .. |
| 6. மதுரை .. | .. | 199 | 1,182 | 1644.72 |
| 7. தருமபுரி | .. | 160 | 1,501 | 3190.16 |
| 8. இராமநாதபுரம் | .. | 299 | 960 | 1304.69 |
| 9. திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 10. வட ஆற்காடு | .. | 63 | 329 | 501.70 |
| 11. தென் ஆற்காடு | .. | .. | 80 | 76.72 |
| 12. கன்னியாகுமரி | .. | .. | 50 | 20.71 |
| 13. நீலகிரி | .. | .. | 1 | 0.73 |
| 14. புதுக்கோட்டை | .. | 321 | 1,181 | 1254.71 |
| 15. பெரியார் | .. | 13 | 19 | 34.18 |
| மொத்தம் | .. | 1,291 | 7,013 | 10218.54 |

45. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையும் நிலம் ஒப்படை செய்தபோது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ள ஒப்படைகளையும் ரத்து செய்யும் நோக்கத்துடன் மாவட்டங்களில் செய்யப்பட்டுள்ள நில ஒப்படைகள் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. இப்பணியை மேற்கொள்வதற்காக 23 தனிப்பணியாளர் பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொரு பிரிவிலும் துணை வட்டாட்சியர் ஒருவர், வருவாய் ஆய்வாளர் இருவர் (உதவியாளர் பணித்தரத்தில்), உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். 1982 டிசம்பர் வரையில் 1,33,785 நில ஒப்படை இனங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் நில ஒப்படைகள் செய்வதில் முறைகேடுகள் காரணமாக 36,466 நில ஒப்படைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய நில ஒப்படைகள் குறித்து மேலும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட வாரியான விவரங்கள் வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப் பட்ட இனங்கள். | ரத்து செய்யப் பட்ட இனங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செங்கற்பட்டு .. ... | 8,656 | 625 |
| 2. தஞ்சாவூர் .. .. | 13,529 | 3,186 |
| 3. சேலம் .. .. | 27.319 | 23,162 |
| 4. திருச்சிராப்பள்ளி .. | 7,034 | 220 |
| 5. மதுரை .. .. | 17,353 | 458 |
| 6. தருமபுரி .. .. | 1,200 | 936 |
| 7. இராமநாதபுரம் .. .. | 16,122 | 4,106 |
| 8. திருநெல்வேலி .. .. | 9,332 | 2,087 |
| 9. வட ஆற்காடு .. .. | 13,604 | 617 |
| 10. தென் ஆற்காடு .. .. | 2,764 | 430 |
| 11. பெரியார் .. .. | 16,872 | 639 |
| மொத்தம் .. | 1,33,785 | 36,466 |





### 8. வீட்டு மனை ஒதுக்குதல்.

46. வீட்டு மனைகள் ஒதுக்கும் திட்டமானது, நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்குகளில் ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதன் மூலமாக பரந்த அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'ஏழை' என்ற சொல்லின் பொருள் மற்றும் ஒப்படை செய்வதில் அளிக்கப்படும் முன்னுரிமை ஆகியவை பயிரிடத்தக்க தரிசு நிலங்களுக்கு பின்பற்றப்படுகிறபடியே வீட்டு மனைகளுக்கும் பின்பற்றப்படும்.

47. 1982 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ம் நாளிலிருந்து 1983ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ம் நாள் வரை 1,03,028 வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 34,056 வீட்டு மனைகளும், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 1,077 வீட்டு மனைகளும் இதில் அடங்கும். அதன் விவரம் வருமாறு :—

| மாவட்டம். | ஆதி திரா விடர். | பழங் குடி யினர். | ஏனை யோர். | வழங்கப் பட்ட மொத்த வீட்டு மனை கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. செங்கற்பட்டு .. | 306 | .. | 1,203 | 1,509 |
| 2. தஞ்சாவூர் .. | 927 | .. | 1,800 | 2,727 |
| 3. சேலம் .. .. | 2,734 | 310 | 1,791 | 4,835 |
| 4. திருச்சிராப்பள்ளி | 18,775 | 45 | 37,048 | 55,868 |
| 5. கோயம்புத்தூர் | 481 | .. | 252 | 733 |
| 6. மதுரை .. | 3,592 | 19 | 12,011 | 15,622 |
| 7. தருமபுரி .. | 7 | .. | 844 | 851 |
| 8. இராமநாதபுரம்.. | 551 | .. | 4,360 | 4,911 |
| 9. திருநெல்வேலி .. | 52 | 1 | 814 | 867 |
| 10. வட ஆற்காடு .. | 2,212 | 100 | 3,627 | 5,939 |
| 11. தென் ஆற்காடு | 703 | 558 | 1,158 | 2,419 |
| 12. கன்னியாகுமரி .. | .. | .. | 189 | 189 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | நீலகிரி .. | 327 | 1 | 392 | 720 |
| 14. | புதுக்கோட்டை | 558 | .. | 1,600 | 2,158 |
| 15. | பெரியார் .. | 2,831 | 43 | 806 | 3,680 |
| | மொத்தம் .. | 34,056 | 1,077 | 67,895 | 1,03,028 |

48. சென்னை நகரத்தில் ஆதி ஆந்திரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் தனித் திட்டத்தின்படி 750 ச.அடி உள்ள ஒரு மனைக்கு 3,000 ரூபாயும், 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலத்திற்கு இரண்டு மடங்கு விலையும் செலுத்துவதின் பேரில் ஆதி ஆந்திரர் குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒப்படை செய்யப்படுகிறது. இத்திட்டம் தீவிரமாக செயல் படுத்தப்படுகிறது. 2,237 ஆதி ஆந்திரர்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். இதில் 1,335 ஆக்கிரமிப்புகள் இதுவரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

49. சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பை முறைப்படுத்துவது பற்றிய பிரச்சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்ற ஆட்சேபணையற்ற குடிசைப் பகுதிகளைத் தவிர ஏனைய எல்லா குடிசைப் பகுதிகளும் தமிழ் நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக அறிக்கையிடப்பட வேண்டுமென்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விலை ஏதுமின்றி குடிசை மாற்றுவாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு அனுபோகதாரரிடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700 ம் மேம்பாட்டு செலவு ஏதேனுமிருந்தால் அதனையும் பெற்றுக் கொண்டு குத்தகை விற்பனைப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் நிலத்தின் விலையை ஐந்து ஆண்டுகளில் தவணை முறையில் வசூலிக்கக் கருதப்படுகிறது, நிலத்தின் பரப்பு 750 சதுர அடிக்கு அதிகமாயிருந்தால் உயர் அளவு, அரை மனை என்ற வரையறைக்குட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ அதே நிலையில் கொடுத்து விடுவது என்ற அடிப்படையில் நில ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக அறிக்கையிடப்படாததும் ஆட்சேபனையற்றதும், ஆங்காங்கே விரவிக் கிடப்பதுமான ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரையில், மனை ஒன்றுக்கு ரூ. 7,700 வசூலித்து வீட்டு மனை ஒப்படை செய்யப்படும். மனையின் உச்ச வரம்பு 750 சதுர அடியாக இருக்கும்.



50. "வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல்" திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டு மனை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வீட்டின் முன் பக்கத்தில் அல்லது புறக்கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும என்ற நிபந்தனை கொண்டுவரப்பட்டுள்ளது.

**9. வளர்ச்சியை ஊக்குவிக்க அளிக்கப்பட்ட அரசு நிலங்கள்.**

51. (i) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம். வடக்கு மதுரை கிராமத்தில் இருக்கும் தல்லாகுளம் பகுதியில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்கென 14.15 ஏக்கர் நிலத்தில் உலகத் தமிழ்ச் சங்கம் பிரவேசிக்க முன் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

(ii) தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கம் (The Spastic Society of Tamil Nadu) உடல் ஊனமுற்றோருக்காக தனிப் பள்ளிக் கூடம், தொழிற்கூடம் போன்றவற்றை அமைப்பதற்காக சென்னை அண்ணா தொழிற் பல்கலைக் கழக வளாகத்தில் இனாமாக 5 ஏக்கர் நிலத்தில் மேற்படி சங்கம் பிரவேசிக்க முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iii) திருச்சிராப்பள்ளி, நாவல்பட்டு மற்றும் கும்பக்குடி கிராமங்களில் குடியிருப்பு வசதித் திட்டத்திற்கென 600 ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பிரவேசிக்க முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**10. மத்திய அரசு துறைகளுக்கு மாறுதல் செய்து வழங்கப்பட்ட நிலங்கள் பற்றிய விவரம்.**

52. (i) 11—5—1982 நாளிட்ட அரசாணை (பலவகை) எண் 778-ல் செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம் கரிமணல் பகுதியில் உள்ள 1724.12 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை மத்திய அரசு விண்வெளித் துறைக்கு, ஸ்ரீஹரி கோட்டா ஏவுகணை நிலையத்திற்கு "பாதுகாப்பு பகுதி" யாக ரூ. 40,51,600 விலைக்கிரயமாகப் பெற்றுக் கொண்டு நில மாறுதல் செய்யப்பட்டது.

(ii) வருவாய்த்துறை 14-6-1982 நாளிட்ட அரசாணை பலவகை எண் 1003-ல் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், கேட்டை கருங்குளம் முதலிய ஐந்து கிராமங்களில் அமைந்துள்ள 633.28 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை ஒரு கடற்படை திட்டத்திற்காக மத்திய அரசின் பாதுகாப்புத் துறைக்கு, நிலக் கிரயம் பெறாமல் இலவசமாக மாறுதல் செய்து எந்தக் காரியத்திற்காக நிலம் வழங்கப்பட்டதோ அக்காரியத்திற்கு உபயோகப்படவில்லையென்றால் இந்நிலங்கள் மாநில அரசால் திரும்பப் பெறப்படும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டுள்ளது.

(iii) வருவாய்த்துறை 27-1-1983 நாளிட்ட அரசாணை பலவகை எண் 145–ல் செங்கற்பட்டு மாவட்டம். சைதாப்பேட்டை வட்டம், பள்ளிக்கரணை கிராமத்தில் புல எண். 657/1-ல் அடங்கிய 224.70 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை கடல் பொறியியல் கட்டுமான ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கும் பொருட்டு மத்திய அரசு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறைக்கு நிலக் கிரயம் பெறாது நில மாறுதல் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

## 11. பொதுமக்கள் தொடர்புத் திட்டம்.

53. பொதுமக்கள் தொடர்புத் திட்டமான ''மனுநீதித் திட்டம்'' குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கிராமங்களுக்கு வருகை தரும் அதிகாரிகள் கிராம மக்களின் பிரச்னைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1—1—1982 முதல் 31-12-1982 வரை வரப்பெற்ற 97,378 மனுக்களில் 88,387 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டன. அதாவது 91 சதவீத மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

## 12. தண்ணீர் கட்டண வீதங்கள்.

54. இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண்வளம், வேளாண்மை விளைபொருட்களின் விலை, அண்மையிலுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பொறுத்து நன்செய், புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நன்செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிலவரியுடன் தண்ணீர் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தர வீதங்கள் முறையின் கீழ் நிர்ணயித்த ஏற்பாட்டின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இது பாசன வாயில்களின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகளினால் பாசனம் பெறும் பகுதிகளில் தனி தண்ணீர்த் தீர்வை வீதங்கள் நடைமுறையில் உள்ளன.

55. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டத்தின் கீழ், கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, முறையே நன்செய் நிலங்கள் இதர நிலங்களின் மேல் விதிக்கப்படுகின்றன.

56. மாநிலத்திலுள்ள தண்ணீர் தீர்வை வீத அமைப்பு முழுவதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன,



## 13. வேளாண்மை வருமான வரி.

57. அண்மைக்காலத்திலிருந்துதான் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில், வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. சென்னை மலைத் தோட்ட வேளாண்மை வருமான வரிச்சட்டம் 1955-ல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, காபி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம், மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் இச்சட்டத்தை நீட்டிக்க வகை செய்கிறது. 1973 ஆம் ஆண்டில் வரி விலக்கு வரம்பு ரூ. 5,000 ஆக இருந்தது. 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம், வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வரி இணக்கத் திட்டத்தின்படி, தற்போதைய வரி விலக்கு வரம்பு 20 ஸ்டாண்டர்ட் ஏக்கராகும். 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை மலைத் தோட்டப் பயிர்களுக்கு வரி இணக்க வசதி அளிக்கப்படுகிறது. மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு எதுவும் இல்லை.

58. 1979-80 ஆம் வரிவிதிப்பு ஆண்டுவரை, நிலங்களை 'நன்செய் அல்லது புன்செய்' என்று வகைப்படுத்தி ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிடப்பட்டது. அதன்பின்னர், 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின்படி இம்முறை மாற்றப்பட்டு பயிர்களை 13 உட்தொகுதிகளாகப் பிரித்து 'பயிர் அடிப்படையில்' ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிடும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் (கணக்காண்டு) மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டுக்கும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது. தற்போதைய வரி வீதமும் இணக்க வரி வீதமும் வருமாறு:—

### வருமான அடிப்படையிலான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் வரி கிடையாது. முதல் ரூ. 8,000-க்கு.
2. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 25 காசு. அடுத்த ரூ. 7,000–க்கு.
3. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 30 காசு அடுத்த ரூ. 5,000-க்கு.
4. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 35 காசு. அடுத்த ரூ. 5,000-க்கு.
5. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 45 காசு. அடுத்த ரூ. 5,000-க்கு.

மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 55 காசு. அடுத்த ரூ. 20,000-க்கு.

7. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 60 காசு. அடுத்த ரூ. 50,000-க்கு.

8. மொத்த வேளாண்மை வருமானத்தில் ரூபாய்க்கு 65 காசு. எஞ்சிய தொகைக்கு.

ஆனால்

(1) ரூ. 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை;

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு, ஆனால், 11,100-க்கு மேற்படாதபோது, அது குறித்து செலுத்தத் தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ அத்தொகையில் எழுபது சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

(3) மேலும் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும், உயரளவு வீதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படவேண்டும்.

58—ஏ. நில வரம்பின் அடிப்படையில் இணக்கவரி வீதங்கள்.—

| பரப்பு. | | ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம். |
|---|---|---|
| (1) | | (2) |
| | | ரூ. பை. |
| 1. முதல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | வரி கிடையாது. |
| 2. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 15.00 |
| 3. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 20.00 |
| 4. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 30.00 |
| 5. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 40.00 |
| 6. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 50.00 |
| 7. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 60.00 |



| | | |
|---|---|---|
| 8. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 70.00 |
| 9. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 80.00 |
| 10. எஞ்சிய ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | 100.00 |

மேலும் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்தவரையில், 65, 65-ஏ பிரிவின்கீழ் செலுத்தத்தக்க மொத்த வரி எந்த அளவு நிலப்பரப்புக்கு மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின்கீழ் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்துகொள்ள கம்பெனி அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலப்பரப்பு முழுவதுக்கும் உயரளவு வீதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

59. வேளாண்மை வருமானவரி ஆணையர், வேளாண்மை வருமான வரித்துறையின் தலைவர் ஆவார். வருவாய் வாரியத்தை எடுத்தபின் அவர் நிலச் சீர்திருத்த ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளார்.

60. மலைத் தோட்டப் பயிர் பயிரிடாத ஏனைய பகுதிகளில் கூடுதல் வேளாண்மை வருமான வரி அதிகாரி என்ற முறையில் வட்ட ஆட்சியர் வரி வசூல் பணியை செய்து வந்தனர். இப்பணி 1-4-1980 முதல் வேளாண்மை வருமானவரி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை வருமான வரி பாக்கியை விரைவில் வசூலிப்பதற்கு வரி வசூல் சட்ட விதித்துறையின்கீழ் வரிவசூல் செய்யும் அதிகாரிக்குள்ள அதிகாரமும் வேளாண்மை வருமானவரி அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

61. வேளாண்மை வருமான வரியில் பெருமளவு வருவாய் மலைத் தோட்டப் பயிரிலிருந்து கிடைக்கிறது. மலைத் தோட்டப் பயிரைப் பொறுத்தவரையில் கேட்பு, வசூல் 1977-78 ஆம் வரிவிதிப்பு ஆண்டிலிருந்து கணிசமான அளவு மாறுதலடைந்துள்ளது. தற்போது, மொத்த வருவாயில் 90 சதவீதம் இதிலிருந்துதான் கிடைக்கிறது. 1968-69 முதல் 1982—83 வரையிலான (31-12-1982 வரை) கேட்பு, வசூல், நிலுவை குறித்த விவரம் வருமாறு:—

| வரிவிதிப்பு ஆண்டு. | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1968—69 | 2,48.94 | 1,94.42 | 54.52 |
| 1969—70 | 2,60.65 | 2,06.54 | 54.11 |
| 1970—71 | 2,50.60 | 1,93.83 | 56.77 |

| வரிவிதிப்பு ஆண்டு. | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1971—72 | 2,71.34 | 2,15.37 | 55.97 |
| 1972—73 | 2,93.00 | 2,25.95 | 67.05 |
| 1973—74 | 2,70.83 | 2,25.37 | 45.46 |
| 1974—75 | 2,84.42 | 2,17.78 | 66.64 |
| 1975—76 | 3,73.05 | 2,52.59 | 1,20.46 |
| 1976—77 | 3,62.51 | 2,44.50 | 1,18.01 |
| 1977—78 | 697.29 | 524.67 | 172.62 |
| 1978—79 | 13,41.29 | 10,42.12 | 2,99.10 |
| 1979—80 | 10,03.29 | 6,93.23 | 3,10.06 |
| 1980—81 | 9,36.75 | 5,79.63 | 3,57.12 |
| 1981—82 | 7,24.65 | 4,47.95 | 2,76.70 |
| 1982—83 | 4,94.34 | 2,13.62 | 2,80.72 |

(31–12–1982 வரையில்)

62. நீண்டகாலமாக ஆண்டொன்றுக்கு ரூ. 2 கோடி என்றிருந்த வேளாண்மை வருமான வரி வருவாய் 1977–78-ம் வரிவிதிப்பு ஆண்டில் ரூ. 5.25 கோடியாக அதிகரித்துள்ளது. 1978–79 ஆம் வரிவிதிப்பு ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.5 கோடி வருவாய்க்கிடைக்கும் என மதிப்பிட்டிருக்க அந்த வரிவிதிப்பு ஆண்டில் ரூ. 10.42 கோடி வசூலாயிற்று. சம்பந்தப்பட்ட கணக்கு ஆண்டில் தேயிலைக்கும், ரப்பருக்கும் அங்காடியில் நல்ல விலை இருந்த காரணத்தாலும், அவ்வாண்டு பெரும்பகுதி நிலுவையாக இருந்த இனங்களுக்கு வரிவிதித்து முடிக்கப்பட்டதாலும் வருவாய் திடீரென அதிகரித்தது. 1981–82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மதிப்பீட்டில் ரூ. 3.5 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்பட்டிருக்க அந்த வரி விதிப்பு ஆண்டில் ரூ. 45 கோடி வசூலாயிற்று.



63. 1980-81, 1981-82, 1982-83 ஆம் வரிவிதிப்பு ஆண்டுகளில் இணக்கவரியின் கீழும் வருமானத்தின் அடிப்படையிலும் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

| ஆண்டு. | மலைத்தோட்டம். இணக்க வரி. | வருமானம். | மொத்தம். | மலைத்தோட்டம் அல்லாதாவை. இணக்க வரி. | வருமானம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1980—81 | 36:8 | 991 | 4609 | 27736 | 4429 | 32165 |
| 1981—82 | 3550 | 1020 | 4570 | 28621 | 3992 | 32613 |
| 1982—83 | 3613 | 1013 | 4626 | 26485 | 3929 | 3 414 |

(31-12-1982 வரையில்).

64. இத்துறைக்கு புதிதாக வந்த அனைத்து வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அதிகாரிகளுக்கும் விரிவான பயிற்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு அரசு அனுமதிபெற்றபின் வேளாண்மை வருமானவரி தொடர்பான பல்வேறு சட்டங்கள் கணக்குகள் குறித்து 9 நாட்களுக்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பங்கு கொண்டோருக்குப் பல்வேறு துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும் வேளாண்மை வருமானவரி அதிகாரிகளுக்கும் நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. அவர்கள் வேளாண்மை வருமானவரி மதிப்பீட்டை முடிவு செய்வதற்கு இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

65. 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் வேளாண்மை வருமான வரி செலுத்த வேண்டியதில்லை என்றிருந்த வரம்பு 1979 ஆம் ஆண்டு 32 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் 20 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் ரூ. 5,000 வரை வேளாண்மை வருமானம் உள்ளவர்கள் இவ்வரி செலுத்த வேண்டியதில்லை. என்றிருந்த வரம்பு ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வருமானத்தின் மீதான உயரளவு வரி வீதத்தை ரூபாய்க்கு 55 காசுகளிலிருந்து 65 காசுகளாக உயர்த்தியதன் மூலம் இணக்க வரி வீதமும் சீரமைக்கப்பட்டுள்ளது. இம்மாற்றத்தினால் சிறு உழவர்கள் பயனடைந்துள்ளனர். பெருமளவு நிலம் வைத்துள்ளவர்களுக்கு வரி விதிப்பு ஓரளவு அதிகரித்துள்ளது,

66. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்திலுள்ள சிலகுறைபாடுகளை அகற்றி விதிமுறைகளைத் தெளிவாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமுன்வடிவு எண். 61/81) சட்டமன்றப் பேரவையில் 22-8-1981 அன்று கொண்டுவரப்பட்டது. வரி ஏய்ப்பு செய்வதற்கான வாய்ப்பினைக் குறைக்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது. வரி விதிக்கப்பெறுபவர்களுக்கு சில சலுகைகள் அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 14. நகர்ப்புற நிலவரி.

67. குறிக்கையிடப்பட்ட சில பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நில வரிச் சட்டத்தின் கீழ் நகர்ப்புற நிலவரி செலுத்தத் தக்கதாகும். ரயத்துவாரி வரி, விடுவரி, மனைவரி போன்றவற்றிற்குப் பதிலாக நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இச்சட்டம், சென்னை மாநகரில் 1-7-1963 ஆம் நாள்முதலும் கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும், மதுரை மாநகரிலும் இச்சட்டம் 1-7-1971 ஆம் நாள் முதலும் செயலுக்கு வந்தது.

68. சென்னை மாநகரில் தமிழ்நாடு நகர்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வந்தபோது 1-7-1963 அன்று இருந்த நிலத்தின் அங்காடி மதிப்பைக் கொண்டு அதில் 0.4 சதவீதம் என்ற வீதத்தில் நகர்ப்புற நிலவரி கணக்கிடப்பட்டது. இச்சட்டம் அவ்வப்போது திருத்தப்பட்டது. 1-7-1975-லிருந்து சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் இச்சட்டத்தை நீட்டித்து 1-7-1971 அன்று இருந்த அங்காடி மதிப்பைக் கொண்டு நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு வகை செய்து, 1975-ல் இச்சட்டம் இறுதியாகத் திருத்தப்பட்டது. 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் வரை இருந்த வீதம் 0.7 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதம் வரை உயர்த்தப்பட்டது. நகர்ப்புற நிலங்களை குடியிருப்பு காரியங்களுக்கும் குடியிருப்பு அல்லாத காரியங்களுக்கும் பயன்படுத்துவதில் வேறுபாடு கொண்டு வரப்பட்டு வெவ்வேறு வீதத்தில் வரி விதிக்கப்பட்டது.

69. நகர்ப்புற நிலவரி அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து முறையீடு செய்யப்பட்டதன்பேரில், வருவாய்த்துறையின் 27-12-1976 ஆம் நாளிட்ட 2625 ஆம் எண். அரசாணையில் பல சலுகைகளை அரசு வழங்கியது. தற்போது வரையறுக்கப் பட்டுள்ள வரிவீதம் வருமாறு:—

சென்னை மாநகர எல்லையோரப்பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்.

| | | |
|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகளுக்கு | இல்லை. | |



| | | |
|---|---|---|
| 2. மொத்தப்பரப்பு 5 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம். | இரண்டு மனைகளுக்கு மேல்உள்ள பரப்புக்கு. |
| 3. மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால், 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் ஒரு சதவீதம். | ,, |
| 4. மொத்தப்பரப்பு 10 மனைகளுக்கும் மேற்பட்டு ஆனால் 20 மனைகளுக்கும் மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம். | ,, |
| 5. மொத்தப்பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவீதம். | ,, |

சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள்:

| | | |
|---|---|---|
| 1. முதல் மூன்று மனைகளுக்கு | இல்லை. | |
| 2. மொத்தப்பரப்பு 7 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 0.7 சதவீதம். | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 3. மொத்தப்பரப்பு 7 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல்இருந்தால். | அங்காடி மதிப்பில் ஒரு சதவீதம். | ,, |
| 4. மொத்தப்பரப்பு 10 மனைகளுக்கு மேற்பட்டு ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் 1.5 சதவீதம். | ,, |
| 5. மொத்தப்பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் 2 சதவீதம். | ,, |

70. ஏற்கனவே வழங்கப்பட்ட சலுகைகளை சட்டப்படி செல்திறனானவையாக்க தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்த) சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தது. அப்போது சட்டமன்றப்பேரவை கலைக்கப்பட்ட காரணத்தால் இச்சட்ட முன்வடிவு காலங்கடந்ததாகிவிட்டது. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் (திருத்த) சட்ட முன்வடிவு 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்டது. சட்டமன்ற ஆய்வுக் குழுவிற்கு இது அனுப்பப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

71. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம், வருவாய்த்துறையின் 25-6-1981 ஆம் நாளிட்ட அரசாணை எண். 1465-ன்படி திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளுக்கும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களிலுள்ள பிற பகுதிகளுக்கும் 1-7-1981 ஆம் நாளிலிருந்து நீட்டிக்கப்பட்டது. இதனால், மேற்சொன்ன பகுதிகளிலிருந்து விளைச்சல் ஆண்டு ஒன்றுக்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 56 இலட்சமாகும்.

72. 19 வருவாய் கிராமங்கள் உள்ள 12 ஊராட்சிகளை சென்னை மாநகர எல்லைக்குள் சேர்த்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 29-5-1978 ஆம் நாளிட்ட 790 ஆம் எண். அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை 38 கிராமங்களுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது. அவை சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள 8 கிராமங்களும், பொன்னேரி வட்டத்திலுள்ள 7 கிராமங்களும், திருவள்ளூர் வட்டத்திலுள்ள 3 கிராமங்களும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள 10 கிராமங்களும், செங்கற்பட்டு வட்டத்திலுள்ள 10 கிராமங்களும் ஆகும். மேற்சொன்ன பகுதிகளில் எதிர்பார்க்கப்படும் வருவாய் விளைச்சல் ஆண்டிற்கு ரூ. 3 லட்சமாகும்.

73. இந்த வரிவகையில் விளைச்சல் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 3.82 கோடி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 2.51 கோடி வசூலாயிற்று. 1982-83-ல் ரூ. 3.50 கோடி வசூலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 15. நிலச் சீர்திருத்தம்.

74. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 6-4-1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல்



நபருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்ச வரம்பு 60 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்த உச்ச வரம்பு குறைக்கப்பட்டு மூலச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகள் 17/70 ஆம் சட்டத்தினாலும் அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் ரத்து செய்யப்பட்டன. 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். மொத்த உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 31-12-1982 ஆம் நாள் வரையில் நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் வருமாறு:—

| | ஏக்கர். |
|---|---|
| 1. உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு | 1,53,370 |
| 2. நிலத்தை அரசு வசம் எடுத்துக் கொள்ளுமுன்னரும் பின்னரும் தடையாணையின் கீழ் உள்ள பகுதி. | 24,166 |
| (அ) தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட பரப்பு. | 98,459 |
| (ஆ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு. | 4,041 |
| (இ) உபரி நில விநியோக விதிகளின் 13 ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவை. | 8,500 |

3. பயனடைந்தோரின் எண்ணிக்கை.

| | நபர்கள். | பரப்பு ஏக்கர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதி திராவிடர் .. .. | 32,771 | 36,047 |
| பழங்குடியினர் .. .. | 26 | 18 |
| ஏனையோர் .. .. | 44,015 | 62,394 |
| மொத்தம் .. | 76,812 | 98,459 |

| | |
|---|---|
| 4. வழங்கவேண்டியிருக்கின்ற பரப்பு. | 18,204 |

75. உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ் உயரளவு 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தையோ வழங்கலாம்.

**76.** நில உச்ச வரம்பினைச் செயல்படுத்துவதும் உபரி நிலங்களை வழங்குதலும்.—இருபது அம்ச திட்டத்தின் ஒரு பகுதியாகும், (எண். 4) நிலச் சீர்திருத்தங்களை விரைந்து செயல்படுத்துவதற்குப் பல இடையூறுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, நீதி மன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப் படுவதற்கு அதிகக் காலம் ஆவதேயாகும். ஆகவே, நில நடுவர் மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளையும், பரிசீலனை மனுக்களையும் விசாரிக்க அதிகாரம் அளித்து, தனி மேல் முறையீட்டு நடுவர் மன்றத்தை அமைக்க கருதப்படுகிறது. இது குறித்து சட்ட முன் வடிவு இயற்றப்பட்டு 27-1-1983 அன்று சட்ட மன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

**77.** தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம்.

இந்தச் சட்டத்தின் கீழ் 4,38,616 குத்தகைக்காரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தப் பரப்பு 6,35,319 ஏக்கராகும். 5,361 விண்ணப்பங்கள் விசாரணையிலிருந்தன. 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இறுதியில் 1,40,187 விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டது.

**77. (அ)** தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம்.

30-11-1982 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ஆதி திராவிடர் | .. | .. | 98,952 பேர்கள். |
| பழங்குடியினர் | .. | .. | 244 பேர்கள். |
| பிற்பட்டோர் | .. | .. | 48,774 பேர்கள். |
| ஏனையோர் | .. | .. | 31,866 பேர்கள். |
| மொத்தம் | | .. | 1,79,836 |

816 இனங்கள் விசாரணையில் உள்ளன; 139 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.



**78.** தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராம கைவினைஞர்கப் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் (சட்டம் 38/76).

30-11-1882 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| ஆதி திராவிடர் | .. | .. | 39 |
| பிற்பட்டோர் | .. | .. | 197 |
| ஏனையோர் | .. | .. | 116 |
| மொத்தம் | | .. | 352 |

463 இனங்கள் விசாரணையில் உள்ளன.

**79.** தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண் நிலங்களின் நிர்வாகத்தினை முறைப்படுத்துதல்) சட்டம்.

30-11-1982 ஆம் நாளன்று இருந்தவாறு, 66,209 குத்தகைதாரர்களையும் 1,56,572 ஏக்கர் நிலத்தையும் கொண்ட 9,350 பொதுப் பொறுப்புக் கழகங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன. 5,953 பினாமி குத்தகைதாரர்கள் இருப்பதும், பயிரிடுவோர் ,050 பேர் நில உச்சவரம்புக்கு மிகையாக மொத்தத்தில் 16,440 ஏக்கர் நிலம் வைத்திருப்பதும் இச்சரிபார்ப்பின் மூலம் தெரிய வந்தது. 1,023 பினாமி குத்தகைதாரர்கள், 5,387 பயிரிடுவோர்கள் ஆகியோர் நில உச்சவரம்புக்கு மிகையாக வைத்திருந்த 11,283 ஏக்கர் நிலம் ஒருவகை செய்யப் பட்டுள்ளது.

**80.** 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம்.

தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 10-9-1979 ஆம் நாளிட்ட 1471 ஆம் அரசாணையில் வரையறுத்துள்ளவாறு, வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்கள் விவரம் பின்வருமாறு:—

| | ரூ. பை. |
|---|---|
| 1. தொழிலாளியின் ஏர் மற்றும் மாடுடன் உழுதல். | 12.00 நாளொன்றுக்கு |
| 2. நிலக்கிழாரின் ஏர் மற்றும் மாடுடன் உழுதல். | 7.00 நாளொன்றுக்கு |
| 3. நெல் அறுவடை. | நாளொன்றுக்கு ரூ. 7.00 அல்லது கண்டு முதலில் 1/8 பாகத்தில் ஒரு தொழிலாளியின் பங்கின் பண மதிப்பு இவற்றில் எது, அதிகமோ அத்தொகை. |

| | | |
|---|---|---|
| 4. பிற பயிர்கள் அறுவடை | 7.00 | நாளொன்றுக்கு |
| 5. நாற்று நடுதல்/களை எடுத்த . | 5 00 | நாளொன்றுக்கு |
| 6. ஏனைய விவசாய வேலைகள் (அண்டை வெட்டுதல், நிலத்தைச் சீர்ப்படுத்துதல், மரம் ஏறுதல், தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல் மற்றும் பால் பண்ணையில் வேலை ஆகியவை உட்பட). | 7.00 | நாளொன்றுக்கு |

இந்த ஊதிய வீதம் 15-9-1979 முதல் அமுலில் இருந்து வருகிறது

மேற்கண்ட குறைந்தளவு ஊதிய வீதங்களை மேலும் திருத்தியமைக்கும் பொருட்டு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 2—3—1982 ஆம் நாளிட்ட 448 ஆம் எண் அரசாணையில் அரசு நில சீர்திருத்த ஆணையரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. இக்குழு 10—1—1983 அன்று தனது அறிக்கையை அரசுக்கு கொடுத்தது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆண்டு உழவுத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம்.

(இச்சட்டம் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்துக்குப் பொருந்தும்) வருவாய் துறையின் 24—2—1979 ஆம் நாளிட்ட 420 ஆம் எண் அரசாணையின் மூலம் (இது பின்னர் வருவாய்த் துறையின் 1—9—1981 ஆம் நாளிட்ட 1900 ஆம் எண் அரசாணையின் மூலம் திருத்தப்பட்டது). தனி நபர் குழு அளித்த அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க ஊதியங்கள் குறித்த விவரம் வருமாறு:—

(1) உரிய வயது வந்தோர்—

| | |
|---|---|
| (அ) உழுதல், விதைத்தல், நாற்றுப் பறித்தல், செப்பனிடல், சுத்தரித்து ஒழுங்கு படுத்துதல், நிலங்களையும் வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும் நிலத்தைத் தயார் செய்தல். | நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லும் ரூ. 2.80-ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு 9 ரூபாய் வழங்கப்படும். |



| | |
|---|---|
| ஆ) நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாக் குறிப்பிடப்படாத ஏனைய வேளாண் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு. | நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லும் ரூ. 1.80-ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு 7 ரூபாய் வழங்கப்படும். |

(2) உரிய வயதடையாதவர்கள்—

| | |
|---|---|
| அனைத்து வகை வேளாண்மை தொழில்களுக்கும். | நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லும் 1.50 ரூபாயும் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் வழங்கப்படும். |

"உழுதல்" தவிர ஏனைய வேளாண் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். "உழவுக்கு" மட்டும் நாளொன்றுக்கு 5 மணி நேரமாகும்.

16. நகர்ப்புற நில உச்சவரம்பு.

82. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால், நகர்ப்பகுதி மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற தொழிற்சாலைகளும் ஏனைய நிறுவனங்களும் நகர்ப் பகுதிகளில் வளர்ந்து வருகின்றபடியால், கிராம மக்கள், கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர். சிறு நகரங்கள், நடுத்தர நகரங்கள் ஆகியவற்றில் மக்கள் சென்று குடியேறுவதைவிட பெரு நகர்களிலும் அதிகப் பரப்பளவுள்ள மாநகர்களிலும் மக்கள் சென்று குடியேறுவது அதிகமாகும். இதனால் கட்டுக்கடங்காது குடிசைகள் பெருகி வருவதாலும், சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகி வருவதாலும் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே அரிதாகக் கிடைக்கும் நகர்ப் பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தி, முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனால் ஊகவாணிகம் நடப்பதை தடுப்பதும் அவசியமாகும் என்று கருதப்பட்டது.

83. நகர்ப்புற பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது; இதன் பலனாக அரிதிற் கிடைக்கும் மதிப்பு மிக்க நகர்ப்புற நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும், பின்னர் அதிக விலைக்கு விற்க முயலும் ஊகவாணிகம் நடத்துவதும் பெருகிவிட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் கருதப்பட்டது. தனியாரின் உடைமையில் உள்ள நிலங்களின்

அளவுக்கு உச்ச வரம்பு விதித்தும், வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள் அனைத்தையும் சமுதாய உடைமையாக்குவதே இதன் நோக்கமாகும். இந்நோக்கத்துடன் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.

84. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு:

(i) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம், வைத்திருக்கின்ற காலி நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல்;

(ii) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்.

(iii) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்தல் ஆகியவையாகும்.

85. இச்சட்டத்தைச் செயலாக்குவதில், பொதுமக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகளும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டு குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது. நகர்ப்பகுதி சொத்துக்களை சமுதாயவுடைமை ஆக்குவதென்ற குறிக்கோளைக்கடைபிடிக்கும் பொருட்டும் பழைய சட்டத்தின் இடர்பாடான விதித்துறைகளின் மூலம் பொதுமககளுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கும் பொருட்டும் பொதுமக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கும் வண்ணம் இச்சட்டம் இயற்றப்பட்டது.

86. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்ச வரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் 14, 15 20(3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகள் 3—8—1976 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. 14, 15, 20(3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17—5—1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

87. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்பகுதி (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 24/1978), சென்னை நகர்ப்புற கூட்டுப்பகுதியின் பரப்பு 1,400 கி. மீட்டரிலிருந்து 575 கி. மீட்டராகக் குறைக்கப்பட்டு உள்ளது. ஏனைய நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதின் மூலம், அவை மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது.



88. இச்சட்டம் பின்வரும் நகர் கூட்டுப் பகுதிகளில் செயலில் உள்ளது:—

நகர் கூட்டுப் பகுதிகளின் பெயர்.

1. சென்னை.
2. மதுரை.
3. கோயம்புத்தூர்.
4. திருச்சிராப்பள்ளி.
5. சேலம்.
6. திருநெல்வேலி.

89. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துவர அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு:—

தமிழ்நாடு சட்டம் 24/1978.

| நகர் கூட்டுப் பகுதி. | வகைப்பாடு. | தனிப் பட்ட ஒருவர். | ஒரு குடும்பம். | தொழில் நிறுவனம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை | I | 500 | 2,000 | 2,000 |
| மதுரை<br>கோயம்புத்தூர்<br>திருச்சிராப்பள்ளி<br>சேலம் | II | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி | III | 2,000 | 4,000 | 4,000 |

90. இச்சட்டத்தின் செயல்வரம்பிலிருந்து, பயிரிடும் நிலங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. பயிரிடப்படாத நிலம் பெருந்திட்டத்தில் காட்டப்பட்டு அவை தொடர்ந்து பயிரிடும் நிலமாக பயன்படுத்தப்பட்டு வருமானால், அந்நிலங்களுக்கு இச் சட்டம் பொருந்தாது. ஆனால், வேளாண்மை அல்லாத வேறு பணிகளுக்காக அந்நிலங்கள் பயன்படுத்தப்படுமானால் இச்சட்டம் அத்தகைய நிலங்களுக்குப் பொருந்தும்.

91. விற்பனைப் பத்திரம், ஏனைய பத்திரங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் காலி நிலங்களா அல்லது பயிரிடும் நிலங்களா என்பது குறித்து பொருத்தமான அதிகாரிகள் சரிபார்க்கப் பயன்படும் வகையில், 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்காகப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்போது உரிமை மாற்றம் செய்து கொடுப்பவரும், செய்து கொடுக்கப்பெறுபவரும், எல்லா நேர்வுகளிலும் படிவம் XIII-ல் அமைந்த உறுதிமொழியும் இரு நகல்களைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும் என்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

92. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்ச வரம்பிற்கு கூடுதலாகக் காலி நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அவ்வாறு கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை அப்பகுதியின் அதிகார வரம்பைப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். பொது மக்களும், நிறுவனங்களும், வணிகப் பேரவைகளும் முறையீடு செய்ததன் காரணமாக, இந்தியக் குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தின்படி 6 (1) விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் மேற்கொண்டும் 697 நாட்கள் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற பகுதி நிலச் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் (சட்டம் 24/78) 7 (1) ஆவது பிரிவின் கீழ் விவர அறிக்கை தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் 14-8-1978 ஆம் நாளோடு முடிவடைந்தது. பொது மக்களும், வணிகப் பேரவைகளும் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த விவர அறிக்கையை தாக்கல் செய்யும் கால வரம்பு ஒரு திங்கள் கால அளவிற்கு அதாவது 14-9-1978 ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழும் 1978 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழும் 16,209 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 1978 ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதித்துறைகளின் படி, தாக்கல் செய்யப்பட்ட 12,678 அறிக்கைகள் உச்சவரம்பு அளவிற்குள் வருகின்றன என்று அறிவிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 3,531 அறிக்கைகள் பொருத்தமான அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளையொட்டி கையகப்படுத்தக் கிடைக்கப்பெறும் உபரியாகவுள்ள காலி நிலங்களின் பரப்பளவு 4,24,94,371 சதுர மீட்டர்கள் ஆகும். பொருத்தமான அதிகாரிகள் அந்த விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருகின்றனர். 51,48,259 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலம் உபரியாகவுள்ளது என்று அறிவிக்க 398 அறிக்கைகள் மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அறிக்கைகள், தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற பகுதி நில (உச்சவரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



31-12-1982 ஆம் நாள் வரையில் 265 இனங்களில் உபரியான 31,58,643 சதுர மீட்டர் பரப்பளவு காலி நிலம் குறித்து மேற்படி சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் கீழ் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. 189 இனங்களைப் பொறுத்தமட்டில், 28,51,568 சதுர மீட்டர் பரப்பளவுள்ள காலி நிலம் சுவாதீன உரிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பொருத்தமான அதிகாரிகள், மேற்படி சட்டத்தின் 9 முதல் 11 வரையிலான பிரிவுகளின் கீழ் அந்த அறிக்கைகளை பரிசீலித்து வருவதால், உபரியாக கிடைக்கப்பெறும் காலி நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதை இந்நிலையில் துல்லியமாக மதிப்பிட இயலாது.

93. நகர்க் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் கையகப்படுத்தப்பட்ட காலி உபரி நிலங்களுக்கு வழங்கத்தக்க ஈட்டுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நகர்ப்புறக் கூட்டுப்பகுதி | தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டம். | |
|---|---|---|
| | வகை | வழங்கத்தக்க தொகை. |
| (1) | (2) | (3) |
| சென்னை .. | I | ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். |
| மதுரை<br>கோயம்புத்தூர்<br>திருச்சி<br>சேலம் | II | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய்க்கு மேற்படாமல். |
| திருநெல்வேலி .. | III | ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல். |

94. இச்செயல் நோக்கத்திற்காக, இம் மாநிலத்திலுள்ள நகர்ப்புறக் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றும் முறையான நகர்ப்பகுதி வளர்ச்சிப் பணியையும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக நகர்ப்புறக் கூட்டுப் பகுதியில் அப்பகுதி அமைந்துள்ள இடம், பகுதி, நகர்க் கூட்டுப் பகுதியில் அமைந்துள்ள அந்நிலத்தின் பொதுப் பயன் நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலுள்ள அந்நிலத்தின் பயன்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரசு எடுத்துக் கொண்ட உபரி காலி நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக இதுவரையில் 6.03 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

95. அரசு காலி நிலத்தைக் கையகப்படுத்தும்போது, அந்நிலத்திற்காக வழங்கத்தக்க மொத்தத் தொகையில் 25 சதவீதத் தொகையை அல்லது 25,000 ரூபாயை இவற்றில் எத்தொகை குறைவானதோ அத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும். எஞ்சியுள்ள தொகையை, காலி நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டுக் கால அளவில், ஆண்டு ஒன்றிற்கு 6 சதவீத வட்டியுடன் சம ஆண்டுத் தவணைகளில் வழங்க வேண்டும்.

96. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள் அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தாது.

97. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு 24ஆம் சட்டத்தின் 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் விதித்துறைகளைச் செயற்படுத்தியதில் நடைமுறை இடர்ப்பாடுகள் இருந்தன. இவ்விடர்பாடுகளைக் களையும் பொருட்டு, மேற்கூறிய 20ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவிற்குப் பதிலாக தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நகர் பகுதி நிலத் (உச்சவரம்பு கட்டுதல்—முறைப் படுத்தல்) (தமிழ்நாடு சட்டம் 14/1979) திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய உட்பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) எதுவும், உச்சவரம்புக்குக் கூடுதலாக உள்ள நிலங்களை முழுமையாகவோ அல்லது அவற்றில் ஒரு பகுதியையோ, விற்பனை செய்தல், அடைமானம் வைத்தல் தானமாகக் கொடுத்தல், குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றின் மூலமோ அல்லது பிற வழிகளிலோ உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும், அவ்வாறு செய்யப்படும் உரிமை மாற்றம் சட்டப்படி செல்லாது என்றும் இச்சட்டம் வகை செய்கிறது; மேலும், பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்பு கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) வைத்துள்ள நிலங்கள் பொது அறப்பணிகளுக்கு அல்லது சமயப் பணிகளுக்குத் தேவைப் படுவதும் பயன்படுவதும் அற்றுப்போகுமானால், மேற் கூறிய தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகள் அவற்றிற்குப் பொருந்தும்; மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க, அத்தகைய உபரி காலி நிலங்களை அரசு கையகப்படுத்தும்.

98. பொதுக் காரியங்கள் அல்லது யாதொரு தனி நபருக்கும் இடர்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

99. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குடியிருப்புகள் கட்டி கொடுக்கும் திட்டத்திற்கு ஏற்பளிக்கவும், அதன் பொருட்டு மிகையாகவுள்ள காலி நிலங்களைத் தொடர்ந்து வைத்து



வருவதற்குரிய வரையறைகளையும் நிபந்தனைகளையும் வரையறுப்பதற்கும் உரிய செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

100. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான காலி நிலங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 24ஆம் பிரிவின் விதித்துறைகள், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இயற்றப் பட்ட விதிகளின் 23ஆம் விதி ஆகியவற்றின்படி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்ச வரம்பு கட்டுதல்—முறைப்படுத்தல்) சட்டத்தின் 11 (3)ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்காக விண்ணப்பதாரர் பலருடைய தகுதி குறித்து மதிப்பிடுவதற்காகவும் அரசுக்குப் பரிந்துரைப் பதற்காகவும் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

101. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட காலி நிலங்களில் 19.3487 எக்டேர் நிலத்தை, அரசுத் துறைகள், அரசுக் கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகிய வற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

102. மேற்கூறிய சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர் உள்ளாட்சி அதிகார மன்றங்களிடம் தாக்கல் செய்யப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் குறித்த விண்ணப்பங்களுக்கு நகர்ப்பகுதி நில உச்சவரம்புச் சட்டம் இயற்றப்படவுள்ளதால் அத்தகைய வரைப்படங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று கூறி அரசு 1976 பிப்ரவரியில் கட்டளைகளைப் பிறப் பித்துள்ளதால், உள்ளாட்சி மன்றங்கள் ஒப்புதல் அளிக்க இயலவில்லை. மனைப்பிரிவு வரைபடங்களுக்கு ஒப்புதலைப் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு 1976 ஆகஸ்டுத் திங்கள் 3ஆம் நாள் வரையில், பொருத்தமான அதிகாரியால் ஒப்புதல் அளிக்கப்படாமல் இருந்ததால், அவ் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்த விண்ணப்பதாரர்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்பட்டன. இதன் காரணமாக, மனைப்பிரிவு வரைபடங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்காக தாக்கல் செய்யப் பட்ட விண்ணப்பங்களுக்கு, பின்னர் ஒப்புதலளிக்கப்படுமையில் அவ்விண்ணப்பதாரர், இச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட உச்சவரம்பிற்கு மிகாமல், மொத்தத்தில் நிலம் வைத்துள்ள வருக்கு, வீடு கட்டும் மனையாக விற்பனை செய்வதற்கென்று அக்காலி நிலத்தை வைத்திருக்கலாம் என்பதற்கு வகை செய்து 5ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவைத் திருத்தக் கருதப் பட்டுள்ளது. இதற்கான சட்ட முன்வடிவு, 1980 ஜூலைத் திங்களில் சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்டது: பின்னர் இது தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

## 17. கட்டிடங்கள்.

### 103. பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கான அலுவலகம் —குடியிருப்புகள்.

1978-79ஆம் ஆண்டிலிருந்து பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கென அலுவலக—குடியிருப்புகளைக் கட்டி கொடுக்கும திட்டத்தைப் படிப்படியாக அரசு நிறைவேற்றி வருகிறது. இது வரை 858 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் 478 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 219 பிர்க்காக்களில் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது. 1983–84ஆம் ஆண்டுக் காலத்தில், 100 குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு அரசு கருதியுள்ளது.

### 104. கோட்ட அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல்.

[illegible]ளயம்கோட்டை, சிவகெங்கை, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், திண்டிவனம், மேட்டூர், சங்ககிரி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 1983-84 ஆம் ஆண்டுக் காலத்தில் குன்னூரில் வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டிடம் ஒன்றைக் கட்ட அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

### 105. வட்ட அலுவகங்கள்.

காரைக்குடி, விருதுநகர் ஆகிய இடங்களில் வட்ட அலுவலகங்களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய 10 வட்ட அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 1983-84ஆம் ஆண்டில் கும்மிடிப்பூண்டி, மேட்டுப்பாளையம், திருவாரூர், மைலாப்பூர் திருவல்லிக்கேணி ஆகிய வட்டங்களுக்கான புதிய வட்ட அலுவலகக் கட்டிடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

### 106. வருவாய் அலுவலகங்களில் வசதிகள் செய்து கொடுத்தல்

90 வருவாய் அலுவலகங்களில் நவீன வசதிகளுடன் கழிப்பிட வசதிகள் செய்து கொடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இவற்றுள் 66 வருவாய் அலுவலகங்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுவிட்டன. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் வருவாய் அலுவலகங்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுப்பதற்கு அனுமதி வழங்க அரசு கருதி



யுள்ளது. ரூ. 3.70 இலட்சம் செலவில் 10 வட்ட அலுவலகங்களில், வசக்கிள் நிற்குமிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது. வருவாய் அலுவலகங்களுக்குத் தேவையான புதிய மேசை—நாற்காலிகள் முதலியன வாங்குவதற்காக 1983-84-ல் ரூ. 10 இலட்சத்திற்கு அனுமதி வழங்க அரசு மேலும் கருதியுள்ளது.

### 107. மோட்டார் வண்டிகள்.

1983-84 ஆம் ஆண்டில், மாவட்டங்களில் உள்ள வரவேற்பு பணியில் ஈடுபட்டுள்ள 11 வட்டாட்சியர்களுக்கு (ஜீப்புகள் வழங்கப் படாமலிருக்கும் வட்டாட்சியர்களுக்கு) ரூ. 9.68 இலட்சம் செலவில் 11 ஜீப்புக்கள் வழங்குவதற்கு அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது.

## 18. இடைத்தரகர் ஒழிப்பு

108. அரசுக்கும் நிலத்தை உழுபவருக்கும் இடையிலான ஜமீன், இனாம் மற்றும் அதுபோன்ற இனங்களில் இடைத்தரகர்களை ஒழிக்கும் பணி அரசால் மேற்கொள்ளப்பட்ட ஓர் பெரும் விவசாயச் சீர்திருத்தம் ஆகும்.

109. இவ்வினத்தில் பெருவாரியான முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்பட்டுள்ளது:—

அ. தமிழ்நாடு உடைமைகள் ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான சட்டம், 1948 சட்டம் XXVI/1948)

| | மொத்த உடைமைகள். | சதுர கிலோ மீட்டரில் பரப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள். | 5,134 | 29,931.21 |
| 2. 31–12–1982 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 5,134 | 29,931.21 |
| 3. நிலுவை .. | இல்லை. | இல்லை. |

ஆ. தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 26/1983).

| | | |
|---|---|---|
| 1. அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட மொத்த உடைமைகள் | 2,094 | 4,151.87 |

| | | | |
|---|---|---|---|
| 2. | 31-12-1982 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 2,058 | 4,123.96 |
| 3. | நிலுவை .. .. | 36 | 27.91 |

இ. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 30/1963).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த சிறு இனாம்கள். | 13,565 | 4,049.02 |
| 2. | 31-12-1982 வரை நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 13,561 | 4,048.49 |
| 3. | நிலுவை | 1 | 0.53 |

ஈ. மிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1963 (சட்டம் 27/1963).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்தப் பரப்பு. | 13 | 83.20 |
| 2. | நிலவரித் திட்டம் செயல் படுத்தப்பட்ட பரப்பு | 13 | 83.20 |
| 3. | நிலுவை | இல்லை | இல்லை |

உ. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம், 1969 (சட்டம் 24/1969).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த உடைமைகள். | 10 | 324.10 |
| 2. | நிலவரித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பரப்பு. | 3 | 145.17 |
| 3. | நிலுவை .. .. | 7 | 177.93 |

பாக்கியுள்ள 36 இனாம் உடைமைகளில் 35 இனாம் உடைமைகள் உச்ச உயர் நீதி மன்றங்கள் மற்றும் இதர சிவில் நடுவர் மன்றங்களில் தடையாணையில் உள்ளன. மீதமுள்ள நிலவரித் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



110. அதே போல் ஒரு சிறு இனாம் உடைமைக்கும் உயர் நீதி மன்றத்தின் தடையாணை ஏற்பட்டுள்ள காரணமாக, அதன் நீக்கத்தை எதிர்பார்த்து நிலவரித்திட்டம் துவங்க இயலாத நிலையில் உள்ளது.

111. ரயத்துவாரிப் பட்டா வழங்குதலும் மற்றும் பயனடைவோரும்.

31-12-1982 வரை பல்வேறு சட்டங்களின் கீழான விதி முறைகளின்படி ரயத்துவாரிப் பட்டா வழங்கப்பட்டுள்ள பட்டாதரர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் பட்டியலில் காணப்படுகிறது.

| சட்டத்தின் பெயர். | பயனடைந்தோர் எண்ணிக்கை. | பட்டா வழங்கப்பட்ட நிலப்பரப்பு. (ஹெக்டேரில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்)சட்டம், 1948. | 23,33,847 | 18,17,389,72,00 |
| தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963. | 3,55,963 | 1,93,741,22.05 |
| தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963. | 6,003 | 5,605,91.50 |
| தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1963 | 5,11,120 | 3,23,223,86.50 |
| கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலும்) சட்டம், 1969. | 6,468 | 10,771,00.00 |

112. ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பட்டா வழங்குதல்:—

தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம். 1948 அமுல்படுத்தப்பட்ட பின்னர் அரசின் நடைமுறை ஆணைகளின்படி பட்டா வழங்குவது தளர்த்தப்பட்டதால், அரசால் அச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உடைமைகளின் மிகப் பெரும்பான்மையான நபர்கள் பல ஆண்டு

களாக நிலங்களை கைப்பற்றினாலும் ஆளுகையிலும் வைத்திருந்தும், அவர்கள் சட்டத்தின் பல விதிகளின் கீழோ அல்லது அரசின் ஆணைகளுக்குக் கீழோ வராமையால் பட்டா பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்பது காணப்பட்டது. எனவே அரசு 1971ல் விளம்பரப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடர்ந்து அனுபவத்தில் வைத்திருந்த நிலங்களுக்கும், கைப்பற்றுதாரர்களுக்கும் பட்டா வழங்கப்படுதல் வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. இச்சலுகை பின்னர் சட்டங்கள் 26/63 மற்றும் 30/63ன் கீழ் வரும் இனங்களுக்கும் நீடிக்கப்பட்டது. அது போன்று உரிமை பெறும் நபர்கள் பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பட்டா கேட்டு செய்யப்படும் விண்ணப்பங்களுக்கான கடைசி நாளை அவ்வப்போது நீட்டித்து மற்ற எல்லா பகுதிகளுக்கும் கடைசியாக 31-3-1977 வரை நீடித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தென்னாற்காடு மாவட்டம் சின்னக்கல்ராயன் மலைப் பகுதிக்கு மட்டும் இக்கால நிர்ணயம் 31-12-1978 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை 22,527 நபர்கள் உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பயனடைந்து 34,190,73·00 ஹெக்டேர் நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

113. <u>நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் உடைமைகள் ஒழிப்பு:—</u>

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மிகப் பெரும்பான்மை நிலப்பரப்பைக் கைவசம் வைத்திருந்த ஜென்மிகள் சாகுபடி உரிமைகளை வழங்கி குத்தகைக்கு விட்டுள்ளனர். அக்குத்தகை உரிமை 1929ஆம் ஆண்டின் மலபார் குத்தகைதாரர்கள் சட்டத்தினால் ஏற்புடையதாக்கப்பட்டு, குத்தகைதாரர்கள் பயிரிடும் நிரந்தர உரிமையைப் பெற்று விட்டனர். அவர்களுக்குக் கைப்பற்று உரிமையை வழங்கவே கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டம் 1969 (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச்சட்டம் 27-11-1974 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி 324.10 சதுர கிலோ மீட்டர் கொண்ட நிலப்பரப்பு அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நில அளவைப் பணி முடிக்கப்பட்டது. இப்பரப்பு முழுவதுக்குமான ரயத்துவாரி பட்டா வழங்குவதற்கான சட்ட பூர்வ விசாரணைப் பணியும் முடிக்கப்பட்டுவிட்டது. சில ஜென்மம் உடைமைகளை கைப்பற்றில் வைத்திருப்பவர்கள் அவர்கள் கைப்பற்று நிலங்களுக்கு இச்சட்டம் செல்லுபடியாகதென வாதிட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்த ரிட் மனுக்கள் 23-9-1976 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. ஆனால் அவர்கள் டெல்லி உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து, தடையாணையையும் பெற்று உள்ளனர். உச்ச நீதிமன்றத்தில் மாற்றப்பட்ட தடையாணையின்படி



கூடலூர் வட்டத்தில் தடையாணைக்குட்பட்ட பகுதியில் சட்ட பூர்வ விசாரணை வரையிலான நிலவரித் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 31-12-1982 வரை நிலவரித்திட்டம் 146·17 சதுர கிலோ மீட்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரயத்துவாரிப் பட்டாக்கள் 10,771—00—00 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு 6,468 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

114. வருவாய்ப் பின்தொடர் பணி:

( ) மாநிலத்தில் சில பகுதியில் காலப்போக்கில் அசல் நில அளவை உருவழிந்துள்ளதாலும், உள்ள ஆவணங்களைக் கொண்டு பராமரிப்புப் பணியை தொடர்ந்து மேற்கொள்ள இயலாமையாலும், அரசின் ஆணைப்பெற்று அப்பகுதிகளில் மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து நில உடைமைப் பதிவுகளை மேம்படுத்தி பராமரிப்புக்கு உகந்ததாகச் செய்ய வருவாய்ப் பின் தொடர்ப் பணியும் மேற்கொள்ளப்பட்டது. பெரியார், சேலம் மற்றும் தென்னாற்காடு, மதுரை நீலகிரி மாவட்டங்களில் இப்பணி கீழே காட்டியுள்ளபடி முடிக்கப்பட்டுள்ளது:—

| மாவட்டம். | வட்டம். | பரப்பு சதுரகிலோ மீட்டரில். | பயன் னடைந் தோரின் எண்ணிக்கை. | பயனடைந்த பரப்பு ஹெக்டரில். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பெரியார் | கோபிச்செட்டி பாளையம் | 657.67 | 88,182 | 1,04,924-07-0 |
| | சத்தியமங்கலம் | 729.07 | | |
| | பவானி | 699.17 | 47,202 | 50,442-26-5 |
| | ஈரோடு | 1,548.79 | 1,39,632 | 1,31,724-43-0 |
| | கூடலூர் | 949·13 | 64,785 | 1,01,332–85-0 |
| தென் ஆற்காடு | திண்டிவனம் | 1,404.14 | 41.476 | 71,143–21–5 |
| சேலம் | மேட்டூர் | 237·67 | 9,646 | 2,37,670–00–0 |
| மதுரை | கொடைக்கானல் | 390.64 | 15,117 | 3,90,640–00–0 |
| நீலகிரி | கூடலூர் | 413·06 | 961 | 4,130,60–00–0 |

(ii) பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில் நீர்ப்பாசன திட்டப்பகுதிகளின் வருவாய்ப் பின் தொடர்ப்பணி த.ஒ.

போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மறு நில அளவை முன்னேற்றத்தில் உள்ள மீதமுள்ள பகுதிகளின் கீழ்க்கண்டவாறு வருவாய்ப் பின் தொடர்ப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது,

| மாவட்டம். | வட்டம். | பரப்பு சதுரகிலோ மீட்டரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வடாற்காடு | திருவண்ணாமலை | 264.56 |
| பெரியார் | தாராபுரம் | 641.67 |
| நீலகிரி | கூனூர் மற்றும் கோத்தகிரி | 524.68 |
| | உதகமண்டலம் | 1,195,12 |

(iii) மேற்காணும் வட்டங்களில் மறு நில அளவை முடிக்கப்பெற்ற பகுதிகளுக்கு மட்டும் வருவாய்ப்பின் தொடர்ப்பணியை நடத்திக்கொள்வதென்றும், மறு நில அளவை தொடங்கப் பெறாத வட்டங்களில் உடைமை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல் படுத்துவதென்றும் கருதப்பட்டுள்ளது, பின் தொடர்ப் பணி வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை வட்டத்திலும், பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் மற்றும் தாராபுரம் வட்டங்களிலும் 1983–84 பகுதி 11 திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. மறு நில அளவைப் பகுதியாக முடிக்கப்பட்ட வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர் மற்றும் வாணியம்பாடி வட்டங்களிலுள்ள 24 கிராமங்களில் (84,63 சதுர கிலோ மீட்டர்) அடிப்படை ஆவணங்கள் இருப்பதாலும், மற்றும் அரசுக்கு நலமானதாலும், வருவாய்ப் பின் தொடர்ப்பணி எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

**115. தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973:—**

(i) 1859 ஆம் ஆண்டிலிருந்து சில ரயத்துவாரி நிலங்கள் அவற்றின்மீதான 20தடவை ஆண்டுத்தீர்வையை செலுத்திவிட்டு, நிலவரி விதிக்கப்படாமல் வரியில்லாமல் கைப்பற்றில் உள்ளன. வேறு சில நிலங்கள் நில வரியை சலுகை விகிதத்தில் செலுத்திய படி கைப்பற்றில் உள்ளன. இவை வரியற்ற நிலங்கள் என சொல்லப்படுகின்றன. இவற்றிற்கும் மற்ற ரயத்துவாரி நிலங்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில் முன்னதில் ரயத்துக்கள் தோறும் தீர்வை செலுத்துகின்றனர், பின்னதில் சில இனங்களுக்கு தீர்வையே கிடையாது. மற்றும் சில இன்ங்களுக்கு சலுகை தீர்வை வசூலிக்கப்படுகிறது என்பதே. 1972 ஆம் ஆண்டில் அத்தகைய வரியற்ற அல்லது வரி குறைந்த தன்மையை ஒழித்து அவற்றிற்கும் ஏனைய ரயத்துவாரி நிலங்களுக்குள்ளது போன்று தீர்வை முறையை அமுல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இத்தகைய நிலங்களின் மொத்தம் பரப்பு 4,777·23 ஹெக்டேர். இவை சட்டத்தின் ஷெட்யூல் 1–ல் குறிப்பிட்டுள்ளபடி 8 மாவட்டங்களில் காணப்படுகின்றன. ஷெட்யூல் 2–ல் குறிப்பிட்டுள்ளபடி "மோகினி இனாம்கள்" என்ற பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், மயிலாடு



துறை, சீர்காழி ... (continued)

நிலையங்களின் பொறுப்பில் உள்ளன, பழங்கால அரசர்கள் வழங்கிய ரொக்கப்படிக்குப் பதிலாக, ஆங்கிலேய அரசினால் மேற்படி மத நிலையங்களுக்கு இந்நிலங்களின் மீதான தீர்வை மானியமாக ஒதுக்கப்பட்டது.

(ii) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வரியற்ற நிலங்கள் சட்டம், 1973 ஆம் ஆண்டு 31 ஆம் சட்டமாக வெளியிட்ட போதிலும் அரசு ஆணை 1646 வணிகவரி மற்றும் அறநிலயத் துறை 16–10–1979ன்படி மேற்படி சட்டம் 16–10–1979 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் இணைப்பிற்கான திருத்தப்பட்டியல் ஒன்று தனியே அரசால் பிரசுரிக்கப்பட இருக்கிறது. இச்சட்டத்தின் பிரிவு 8ன் படிக்கான வரைவு அறிக்கைகளை சென்னை தவிர ஏனைய மாவட்டங்களுக்குப் பிரசுரம் செய்ய வேண்டி அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை முன்னாளைய வருவாய்த்துறை வாரியம் (நிலவரித் திட்ட) எடுத்துள்ள முடிவின் மீது தற்போதைய நில நிர்வாக ஆணையருடன் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குனரால் மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**116. பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களின்கீழ் தஸ்திக் கொடைகள்:—**

(i) மதம் சார்ந்த நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் கைவசமிருந்த உடைமைகளுக்கு நட்ட ஈட்டுத் தொகை தஸ்திக் கொடையாக அவ்வுடைமையின் அடிப்படையில் ஆண்டுத் தொகைக்கு ஈடாக வழங்கப்படுகிறது, அவ்வடிப்படை ஆண்டுத் தொகை கிராமத்தின் மொத்தக் கைப்பற்று நிலங்களின் மீதான மொத்த ரயத்துவாரி, ஆண்டுக் கேட்பு மற்றும் அவ்வுடைமையிலிருந்து பெறப்பட்ட நிகர பல்வேறு வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இத்தொகையிலிருந்து பாசன ஆதாரங்களின் பராமரிப்பு இதர வருமானத்தை வசூலிக்கும் செலவு ஆகியவை போன்ற சட்ட பூர்வமான பிடித்தங்கள் செய்யப்பட்டு, மீதம் ஆண்டு அடிப்படைத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டு, அந்த நிலையங்களுக்கு தஸ்திக் கொடையாக ஆண்டுதோறும் அறநிலையங்கள் உள்ளவரை வழங்கப்படுகிறது. உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களால் உடைமைகளிலிருந்து வந்த வருமான இழப்பை ஈடு செய்யவும், அந்நிலையங்களுக்கான சேவைகளைப் பராமரிக்கவுமே இக்கொடைகள் வழங்கப்படுகின்றன.

(ii) நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் உதவி நிலவரித்திட்ட அலுவலர்களிடமிருந்து சட்டம் XXVI/1948 மற்றும் 26/1963ன்படி பெறப்படும் செயற்குறிப்புகளின் மீது அந்த நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தஸ்திக் கொடையை நிர்ணயிக்கிறார். ஒவ்வொரு இனத்திலும் நிலையங்களுக்கு மாவட்ட வருவாய் ஆட்சித் தலைவர்கள் மூலம் வழங்கப்படும் தொகை குறித்து அரசின் ஒப்பளிப்புப் பெறப்படுகிறது. தஸ்திக் கொடையுடன் இந்த நிலையங்கள் கூடுதல் ஈட்டுத் துறை, சீர்காழி மற்றும் நன்னிலம் வட்டங்களில் மொத்தம் 231.55 ஹெக்டேர் நிலங்கள் உள்ளன. இவை பல்வேறு மத

தொகையையும் பெறத் தகுதியுண்டு. இத்தொகை 1947 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்நிலையங்கள் பெற்று வந்த வருமானத்தின் அடிப்படையில் இச்சட்டங்களின் கீழ் கொடுக்கப்படும் தஸ்திக் கொடையைச் கழித்துக் கணக்கிடப்படுகிறது. இதன் நோக்கம் அரசின் உடைமைகள் ஒழிப்பினால் வருமான இழப்பு ஏதும் நேரிட்டால் அதனை ஈடு செய்வதாகும். இவ்வாறு அந்த நிலையங்கள் 1947 ஆம் ஆண்டின் குத்தகைக் குறைப்புச் சட்டத்திற்கு முன் பெற்று வந்த வருவாயைத் தொடர்ந்து பெற உதவியளிக்கப்படுகிறது. இதே போல சிறு இனாம்கள் ஒழிப்புச் சட்டம் 30/1963ன் கீழ் எடுக்கப்பட்ட பல சிறு இனாமகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் நிலவரித் திட்ட அலுவலர் தஸ்திக் தொகையை நிர்ணயம் செய்கிறார்.

**117. நில அளவைப் பிரிவின் பணி.**

(i) நில அளவை மற்றும் பதிவுருக்கள் பிரிவு இம்மாநிலத்து அனைத்துப் பகுதிகளிலும் நில அளவை செய்தல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. நில அளவை இத்துறையில் பராமரிக்கவும் படுகிறது. நில ஒப்படைப்பு நில உரிமையைக் கைவிடல், நில ஆர்ஜிதம், நிலங்களின் விற்பனை, வாரிசு உரிமை, பாகப் பிரிவினை, கொடை, நடுவர் மன்ற முடிவுகள். நில வருவாய் ஏலங்கள் ஆகிய உரிமை மாற்றங்களால் நில அளவை புலங்கள் அல்லது உட்பிரிவுகளில் ஏற்படும் பாதிப்பு இத்துறையில் பதிவு செய்யப்பட்டு வரைப்படங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. புலத்தின் உட்பிரிவுகள் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை செலுத்திய சலானுடன் வட்டாட்சியருக்கு அனுப்பப்படவேண்டும். அதேப்போல புல எல்லையைக் காட்டுவதற்கென அதற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகையினை எல்லைற் கோடு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் செலுத்தி சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு மனு செய்து கொள்ளப்பட வேண்டும்.

(ii) இத்துறை, வளர்ச்சிப் பணிகளுக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படும் கிராமம், நகரம். வட்டம், ஊராட்சி ஒன்றிப்பு, மாவட்டம் ஆகியவற்றுக்கான வரைப்படங்களையும் வரைந்து தருகிறது. நகரங்களும் மாநகரங்களும் நகர நில அளவைப்படியும் ஊராட்சிகளைப் பொறுத்தவரை தெருக்களும் சந்துகளும், தெரு நில அளவை செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகங்களும் அரசும் நில அளவை செலவை விகிதாச்சாரப்படி ஏற்கின்றன.

(iii) நில அளவையும், பராமரிப்பும் ஒருங்கிணைந்த ஒன்றாகும். 1948 ஆம் ஆண்டு மாநிலத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றுதலுமான) சட்டப்படியும் அதனைத் தொடர்ந்து ஏனைய இனங்கள் அதுபோன்ற சட்டங்களின் கீழும் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டன. மொத்தத்தில் இதன்படி 38,849 சதுர கிலோ மீட்டர் பரப்பு நில அளவை செய்ய வேண்டி இத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1963 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. பழைய



சட்டங்களின்படியும், நடைமுறையில் இல்லாத நில அளவை முறைகளின்படியும் முன்னர் நில அளவை செய்த நிலங்களிலும் ஒரு பொது மறு நில அளவை மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1968 ஆம் ஆண்டு முதல் நில அளவை உருவழிந்துள்ள இடங்களில் மறு நில அளவை செய்யவும், எட்ட மற்றும் அளவை மாற்றச் சட்டங்களை அமுல் செய்யவும், அடி அளவைப் படி நில அளவைச் செய்யப்பட்ட இடங்களில் அதனை அப்படியே மெட்ரிக் அளவிற்கு மாற்றவும் பணிகளை மேற் கொள்ளும் பொருட்டு இத்துறை புனரமைப்பு செய்யப்பட்டது.

118. நில உடைமைத் மேம்பாட்டுத்திட்டம்.

(i) 1979 ஆம் ஆண்டில் நில உடமைகளின் தற்போதைய நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் எளிதாக்கப்பட்ட துணை அளவை முறையை நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஏற்று ஒப்புதல் அளித்தது. துவக்கத்தில் இத் திட்டம் 1-6-1979 முதல் மாநிலத்தின் 30 வட்டங்களில் 28 சிறப்புப் பணியாளர் தொகுதிகளின் உதவியால் அமுலாக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் நில உடமைகள் மறு அளவை செய்யவும், பட்டாதாரர்கள் எதிர்ப்பு தெரிவிக்கா விடில், கூட்டுப் பட்டாக்களைப் பிரிக்கவும் நில உடைமைகளின தற்போதைய நிலையின் அடிப்படையில் நில அளவுப் பதிவேடுகளைத் தயாரிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சரியான நில அளவை ஆவணங்களைத் தயாரிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சரியான அளவுகளைக் காட்டக்கூடிய இயல் நிலையான வரைபடங்களுடன் விவசாயிகளுக்குப் புதிய பட்டாக்கள் அளிக்கப்படுகின்றன. மேலும் புதிய 'ஏ' பதிவேடுகள், சிட்டாக்கள், நில அளவைப் புத்தகங்கள் மற்றும் கிராம வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அளிக்கப்படுகின்றன.

(ii) விவசாயிகள் தங்கள் நில உடைமைகளைப் பற்றித் தெளிவாக அறிந்துக் கொள்ளவும் வங்கிகளிடமிருந்து கடன் உதவி பெறவும் சொத்துக்கள் மாற்றம் போன்றவைகளுக்கும் இத் திட்டம் உதவியாக இருப்பதால், அண்மையில் அரசு இத்திட்டத்தை மறு அளவை செய்யப்பட்டப் பகுதிகள் மற்றும் தீவிர உட்பிரிவு திட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கு விரைந்து செயல்படுத்தும் திட்டமாக நீட்டித்துள்ளது. கிராம மக்களை பொறுத்தவரையில் இது ஒரு இன்றியமையாத திட்டம் என்பதால், இத்திட்டத்தை மிகக் குறைந்த கால கட்டத்தில் முடியுமானால் இரண்டாண்டுகளுக் குள் முடிக்க திட்டமிட்டுள்ளது. இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு அரசு இத்திட்டப்பணிக்கென முன்பே செயல்பட்டு வரும் 28 பணியாளர் தொகுதிகளை ஆட்கள் நியமனம் மூலம் வலுப்படுத்துவதுடன் 80 புதிய பணியாளர் தொகுதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக சுமார் ரூ. 10 கோடி செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) இத்திட்டத்தின் அவசர செயல்பாட்டிற்காக, இத்துறையில் பணியாளர் வரம்பு கணிசமாக அதிகரிக்கப்பட்டதால் சுமார் 7,000 புதிய நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது.

(iv) 31-12-1982 வரை இப்பணியில் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநிலத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கும் மொத்தப் பரப்பளவு. | .. | 80,000 Sq.KM. |
| 2. | (அ) 1-1-83—ல் நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை (திருத்திய புள்ளி விவரம்). | 7,771 | .. |
| | (ஆ) 30–11–1982 வரை இத்திட்டம் மேற்கொள்ளும் பரப்பளவு. | .. | 56,174.94 Sq.KM. |
| 3. | முடிவு பெற்ற மொத்த கிராமங்கள் (அ) கள ஆய்வுப் பணி | 1,963 | |
| | (ஆ) அவற்றின் பரப்பளவு; | | 11,965 Sq.KM. |
| 4. | (அ) புல எல்லை குறித்தலும் அளவை மேற்கொள்ளப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கையும். | 1,722 | .. |
| | (ஆ) அவற்றின் பரப்பளவு | .. | 10,503 Sq.KM. |
| 5. | சரிபார்த்த உட்பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை. | 33,40,560 | .. |
| 6. | தணிக்கை செய்யப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை. | | 25,19,865 |
| 7. | அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை. | | 15,06,183 |
| 8. | புதுப்பிக்கப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை. | | 7,88,448 |
| 9. | புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளின் மொத்த எண்ணிக்கை. | | 50,510 |
| 10. | அளக்கப்பட்ட மற்றும் வரைபடத்தில் காட்டப்பெற்ற விளக்கிகளின் மொத்த எண்ணிக்கை. | | 2,14,123 |
| 11. | பைசல் செய்யப்பட்ட புகார்களின் மொத்த எண்ணிக்கை. | | 9,708 |



| | | தனி. | கூட்டு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| 12. | தெளிவான கணக்குகள் ஒப்படைக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | | | 1,010 |
| 13. | பிரிவு 13—ன் கீழ் அறிவிக்கைகள் பிரசுரிக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | | | 882 |
| 14. | நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு கிராமங்களில் இருந்த பட்டாக்களின் விவரங்கள். | 2,78,979 | 1,99,458 | 4,78.437 |
| 15. | நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | 4,02,385 | 1,81,705 | 5,84.090 |
| 16. | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | .. | .. | 9,02,999 |

119. மத்திய நில அளவை அலுவலகம்—

( ) வரைபட தயாரிப்பு மற்றும் வெளியிடு ஆகியவற்றை மட்டும் கவனிக்க ஒரு துணை இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் ஓர் தனி மத்திய நில அளவை அலுவலகமும் இயங்கி வருகிறது. இதன் கீழ் ஒரு வரைபட அச்சகமும் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்தின் முக்கியப்பணி, மாவட்ட நில அளவை அலகுகளிலிருந்து பெறப்படும் மூல புலச்சுவடிகளை வெளியிடுவதும் ஆவணங்களை பாதுகாப்பதும் ஆகும். இத்துடன் உரிய கால அளவுகளில் ரயத்துவாரி கிராம வரைப்படங்களை புதுப்பித்து அச்சிட்டு வெளியிடுகிறது. அதே போல் வட்டம், நகரம், மாவட்டம், மாநிலம் ஆகியவற்றின் வரை படங்களைத் திருத்தி அவ்வப்போது வெளியிடுகிறது. இதர துறைகளுக்குத் தேவையான பல்வேறு வரைப்படங்களும் மற்றும் விளக்கப்படங்களும் இவ்வலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

(ii) இவ்வாண்டில், இவ்வலுவலகம் மாநிலத்தின் வரைபடம், தமிழ்நாட்டுச் சாலைகள் வரைபடம் ஆகியவற்றை, பெரிய, சிறிய அளவில் தயாரித்து அரசு பொருட்காட்சிகளிலும் மத்திய நில அளவை மற்ற மாவட்ட அலகுகளிலும் ஒரு படம் 25 பைசா முதல் ரூ. 2 வரை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. பொதுமக்களிடமிருந்து இப்படங்களுக்கு நல்ல வரவேற்புள்ளது.

(iii) இத்துறையின் அரியப் பணிகளைப் பொது மக்கள் நன்றாகத் தெரிந்துக் கொள்ளும் பொருட்டு' முதன், முறையாக அரசால் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் அதாவது சென்னை திருச்சிராப்பள்ளி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, சேலம்

136016

மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் பங்கு கொண்டு, ஒரு நிலையம் ஏற்படுத்தி அதைக் காணும் மக்களுக்கு, இத்துறையின் பல்வேறு பணிகளை விளக்கியது. மேலும், மேற்படி பொருட்காட்சிகளிலும், மத்திய நில அளவை மற்றும் மாவட்ட அலகுகளிலும் இந்த ஆண்டு ரூ. 38,045.24க்குப் பல்வேறு வரைபடங்கள் விற்கப்பட்டன.

19. பட்டாப் புத்தகத் திட்டம்.

120, பட்டாதாரர்கள், உழவர்கள், தாங்கள் வைத்துள்ள நிலங்கள் பற்றிய நாளது வரையிலான விவரங்களை அறிவதற்கு இயலும் வண்ணமும் தாமதம் அல்லது இடையூறின்றி கடன் வழங்கு நிறுவனங்களிடமிருந்து கடன்கள் பெற இயலும் பொருட்டும், பட்டா புத்தகத் திட்டம் 1972ஆம் ஆண்டில் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது.

121. நிதித்துறையின் மதிப்பீட்டுக் குழு இத்திட்டம் செயல்படுவது குறித்து ஆய்வு செய்தது. இத்திட்டத்தை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, முன்னாள் வருவாய்த்துறை வாரியத்தின் நிலவரி ஆணையாளரின் தலைமையின் கீழ் குழு ஒன்றை அமைப்பது குறித்து மதிப்பீட்டுக் குழு தனது மதிப்பீட்டு அறிக்கையில் கருத்து தெரிவித்தது. அதற்கிணங்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு சில முக்கிய பரிந்துரைகளைச் செய்துள்ளது. இக்குழுவின் முக்கிய பரிந்துரை உடைமை உரிமைக்குச் சான்றாக பட்டாப் புத்தகத்தை வழங்குவதற்கான சட்டம் ஒன்றை இயற்றுவது தொடர்பானதாகும். இப்பட்டாப் புத்தகம் இருப்பதனால் வேளாண்மை காரியத்திற்கு வில்லங்கச் சான்றிதழை கேட்காமலேயே நிதி உதவி நிறுவனங்கள்: கடனுதவி நிறுவனங்கள் கடன்கள் வழங்க முடியும்.

122. அதன்படி, பட்டாப் புத்தகச் சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு எண். 49/1981) 1981 ஆம் ஆண்டு மே திங்களில் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இச்சட்ட முன்வடிவ கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

123. நிலச்சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் வட்டாட்சியர் பட்டா புத்தகம் வழங்குவார் என்றும், விற்பனை, அடமானம், தானம், சொத்து பரிமாற்றம் அல்லது வேறு வகையில் நிலத்தை மாற்றம் செய்வது எதனையும் பட்டாப்புத்தகம் இருந்தாலன்றி மற்றப்படி பதிவு அலுவலர் பதிவு செய்யக் கூடாதென்றும் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவு வகை செய்கிறது.

V211,31 N83

124. தனிப்பட்டவர்கள், சங்கங்கள், வங்கிகள், ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் கருத்துக்களை கூட்டு ஆய்வுக்குழு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் பதிவு செய்கிறது இன்னும் சில மாவட்டங்களில் இக்குழு இப்பணியை முடித்து, அதன் பரிந்துரைகளுடன் தனது அறிக்கையை சட்ட மன்றத்திற்கு அனுப்பவேண்டியுள்ளது.

N83-46-551